2859

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: IX NO: 1

June 19th. 1985

D 1
V211,31 N85
N85.9.1
136384

2-889
615/86

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, 1985 ஜூன் 19— தொகுதி IX-எண்.1.
Wednesday, the 19th June 1985—Volume IX-No. 1.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-0C

136384

உள்ளடக்கம்.

19—6—85


| | பக்கங்கள். |
|---|---|
| (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—vi |
| (ஆ) Personnel of the Government of Tamil Nadu | |
| (இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | ix—x |
| (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்). | xi—xviii |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1-39 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 39—52 |
| 2. தகவல் கோரல் : | |
| தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாதது. | 52 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை : | |
| ஜனதா கட்சி சார்பாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று வந்துள்ள உறுப்பினரை முகவரிப் பட்டியலில் சுயேச்சையெனக் குறிப்பிட்டு உள்ளது .. .. .. .. | 53—58 |
| 4. உரிமைப் பிரச்சினை : | |
| ''துக்ளக்'' இதழ் மீது. | 58—79 |
| 5. கவன ஈர்ப்பு : | |
| (அ) தமிழ் பயிற்று மொழிக்குத் தேவையான பாடநூல்களைப் பாடநூல் நிறுவனம் காலதாமதமாக வெளியிடுவது. | 79—82 |
| (ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் பணிகள் நிதிப் பற்றாக்குறையினால் தடைபடுவது .. .. .. | 82—86 |

| | | பக்கங்கள். |
|---|---|---|
| 6. அறிவிப்புகள் : | | |
| (அ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985. (ஆ'இ.), | | 86 |
| (ஆ) பேரவை அலுவல் | | 141 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவுகள் : | | |
| பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985. | | 86–87 |
| 8. வரவு-செலவுத் திட்டம்,1985-86, வாக்கெடுப்பு : | | |
| மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | | 87–163 |
| மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி | | 87, 88, 98, 141–162 |
| *திரு. கி. வெங்கடாசலம் | .. | 88–92 |
| *திரு. கு. சுப்பராயன் | .. | 92–98 |
| திரு. க. சோலைராசு | .. | 98–103 |
| திரு. ஜி. கே. பிரான்சிஸ் | .. | 103–105 |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | .. | 105–113, 162 |
| *திரு. மு. மாரிமுத்து | .. | 113–117 |
| திரு. மா. சின்னராசு | .. | 117–124 |
| திரு. வி. தங்கவேலு | .. | 124–128 |
| *திரு. ஆர். செங்காளியப்பன் | .. | 129–134 |
| *திரு. ஆர். ரெங்கசாமி | .. | 134–141 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | .. | 163–164 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையில் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதல் அமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணு வத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு, எஃகு கட்டுப்பாடு, அச்சு காகி தக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (செய்தி—அற நிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமை (ப்ச—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பா(

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்துதல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

2859



20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)—கதர் பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு, யூசுப் : (பொதுப் பணித்துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

Thiru SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers:*

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN: (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN: (Minister for Finance) Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN: (Minister for Electricity) Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY: (Minister for Labour) Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN: (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. The Hon. Thiru K. RAJARAM: (Minister for Industries) Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGHAM: (Minister for Local Administration) Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education): Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water-Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law): Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The Hon. Dr. H. V. HANDE (Minister for Health): Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport): Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Food): Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN (Minister for Handlooms): Handlooms and Textiles.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals): Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY (Minister for Commercial Taxes): Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY (Minister for Housing): Housing and Slum Clearance Board, Town-Planning and Accommodation Control.

18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN (Minister for Rural Industries): Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment): Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM (Minister for Adi-Dravidar Welfare): Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDAN (Minister for Backward Classes): Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare): Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.



23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi): Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Public Works): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation): Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வீ. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்
திரு. மு. இராமநாதன்
திரு. வே. இரா. ஜெயராமன்

### சட்ட மன்ற பேரவை செயலாளர் :

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

### துணைச் செயலாளர்கள் :

திரு. பி.எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

### குழு அலுவலர்கள் :

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள் :

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,
திரு. கா.செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.

எஸ்டேட் அலுவலர்கள் :

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்,

தலைமை நிருபர் :

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.,

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ.,



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 2 அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3 அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4 அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6 அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 7 அன்பழகன், திரு. க. | பார்க்டவுன் |
| 8 அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 9 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10 அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13 ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14 ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15 ஆறுமுகம், திரு. எச்.ஜி,. | பென்னாகரம் |
| 16 ஆறுமுகம், திரு. ஆர்.எஸ். | ஒட்டப் பிடாரம் (செ. வ.) |
| 17 ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | விருதுநகர் |
| 18 ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19 ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்-2 |
| 20 ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21 ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22 இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 23 இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26 இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர்.(செ.வ.) |
| 27 இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 இராசரத்தினம, திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 30 இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர் |
| 31 இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ. வ.) |
| 32 இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 33 இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 34 இராசு, திரு. வி. கே. .. .. | அரக்கோணம் (செ. வ) |
| 35 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி |
| 40 இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41 இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 இராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம். |
| 43 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 44 இராமநாதன், திரு. மு. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 46 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| 47 ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ. வ.) |
| 48 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 50 எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51 கணபதி, திரு. கே.ஆர். | சிதம்பரம் |
| 52 கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53 கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு |
| 54 கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56 கவிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 57 காளிமுத்து டாக்டர். கா. | மதுரை கிழக்கு |
| 58 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 62 குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63 குமரகுருபர ராமநாதன், திரு. சா. | விளாத்திகுளம் |
| 64 குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65 குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66 குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. கே. | திருவரம்பூர் |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ. வ.) |
| 68 கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69 கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70 கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 71 சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 73 சண்முகம், திரு, என். .. | சோளிங்கர். |
| 74 சண்முகம், திரு. ப. உ. .. | மேல் மலையனூர் |
| 75 சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 76 சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 77 சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 78 சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப் பட்டினம் |
| 80 சரோஜா, திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ. வா.) |
| 81 சாமிக்கண்ணு திரு. தா. .. | செங்கம், (செ. வ.) |
| 82 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 83 சிந்தன், திரு. வி. பி. .. | வில்லிவாக்கம் |
| 84 சிவக்குமார், திரு. ஆ. .. | சமயநல்லூர் (செ. வ.) |
| 85 சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 86 | சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91 | சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92 | சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94 | சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95 | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96 | சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97 | சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98 | சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |
| 100 | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 101 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102 | செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 104 | செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106 | செல்லமுத்து திரு. மொ. | திருவாரூர் (செ. வ.) |
| 107 | செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 109 | சேகர் என்கிற குலசேகரன் திரு. கே. பி. | பொன்னேரி (செ. வ.) |
| 110 | சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடானை |
| 111 | சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112 | சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113 | சௌந்திரராசன், திரு. ஆர். | திருவரங்கம் |
| 114 | சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 | ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116 | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 117 | தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 | தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 121 | தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 122 | தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123 | தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ. வ.) |
| 124 | தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 125 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 126 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127 | தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128 | திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (செ. வ.) |
| 129 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130 | திருமலைச்சாமி கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131 | தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132 | தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133 | துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134 | துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135 | துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136 | துரைராசு, திரு. எஸ்.பி. | காரைக்குடி |
| 137 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138 | தெய்வநாயகம், திரு எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 | தேவராஜ், திரு. வி.எம். | வேலூர் |
| 140 | நடராசன், திரு ஆ. | பேரூர் |
| 141 | நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142 | நரசிம்மன், திரு. மு. | பள்ளிப்பட்டு |
| 143 | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 | நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145 | நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர் |
| 146 | நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147 | நாராயணன், திரு. பு.கோ. | பவானி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150 பரமசிவம், திரு. பா.ந. | பல்லடம் |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153 பழனிச்சாமி, திரு. கா.செ. | காங்கேயம் |
| 154 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155 பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157 பாப்பா சுப்ரமணியன், திரு | குத்தாலம் |
| 158 பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர் |
| 159 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162 பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163 பாலசுப்ரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164 பாலசுப்ரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 பாலசுப்ரமணியன், திரு.வி.பி. | வேடசந்தூர் |
| 166 பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167 பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168 பானுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 பானுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170 பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173 புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174 புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175 பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177 பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179 பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | பழனி (செ. வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 180 பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181 பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182 பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183 மணவாளன், திரு. | திருப்பத்தூர் |
| 184 மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185 மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187 மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 188 மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189 மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 190 மாதையன், திரு. யு.பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191 மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 192 மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193 மீனாட்சி சுந்தரம், திரு. மா. | தேவாரண்யம் |
| 194 முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195 முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 196 முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197 முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198 முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 199 முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு |
| 200 முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202 முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203 முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 204 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205 யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் |
| 206 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 ரவீந்திரன், திரு. ஏ.எஸ். | திருவண்ணாமலை |
| 208 ராமஜெயம், திரு. ம.நா. | வானூர் (செ. வ.) |
| 209 ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 ராஜாபாபு திரு. ஜெ. | போளூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 211 ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| 214 வச்சிரவேலு, திரு. எ. | தண்டராம்பட்டு |
| 215 வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216 வளர்மதி, திருமதி. பா. | மயிலாப்பூர் |
| 217 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218 விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி. |
| 219 வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 220 வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 221 வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222 வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 223 வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 224 வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 225 வெங்கடாசலம், திரு. டி.எம். | பரகூர் |
| 227 வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 226 வேங்கடரமணன், திரு. டி.ஆர். | தென்காசி |
| 228 வேணுகோபால், திரு. கே.வி. | தல்லி |
| 229 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர். கோ. | செங்கல்பட்டு |
| 231 ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232 ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 233 ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி |
| 224 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 பிரான்சிஸ், திரு. ஜி.கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே— அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப்—அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூன் 19, புதன்கிழமை

ஆனி 5, குரோதன— திருவள்ளுவர் ஆண்டு —2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.

'' நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு''

தொழில் செய்கின்றவன் கோணாதிருக்கும் வரையில் உலகம் கெடாது. ஆகையால் மன்னன் நாள்தோறும் அவனுடைய நிலைமையை ஆராய வேண்டும்.

### 1. வினாக்கள் விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள், 314, 315 மற்றும் 316 மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

**வட ஆற்காடு மாவட்டத்தில் சட்டக் கல்லூரி.**

317—(*வினா எண். 1274)— திரு. கோ. இரகுபதி மற்றும் திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகரில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) வினா எழவில்லை.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் எந்தவிதமான பல்கலைக்கழகமோ, மற்றக் கல்லூரிகளோ இல்லாத காரணத்தால், இந்தச் சட்டக் கல்லூரியை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 19

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சட்டக் கல்லூரிகளில் இன்னும் முழுமையான வசதிகளை பூர்த்தி செய்யாத நிலைமை யில், நாம் புதிய சட்டக் கல்லூரிகளை இப்போது ஆரம்பிப்பதாக இல்லை.

**பொறியியற் பல்கலைக் கழகம்.**

279—(*வினா எண் 891)— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொறியியற் பல்கலைக்கழகம் அமைக் கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகம் ஒரு பொறியியற் பல்கலைக் கழகமே. இது தவிர வேறு பொறியியற் பல்கலைக் கழகம் அமைப்பது தொடர்பான கருத் துருக்கள் எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைந் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக் கழகமே ஒரு பொறி யியற் பல்கலைக் கழகம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். ஆனால் மாநிலத்தில் இருக்கின்ற மற்ற பொறியியல் கல்லூரிகள் இந்த பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டு இருக்கின்றதா ? அப்படி இல்லை என்றால், அவைகளை இணைப் பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே. இந்தக் கேள்வி தமிழகத்தில் பொறியியற் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைப் பற்றியதாகும். அதற்குத் தகுந்த பதில்தான் தற் போது அளிக்கப்பட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரிகளை அண்ணா பல்கல்லைக் கழகத்தோடு இணைக்கின்ற கருத்துரு இருக்கிறதா என்று கேட்கிறார்கள் எனக் கருதுகிறேன். இப்போதைக்கு இல்லை.



1985 ஜூன் 19]

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கலைக் கல்லூரிகளுக்கு தன் னாட்சி முறை வழங்கியதால், அவைகள் மிகச் சிறப்பாக இருக் கின்றன என்று கல்வி வல்லுநர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை கொடுக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பி.எஸ்.ஜி. கல்லூரி தன்னாட்சி பெற்றிருக்கிறது. கோவையில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் சில துறைகளுக்குத்தந் திருக்கிறோம், அதைப்போல சில கல்லூரிகளில் சில துறைகளுக்குத் தந்திருக்கிறோம். முழுமையான அளவில் பி.எஸ்.ஜி. இன்ஜீனியரிங் கல்லூரிக்குத் தந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282 மாண்பு மிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றது.

வினா எண்கள் 318, 319, 320 மற்றும் 321 ஆகியவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

**கிண்டி தொழிலாளர் குடியிருப்பு.**

322—(*வினா எண். 297)— திரு. சா. துரைசாமி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி தொழிலாளர் குடியிருப்பு காலனி பகுதியில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு மேற்படி வீடுகளை உரிமையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்களை தொழிலாளர்களுக்கே விற்று விடலாமா என்னும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை தொழிலாளர்களுக்கே விற்றுவிடலாம் என்று அரசு முடிவெடுத் தால், அம்முடிவு சென்னை கிண்டி, தொழிலாளர் குடியிருப்பு காலனியில் வசிக்கும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர்
கள் குடியிருப்புகள் சென்னை மாநகரத்தில் மொத்தம் எத்தனை
இடங்களில் உள்ளன? என்னென்ன வகையான தொழிலாளர்கள்
பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? எங்களது கிண்டி தொழிற்
பேட்டையில் சிட்கோ தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள்.
தமிழகம் முழுவதுமுள்ள சிட்கோ நிறுவனத்தின் கீழ்
ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடி
யிருப்புகள் திருச்சி, மதுரை, அம்பத்தூர் போன்ற பகுதிகளில்
இருக்கின்றன. ஆகவே ஒட்டுமொத்தமான விதி அவர்களுக்குப
பொருந்துமா ? அல்லது கிண்டி தொழிற்பேட்டை குடி
யிருப்புகளுக்கு மாத்திரம், தனியான நடவடிக்கை எடுக்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே,
சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், சர்மா நகரில் 450
வீடுகளும், திரு. வி.க. நகரில் 544 வீடுகளும், கிண்டி தொழிற்
பேட்டையில் 406 வீடுகளும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின்
பராமரிப்பிலுள்ள இந்த வீடுகளைப் போல தமிழகத்தில் இருக்
கிற மற்ற இடங்களிலுள்ள வீடுகளும் இதே அடிப்படையில்
கிடைக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் தமிழகத்
தின் பல்வேறு இடங்களில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில்
வீடுகள் கட்டப்பட்டிருந்தால், பரிசீலனை செய்யும்போது அதே
முறையில் அவைகளுக்கும், தொழிலாளர்களுக்கு உதவுகிற
தன்மையோடு அரசு முடிவெடுக்கும். அது தனிப்பட்ட வகையில்,
இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கட்டாத சூழ்நிலையில் வேறு
விதமான சூழ்நிலையில் தான் அதை பரிசீலிக்க முடியும்.
சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இதே திட்டத்தின்
அடிப்படையில்தான், தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக்
கழகத்தின் மேற்பார்வையில் இருந்தாலும், இந்தத் திட்டத்தின்
அடிப்படையில் இந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கிற காரணத்
தால் பரிசீலனை செய்யும்போது அவசியம் உதவும்.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, கிண்டி தொழிற்
பேட்டை குடியிருப்பிற்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கவேண்டு
மென்ற கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களுக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறார்கள். கிண்டியில் இருக்
கிற சிட்கோ தொழிற்கூடம் நிறுவனத்ினுடைய அந்த
பேட்டை எல்லாம் சிறுதொழில் அதிபர்களுக்கு சொந்தமாக
கொடுத்ததன் விளைவாக தொழிலாளர்கள் எல்லாம் அங்கே
வெகுவிரைவாக தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பெறும்
என்ற அடிப்படையில், தங்களின் நீண்டநாளைய கோரிக்கை
என்று நிறைவேறும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



ஆகவே அந்தப் பணியை நடப்பு நிதியாண்டிலாவது விரைவாகத்
தொடங்கி, ஒரு வரலாற்று சிறப்புமிக்க புரட்சித் தலைவ
ருடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே,
தொழிலாளர் மலிவு வாடகை வீடு வசதித் திட்டத்தின் அடிப்
படையில்தான் ஏற்கனவே இந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பார்க்கிற
போது, இதைத்தவிர புதிய திட்டங்கள் வருகிற ஒரு சூழ்நிலை
யில் முன்னுரிமை தரவேண்டுமென்ற ஒரு மைய கருத்தை
மனதிலே வைத்துப் பேசியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப்
பொறுத்தவரையில் 1952-ஆம் ஆண்டிலே மைய அரசால்
அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு 1982—ஆம் ஆண்டில் இந்தத்
திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே ஏற்கனவே கட்டி
முடித்த வீடுகளைப் பொறுத்தவரையில்தான் இந்தத் திட்டத்
தின் மூலமாக உள்ளதை அரசு பரிசீலனை செய்து முடி
வெடுக்கும்.

திரு. ஆர். செங்காளியப்பன் : தலைவர் அவர்களே, கோவை
யில் தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக சுமார்
250 வீடுகளுக்கு மேலே கட்டப்பட்டு 25 ஆண்டுகளாக தொழி
லாளர்கள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
வாடகை கொடுத்து வருகிறார்கள். ஆகவே அந்த வீடுகளை
எல்லாம் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கி ஒரு கிரயத்
திற்குக்கொடுக்க வேண்டுமென்று முன்னாலே கோரிக்கை அனுப்பி
யிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று அரசு அவர்
களுக்கு சொந்தமாக அந்த வீடுகளைக் கொடுக்க முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட
அந்த கேள்வியைப் பொறுத்தவரையில் தொழிலாளர் துறை
அமைச்சர் அவர்கள் மத்தியில் கேட்கப்படவேண்டிய கேள்வி
ஆகும். இங்கே இந்த திட்டத்தின் அடிப்படையில் மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப்பகுதியில் வீடுகள்
கட்டப்பட்டு இருந்தால் சென்னையில் எடுக்கின்ற அதே முடிவு
கோவையிலும் எடுத்து பரிசீலனை செய்து சாதகமாக
முடிவு எடுத்தால் நிச்சயமாகத்தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

[1985 ஜூன் 19

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லும்போது சென்னையில் உள்ள திரு.வி.க. நகர்,
சர்மா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்த்து கிண்டி தொழிலாளர்
குடியிருப்பு ஆகியவை அனைத்துக்கும் அந்த வீடுகளை தொழி
லாளர்களுக்கு உரிமை ஆக்க அரசு பரிசீலனை செய்து வருவ
தாக தெரிவித்தார்கள். உண்மையிலேயே அது பாரட்டக் கூடிய
ஒரு நல்ல செய்தி. ஆனால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய
மக்கள் இந்த கோரிக்கையை வைத்த பிறகு வீட்டு வசதி வாரி
யத்தின் மூலமாக சலுகைகள் தண்ணீர் வசதி, கழிப்பிட
வசதி போன்ற வசதிகளை அதிகமாக செய்யது
இல்லை என்று புகார்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.
முறையான அந்த வசதிகளை அவர்களுக்கு உரிமை ஆக்கும்
வரையில் தொடர்ந்து வசதிகள் கிடைப்பதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அடிப்படை வசதிகளில் குறைவு இருந்தால்
நிச்சயமாக வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில்
அதை தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதிலே சிட்கோ பரா
மரிப்பில் தான் அந்த வீடுகளுக்கு மற்ற அடிப்படை வசதிகளை
இந்தப் பகுதியில் செய்யவேண்டும். சர்மா நகர், திரு. வி.க.
நகர் பொறுத்தவரையில் வீட்டு வசதி வாரியம் அந்த பொறுப்பை
ஏற்று இருந்தால் நிச்சயமாக இந்த குறைகள் தீர்க்கப்பட
வேண்டிய நியாயமான கோரிக்கையை அரசு ஏற்று நிச்சயமாக
நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த திட்டத்தின் கீழ் தனியார் துறையின் மூல
மாகவும், பொதுத்துறையின் மூலமாகவும் கட்டப்பட்ட வீடுகள்
எத்தனை என்று அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தனியார் துறை, பொதுத் துறை மற்றும்
கூட்டுறவுத்துறை ஆகியவற்றின்கீழ் இந்த வீடுகள் பொதுவாக
கட்டப்பட்டுள்ளன. தனியார் துறையைப் பொறுத்தவரையில்
1,206 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பொதுத் துறையைப்
பொறுத்தவரையில் 4,125 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த தொழிலாளர்களுக்கு உரிமை ஆக்கும் திட்டம்
அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். இது தொழிற்சாலைகளில்



1985 ஜூன் 19]

வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு மட்டும் அல்ல, நகர
பஞ்சாயத்துக்களிலும், முனிசிபல் நகரங்களிலும் வசிக்கின்ற
துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படு
கின்றன. ஆனால் அந்த தொழிலாளர்கள் 20 வருடம், 30
வருடம் வேலை செய்துவிட்டு ரிட்டையர் ஆன பிறகு வேறு
இடங்களில் வீடுகள்தேடி அலைய வேண்டிய நிலைமை இருக்
கிறது. மற்றவர்களுக்குப் பரிசீலனை செய்து கொண்டு வருகிற
போது நகர பஞ்சாயத்துகள், முனிசிபல் நகரங்களில் வசிக்
கின்ற துப்புரவுத் தொழிலாளர்கள் குடியிருக்கின்ற வீடுகளை
அவர்களுக்கே உரிமை ஆக்குகின்ற அந்தத் திட்டத்தையும்
சேர்த்துப் பரிசீலிக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் சொல்லியிருக்
கிறேன். இந்த திட்டம் ஒரு காலத்தில் மத்திய அரசினுடைய
நிதியை மாநில அரசுக்குத் தந்ததை தொடர்ந்து ஆரம்பத்தில்
அறிவிக்கப்பட்ட திட்டம் 1952-ல் துவங்கப்பட்டது. இந்தத்
திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தைப் பொறுத்த
வரையில் எங்கெங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற
தோ அந்த வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு தொழிலாளர்களுக்கு
தான் முன்னுரிமை கொடுத்து பரிசீலனை செய்துஅவர்களுக்கு
அந்த உரிமையை தருகின்ற அந்தப்பொறுப்பை அரசு ஏற்கும்,
பரிசீலனையில் முடிவு சாதமாக இருந்தால். மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் பார்த்தால்
பொதுவாக இப்போது வீட்டுவசதி வாரியம் அல்லது நக
ராட்சிகள் மூலமாக கட்டப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையில்
அது அவர்களுக்கு உரிமை தருகின்ற திட்டம் இல்லை. அவர்
களுக்கு ஆரம்பத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 30
சதவீதம், 25 சதவீதம் அவர்களுடைய சொந்தப் பணத்தை
கட்டி மீதி 75 சதவீதம் இருந்தால் அது அவர்களுக்கு உரிமை
ஆக்கும் திட்டமே ஒழிய இப்படிப்பட்ட திட்டம் எற்கனவே
அறிவிப்பை செய்த இடத்தில் மட்டும்தான் இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

## நலிந்த பிரிவினருக்கு வீடுகள்.

323—(*வினா எண் 774) திருமதி பா. வளர்மதி : மாண்பு
மிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) 1983-84 ஆம் ஆண்டில் சென்னையில் நலிந்த பிரிவின
ருக்காக (Economically Weaker Section) கட்டி முடிக்கப்
பட்ட வீடுகள் எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு வீட்டின் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) 3,713 வீடுகள்.

(ஆ) ஒரு வீடு ரூ. 8,000 மதிப்பில்—3,381 வீடுகள்.
ஒரு வீடு ரூ. 15,500 மதிப்பில்—332 வீடுகள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85-ல் எத்தனை வீடுகள் எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன? அப்படிப்பட்ட வீடுகள் கட்டும் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85-ஐப் பொறுத்தவரையில் 4,89,75,000-ல் 6,163 குடியிருப்புகள் கட்டப்படுவதற்கான முடிவு இருக்கிறது. இந்தத் திட்டத்தினைப் பொறுத்த வரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாநில அளவிலே இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடுத்தர பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பட்டினப்பாக்கம் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் பல ஆண்டுகாலமாக பழுதடைந்து காணப்படுகின்றன. அவற்றை மறுபடியும் சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட படி தகவல் இல்லை. அப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும், வீடுகள் கட்டப்பட்டுப்பழுதடைந்து இருந்தால் நிச்சயமாக வீட்டு வசதி துறையைப் பொறுத்தவரையில் அதற்கான அத்தனை உதவிகளையும் நிச்சயமாக நல்ல முறையில் செய்யும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எகனாமிக்கலி வீக்கர் செக்ஷன் என்றால் அதற்கு வருமான அடிப்படையா அல்லது சொத்து அடிப்படையா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எகனாமிக்கலி வீக்கர் செக்ஷன்' என்ற பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கென்ற திட்டம் மாதம் 350 ரூபாய்க்குள் அவர்கள் வருமானம் இருக்க வேண்டும். அதிலே முன்னுரிமை தருகின்ற வகையில் கைவினை ஞர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள்



ஆகியோர் யாராக இருந்தாலும், 350 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு அதிகம் போகாமல் இருக்க வேண்டும்.

## படித்து வேலை இல்லாதவர்களுக்கு உதவித் தொகை.

324— (*வினா எண். 1358)— திரு. சா. துரைசாமி, மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர் திரு. எம். செல்லமுத்து, மற்றும் திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு மறு வாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த வேலை இல்லாதவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் எத்தனை பேர் பயன்பெறுகிறார்கள்? எஸ். எஸ். எல். சி., பி.யூ.சி., பட்டதாரிகள் பிரிவு வாரியாக?

(ஆ) உதவித் தொகை பெறுவதற்கு அடிப்படைத் தகுதிகள் என்ன?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே,

(அ) படித்த, வேலை இல்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் 62,232 பேர்கள் பயன்பெறுகிறார்கள்.

பிரிவு வாரியாக பயன்பெறுபவர்களின் விவரம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| பள்ளியிறுதித் தேர்ச்சி (எஸ். எஸ். எல். சி.) .. | 44,842 |
| புகுமுக வகுப்பு மற்றும் +2 தேர்ச்சி .. .. | 9,626 |
| பட்டதாரிகள் .. .. .. .. | 7,764 |

(ஆ) வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகள் கீழ்வருமாறு :

1. வேலைவாய்ப்பகத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வேலையில்லாதோர் பதிவேட்டில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

2. பெற்றோர் மாத வருமானம் ரூபாய் 2,000—அதாவது ஆண்டு வருமானம் ரூபாய் 24,000-க்கு மேற்படக்கூடாது.

3. 35 வயது நிரம்பியிருக்கக்கூடாது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினர் ஆயின் 40 வயது நிரம்பியிருக்கக்கூடாது.

4. விண்ணப்பதாரர் பள்ளி அல்லது கல்லூரி படிப்பினை தமிழ் நாட்டில் முடித்திருக்க வேண்டும். அல்லது விண்ணப்ப தாரரின் பெற்றோர் அல்லது காப்பாளர் தமிழ்நாட்டில் 15 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர், ஊதியம் பெறும் பணியாளர் என்ற முறையில் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50-க்கு மேல் வருமானம் பெறுபவராக இருக்கக் கூடாது.

6. விண்ணப்பதாரர் தனியாரிடம் இருந்தோ அல்லது அர சிடமிருந்தோ ஆண்டொன்றுக்கு ரூபாய் 600-க்கு மேல் உதவித் தொகை பெறுபவராக இருக்கக் கூடாது.

7. எந்த ஒரு கல்வி நிலையத்திலும் மாணவராக இருக்கக் கூடாது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தொடர்ந்து 5 ஆண்டுக் காலம் பதிவேட்டில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்றும், அப்படி இடம் பெறுகிறவர்களுக்கு 3 வருடங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, 8 ஆண்டுக் காலம் கழித்து அதற்குப் பிறகு அவர் களுக்கு உதவித் தொகை இல்லை. வேலைவாய்ப்பகத் திலிருந்து அவர்களுக்கு இன்டர்வியூ கார்ட் செல்வதற்கும் வழி யில்லை. அவர்கள் எதிர்காலம் என்ன ஆவது என்ற கேள்வி இருக்கிற காரணத்தால், உதவித் தொகை பெறுகின்ற அந்தப் பட்டியலிலே இருக்கின்ற நபர்களுக்கு அனுப்பப்படுகின்ற வேலை வாய்ப்பு இன்டர்வியூ-வில் முன்னுரிமை வழங்கி, அந்த 3 ஆண்டு முடிந்தவர்களுக்கு அத்தனை பேருக்கும் இன்டர்வியூ கார்ட் அனுப் பிட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அது மாத்திரம் அல்ல. என்ன தகுதி அடிப்படையில் அதை நிர்ணயம் செய்து வழங்குகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20).

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுக்காலம் வேலைவாய்ப்பு அலு வலகத்திலே பதிவு செய்து இருக்கின்ற பட்டதாரி மாணவர் களுக்கு அல்லது எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் மற்றும் பிளஸ்—2, பி.யூ.சி. போன்று படித்தவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. அந்த உதவித் தொகை 3 ஆண்டுகள் தான் வழங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து செயல் படுத்திக் கொண்டு இருக்கிறோம். இருந்தாலும், அவர்களுக்கு அந்த நேரத்தில் முன்னுரிமை கொடுத்து. வேலை வாய்ப்பகத் திலிருந்து நேர்முகப் பேட்டிக்கு அழைப்புகள் அனுப்புவதற்கு



முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதுமாதிரி திட்டம் எதுவும் அரசிடத்தில் இல்லை. அந்த அளவிற்கு வேலை வாய்ப்பகத்திலிருந்து இன்டர்வ்யூ போகவில்லை என்றால் அவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை அணுக வேண்டுமென்ற உணர்வில்தான் அவர்களுக்கு சுய வேலைவாய்ப் புத் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளைச் செய்வதில் அரசு ஈடுபட்டிருக்கின்றது. அடுத்து, தகுதி பற்றி மாண்புமிகு உறுப் பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

(1) வேலை வாய்ப்பகத்தில் தொடர்ந்து ஐந்து வருடங் கள் வேலையில்லாதோர் பதிவேட்டில் இடம் பெற்றிருக்க வேண் டும்.

(2) பெற்றோர் மாத வருமானம் ரூபாய் 2,000 அதாவது ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு மேற்படக் கூடாது.

(3) 35 வயது நிரம்பியிருக்கக் கூடாது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினராயின் 40 வயது நிரம்பியிருக்கக் கூடாது.

(4) விண்ணப்பதாரர் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பினை தமிழ் நாட்டில் முடித்திருக்க வேண்டும் அல்லது விண்ணப்ப தாரரின் பெற்றோர் அல்லது காப்பாளர் தமிழ்நாட்டில் 15 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்.

(5) விண்ணப்பதாரர், ஊதியம் பெறும் பணியாளர் என்ற முறையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-க்கு மேல் வருமானம் பெறுபவராக இருக்கக் கூடாது.

(6) விண்ணப்பதாரர் தனியாரிடமிருந்தோ அல்லது அர சிடமிருந்தோ ஆண்டொன்றுக்கு ரூ. 600-க்கு மேல் உதவித் தொகை பெறுபவராக இருக்கக் கூடாது.

(7) எந்த ஒரு கல்வி நிலையத்திலும் மாணவராக இருக்கக் கூடாது.

இந்த விதிகளின் அடிப்படையில்தான் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்)** மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, ஏறக்குறைய 60,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். பல்வேறு துறை களில், குறிப்பாக, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது, எனும ரேஷன் ஓர்க், இன்னும் புள்ளி விவரத் துறையிலே சேகரிக்கப்படு

கின்ற பல்வேறு சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் போன்றவை
களை எடுப்பதற்குத் தனிப்பட்டவர்களை நியமித்துக் கொண்
டிருக்கிறார்கள். வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது போன்ற
பணிகளில் ஆசிரியர்களைப் பயன்படுத்துகின்றபொழுது அதில்
தவறுகள் ஏதாவது நேர்ந்தால், பட்டியலில் அந்தப் பெயர்களைச்
சேர்க்க வேண்டுமே தவிர, விடுபட்டதற்காக கணக்கெடுத்த
ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்ற சூழ்நிலை
இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட உதவித் தொகை வாங்கு
பவர்களிடத்திலே இந்தப் பணிகளை ஒப்படைத்து இதற்காக
அவர்களைப் பயன்படுத்துகின்றபொழுது வேலையில் தவறுசெய்து
விட்டால் நாளைக்கு வேலை கிடைக்காமல் போய்விடும் என்று
பயந்து உதவித் தொகை பெறுகின்ற அவர்கள் வேலை செய்கின்ற
உணர்வு ஏற்படும். ஆகவே, புள்ளி விவரத் துறை, வாக்காளர்
பட்டியல் சேர்ப்பது போன்ற துறைகளில் இப்படி உதவித்
தொகை பெறுகின்றவர்களைப் பயன்படுத்துவது பற்றி அரசு
பரிசீலிக்குமா ? பல்வேறு மாநிலங்களில் உதவித் தொகை பெறு
பவர்களுக்கு 50 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து அரசாங்க அலு
வலகங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு
பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக 62,232
பேர்கள், 1 கோடியே 54 இலட்சத்து 70,362 ரூபாய் உதவித்
தொகையாகப் பெறுகிறார்கள். அப்படி உதவித் தொகை பெறு
கின்றவர்களைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்
பது, இன்னும் மற்ற பணிகளில் பயன்படுத்தலாம் என்று
மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த
அளவிற்கு இதுவரையில் அரசினிடத்தில் எந்த உத்தேசமும் இருப்
பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்களின் அரிய
யோசனையை அரசு இனிமேல் பரிசீலிக்கும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, இப்பொழுது கொடுக்கப்படுகின்ற ஊதியம்,
அதாவது உதவித் தொகை 50 ரூபாயாக இருக்கிறது. இது
மிகமிகக் குறைவாக இருக்கிறது. அதை அதிகரித்துக் கொடுப்ப
தற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா ? மேலும், விண்ணப்
பிக்கின்ற அத்தனை பேர்களுக்கும் இந்த உதவித் தொகையை
வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 25—10—1980 நாளிட்ட அரசாணை
எண். 2680-இன்படி 1—7—1980 முதல் இந்தத் திட்டம் அம
லாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினுடைய துவக்கத்திலே
மேலே குறித்த ஏழு அடிப்படைத் தகுதிகள் உள்ளவர்களுக்கு





மட்டும்தான் ரூபாய் 50 வீதம் நிதி உதவியை அரசு அளித்து
வந்தது. இதை விரிவாக்கி 15—9—1984 முதல் எஸ். எஸ்.
எல். சி., பிளஸ் 2, பி. யூ. சி. தேறியவர்களுக்கும் இந்தத் திட்டத்
தின் மூலமாக உதவி அளிக்க வேண்டுமென்று அரசு ஆணை
பிறப்பித்து செயலாக்க வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக,
நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 62,232 பேர்கள்
உதவி பெறுகிறார்கள் : 1 கோடியே 54 இலட்சத்து 70,362
ரூபாயை உதவித் தொகையாகப் பெறுகிறார்கள். ஆகையினாலே
ஏற்கெனவே 50 ரூபாயிலிருந்து அதற்குப் பிறகு 75 ரூபாய், 100
ரூபாய் என்ற அடிப்படையில் உதவித் தொகை உயர்த்தப்பட்
டிருக்கிறது. இன்னும் உயர்த்துவதுபற்றி அரசினிடத்தில் எந்தச்
செயற்குறிப்பும் இதுவரையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில்
ஐந்தாண்டுகள் முடிந்த பிறகுதான், ஆறாவது ஆண்டு துவக்கத்
தில் இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு பெற்றிருப்
பவர்களுக்கு உதவித் தொகையை வழங்க அரசு அனுமதித்திருக்
கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கு மாறாக,
பதிவாகிய ஓராண்டு காலத்திற்குள் உதவித் தொகை வழங்க
அரசு முன்வருமா? அதோடு, இதுவரையிலும் மூன்றாண்டு
காலத்தில் வழங்கப்பட்டு, அதற்குள் வேலைவாய்ப்பு தருவதற்கு
அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்
கள். அவ்வாறு 62,232 பேர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்
என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே இதுவரையில் முன்னு
ரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு எத்தனை பேருக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது, உதவித் தொகை வழங்கப்பட்டிருப்
கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்
பார்களா ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஐந்தாண்டு காலம் வேலை வாய்ப்பு
அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டாலும்கூட, சீனியாரிடி
அடிப்படையில்தான் தொடர்ந்து வேலைவாய்ப்பைப் பெற்றிருக்
கிறார்களே தவிர, வேறு எந்தவிதமான முன்னுரிமை அடிப்
படையிலும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள்.**

*325*— (* வினா எண் *341*)—**திரு. கு. சுப்பராயன் :**
மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்பு துறை
அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் ஒரு தொழில் நுட்பப் பயிற்சிப்
பள்ளி தொடங்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

[1985 ஜூன் 19

(ஆ) ஆம் எனில் அது எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே,
(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எப்போது துவக்கப்படும்? அதற்குரிய மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கொள்கைக் குறிப்பைப் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவையின் முன் அனுமதி பெற்றதற்குப் பிறகு தான், வெளியிட வேண்டுமென்ற உணர்வினால்தான் அது பரிசீலனையில் இருக்கின்றது என்று குறிப்பிட்டேன். அவையின் அனுமதி பெற்றதற்குப் பிறகு, அதை அவர்கள் தெரிந்துகொள்ளலாம் என்று கருதுகிறேன்.

326——(*வினா எண் 1077)—**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரத்தில் தொழில் பயிற்சி நிலையம் I. T. I. அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் நிறைந்து இருக்கக்கூடிய, நரிக் குறவர்கள் நிறைந்து இருக்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் நிறைந்து இருக்கக்கூடிய உப்பிலியாபுரம் தொகுதியில், தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ? அப்படி இருக்கிறது என்றால், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன். அது மட்டுமல்ல. திருச்சியைப் பொறுத்த அளவிலே, அரசின் முக்கிய கொள்கையாக இருக்கக்



1985 ஜூன் 19]

கூடிய தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே, ஒரு என்ஜினியரிங் கல்லூரிக்கு 5 பாலிடெக்னிக் கல்லூரிகள் இருக்கவேண்டும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரிக்கு 5 ஐ.டி.ஐ. கல்லூரிகள் இருக்க வேண்டும் என்பதுதான் தன்னிறைவுத் திட்டக் கொள்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு திட்டமாக உள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, திருச்சி மாவட்டம் முழுக்க 25 ஐ.டி.ஐ. கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்பட வேண்டிய கல்லூரி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவ்வளவு பெரிய கேள்வியாகக் கேட்டால் அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்ல முடியும் ?

(முற்பகல் 9–30)

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே தற்போது இரண்டு தொழில் பயிற்சி நிலையங்கள் 1024, 304 இருக்கைகளுடன் திருச்சியிலும், அரியலூரிலும் செயல்பட்டு வருகின்றன. இவை உப்பிலியாபுரம் உள்பட திருச்சி மாவட்ட மக்களின் பயிற்சித் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன. 1985–86 ஆம் நிதியாண்டில் உப்பிலியாபுரத்தில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று துவங்குவதற்கு உத்தேசம் எதுவும் இல்லை. வேண்டுமானால் 1986–87 ஆம் நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. தங்கவேலு :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே அதிகமாக இருக்கக்கூடிய நரிக்குறவர்களுக்குத் தனியாக ஐ.டி.ஐ. கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. த. ராமசாமி :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் தற்போது அரசிடத்தில் இல்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஐ.டி.ஐ. பயிற்சிப் பள்ளிகளிலே 300 மார்க்கிற்கு மேற்பட்டு வாங்கியர்களுக்குத்தான் இன்டர்வியூ அனுப்பப்பட்டு வருகிறது. பள்ளிப் படிப்பு என்பது வேறு, திறமை என்பது வேறு, ஆகவே அப்ளிகேஷன் போட்ட எல்லா மாணவ மாணவியருக்கும் இண்டர்வியூ அனுப்பி திறமையானவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஆவன செய்யுமா ?

[1985 ஜூன் 19

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே,
திறமை மிக்கவர்களாக இருந்தால் அதிகமான மதிப்பெண்கள்
பெற்றிருப்பார்கள், திறமையில்லாத காரணத்தினால்தான்
குறைவான மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். ஆகவே
ஐ.டி.ஐ.யில் சேருவதற்குக் குறிப்பிட்ட மதிப்பெண்கள் எடுக்க
வேண்டும் என்று ஒரு சீலிங் வைத்திருக்கிறார்கள். அந்த
அளவில் இருப்பார்களானால் நிச்சயமாக அவர்கள் அதிலே
சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

திருமதி இரா. சரோஜா : தலைவர் அவர்களே, என்னு
டைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பது எல்லோ
ருக்கும் தெரியும். அது சேலம் மாவட்டத்திற்கும் திருச்சி
மாவட்டத்திற்கும் நடுவிலே அமைந்துள்ளது. என்னுடைய
தொகுதியிலே எப்படியாவது அமைச்சர் அவர்கள் ஐ.டி.ஐ.
பயிற்சி நிலையத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அதை அங்கே அமைப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் சகோதரி திருமதி சரோஜா அவர்கள்
இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே
விடையளித்த நேரத்திலே அவர்கள் அவையில் இல்லை என்று
கருதுகிறேன். இந்த ஆண்டில் அதை அமைப்பதற்கான
சாத்தியக் கூறுகள் இல்லை. 1986–87 ஆம் ஆண்டிலே மாண்பு
மிகு உறுப்பினருடைய ஆவலைப் பூர்த்தி செய்யக்கூடிய முறை
யிலே நம்முடைய அரசு அங்கே ஒரு தொழிற் பேட்டையை
உருவாக்குவதற்குப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மீஞ்சூர்-சோழவரம் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி.

327–(*வினா எண் 1592)—திரு. கே. பி. கே. சேகர் : மாண்பு
மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் மீஞ்சூர், சோழவரம் ஆகிய
மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்
களுக்கு நிரந்தரமாக மாணவர் விடுதிகள் கட்டித்தர அரசிடம்
திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப் பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1985 ஜூன் 19]

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்
களே, தமிழகத்திலே ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ்
இயங்கிவரும் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ? அவை
எத்தனை விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலே நடத்தப்படு
கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?
களிலே எத்தனை சொந்தக் கட்டடங்களிலே நடைபெறுகின்றன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த விடுதி கட்டுகின்ற திட்டமானது 1949 ஆம்
ஆண்டு முதலிலே துவங்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கப்
பட்டார்கள். ஆதிதிராவிடர் பழங்குடியினர் 75 சதவீதமும்,
பிற்படுத்தப்பட்டோர் குற்றப் பரம்பரையினர் 20 சதவீதமும்
முற்பட்டோர் 5 சதம் ஆக 49,233 மாணவ மாணவியர்கள்
பயில்கின்ற 47 கல்லூரி விடுதிகளும் 8 தொழிற்கூட
விடுதிகளும் மற்றும் 658 பள்ளிக்கூட விடுதிகளும் இத்துறை
யின்கீழ் இயங்கிவருகின்றன. தனியார் கட்டடங்களிலே இயங்கி
வருகின்றவைகளுக்குப் போதுமான வசதிகள் இல்லாத கார
ணத்தினால் அரசே கட்டடங்கள் கட்டுகிற செயற்குறிப்பு
பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆதிதிராவிடர் மாணவியர்
விடுதிகளை கட்ட 50:50 நிதி உதவியுடன் மைய அரசின் துணை
கொண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆதிதிரா
விட மாணவர்கள் விடுதிளைப் கட்டுவதற்கான செலவினை
முழுவதுமாக மாநிலஅரசே மேற்கொண்டு வருகிறது. மேலும்
ஆதிதிராவிட மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளைப்
பொறுத்த வரையில், 216 விடுதிகள் அரசு கட்டிடங்களிலும்
மீதி 497 விடுதிகள் தனியார் கட்டடங்களிலும் இயங்கி வரு
கின்றன.

328—

வத்தலகுண்டு ஆதிதிராவிட மாணவியர் விடுதி.

(*வினா எண் 1602)—திரு. அ. பாலுசாமி : மாண்பு
மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலகுண்டு நகரில் வாட
கைக் கட்டிடத்தில் ஆதி திராவிட மாணவியர் விடுதி செயல்
படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் புதிய கட்டிடம்
கட்டித் தர அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,
(அ) ஆம்.

(ஆ) வரும் ஆண்டில், தேவை, நிதி நிலைமையைப்
பொறுத்து, வத்தலகுண்டு என்னுமிடத்தில் மாணவியர்
விடுதிக்கு அரசு கட்டடம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1985 ஜூன் 19

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் கூறு
கின்ற நேரத்தில் நிதிநிலைமைக்கு ஏற்ப இந்த மாணவிகள்
விடுதி கட்டப்படும் என்று கூறினார்கள். வத்தலகுண்டு
நகரில் ஆதி திராவிடர் நல விடுதி சிறிய வீட்டில் வாடகைக்கு
இருந்து வருகிற காரணத்தாலும் எந்தவித வசதியும் இல்லாமல்
மாணவிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால் அமைச்சர்
அவர்கள் முன்னுரிமை வழங்கி இந்த நிதி ஆண்டில் அந்த
விடுதியைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வத்தலகுண்டு என்னும்
இடத்தில் ஆதிதிராவிட மாணவியர் விடுதிக்கு அரசு கட்டிடம்
கட்ட, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழ
கத்தின் மேலாண்மை இயக்குநர் அரசு குறிப்புக்கு ஏற்ப, ஆதி
திராவிடர் நலத் துறை இயக்குநர் வழியாக அரசுக்கு சமர்ப்பிக்கப்
பட்டுள்ளது. ஆனால், மகளிர் விடுதி கட்டுவதற்கென 1984—
85 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்
படாமையால் வத்தலகுண்டு என்னுமிடத்தில் மாணவியர் விடுதி
கட்டுவதற்கு 1985—86-ல் ஆணை கொடுக்கப்பட்டு, வரைபடமும்
அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மாணவியர் விடுதி கட்டுவதற்காக இந்த நிதி
ஆண்டில் சேர்க்கப்படாது என்று அமைச்சர் அவர்கள் அறி
வித்தார்கள். மாணவர்களாக இருந்தாலும் பரவாயில்லை.
மாணவியர்கள் வெளியில் சென்று குளிப்பதற்கோ அல்லது
படிப்பதற்கோ வசதி இல்லாத காரணத்தால், அமைச்சர்
அவர்கள் கருணையோடு இந்த நிதி ஆண்டில் கட்டித் தர
வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொண்டு, இல்லாவிட்
டால், அடுத்த நிதி ஆண்டிலாவது கட்டிக் கொடுக்க உத்தரவு
பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில்
கிட்டத்தட்ட 15 விடுதிகள் 10 மாணவியர் விடுதிகளும், 5
மாணவர் விடுதிகளும் கட்டுகின்ற ஒரு செயற்குறிப்பு நட
வடிக்கை எடுக்கின்ற அளவிலே இருக்கிறது. வருகின்ற ஆண்
டிலேதான் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்,



1985 ஜூன் 19]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த வத்தலகுண்டு பெண்கள் விடுதியா
னது 1957-லே ஆரம்பிக்கப்பட்டு அந்த இடத்திலேதான் இன்று
வரை நடந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு
சாங்க்ஷன் செய்யப்பட்டு, வரைபடம் வரைந்து, எஸ்டிமேட்ஸ்
எல்லாம் அனுப்பிய பிறகு கட்டிடம் கட்டுவதற்கான வேலையை
தாட்கோ, டி. டி. ஓ. மூலமாகச் செய்வதற்கு நடவடிக்கை
எடுக்கப்பட்டது. இன்னும் அடுத்த ஆண்டு சேர்க்கலாம்,
அதற்கு அடுத்த ஆண்டு சேர்க்கலாம் என்பது உண்மையிலே
குழந்தைகளுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியமாக அமையாது
என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்த நிதி ஆண்டிலே
எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கட்டுவதற்கான செயற்
குறிப்பிலே வரைபடம் எல்லாம் அனுப்பப்பட்டதாக மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அனுப்
பப்பட்டிருந்தால் இந்த ஆண்டு சேர்க்கின்ற அளவில் நடவடிக்கை
மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்
கோவிலில் 125 ஆதிதிராவிடர் மாணவர்களுக்காகக் கட்டிடத்தைக்
கட்டுவதற்கு சுமார் ரூ. 17 இலட்சத்துக்கு டெண்டர் விடப்பட்டு
ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை கட்டிடம் கட்டுவதற்
கான செயற்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அது
செய்யப்பட உள்ளதா? அந்தக் கட்டிடம் கட்டப்பட உள்ளதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.
அது எப்படிப்பட்டது, எந்த நிலையில் இருக்கிறது என்பது
பற்றிய தனிக் கேள்வி கேட்கப்பட்டால் விடை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 329 மாண்புமிகு
அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

330—

## டோராப்பாறை அணைக்கட்டு

(*வினா எண் 375)—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் டோராப்பாறை அணைக்கட்டுத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9–40)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** தலைவரவர்களே, இப்படிப்பட்டத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் கொடுக்கும்போது இதனுடைய 'காஸ்ட் பெனிபிட் ரேஷியோ' பார்க்கிறார்கள். அதிகாரிகள் திட்டங்களைத் தயாரிக்கும்போது அந்த அணைக் கட்டுமானச் செலவு எவ்வளவு என்று சொல்கிறார்கள். ஆனால் உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது 10 ஆண்டுகளுக்கு முன்னால் என்ன விலை இருந்ததோ அதைவைத்து வருவாய்த்துறையினர் நிர்ணயம் செய்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். ஆகவே, வருவாய்த் துறையினர் உணவுப் பொருள் விலையை நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக வேளாண்மைத் துறையிடம் அந்தப் பணியைக் கொடுத்து அல்லது வேளாண்மைத் துறையிடமிருந்து அந்த விவரத்தைப் பெற்று பயனீட்டுச் செலவை முடிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, இந்த சட்டப் பேரவையில் இதற்கு முன்பு இன்னொரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது இந்தக் கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். சாதாரணமாக வருவாய்த் துறை இத்தகைய கணக்கீட்டை மேற் கொள்ளக்கூடிய ஆணை செயல் முறையிலிருக்கிறது. இப்போது ஆய்வுப் பணியை மேற்கொள்ளும்போது திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்கிற தகவலை பொதுப் பணித் துறை பொறியாளர்கள் மேற்கொள்ளவும் உணவு உற்பத்தி, அதனுடைய மதிப்பு பயிர்ச் செலவு பற்றிய அறிக்கையை வேளாண்மைத் துறை தரவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டு





பரீட்சார்த்தமாக ஒருசில திட்டங்கள் ஏற்கெனவே வேளாண்மைத் துறைக்குத் தரப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் இத்திட்டமும் வேளாண்மைத் துறைக்குத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த டோராப்பாறை அணைக்கட்டுத் திட்டம் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி தாலுகா, திருமங்கலம் தாலுகா, சாத்துப்பட்டு தாலுகா மக்கள் நாள் எல்லாம் வானம் பார்த்திருக்கிற தங்களுடைய நிலங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று கருதி, அந்த வகையில் பரிசீலிக்கப்பட்டது. இதற்கு முன்னால் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. இராஜாமுகமது அவர்கள் இந்த டோராப்பாறை அணைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன் பின்னால் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த டோராப்பாறைத் திட்டம் தேறாப்பாறைத் திட்டம் என்று எல்லாம் பேசினார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் இப்போதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் ஆய்வு செய்யாமலே அடிக்கல் நாட்டினார்களா ? இந்த ஆய்வு எப்போது நிறைவுபெறும், எவ்வளவு செலவாகும், எப்போது பணி எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, அடிக்கல் நாட்டியது பற்றிய விவரம் தற்போது என்னிடம்இல்லை, அதனால் அதுபற்றி இப்போது நான் எதுவும் சொல்ல இயலாது என்றாலும் இந்த டோராப்பாறைத் திட்டத்தின் வாயிலாக 1075 ஏக்கர் புதிய புன்செய் நிலம் பாசனவசதி பெறுவதுடன் 732.58 ஏக்கர் நன்செய் நிலம் பாசன உறுதி பெறும். அதுமட்டுமல்ல. 101.70 ஏக்கர் நிலத்தின் பாசனப் பற்றாக்குறையை போக்கும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது கூடுதலாக 1,722.73 டன் உணவுப் பொருள் உற்பத்தியாகும் என்றும் பயன் செலவையும் இதனையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது 165:1 என்ற விகிதத்தில் இருக்கிறது என்றும் தெரியவருகிறது. ஆகவே, இது மிகவும் சிக்கனமற்ற ஒரு திட்டமாகும். இருந்தாலும் இந்தத் திட்டத்தை முதலில் பரிசீலனை செய்த காலத்தில் 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு கால்வாய் வெட்டி, பாசன வசதி செய்ய வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. பின்னர் செலவை குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அந்த 25 கிலோ மீட்டர் தூரமுள்ள கால்வாய் வெட்டு வதை பக்கத்தில் இருக்கிற பகுதிகளுக்கு மட்டும் பாசன வசதி செய்யும் வகையில் ஆய்வுத் திட்டத்தை மாற்றியமைத்து, அந்த வகையில் ஆய்வு செய்து அறிக்கை அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தப் பணி இப்போது நடைபெற்று வருகிறது.

## தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்பு.

331—(*வினா எண் 1354)—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்பிற்கான திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் தடப்பள்ளி வாய்க்காலினை சீரமைக்க தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கருத்துரு அனுப்பியிருந்தார். இக்கருத்துரு பரிசீலிக்கப்பட்டு இதற்குப் பதிலாக தடப்பள்ளி கால்வாயினை நவீனப்படுத்தும் கருத்துருவினை அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தடப்பள்ளி சேனலைப் பொறுத்த வரையில் கடைக்கோடியில் இருக்கின்ற ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மிக விரைவாக இத் திட்டத்தைப் பரிசீலனை செய்து பணிகளைத் துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தடப்பள்ளி வாய்க்காலைச் சீரமைக்க ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி 317 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்ட அறிக்கையை அரசுக்குத் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் அனுப்பியிருந்தார்கள். இந்தத் திட்டத்தினால் 7499 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதியும் பாசன உறுதியும் கிடைக்கும் என்ற தகவல் தரப்பட்டிருக்கின்றது. என்றாலும் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் இதைப் பல திட்டங்களுக்கும் பரவலாக்கக் கூடாது என்றும் இந்தத் திட்டத்தை 1986—87 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டமாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவேதான் இதை மாற்றி தடப்பள்ளி வாய்க்காலைச் சீரமைப்பதற்கும் பதிலாக தடப்பள்ளி வாய்க்காலை நவீனப்படுத்துவதற்காக ஒரு திட்டக் கருத்துருவை அனுப்பி



வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த ஆய்வு அறிக்கை அரசுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுத் தொகை அதிகமாக இருப்பதன் காரணத்தால் அதனை நவீனப் படுத்துவதற்கான செயற்குறிப்பை தயாரித்து அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் 1985—86 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் நல்லது. அந்த வகையில் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நிதிப்பற்றாக்குறை இருப்பதன் காரணத்தால்தான் இந்தத் திட்டம் அடுத்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்று அந்தத் துறையைச் சார்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இங்கே தகவல் தந்து இருக்கிறார்கள்.

## மாம்பழத்துறை அணைக்கட்டு

332—(*வினா எண். 1388)—திரு. எஸ். ரெத்தினராஜ் மற்றும் திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை அணைக்கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்த முதன் நிலை அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, இந்த மாம்பழத்துறை அணைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் வெகு காலமாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று குமரி மாவட்ட மக்கள் ஒட்டு மொத்தமாகக் கேட்கிறார்கள். குமரி மாவட்டம் நல்ல செழிப்பான மாவட்டமாக இருந்தபோது நன்றாக இருந்தது. இப்போது அதுவும் வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து மாம்பழத்துறை அணையை வெகு விரைவில் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழத்துறை அணைக்கட்டுத் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு கைவிடப் பட்ட ஒன்றாகும். அதற்குப் பிறகு நம்முடைய முன்னாள் சட்டமன்றப்பேரவை உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் நான் நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்தபோது என்னை அழைத்துச் சென்று அங்கேயுள்ள நிலைமையை நான் பார்த்ததற்குப் பிறகு இதனை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற வகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி மறு ஆய்வு செய்யப்பட்டு அரசுக்கு முதல்நிலை அறிக்கை அனுப்பப் பட்டிருக்கின்றது. இந்த நிலை அறிக்கையைத் தொடர்ந்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பு இருக்குமேயானால் அவ்வாறு விரிவான ஆய்வை மேற் கொள்ள அரசு உத்தரவு பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றது, அது எந்த அளவில் இருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர் களே, மூலக் கேள்விக்கு உள்ளே போகாமல் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் உள்ளாறுக்குப் போய் இருக்கின்ற காரணத் தால் தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, மாம்பழத்துறை அணை நீர்ப்பாசனத்திற்காக மட்டுமல்ல, அந்தப் பகுதியில் உள்ள மக்களின் குடிநீர்த் தேவைக்கும் பயன் படும் என்ற முறையில் இன்றைக்கு தகவல் கிடைத்திருக்கின்ற காரணத்தால் பத்மநாபபுரம் முனிசிப்பாலிட்டி, இரணியல் பஞ்சாயத்து போன்றவற்றில் தற்போது குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் பின்னணியில் விரைவில் இந்த அணையைக் கட்டி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. யா.சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தைப் பொறுத்த மட்டில் குடிநீர் அல்லது பாசனம் ஆகிய இரண்டில் ஒன்றுக்குத்தான் பயன் படுத்தக் கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை உருவாக்கி, இந்த திட்டத்தின் வாயிலாக பாசனத் திற்கு தண்ணீரைப் பயன்படுத்தலாமா அல்லது குடிநீருக்கு பயன்படுத்தலாமா என்று தான் யோசனையிலே இருக்கிறார்



கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரிய ஆலோ சனையை அரசுக்குந் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்குப் பிறகுதான் இந்தத் திட்டத்தை எப்படி மேற்கொள்வது. யார் மேற்கொள்வது என்ற முடிவிற்கு வர முடியும்.

## பாண்டியாறு— புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம்.

333—(*வினா எண் 1629)— திருமதி பி. லட்சுமி, திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு— புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர் களே, (அ) ஆம்.

(ஆ) பாண்டியாறு—புன்னம்புழா நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கேரள, தமிழக மாநிலங்களுக் கிடையே 1965-ம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத் திட்டத்தின் மீது முடிவெடுக்குமுன் பாண்டியாறு புன்னம்புழா நதிகளின் நீரைப் பாசனத்திற்கு திருப்பிவிட முறையீடுகள் வரப் பெற்றன. இது குறித்து கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, இரண்டு மாநில அரசுகளும் ஏற்றுக் கொள் ளும் வகையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கிழக்கு பகுதி விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையான இந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் தொடர்பாக கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது என் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதிலில் தெரிவித் திருக்கிறார்கள். அப்படியானால், அந்தத் திட்டம் எப் பொழுது துவக்கப்படும் என்பதையும், அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலை வர் அவர்களே, கேரள அரசோடு ஒப்பந்தம் ஏற்பட்டு விட்ட தாக நான் சொல்லவில்லை. கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு இரண்டு மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது தொடர் பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தான் சொல்லியிருக்கிறேன்.

[1985 ஜூன் 19

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை அது அளிக்கும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டமே ஆரம்பத்தில் மின்சார உற்பத்திக்காக என்று—நீர் மின் திட டத்திற்காக என்று—உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அதற்குப்பிறகு, அப்படி மின்சாரம் உற்பத்தி செய்ததற்குப் பிறகு அந்தத் தண்ணீரை பாசனத்திற்கும் பயன்படுத்தலாம் என்ற ஒரு கருத்தை அந்தப் பகுதி விவசாயிகள் வலியுறுத்தி, அந்த வகையிலே ஒரு கட்டத்தில் கேரள அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்னொரு கட்டத்தில், ஆரம்பக் கட்டத்தில் எந்த நிலையிலே நின்றார்களோ அதே நிலையில் நின்று, ஒரு சில விதிகளுக்கு உட்பட்டு அல்லது கருத்துக்களுக்கு உட்பட்டு, தமிழகத்தில் மின்சார உற்பத்திக்காக மட்டும் அந்தத் திட்டத் தின் மூலம் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்ற கருத்து கேரள அரசால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இப்போது மேற்கு நோக்கி பாயும் நதிகளை கிழக்கே திருப்பி விடக் கூடிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் வேறு சில ஷரத்துக்களைப் போட்டு, கேரள பவானி வழியாக கேரளத்திற்குக் கொடுக்க கூடிய தண்ணீரைப் பொறுத்தமட்டில், தமிழகம் மேற்கொள் ளக் கூடிய நிலையை வலியுறுத்தி, அந்த நிலையை ஏற்றுக் கொண் டால், அந்தப் பாண்டியாறு—புன்னம்புழா மின் திட்டத்திற் கும் உரிய முடிவுகளை மேற்கொள்ளலாம் என்ற ஒரு நிபந் தனையின் பேரில் கேரள அரசு இது குறித்து மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. அந்த நம்பிக்கையில் நாம் பேச்சு வார்த்தையை மேற்கொள்ளலாம் என்று ஆரம் பத்தில் இருந்தது. இப்போது கேரள பவானியைப் பொறுத்த மட்டில் எந்த அளவுக்கு அவர்களுக்குத் தண்ணீரை தருவது என்பது குறித்து ஒரு கருத்தை கேரளம் வலியுறுத்துகிறது. அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதா இல்லையா என் பதை நமது சட்ட வல்லுநர்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறார் கள். அவர்களுடைய ஆய்வுக்குப் பிறகுதான் அரசின் நிலை தெரியவரும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புன்னம்புழா — பாண்டியாறு திட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த காங்கிரஸ் ஆட்சியின் போது மின் சாரம் எடுப்பதற்காகத்தான் அந்த திட்டம் ஆரம்பத்திலே பாடப்பட்டிருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யின்போது, இந்தப் பாண்டியாறு — புன்னம்புழா திட்டத்தின்



1985 ஜூன் 19]

மூலமாக வெளிவரும் உபரி தண்ணீரை கோயம்புத்தூர், அவி நாசி, பல்லடம் ஆகிய தாலுக்காக்களில் இருக்கிற விவசாயி களுக்கு பயன்படும் வகையில் பாசனத்திற்கும் பயன்படுத்த வேண்டும் என்று நமது அரசு கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது. இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்றையதினம் பொதுப் பணித்துறை அமைச்ச சராக இருந்தபோது, கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தும்போது, சுமார் 4 ஆயிரம் டி.எம்.சி. வாட்டர் வீணாகக் கடலிலே கலக்கிறது. நம்முடைய தேவை 400 டி.எம்.சி. தண்ணீர் தான். ஆகவே அதை கேரளா அரசு ஒப்புக்கொள்ள வேண்டு மென்று ஏற்கனவே வாதாடி இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு கேரள சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பான நிலை இருக்கிறது. இப்போது இருக்கிற காங்கிரஸ் ஆட்சி கேரளத்தில் நமக்கு இணக்கமான நிலையில் தண்ணீரை தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தால் இது பற்றி மறு பரிசீலனை செய்து, வீணாக கடலில் கலக்கிற தண்ணீர் தமிழகத்திற்கு பயன்படுகிற அளவிற்கு ஏற்பாட்டைச் செய்வதற்கு மீண்டும் பேச்சு வார்த்தை தொடங்கி முடிப்பார்களா? கோவை, அவிநாசி, பல்லடம் தாலுக்கா மக்களுக்கு விமோசனம் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கேரள அரசிற்கும், தமிழ்நாடு அரசிற்கும் பேச்சுவார்த்தை நடந்தது உண்மை தான். ஆனால் கேரள அரசு இணக்கம் தர மறுத்துவிட்ட—காரணத்தால் அது கைவிடப்பட்டு விட்டது.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைக் குறித்து கடைசியாக கேரள அரசோடு எப்போது பேச்சு வார்த்தை நடந்தது? அடுத்து எப்போது பேச்சு வார்த்தை நடத்த தேதி நிர்ணயிக்கப்பட்டி யிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர் களே, கேரள பவானி நதிநீர்ப் பங்கீட்டைப் பற்றி 25-10-1982 அன்று கேரளா மின் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு மின் துறை அமைச்சர் ஆகியவர்கள் கருத்து பரிமாறல்கள் மேற் கொண்டார்கள். 7—11—1982 அன்று மேற் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவது பற்றி கேரளா மற்றும் தமிழக அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் சென்னையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திலே கேரளம் தனது திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் பவானி நீரை காவேரி படுகைக்கு திருப்புவது

சம்பந்தமாக தமிழகத்திற்கும் கேரளாவிற்கும் இடையே ஒரு
உடன்பாடு ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் விவாதிக்கப்
பட்டது. அந்த முறையில் வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டது.
கேரளா அதிகாரிகளுக்கு அந்த வரைவு காட்டப்பட்டது. ஆனால்
கேரளா அலுவலர்கள் அதைத் திருத்தியமைக்க வேண்டு
மென்று வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆகவே அதைத் திருத்து
வது சம்பந்தமாகத்தான், தமிழக அரசு அதை ஏற்றுக்கொள்ள
இயலக் கூடிய நிலையில் இருக்கிறதா, இல்லையா என்பதை
ஆராயத்தான் அரசு நடவடிக்லைககளை சட்ட நிபுணர்கள் மூல
மாக மேற்கொண்டிருக்கிறது.

திரு. அ. பிரணவநாதன் : தலைவர் அவர்களே, இராம
நாதபுரம் மாவட்டம் கடலாடி தொகுதியில் சாகுபடி தருகிற
பெரிய கண்மாய் போன்ற 15 கண்மாய்களுக்கு தங்கதேவன்
கால்வாய் என்ற நீர்ப்பாசன கால்வாய் உதவுகிறது. அந்தக்
கால்வாய் சீரமைப்புக்காக நடப்பு நிதியாண்டில் 20 இலட்சம்
ரூபாய்க்கு ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்பட்டு அவர்கள் இரண்டு
மாதங்களுக்கு முன்னால் வேலை துவங்கினார்கள். இப்போது
அந்த வேலையில் ஆரம்ப கட்டத்திலேயே அவர்கள் தங்கள்
கூடாரத்தைத் தூக்கிக் கொண்டு வேலையை துவங்காமல்
சென்றுவிட்டார்களே, அந்த நிலைமை அமைச்சர் அவர்களுக்குத்
தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்
களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் இருக்கிறது. ஆகவே
தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, இந்த பாண்டியாறு—
புன்னம்புழா திட்டம் கடந்த காங்கிரஸ் ஆட்சியிலும், திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலும் முடிக்கப்படாமல் இருக்கிறது.
இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் ஆட்சியிலாவது நிறை
வேற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்
களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு
மாநிலங்களுக்கு உட்பட்ட திட்டம கும். ஆகவே இரண்டு
மாநிலங்களுக்குமிடையே ஏற்படுகிற ஒப்பந்தத்தைப் பொறுத்து
தான் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதும், மேற்கொள்ளாத
நிலையும் இருக்கும். ஆகவே உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு,
ள அரசோடு ஒப்பந்தம் வர தமிழக அரசு முயற்சிகளை
கேர கொள்ளும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான்
மேற் லிக் கொள்ள முடியும்.
சொல்



## நெய்வேலி சுரங்கப் பணிகளால் நிலநீர் பாதிப்பு.

312—(*வினா எண் 934)— திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி சுரங்க நீர் வெளியேற்றம் காரணமாக
விருத்தாசலம் வட்டத்தில் நிலநீர் குறைந்து கடல் நீர் உட்புகும்
ஆபத்து உள்ளது என்ற அப்பகுதி மக்களின் முறையீடு ஏதும்
அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை
என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ)
முறையீடு ஏதும் இத்துறையினால் பெறப்பட வில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, நெய்வேலி
சுரங்கத்தில் 500, 600 அடி ஆழத்தில் உள்ள தண்ணீர் லட்சக்
கணக்கான கேலன்கள் ஒரு மணிக்கு வெளியே வருகிறது. இத
னால் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கடல்நீர் உள்ளே
புகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நிலநீர் ஆராய்ச்சியாளர்
கள் அறிக்கை கொடுத்திருப்பதாக அறிகிறேன். அதே போல
குஜராத்தில் ஒரு பகுதியில் நிலநீரில் கடல் நீர் உள்ளே புகுந்து
அதைச் சரிப்படுத்துவதற்காக அரசு லட்சக்கணக்கான, கோடிக்
கணக்கான ரூபாய் செலவு செய்தது என்பதாகவும் அறிகிறேன்.
ஆகவே அந்தப் பகுதியில் மேலே தண்ணீரை விட்டால் கீழே
செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே அங்கே கடல்நீர்
புகாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது
என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, மூலக் கேள்வியைப் பொறுத்தமட்டிலும் விருத்தா
சலம் பகுதி நெய்வேலி சுரங்கத்தால் பாதிக்கப்பட்டு கடல் நீர்
விருத்தாசலம் பகுதிக்கு வருகிறதா என்பதாகும். அத்தகைய
ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத் துறையினால் கடலுக்கு
அருகில் இருக்கும் கடலூரிலுள்ள அரசு மருத்துவமனையில் ஆழ்
குழாய் கிணறு ஒன்றைத் தோண்ட வேண்டிய சந்தர்ப்பத்தில்
ஆழ் குழாய் கிணறுகள் தோண்டப்பட்டன, அந்த நீர்
பரிசீலிக்கப்பட்டது. அது கடல் நீரால் பாதிக்கப்படாமல் இருப்

பது தெரிய வந்தது. விருத்தாசலம் வட்டம் கடலூரிலிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவைக் கருதும்போது, மேற்படி அபாயம் விருத்தாசலத்திற்கு நேருவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிகிறது.

**திரு. ஆர். தியாகசராசன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குள்ளச்சந்தை நெய்வேலிக்கு 15 கி.மீ. அருகிலே கடல் இருக்கிறது. 1-வது, 2-வது சுரங்கம் இரண்டிலும் இப்போது 500 அடி, 600 அடி ஆழத்தில் தண்ணீர் எடுக்கிறோம். அதனால் அந்தத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று நில நீர் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பதால் தான் அமைச்சரிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். வெளியேற்றுகின்ற அந்தத் தண்ணீரை மேல் பகுதியில் விட்டால், பாசனத்திற்கு வரும். இரண்டாவது அந்தத் தண்ணீர் கீழே போகிறபோது, தண்ணீர் வரும் வாய்ப்பு குறைகிறது. இது மாதிரியான ஒரு அமைப்பு குஜராத்திலே இருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதனால் தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அங்கே நல்ல தண்ணீர் கிடைத்தால் அதுவே போதும்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத்தில் இருக்கக்கூடிய பூகோள அமைப்பு தமிழகத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் நெய்வேலிக்கும் பக்கத்தில் இருக்கக் கூடிய கடல் நகரமான கடலூருக்கும் இடையே 30 கி.மீ. தூரம் இருக்கிறது. அங்கேயே தண்ணீர் வரக்கூடிய வாய்ப்பு இல்லாத போது, 90 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள விருத்தாசலத்திற்கு எப்படி வர வாய்ப்பிருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 318, 319, 320 மற்றும் 321 ஆகியவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

பெரியகுளம் அகமலை சாலை.

318— (*வினா எண். 468)— **திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் மற்றும் திரு. எ. தெய்வநாயகம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திலிருந்து அகமலை என்னும் ஊருக்குச் சாலை அமைக்கும் பணி நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன ?

(ஆ) பாதை அமைக்கும் பணி எப்போது நிறைவு பெறும்





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) பெரிய குளத்திலிருந்து சோத்துப்பாறை வரை 7.40 கி.மீ நீளத்திற்கு தார்ச்சாலை ஏற்கனவே உள்ளது. சோத்துப்பாறையிலிருந்து அகமலை செல்ல சுமார் 12 கி.மீ. நீளத்திற்கு மலைப்பாதை மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அமைத்திட இதுவரை மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை. எனவே பணியை நிறைவேற்ற இயலவில்லை.

(ஆ) பெரியகுளம் தாலுக்காவில் உள்ள ''வாட்டர் ஷெட்'' பகுதியில் உள்ள வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும் தருணத்தில் அகமலைக்குச் செல்லும் மலைப்பாதை வேலையை மத்திய அரசின் அங்கீகாரத்திற்காக பணியின் முக்கியத்துவம் கருதி மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்படும். மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் பணி தொடங்கப்படும்.

**திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம், அகமலை ஊராட்சியில் அதைச் சார்ந்த கிராமங்களான அலங்காரம், மருதையனூர், ஊரடி, ஊத்துக்காடு, அண்ணா நகர், சுப்ரமணியநகர் போன்ற பகுதிகளைச் சார்ந்த ஊராட்சியாகும். கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேல் அங்கே வாழ்கின்றார்கள். பழங்குடி மக்களும் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை 1966-லேயிருந்து 1978 வரை பல்வேறு தலைப்புகளின் கீழ் கிட்டத்தட்ட 2 லட்சம் ரூபாய் செலவு செய்து சோத்துப்பாறையிலிருந்து குட்டிமாமரம் என்ற இடத்திற்கு 10 கி.மீ. தூரத்திற்கு ரோடுகள் போட்டிருந்தார்கள். அந்த ரோடுகள் சரியான முறையில் பராமரிக்க முடியாத காரணத்தால், ஜீப்புகள், லாரிகள் போய்க்கொண்டு இருந்தது. தற்போது பழுதுபட்ட காரணத்தால், போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. மத்திய அரசின் அனுமதி கிடைத்ததற்குப் பிறகு இந்த வேலைகள் துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கேயிருக்கக்கூடிய பழங்குடி மக்கள் பக்கத்தில் இருக்கின்ற மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றாலும்கூட அந்த மலைப்பாதைகள் சரியில்லாத காரணத்தால், டோலியிலே கட்டிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த நிதியாண்டிலேயே அந்தப் பாதையை செப்பனிட்டு பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோத்துப்பாறை வரை இருக்கின்ற பாதையை செப்பனிடுவதில் இப்போது பிரச்சினை இல்லை. அதற்கு மேலே இருக்கின்ற 12 கிலோ மீட்டர் நீளத்தைத் தான் இப்போது அமைப்பதில் பிரச்சினை இருக்கிறது. அதற்கு ஏறத்தாழ

[1985 ஜூன் 19

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மந்தவெளி பகுதியில் ஒரு வருட காலமாக பணி மனை கட்டுவதற்கு இடம் ஓதுக்கீடு நிதி ஓதுக்கீடு செய்து முடித்து ஆகி விட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

**நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகளை மாற்றல்.**

*320*—(*வினா எண். *1043*)— **திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தில் ஓடுகின்ற, போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 1977 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டைச் சேர்ந்த பேருந்துகள் யாவும் மாற்றப்பட்டுவிட்டன. 1978-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு தற்சமயம் இயக்கப்பட்டுவரும் 65 பேருந்துகளை மாற்றிப் புதிய பேருந்து விடும் செயற்குறிப்பு சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10–10)

**திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பஸ்களை எல்லாம் அகற்றி விட்டோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இருப்பினும், ஒரு சில கிராமங்களில் வரும் பஸ்கள் மிகவும் பழமையான நிலையில் இருக்கின்றன. அதை மாற்றி அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 7 ஆண்டுக்காவது பேருந்துகளை இயக்கினால் தான் சரியாக இருக்கும். 1978-லே வாங்கப்பட்ட பஸ்கள் 65 இருக்கின்றன. அதையும் உடனடியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. இதிலே பிரச்சினை என்னவென்றால், அங்கே ஓடுகிற வண்டிகள் 'ஷார்ட் வீல் பேஸ்' என்ற சிறிய பேருந்துகள். அவைகள் எதிர்பார்க்கிற அளவுக்குக் கிடைப்பதில்லை. அதன் உற்பத்தி குறைவாக இருக்கிற காரணத்தால் கிடைப்பதில்லை. எனவே தான் பிரச்சினை ஏற்படுகிறது. அதையும் பெறுவதற்கு சேரன் போக்குவரத்துக் கழகம் முழு முயற்சிகள் எடுத்து வருகின்றது.



1985 ஜூன் 19]

**திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியில் பணிமனை கட்டப்படுவதற்கு இடம் ஓதுக்கப்பட்டு, அது இன்னமும் கட்டப்படாமல் உள்ளது. இதில் அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அங்கே பணிமனை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. அவசியம் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. உச்சி :** பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது முழுமையாக தேசியமயமாக்கப்பட்ட ஒரு பகுதி. அங்கே ஓடும் பேருந்துகள் பல மலைப்பகுதிகளில் ஓடுவதால், அடிக்கடி ரிப்பேர் ஆவது சகஜம். ஆகவே, பேருந்துகளுக்கான கால நிர்ணயத்தைக் குறைத்து, புதிய பஸ்களை விட அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, புதிய பஸ்கள் விட்டாலும் கூட, அவை 6 மாதத்திலே ரிப்பேர் ஆக வாய்ப்பு உண்டு. பழைய பேருந்துகளானாலும் பராமரிப்பதில் சரியாக இருந்தால் பிரச்சினை வராது. குறைந்தபட்சம் 7 ஆண்டுக் காலம் என்று சொல்லும் கணக்கை மலைப் பகுதிகளுக்கு வைக்காமல் தான் இருக்கிறோம். சிறிய புதிய பேருந்துகள் அதன் தனித்தன்மையின் காரணமாக கிடைப்பதில்லை. அதன் காரணமாக பிரச்சினை ஏற்படுகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம் முயற்சி எடுத்து நிலைமைகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டியிலே எப்படி சேரன் போக்குவரத்துக் கழகம் நீலகிரி மலைப் பகுதியிலே வண்டிகளை ஓட்டுகின்றதோ அதைப் போல ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் வண்டிகளும் நீலகிரி மாவட்டத்திற்குச் செல்கின்றன. பெரியார் மாவட்டத்திலே உள்ள மலைப் பகுதியான தாளவாடி மலைப் பகுதிக்கும் ஜீவா போக்குவரத்துக் கழக வண்டிகள் செல்கின்றன. அந்த வண்டிகளுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே ஜீவா போக்குவரத்துக் கழகத்திலிருந்து மலைப் பகுதிகளுக்கு விடுகின்ற வண்டிகளின் கண்டிஷன்— நிலைமை நல்ல முறையில் இருப்பதற்கும், புதிய பேருந்துகளை, ஷார்ட் வீல் பேஸ் உள்ள வண்டிகளை விடுவதற்கும் அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1985 ஜுன் 19]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே ஜீவா போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், பெரிய பேருந்துகள் அவ்வளவு மோசமாக இருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. சிறிய பேருந்துகளிலும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அந்த வண்டிகள் கிடைக்காத காரணத்தால், இருப்பதையே சரி செய்து ஓட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் அவை பழுதுபட்டு நின்றுவிட வாய்ப்பு இல்லை. பார்ப்பதற்கு பழையதாகத் தெரிந்தாலும், ஒழுங்காகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. புதிய பேருந்துகள் கிடைத்தவுடன் அவை மாற்றப்படும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஊட்டி பிளவர் ஷோவுக்காக ஊட்டிக்குச் சென்றிருந்தபோது, சேரன் போக்குவரத்துக் கழகம் சிறப்பாகப் பணியாற்றுவதை என்னாலே பார்க்க முடிந்தது. இருந்தபோதிலும், ஊட்டி மலைப் பகுதியாக இருக்கிற காரணத்தால், பேருந்துகள் எல்லாம், பர்ஸ்ட் கியர், செகன்ட் கியரிலே செல்லும் காரணத்தால், கரும்புகை அதிகமான அளவில் வெளியாகி, ஊட்டியினுடைய தூய்மையான, துப்புறவான சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், பொல்யூஷன் கன்ட்ரோலுக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் அதிகமான நடவடிக்கை எடுத்து, அந்த நிலைமை மாற்றும் ஏற்பாட்டினை, சுற்றுப்புறத் தூய்மை பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏதாவது செயற் குறிப்பு அனுப்பப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, முதலிலே அங்கே பேருந்துகள் சரியாக இயக்கப்படுகின்றன என்று சொன்னதற்கு நன்றி. பேருந்துகளைப் பொறுத்தவரை, புதிய பேருந்துகளாக இருந்தால் கூட, முதல் கியர், இரண்டாவது கியரில் போகும்போது கூட, புகை வரத்தான் செய்கிறது. பேருந்துகளை ஒழுங்காகப் பராமரிக்கும்போது, நார்மலாக இருக்கிறபோது புகை வர வாய்ப்பில்லை. மலைப் பகுதிகளில் அது தவிர்க்க முடியாத ஒரு நிலையாக இருக்கிறது. எனினும், பேருந்துகளை ஒழுங்காகப் பராமரித்து விட்டால் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் சிறப்பாகப் பராமரித்துக் கொண்டிருக்கிறது. மேலும், செயல் குறிப்பு அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே தற்போது சேரன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் அல்லாமல், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய மற்றும் பல போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. ஏற்கனவே, அந்த மாவட்டத்திற்கு செல்லக்கூடிய ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் ' ஹில் அலவன்சு ' கொடுக்கப்பட்டு வந்தது.



1985 ஜுன் 19]

தற்போது திருவள்ளுவர் போன்ற கழகங்களில் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அமைச்சரவர்களுக்கு அது தெரியுமா? அப்படியென்றால், முன்னால் வழங்கப்பட்டு வந்தது போல் ஹில் அலவன்சு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இது பேருந்துகளைப் பற்றிய பிரச்சினை. தொழிலாளர்களைப் பற்றிய பிரச்சினை அல்ல. தற்போது அதற்கான குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனாலும், விரைவிலே ஒரு கூட்டம் கூட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொழிற் சங்கத் தலைவர்களோடு பேச வேண்டுமென்ற முறையில் கூட்ட இருக்கிறோம். அதில் மாண்புமிகு உறுப்பினரவர்களும் வரவிருக்கிறார்கள். அதில் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் புதிதாக சமீபத்திலே துவக்கப்பட்ட கழகம். அமைச்சரவர்கள் சமீபத்தில் ஈன்றெடுத்த குழந்தை. அமைச்சரவர்கள் அந்த இளம் குழந்தைக்குப் புதுசு வாங்கிக் கொடுப்பாரா— அதாவது புதிய பேருந்துகள் வாங்கிக் கொடுப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள், என்னுடைய குழந்தை என்று. என்னுடைய குழந்தையை நான் நிச்சயமாக நல்லமுறையில் பராமரித்துக் கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மாமனாகவோ அல்லது மச்சானாகவோ இருக்கலாம். எனவே நீங்களும் வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது அந்த மலைப் பகுதிகளில் தகுதி வாய்ந்த வண்டிகள் கிடைப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். டாட்டா மெர்சிடெஸ் வண்டிகளில், மலைப்பகுதியில் ஓடும் வண்டிகளில், லாரி சேசிஸ்களில்கூட எல் பிராப் கட்டையை எடுத்துவிட்டு அந்தப் பகுதிகளில் ஓடும் வண்டிகளைத் தயாரித்துள்ளார்கள். அதை அமைச்சரவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஏற்கனவே அதுபற்றி என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பேருந்தின் நிலை என்ன என்பதை ஆய்ந்து அதை வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

[1985 ஜூன் 1:

அண்ணா போக்குவரத்துக் கழகம்.

321—(*வினா எண். 1231)—திரு. எச். ஜி. ஆறுமுகம்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகத்தை இரண்டாக
பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, பட்டாபிராமன் கமிஷன் பரிந்துரையின்படி போக்குவரத்
துக் கழகங்கள் பிரிக்கப்படுமா ? புதிதாகப் போக்குவரத்துக்
கழகங்களைத் துவக்க வேண்டுமென்றால் எத்தனை பேருந்துகள்
இருக்கவேண்டுமென்ற வரைமுறை இருக்கிறதா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு
போக்குவரத்துக் கழகத்தில் குறைந்தபட்சம் 600 பேருந்துகள்
இருந்தால் அதைப் பிரிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது.
அதாவது ஒரு போக்குவரத்துக் கழகம் நல்லமுறையிலே இயங்க
வேண்டுமென்றால் 350 பேருந்துகளாவது இருந்தால்தான் இயக்க
முடியும். அண்ணா போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை
யில் 741 பேருந்துகள் இருந்தாலும் அங்கே தர்மபுரி மாவட்டத்
தில் கிட்டதட்ட 230 அல்லது 240 பேருந்துகள் மட்டும்தான்
இருக்கின்றன. எனவே, அது அந்த நிலையை எட்டிப்பிடித்த
வுடன் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, அமைச்சரவர்கள் இங்கே பதில் சொல்கின்றபொழுது 350
பேருந்துகளுக்குமேல் இருந்தால் அந்தப் போக்குவரத்துக் கழகம்
பிரிக்கப்படும் என்று சொன்னார்கள். மதுரையில் ஓடிக்கொண்
டிருக்கின்ற பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்
தவரையில் நகரில் 400-க்கும் அதிகமான பேருந்துகளும், வெளி
யூர்களில் 350-க்கும் அதிகமான பேருந்துகளும் ஓடிக்கொண்டிருக்
கின்றன. எனவே, கிட்டத்தட்ட 800-க்கும் அதிகமான பேருந்து
கள் மொத்தமாக ஓடிக்கொண்டிருக்கின்ற பாண்டியன் போக்கு
வரத்துக் கழகம் நிர்வாக வசதியை அனுசரித்து இரண்டாகப்
பிரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தற்
போது நிர்வாக வசதியை முன்னிட்டுத்தான் அதைப் பிரிக்காமல்
வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எதிர்காலத்திலே
கொஞ்சம் எண்ணிக்கை அதிகமாகின்றபொழுது பிரிப்பது நல்லது
என்ற நிலைஇருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்களின்
யோசனையை மனத்தில் வைத்துக்கொண்டு எதிர்காலத்திலே நட
வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிப்பதைப்
பற்றிப் பரிசீலனை செய்வதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள்.
அப்படி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து பெருந்
தலைவர் காமராஜ் அவர்களின் பெயரில் ஏற்படுத்துவதற்கு அரசு
முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பிரிக்
கிறோமா இல்லையா என்பதுபற்றியே இப்பொழுதுதான் ஆய்வு
நடந்து கொண்டிருக்கின்றது. எனவே, பிரிக்கத் தக்க தருணத்தில்
அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்
கள்— விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக செங்கோட்டை கிளை பணியாளர்கள்

(வினா எண37)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு
விடையளிப்பாரா—

செங்கோட்டை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக கிளை
நிருவாக பணி இடத்தில் கிளை மேலாளர் கொலை செய்யப்பட்ட
போது அருகில் இருந்தும் கொலையை தடுக்க முயற்சி செய்யாத
பிற பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்ப் மீது
நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இந்நிகழ்ச்சி காவல் துறையினரின் விவரமான விசா
ரணையில் உள்ளபடியால், காவல் துறையின் விசாரணை முடிந்த
பிறகு, பணியாளர் மீதான நடவடிக்கை பற்றி பரிசீலிக்கப்படும்.

2— மதுரை மாவட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

வினா 58—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) யார் யாரிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது ?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் இதுவரை 22,202 ஏக்கர் நிலங்கள் உபரியாக நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இம்மாவட்டத்தில் இதுவரை 22,202 ஏக்கர் நிலங்கள் உபரியாக நிலச் சீர்திருத்தச் சட்டத் துவக்கத் தேதியிலிருந்து பல நில உடைமையாளர்களிடமிருந்து எடுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த நில உடைமையாளர்களின் பெயர்களனைத்தையும் தெரிவிப்பது சிரமம். குறிப்பிட்ட நில உடைமையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து (Trust) நிலங்கள் எடுக்கப்பட்டதா என்பதற்கான தகவல் தேவையாயின் தெரிவிக்க இயலும்.

3— விளவன்கோடு தாலுக்காவில் மடிச்சல் கால்வாய்.

வினா 673.—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவன்கோடு தாலுக்காவில் மடிச்சல் கால்வாய் வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) நெய்யார் கால்வாயிலிருந்து 4/4 கி.மீ. தூரத்தில் மடிக்கால்வாய் பிரியும் இடத்திலிருந்து மடிச்சல் கால்வாயைச் சீரமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.





(ஆ) இத்திட்டம் முன்னதாக கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின் கீழ் செயல்படுத்த, பட்டியல் மூன்றில் தலைமைப் பொறியாளர்(சிறுபாசனம்) அவர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம் தற்போது கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டது. ஸ்தல அதிகாரிகள் இத்திட்டத்தை சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு உகப்ப மாற்றி செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

4.

வைத்தியநாதசுவாமி கோயில் தேர்கள்.

வினா 91—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திட்டக்குடியில் ஏற்பட்ட தீ விபத்தில் வைத்தியநாதசுவாமி கோயிலின் தேர்கள் எரிந்து சாம்பல் ஆனது உண்மையா ?

(ஆ) ' தீ ' விபத்துக்குக் காரணம் என்ன ?

விடை—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திட்டக்குடியில் ஏற்பட்ட தீ விபத்தில் வைத்தியநாதசுவாமி கோயிலின் மூன்று தேர்களில் அம்பாள் திருத்தேர் முற்றிலும் எரிந்துவிட்டது. சுவாமி திருத்தேருக்கு 25 சதவீதம் சேதம் ஏற்பட்டது. விநாயக திருத்தேர் முழுவதுமாகக் காப்பாற்றப்பட்டது.

(ஆ) மின் கம்பத்தில் ஏற்பட்ட தீப்பொறி காரணமாக அதன் அருகில் இருந்த கோயில் தேர்கள் தீப்பற்றிக் கொண்டன.

5.

பரிசுச் சீட்டுகளை பல வண்ணங்களில் அச்சிடுதல்.

வினா 94—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பரிசுச் சீட்டுகளை பல வண்ணங்களில் அச்சிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமுலுக்கு வரும் ?

விடை—

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு பல வண்ணங்களில் அச்சிடப் பட்டு வருகிறது.

(ஆ) 10–1–1985 முதல் தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

6—

### திருவில்லிப்புத்தூரில் குடிநீர் வழங்கும் பணிக்குத் தனி மின் கம்பித் தொடர்.

வினா 95—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் குடிநீர் வழங்கும் பணிக்கு ஊரகப் பகுதிகளில் தனி மின் கம்பித் தொடர் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் செலவில் எப்பொழுது அமைக்கப்படும்?

(இ) நகராட்சியில் வருமானம் இல்லாததால் அரசு செலவாகும் தொகையை நகராட்சிக்குக் கடன் தருமா?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் குடிநீர் வழங்கும் பணிக்கு ஊரகப் பகுதிகளில் தனி மின் கம்பித் தொடர் அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

7.

### சேஷபுரம் கிராமத்திற்கு குடிநீர் வழங்கல்.

வினா 103—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம்; மீனாட்சிபுரம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து சேஷபுரம் கிராம மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.



8.

### நத்தம்பட்டி கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்

வினா 114—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி நத்தம்பட்டி கிராமம், ச. எண் 590, 554/4 ஏ ஆகிய இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு அந்த நிலங்களை பட்டா கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திருவில்லிப்புத்தூர் வட்டம், நத்தம்பட்டி கிராமம், புல எண்கள் 590, 554/4 ஏ-ல் உள்ள நிலங்களை நீர்ப்பிடி புறம்போக்கு எனக் கணக்கில் உள்ளது. நீர்ப்பிடி புறம்போக்குகள் ஜாரி செய்யப்படுவதில்லை. மேலும், மேற்படி நிலங்கள் நத்தம்பட்டி பெரியகுளம் கண்மாய்க்கு வத்திராயிருப்பு பகுதியில் உள பிளவக்கல் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வரும் வரத்துக் கால் பகுதியாக உள்ளது. கண்மாய் நிறைந்திருக்கும் காலங்களில் ஆக்கிரமிப்புப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கிவிடக்கூடிய நீர்ப்பிடிப்பு பகுதியாகும். இந்த ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானதாகும். இவ்வகையான ஆக்கிரமிப்புக்களை அனுமதித்தால் மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு கண்மாய்க்கு தண்ணீர் வரும் வழி அடைக்கப்படுவதோடு கண்மாய் ஆயக்கட்டு நிலங்களில் விவசாயம் பாதிக்கப்படும். எனவே, ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே அந்நிலங்களை ஆக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா செய்து கொடுக்க இயலாது.

9—

### வத்திராயிருப்புப் பகுதியில் தெரு விளக்குகள்.

வினா 115— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மதுரை மெயின் ரோட்டில் இருந்து அம்மாபட்டி கிராமம் ஊர் வரை தெரு விளக்குகள் போட பஞ்சாயத்தில் இருந்து 1983 ஆம் ஆண்டு பணம் கட்டியும் இன்னும் விளக்கு அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) வத்திராயிருப்பு பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கூடுதலாக தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு 26-3-1985 முதல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

10—

வெள்ளத்தினால் மணல் மூடிய நிலங்களில் இருந்து மணல் அப்புறப்படுத்துதல்.

வினா 117—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் 7-3-84-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் மணல் மூடிய நிலங்களில் இருந்து மணல் அப்புறப்படுத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியத்தில் 7-3-84-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் மணல் மூடிய நிலங்களில் இருந்து மணல் அப்புறப்படுத்தப்பட்டது.

(ஆ) வத்திராயிருப்பு ஒன்றியத்தில் மொத்தம் 301.59 ஏக்கர் நிலப்பரப்பு 7-3-84-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் மணல் மூடி பாதிக்கப்பட்டது. அதில் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதியான 87.96 ஏக்கர் நிலங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் நிலச்சமன்செய் பொறிகளைக் (Bulldozer) கொண்டு மணல் அப்புறப்படுத்தப்பட்டது. மீதியுள்ள பாதிப்பு அதிகம் இல்லாத பகுதிகளில் நிலச்சமன்செய் பொறிகளை வைத்து மணலை அப்புறப்படுத்துவது சாத்தியமில்லாததால், அப்பகுதிகளில் விவசாயிகளே மணலை அப்புறப்படுத்திக் கொண்டார்கள்.

11

கொல்லிமலை குழிவளவு பேருந்து வழித்தடம்.

வினா 233—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமக்கல்லிலிருந்து கொல்லிமலையிலுள்ள குழிவளவு வரை அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய பேருந்து விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

நாமக்கல்லிலிருந்து கொல்லிமலையிலுள்ள கல்லேரிக்கு குழிவளவு வழியாக அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று 1-5-1985 முதல் ஓடிக் கொண்டிருக்கிறது.

12—

ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைக்கான சிறப்புத் திட்டம்.

வினா 234—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனை நிலம் வழங்க குறுகிய கால சிறப்புத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

13—

பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர் குடியிருப்புகள்.

வினா 245—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்களுக்கான குடியிருப்புகள் இன்னும் கட்டப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி தொடங்கப்படும் ?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம் பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்களின் குடியிருப்புகள் இன்னும் கட்டப்படாத நிலையில் உள்ளன.

(ஆ) இனிவரும் ஆண்டுகளில் குடியிருப்புகள் கட்டுவதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது பணி தொடங்கப்படும்.

14—

நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் ஆபரேட்டர்.

வினா 266— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் ஆபரேட்டர் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஜெனரேட்டர் ஆபரேட்டருக்கு முழு நேரப்பணி இருக்காது. எனவே, நாகப்பட்டினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மின் வினைஞர் பணியிடத்தைக் கொண்டோ அல்லது பொதுப் பணித்துறை பணியாளர்களைக் கொண்டோ, ஜெனரேட்டரை நிர்வகிக்கும்படி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15—

சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கையாடல்.

வினா 290—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கையாடல் வழக்கு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்தத் தொகை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 54.84 இலட்சம்



16—

பேரளம் பேரூராட்சியிலுள்ள மின் விளக்குகள்.

வினா 294—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரளம் பேரூராட்சியில் எத்தனை மின் விளக்குகள் மொத்தம் பராமரிக்கப்படுகின்றன ?

(ஆ) அவற்றில் மின் பாக்கிக்காகத் துண்டிக்கப்பட்டது எத்தனை ?

(இ) தெருவிளக்கே இல்லாத பகுதியான கொத்தங்குடிக்கு விளக்கு பொருத்த உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) 165 குழல் விளக்குகள் (45 வாட்) பாராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) மின் கட்டணம் செலுத்தாததால் 74 விளக்குகளுக்கு மின் இணைப்பு 16-2-1984 முதல் துண்டிக்கப்பட்டுள்ளது.

(இ) சக்கரை கொத்தங்குடி பகுதியில் 10 தெரு விளக்குகள் பொருத்தவேண்டி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. 15-3-1985 வரை மின் கட்டண பாக்கித் தொகை ரூ. 46,559.62-ஐ பேரளம் பேரூராட்சி கட்டாததால் புதிதாகத் தெருவிளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலுவைத் தொகையைச் செலுத்தினால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

வீராணம் ஏரியை சுற்றுலா மையமாக்குதல்.

வினா 397—திரு. எஸ். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் உள்ள வீராணம் ஏரியை சுற்றுலா மையமாக்க அரசு உத்தேசித்து உள்ளதா ?

விடை—

தற்போதைக்கு இல்லை.

[1985 ஜூன் 19

18—

**பொன்னேரியை ஆழப்படுத்தும் திட்டம்.**

வினா 402—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டான் சட்டப் பேரவைத் தொகுதி யில் உள்ள பொன்னேரியை ஆழப்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயற் படுத்தப்படும் ?

விடை—

(அ) தற்போது ஆழப்படுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு இந்த ஏரியின் நீர் அளவு போது மானது. இந்த ஏரியின் சரியான ஆயக்கட்டு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. ஆயக்கட்டு நிலங்கள் அதிகமாக இருந்தால் ஏரியில் சேர்ந்துள்ள வண்டலை எடுத்து ஏரியின் கொள்ளளவை உயர்த்துவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப் படும்.

19—

**கங்கைகொண்டசோழபுரத்தை சுற்றுலா மையமாக்குதல்.**

வினா 410—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி கங்கைகொண்டசோ புரத்தை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.



1985 ஜூன் 19]

20—

**சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் டிக்கெட் இன்றி பயணம் செய்தோர்.**

வினா 721—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் 1984 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை டிக்கெட் இல்லாமல் பயணம் செய்த எவ்வளவு பேர்கள் பிடிபட்டனர் ?

(ஆ) அரசுக்கு அவர்களிடமிருந்து கிடைத்த அபராதத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்து களில் 1984 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை டிக்கெட் இல்லாமல் பயணம் செய்து 2,974 பேர் பிடிபட்டனர்.

(ஆ) வசூல் செய்யப்பட்ட அபராதத் தொகை ரூ. 9,278.00 (ரூபாய் ஒன்பதாயிரத்து இரு நூற்று எழுபத்தி எட்டு மட்டும்).

21—

**குஜிலியம்பாறை நகரில் பேரூராட்சியால் கட்டப்பட்ட பேருந்து நிலையம்.**

வினா 879—மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை நகரில் பேரூ ராட்சியால் கட்டப்பட்ட பேருந்து நிலையம் இதுவரை செயல் படாமல் இருக்கக் காரணம் என்ன ?

விடை—

பாளையம் பேரூராட்சி, குஜிலியம்பாறை நகரில் புதிதாக் பேருந்து நிலையம் அமைக்கும் வேலைகளுக்கு அரசு கடனாக ரூ. 1,00,000 பெறப்பட்டு கடன் தொகை மூலமாக பேருந்து நிலைய கூரை போடுதல், மற்றும் பிளாட்பாரம் போடுதல் ஆகிய வேலைகளுக்கு ரூ. 1,09,385 செலவிடப்பட்டுள்ளது. பயணி களுக்கான கழிப்பிடம் கட்டுதல், தளத்தை உயர்த்துதல் போன்ற

பணிகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. இவ்வேலைகளை விரைவில் முடிக்கச் செய்து பேருந்து நிலையத்தை செயல்பட செய்யப்படும் என மதுரை மாவட்ட பேருராட்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

22—

**வேடசந்தூர் நகரில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை.**

வினா 881.— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

விடை—

வேடசந்தூரில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான வரைவு அறிக்கை பிரேரணை 1983 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி அரசு ஆணைக் குறிப்பில் வெளியிடப்பட்டது. அதற்குப் பின் நிலச் சொந்தக்காரர்களின் குறைபாடுகள் குறித்து கோட்டாட்சியர், திண்டுக்கல், அவர்களுக்கு பதில் அனுப்பப்பட்டு விட்டது. மேலும், இந்த நிலத்தில் வட பகுதியில் 54 சென்ட் நிலத்தை விட்டுக் கொடுக்க சம்மதத்தையும் தெரிவித்து உள்ளோம். தற்போது இந்த நில ஆர்ஜிதத் திட்டத்தின் வரைவு விளம்பலும், வரைவு அறிக்கையும் திண்டுக்கல் கோட்டாட்சியரிடம் நிலுவையில் உள்ளது.

23—

**நத்தம் தொகுதியில் காட்டாற்றில் அணைக்கட்டுகள்.**

வினா 1093—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் பி. தேத்தாம்பட்டியில் வாழும் ஏழை விவசாய மக்கள் அழகர்மலை அடிவாரமாகிய வடக்குக் கொடை, தெற்குக் கொடை ஆகிய இரண்டு பகுதிகளிலும் காட்டாற்றினைத் தேக்க அணைக்கட்டுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் பி. தேத்தாம்பட்டி விவசாயிகளுக்கு அழகர்மலையில் வடக்குக் கொடை, தெற்குக் கொடை ஆகிய பகுதிகளில் காட்டாற்றில் அணைக்கட்டுகள் கட்டி நீர்ப்பாசன வசதிகள் செய்துதரும் திட்டம் செயல்படுத்த முடியுமா என்ற சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி தல அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சாத்தியமானால் விரிவான ஆய்வுசெய்து திட்டம் தீட்டி செயல்படுத்தப்படும்.

24—

**அழகர்மலை சின்னருவியில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.**

வினா 1121— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் காசம்பட்டி ஏழை விவசாய மக்கள் நீர்ப்பாசன வசதிக்காக அழகர்மலை சின்னருவியில் நீர்த்தேக்கத்தைக் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் காசம்பட்டி கிராமத்து விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துதர அழகர்மலை சின்னருவியில் நீர்த்தேக்கம் கட்ட எவ்வித திட்டமும் தற்போது ஆய்வில் இல்லை. இருந்தபோதிலும் இம்மாதிரி திட்டம் செயல்படுத்த முடியுமா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி தல அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

25—

**தஞ்சை-குடந்தை நகராட்சிகளை மாநகராட்சியாக்குதல்.**

வினா 1250— திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை-குடந்தை நகராட்சிகளை மாநகராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10—20)

**2. தகவல் கோரல்.**

**தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாதது.**

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தஞ்சை மாவட்டத்திலே குறுவை பயிரிடும் நேரம். குறுவை விதை விதைக்கவோ, நாற்று நட வோ, தண்ணீர் இன்றி தஞ்சை மக்கள் தவித்துக் கொண்டிருக் கிறார்கள். தஞ்சைக்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் வரவில்லை. கடந்த 4—6-1985 அன்று நான் விவசாய மானியக் கோரிக்கையில் பேசும்பொழுது, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் கரன்ட் கொடுப்பதாகக் கூறினார் கள்..................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொருள் கவன ஈர்ப் பாக திங்கட்கிழமை வருகிறது. இப்பொழுது பதில் வராது. பதில் வேண்டுமென்றால் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம். பதில் வந்தால்தான் பேசுவதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** நான் சொல்லி விடுகிறேன், மேட்டூரில் தண்ணீர் இல்லையென்றால், கர்நாடகத்திலேயிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசி 50 டி.எம்.சி. தண்ணீருக் காவது ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசிவிட்டீர்கள். ப்ரொசீஜர்படி சொல்கிறேன், திங்கட்கிழமை எடுக்க முடியாது,



**3. ஒழுங்குப் பிரச்சினை.**

**ஜனதா கட்சி சார்பாக தேர்ந்தெடுக்கப்பெற்று வந்துள்ள உறுப்பினரை—முகவரிப் பட்டியலில்—சுயேச்சையெனக் குறிப்பிட் டுள்ளது.**

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர் களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுடைய விலாசம் உள்ள அட்டவணை கொடுக் கப்பட்டிருக்கிறது. அதிலே என்னுடைய பெயருக்குக் கீழே சுயேச்சை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒழுங்கு பிரச் சினையின் கீழ் வராது. இதையெல்லாம் என்னுடைய அறை யிலே வந்து சொல்ல வேண்டும், இங்கே பேசக்கூடாது. (குறுக் கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி விவாதித்திருக் கிறோம். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நீங்கள் வந்து கலந்து கொள்ளாததால் உங்களுக்குத் தெரியவில்லை. அதற் காக அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேச வேண்டிய பிரச் சினையை அவையில் எழுப்பவும், விவாதிக்கவும் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து இந்த மன்றத்தை அலுவல் ஆய்வுக் குழுவாக மாற்ற முயற்சிக்காதீர்கள். இன்றைக்கும் கூட அலுவல் ஆய்வுக் குழு கூட இருக்கிறது; அங்கே வந்து இந்தப் பிரச்சினையை எழுப்புங்கள். இது பற்றி அங்கே விவா தித்துக் கொள்ளலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** அலுவல் ஆய்வுக் குழு சம்பந்தப்பட்ட பிரச்னை அல்ல இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே எழுப்பப் பட்டு, விவாதிக்கப்பட்டும் இருக்கிறது. உங்கள் பிரச்னைகளை அவையில் எழுப்ப அனுமதிப்பதற்கில்லை. என்னுடைய அறைக்கு வந்துதான் கேட்க வேண்டும். (கூச்சல், குழப்பம்). இப்படி நடந்து கொள்வது முறையானது அல்ல, எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்).

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, தாங்கள் அருள் கூர்ந்து என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேட்டுவிட்டு, தங்களுடைய தீர்ப்பைச் சொல்லுங்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் இங்கே வீற்றிருக்கிறோம். எங்களுடைய குறைகளை இங்கே எடுத்துச் சொல்வது எங்கள் கடமையாகும்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய குறைகள் என்றால் அதை இந்த அவையில் சொல்வதை நான் அனுமதிப் பதற்கில்லை. என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள், நீங்கள் உட்காருங்கள். பேரவைத் தலைவரைப்

பற்றி கண்டபடி பொதுக் கூட்டத்தில் பேசுவது, பத்திரிகையில் எழுதுவது என்பதெல்லாம் முறையற்ற செயல். இதற்கு முன்னால் இப்படி இல்லை. ஒரு பத்திரிகையில் ''102 கேள்வி தூங்குகிறது'' என்று வந்திருக்கிறது. பேரவையில் பிரஸ் காலரி இருக்கிறது. பத்திரிகைக்காரர்களை அங்கே வந்து உட்கார நான் அனுமதித்திருக்கிறேன். கேள்வி தூங்குகிறது என்றால் 234 உறுப்பினர்களும் தூங்குகிறார்கள் என்று பொருளா? இது தனிப்பட்ட சபாநாயகர் பிரச்சினை அல்ல.

அலுவல் ஆய்வுக் குழுவில் சில முடிவுகளை எடுக்கிறோம். அலுவல் ஆய்வுக் குழு முடிவுகளின்படி நிகழ்ச்சிநிரல் ஒழுங்கு செய்யப்படுகிறது. அதன்படி அவையை நான் நடத்திச் செல்ல வேண்டியுள்ளது. (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளைப்பற்றி அவையில் விவாதிக்க முடியாது. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வந்து பேசுங்கள். இல்லையானால் என்னுடைய அறைக்கு வந்து சொல்லுங்கள். உங்கள் குறைகளை அவையில் சொல்ல அனுமதிக்க முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** நான் என்ன சொல்லப்போகிறேன் என்பதைக் கேட்டுவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லுங்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிகழ்ச்சிநிரல்படி அவையை நடத்திச் செல்ல உறுப்பினர்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். அவை நடவடிக்கைக்கு யாரும் குந்தகம் விளைவிப்பதை நான் அனுமதிப்பதற்கில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, இங்கே இருக்கக் கூடிய திரு. ஆறுமுகம் அவர்கள் ஜனதா கட்சியின் சார்பாக நின்று, வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களை இங்கே இன்டிபென்டென்ட் என்று அழைப்பது............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்து இதை எல்லாம் பேசுங்கள் (குறுக்கீடு) அவையில் அதுபற்றி சொல்ல முடியாது. பேரவை விதிகளின்படிதான் நான் செயல்பட முடியும். அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நீங்கள் வருவதில்லை. When you have not honoured the Committee, you cannot raise the issue here. You cannot question me. (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** எங்கள் பிரச்சினையை இங்கே எழுப்பாமல் வேறு எங்கே எழுப்புவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பிரச்சினையை எனது அறைக்கு வந்து கேளுங்கள். அதற்காக அவையின் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடுகள்).



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பேரவைத் தலைவர் சம்பந்தப்பட்ட பிரச்சனை, பேரவை அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றால் பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்றுதான் தலைவரிடம் அதை எடுத்துச் சொல்ல வேண்டும். அலுவல் ஆய்வுக்குழு சில முடிவுகளை எடுக்கிறது. அதன்படிதான் இப்பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவுக்கு அவர்கள் வராவிட்டாலும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு இருக்கின்ற சிரமங்கள், சங்கடங்களை பேரவைத் தலைவரின் அறையில் சென்று, 'இந்தக் குறை இருக்கிறது, இதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்' என்று கேட்கலாம். தலைவரின் பதிலைப் பெறலாம். அது அல்லாமல் எல்லாப் பிரச்சனைகளையும் இங்கே அவையில் எழுப்ப வேண்டுமென்றால், பேரவைத் தலைவர் அதை அனுமதிக்க மாட்டேன் என்று சொன்ன பிறகு யாரும் இந்த அவையிலே அந்தப் பிரச்சனைகளை எழுப்ப இடமில்லை (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** ** **

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அவைக் குறிப்பில் ஏறாது. (கூச்சல்—குழப்பம்). நான் இந்த அவையின் சபாநாயகர் என்ற காரணத்தால் நான் அளிக்கும் தீர்ப்புதான் இறுதியானதாகும். (கூச்சல், குழப்பம்). நான் மீண்டும், மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையினுடைய நேரத்தை தயவுசெய்து வீணாக்க வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவை புறக்கணித்திருப்பதே கூட மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையைப் புறக்கணித்ததாகத்தான் அர்த்தம். (கூச்சல், குழப்பம்). மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பணியாற்றத்தான் சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறோம். கட்சிக்குப் பணியாற்ற இங்கே வரவில்லை......(கூச்சல், குழப்பம்).

இன்னொன்றையும் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சைதாப்பேட்டையிலே பொதுக்கூட்டம் போட்டு அந்தக் கூட்டத்திலே இந்த அவை பற்றிப் பேசப்பட்டிருக்கின்றது. இப்படிப் பேரவையினுடைய மரியாதையை,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கண்ணியத்தைக் குறைப்பதற்கு யார் முயன்றாலும் நான் அனு
மதிக்க மாட்டேன். அங்கே என்னென்ன பேசப்பட்டன என்ற
விவரங்களை வேண்டுமானாலும் சொல்கிறேன். என் அறைக்கு
வாருங்கள் (கூச்சல், குழப்பம்).

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே தேர்தல் கமிஷனில் கூட........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேர்தல் கமிஷனைப்
பற்றி இப்போது இங்கே பேசுவது சம்பந்தம் இல்லாதது.
அதற்கு என்னிடம் பதில் எதிர்பார்க்க முடியாது. (கூச்சல்,
குழப்பம்). நமது விதிகளுக்குட் பட்டு அவை நிகழ்ச்சிகளைத்
தொடர்ந்து அமைதியாக நடத்திச் செல்வதற்கு என்னுடன்
ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்,
குழப்பம்). மக்களின் பிரச்சினைகளையைப் பற்றிப் பேசு
வதற்காக நாம் சட்டமன்றத்திலே கூடி இருக்கிறோம்.
கட்சிப் பிரச்சினைகள் பற்றி இங்கே பேச முடியாது.
ஏதோ ஓர் உள்நோக்கத்தில் அவை நிகழ்ச்சிகளை இப்படித்
தடுக்காதீர்கள். மீறினால் உரிய வகையில் நான் நடவடிக்கை
எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவாதம், மேலும், மேலும் சூடேறி ஒருவருக்கொரு
வர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசக்கூடிய நிலையைத் தவிர்க்கக்
கூடிய வகையில் எங்களுடைய ஆலோசனையாக ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். இதனைத் தனிப்பட்ட மரியாதைப்
பிரச்சினையாகவோ அல்லது வேறு வகையிலோ யாரும்
கருதாமல் அவை முன்னவர் அவர்களும், தாங்களும், நாங்களும்,
மற்றவர்களும் தனியாக ஒருசில நிமிடங்கள் சந்தித்துப் பேசி
இதற்கு ஒரு சுமுகமான முடிவு காணலாம். அந்த வகையில்
ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய அறை
எப்போதுமே திறந்துதான் இருக்கின்றது. யார் வேண்டுமானா
லும் அங்கு வந்து பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** நான் தங்களிடம் ஒரு முன்னறி
விப்பைக் கொடுத்துள்ளேன்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடத்திலே தாங்கள்
கொடுத்திருக்கிறீர்கள். அதை உடனே அவையில் எடுத்துக்
கொள்ள முடியாது.



**திரு. அ. ரகுமான்கான் :** நான் பேரவை விதி 114-ன் படி எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இப்போது தான் கொடுத்தீர்கள். அது பற்றி நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. விதி 114-ன் படி எழுப்புவதற்கும் என் அனுமதி வேண்டும். நான் அந்த விதியைப் படிக்கிறேன்.

"A Member wishing to point out any mistake or inaccuracy in a statement made by a Minister or any other member shall before referring to the matter in the House write to the Speaker, pointing out the particulars of the mistake or inaccuracy and seek his permission to raise the matter in the House. எனவே நான் அனுமதி அளித்த பிறகே நீங்கள் எழுப்ப முடியும்.

**திரு. அ. ரகுமான்கான் :** எல்லாவற்றிற்கும்தான் உங்கள் பெர்மிஷன் வேண்டும். தேர்தல் கமிஷன் அங்கீகரித்ததையே நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் சுயேச்சை என்று சொல்லுகிற போது .... (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எச்சரிக்கிறேன். இதுமாதிரி பேசக் கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** இதற்கு இப்போது அனுமதி உண்டா இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதி கிடையாது. அத்தோடு இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். இந்த மாதிரி சட்டசபை நடவடிக்கைகள் நடக்கும்போது, வேண்டுமென்றே சபையினுடைய நடவடிக்கைகளை தடுக்க வேண்டும் என்று பிரச்சினைகளை எழுப்புபவர்கள் குறித்து 1972 ஆம் ஆண்டிலேயே அன்று இருந்த முதலமைச்சர் அவர்கள் இந்த சபையிலே சொல்லியிருக்கிறார்கள். 'யாராவது ஒரு மெம்பர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பிய பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் உண்மையில் சொல்லாமல் இருந்தால் அவருக்கு மறுபடியும் 10 பாயின்ட் ஆப் ஆர்டர் வரை கேட்பதற் அனுமதி மறுத்துவிட வேண்டும்' என்று சொல்லி இருக்கிறார்கள். நானும் இனிமேல் அந்த முறையைப் பின்பற்றப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). You will not catch my eyes for ten times.

THIRU A. RAHMANKHAN : We are least bothered about it.

MR. SPEAKER: You are not bothered about the people. I do not have any personal feeling against any member.

### 4. உரிமைப் பிரச்சினை.

### "துக்ளக் " இதழ் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. கே. ஜெ. பாரதி, திரு. என். எஸ். வி. சித்தன் , மற்றும் திரு. எஸ். ஜெயச்சந்திரன் ஆகியோரிடமிருந்து முன்னறிவிப்புகள் வந்துள்ளன. இப்பிரச்சினையில் பேரவையின் தலையீடு தேவைதானா என்பதைத் தீர்மானிக்குமுன், பேரவையின் தலையீடு ஏன் தேவை என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி எண் 245-ன் கீழ் துக்ளக் பத்திரிகையினுடைய ஆசிரியர் திரு. சோ. என்கிற இராமசாமி மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியை நான் இப்பொழுது வேண்டுகிறேன்.

"துக்ளக் இதழ் தேதி 15—6—1985 முன் அட்டையில் கேலிச் சித்திரம் வரைந்து அதில் பட்டதாரிக்கு சாராயக்கடை, படிக்காதவர்களுக்கு சட்டசபை என்றும் ; பக்கம் 32-ல், கேள்விக்குப் பதில் தெரிவிக்கும்போது சட்டசபையை, மனிதர் கூட்டம் என்றும், சட்டசபையை அலங்கரிக்கிறவர்கள் காகிதத்தை விட கேவலமானவர்கள் என்றும் ; பக்கம் 33-ல் கேள்விக்குப் பதில் தெரிவிக்கும்போது சட்டசபையில் எம்.எல்.ஏ.-க்கள் ரௌடித்தனம் செய்யவில்லை என்றால் அதுவே ஒரு செய்தி—என்றும், இப்படியாக சட்டப் பேரவையையும், சட்டப் பேரவை உறுப்பினர்களையும் மிகவும் கேவலமாக சித்தரித்து கேள்வி—பதில் என்ற தலைப்பில் எழுதியிருப்பது சட்டப் பேரவையையும் சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும் பொது மக்களிடத்தில் சட்டப் பேரவைக்கு இழுக்கு ஏற்படும் வகையில் கருத்து தெரிவிக்கிறது " என்பதான உரிமை மீறல் பிரச்சினையை நான் கொடுத்து இருக்கிறேன்.



தலைவர் அவர்களே, நேற்றையதினம்தான் என்னுடைய கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. கே. ஜெ. பாரதி அவர்கள் அண்மையிலே வெளிவந்த துக்ளக் இதழ் ஒன்றை என்னிடம் கொண்டு வந்து தந்தார்கள். 15–6–1985 ஆம் தேதியிட்ட துக்ளக் பத்திரிகையினுடைய இதழ் அது.

அதில் அட்டைப் பக்கத்திலேயே " தன்னிறைவுத் திட்டம் நிறைவேறுகிறது " என்று தலைப்பிலேயே எழுதி, அட்டைப் பக்கத்திலேயே 5 கேலிச் சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய படத்தோடு, வேறு 4 அமைச்சர்களுடைய படங்களையும் போட்டு, அந்த அமைச்சர் பெருமக்களின் கைகளிலே ஆளுக்கொரு பேனர்களைக் கொடுத்து, அந்த பேனர்களிலே சில வாசகங்களை எழுதியிருக்கிறார்கள்.

அதிலே ஒரு அமைச்சருடைய கையிலே ' பட்டதாரிகளுக்கு சாராயக்கடை, படிக்காதவர்களுக்கு சட்ட சபை ' என்று எழுதப் பட்டிருக்கிறது. இந்த அவையிலே அரசுக்குத் தேவையான வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த வருமானத்தின் மூலமாக பல்வேறு சமூக சீர்திருத்தப் பணிகள் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு மதுக்கடைகளைத் திறப்பதற்கான சட்டம் வந்தபோது, மதுக்கடைகளை திறக்கக்கூடாது என்பதற்கு எதிர்த்துக் கருத்துக்களைச் சொல்கின்றவர்களாகிய நாங்கள் கூட, மதுக்கடைகளை திறக்கக் கூடாது என்பதற்கான வாதங்களைத்தான் எடுத்துச் சொன்னோமே தவிர, இந்த அவையிலேயே அமைச்சர் பெருமக்களை கிண்டல் செய்கிற வகையிலே பேசியது கிடையாது. ஆனால் இந்த இதழின் அட்டைப் பக்கத்திலேயே படிக்காதவர்களுக்கு சட்டசபை, படித்தவர்களுக்கு சாராயக்கடை என்று எழுதப்படுமேயானால் அது ஆசிரியருடைய கோமாளித்தனத்தைத்தான் காட்டுகிறதே தவிர, மதுவை எதிர்க்கின்ற வாதத்தை அது காட்டவில்லை என்பதை நான் முதலாவதாகச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

எந்த ஒரு வாதத்திற்கும் அது கோமாளித்தனமாகவே இருந்தாலும் கூட அதற்கு எல்லையுண்டு. கேலிச்சித்திரம் தரக்குறைவாக எழுதுவதை, வரைவதை நிச்சயமாக நாம் அனுமதிக்கக் கூடாது என்பதை சொல்ல விரும்புகிறேன். மேலும் இங்கே உறுப்பினர்களாக இருக்கிற பெருமக்கள் அத்தனைபேரும் படிக்காதவர்கள் அல்ல. துக்ளக் ஆசிரியரை விட சட்டம் பயின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையை அலங்கரிக்கிறார்கள். இந்த அவையிலே டாக்டர்கள், ஆராய்ச்சியாளர்கள், கவிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், இந்த நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகப் பெருமக்கள், அரசு நிர்வாகத்தில் பணியாற்றி

ஓய்வு பெற்று உறுப்பினர்களாக வந்த பெருமக்கள் அத்தனை பேரும் அங்கம் வகிக்கிறார்கள். இந்த அவையை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டு, படிக்காதவர்களுக்கு, சட்டசபை என்று எழுதியிருப்பது உள்ளபடியே சபையையும் மாண்புமிகு உறுப்பினர்களையும் புண்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இது எல்லாவற்றையும் விட இங்கே அங்கம் வகிக்கிற உறுப்பினர் பெருமக்கள், அமைச்சர் பெருமக்கள், ஏன் தாங்களே கூட, மக்களுடைய அன்பையும், ஆதரவையும் அமோகமாகப் பெற்றுதான் இந்த மாமன்றத்திலே நாம் இடம் பெறுகிறோம். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்டைப் படத்திலே இருக்கிற கேலிப்படம் தவிர உள்ளே பார்ப்போமானால், இன்னும் நம்முடைய அவையைப் பற்றி, நம்முடைய உறுப்பினர்களைப் பற்றி தரக்குறைவாக எழுதப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதே ஏட்டில் 33-ம் பக்கத்தில் கேள்வி-பதில் என்ற ஒரு பகுதியை வைத்து, அதிலே ஒரு வாசகர் கேள்வி கேட்பதைப் போல எழுதப்பட்டிருக்கிறது. கேள்வியை நான் படிக்கிறேன் உங்கள் அனுமதியோடு. கேள்வி: தமிழக சட்ட சபையில் நடந்த அமளி துமளியைப் பற்றி?.. என்று கேள்வி போட்டுவிட்டு, இந்த ஆசிரியர் எழுதுகிறார். ''இது என்ன பெரிய ஆச்சரியம்? இது இனிமேல் செய்தியே அல்ல. 'இன்று சட்டசபையில் எம்.எல்.ஏ.-க்கள் ரௌடித்தனம் செய்யவில்லை' என்று தெரிய வந்தால், அது செய்தி என்று அந்தக் கேள்விக்கு பதில் போட்டிருக்கிறார். அது உண்மையான கேள்வியா, அல்லது கற்பனையான கேள்வியா என்ற சர்ச்சைக்கு நான் போக விரும்பவில்லை. ஆனால் படித்தவர்கள், பண்புள்ளவர்கள் உள்ள இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ரௌடித்தனம் செய்யவில்லை என்று தெரிய வந்தால், அதுதான் செய்தி என்று இந்த நையாண்டி ஆசிரியர் எழுதுவாரானால், அதனை இந்த அவை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தரக்குறைவான வார்த்தைகளால் உறுப்பினர்களை விமர்சிப்பது தவறானதும், தண்டிக்கப்பட வேண்டியதுமாகும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல இதே பத்திரிகையில் 32 ஆம் பக்கத்தில் இன்னொரு கேள்வி பதில் வருகிறது. உங்கள் அனுமதியோடு நான் அதையும் படிக்கிறேன்.

'' கேள்வி : சட்டசபையில் மந்திரிக்கும் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-கும் இடையே வாதம் நடக்கும்போது அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டன என்று செய்தி வருகிறதே அதுபற்றி தங்கள் கருத்து என்ன? என்பது கேள்வி. அதற்கு





பதிலாக அந்த ஆசிரியர் சொல்கிறார், சட்டசபையில் எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அவைக்குறிப்பில் இடம் பெறுகிற வார்த்தைகள், தகாத வார்த்தைகளாக இருக்கக் கூடாது. அவைக்குறிப்பு என்பது 'காகிதக் கட்டு'. சட்டசபை என்பது ஒரு 'மனிதர் கூட்டம்'. என்று எழுதப்பட்டிருக்கிறது. காகிதத்தை விட கேவலமானவர்கள், நமது சட்டசபையை அலங்கரிக்கிறார்கள் என்பது கருத்து என்று அதில் எழுதி இருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்களை காகிதத்தை விட கேவலமானவர்கள் என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார் என்று சொன்னால் அது வேதனையாக இருக்கிறது. உள்ளபடியே Pen is mightier than sward என்று சொல்வார்கள். வாள் முனையை விட பேனா முனை கூர்மையானது என்று சொல்வார்கள். அந்தப் பேனா முனையை ஆயுதமாக வைத்திருக்கிற ஒரு ஆசிரியர் இப்படி எழுதுகிறார் என்றால் அதைக் கூட புரிந்து கொள்ளாதவர்கள் பத்திரிகை ஆரிசியர்களாக இருக்கிறார்களோ என்று கூட நம்மாலே எண்ணத் தோன்றுகிறது. ஆகவே இப்படி அடுக்கடுக்காக அவர்கள் இந்த சபையைப் பற்றியும், இந்த சபையினுடைய உறுப்பினர்களைப் பற்றியும் எழுதுகிறார் என்றால் நாங்கள் தாங்கிக் கொள்கிறோம். அது எங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் பொறுமைக்கும், பெருந்தன்மைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த எல்லையைத் தாண்டும்போதுதான் அது உரிமை மீறல், அவையை அவமதித்தல் என்ற நிலை ஏற்படுகிறது.

எனவே தற்போது வெளியாகியுள்ள கேலிச்சித்திரங்கள் படியும், கேள்வி பதில் படியும் மொத்தமாக ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்போமானால், முதல் நோக்கிலே 'பிரைமா பேசி' அதாவது பேரவை உரிமை மீறல், பேரவை அவமதிக்கப்படுவது என்பது மிக நன்றாகத் தெரிகிறது. பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை சுதந்திரம் என்பது இருந்தாலும், பேரவையைப் பற்றியும், பேரவை உறுப்பினர்களைப் பற்றியும் எதையும், எப்படியும் எழுதலாம் என்கிற போக்கு வளர்ந்து வருவதைத்தான் இது காட்டுகிறது. இந்தப் போக்கை பாராமுகமாக, அவை அலட்சியம் செய்யக்கூடாது என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேரவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாகும். இந்த அவைக்கென்று ஒரு பாரம்பரியம் உண்டு. அந்தப் பாரம்பரியத்தைக் காக்கவேண்டிய அவசியத்தினைப் பற்றியும், நிர்ப்பந்தத்தைப் பற்றியும் நான் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். தலைவர் அவர்களே, Law of Parliamentary Privileges in India என்கின்ற 1967-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதிப்பில் 268-ம் பக்கத்தில் இருக்கிற சில வரிகளை நான் படிக்க விரும்புகிறேன்.

" In 1701 the House of Commons resolved that to print or publish any books or libles reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignities offered to the House by words spoken or writings published reflecting on its character or proceedings have constantly been punished by both the Lords and Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them. Reflection upon Members, the particular individuals not being named or otherwise indicated are equivalant to reflections on the House."

என்றும், அதே பக்கத்தில் 326-ம் பக்கத்திலே எர்ஸ்க்கின் மே அவர்கள் கோட் செய்து எழுதுகிறார்கள்.

" It is an established principle that reflection upon Members whether the particular individuals are indicated or not, can in some circumstance be equivalent to reflections in the House itself."

என்றும்,

"In every case however, the imputation was expressly directed to the conduct of a Member or members either in the transaction of the service or business of the House or within its precincts."

என்றும் எழுதப்பட்டு இருக்கிறது. இன்னும்

" It is a duty of the House to deal with such reflections upon Members as to tend or may tend to undermine public respect for and confidence of the House itself as an institution."

என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதே புஸ்தகத்திலே, அதே பக்கத்திலே குவின்டன் ஹாக் என்பவருடைய அறிக்கையின் மீது ஹவுஸ் ஆப் காமன்ஸ் ஆராய்ந்து, 1964 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதி அன்று ஒரு அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறது. அந்த அறிக்கையில் அது வரையறுக்கப்பட்டிருக்கிறது.





"The question is whether (a) there has been a contempt of the House in the sense that disgrace or ignomy has been cast up on it as an institution or (b) it has been brought into disrepute. It has long been recognised that the publication of any such contempt is punishable by the House."

என்று மிகத் தெளிவாக எழுதப்பட்டு இருக்கிறது. தலைவர் அவர்களே, இப்போது ஆராயவேண்டியது எல்லாம் துக்ளக் பத்திரிகையில் வெளிவந்துள்ள கேலிச் சித்திரமும், கேள்வி பதில் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பதிலும், இந்தப் பேரவையை பெரிதும் கேவலப்படுத்துகிற நிலையில் இருக்கின்றது. இந்தப் பேரவையைப் பற்றி "a sense of disgrace or ignomy" ஏற்படக் கூடிய முறையில் கேவலமாகவும், அருவறுக்கத்தக்க வகையில் உள்ளதா என்பதுதான் கேள்வி. எனவே, இந்த இதழில் வரையப்பட்டுள்ள சித்திரத்தைப் பற்றியும், எழுதப்பட்டுள்ள வாசகத்தைப் பற்றியும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இந்த இதழில் வெளிவந்துள்ளது இந்தப் பேரவையினுடைய கௌரவத்தையும், நிச்சயமாகக் குறைக்கும். மக்கள் மத்தியில் பேரவைக்கு உள்ள மரியாதையைக் குறைக்கின்ற வகையில் இது இருக்கிறது என்பதில் யாருக்கும் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. தனிப்பட்ட உறுப்பினரைப் பற்றியோ, உறுப்பினர்களின் சட்டசபை நடவடிக்கையைப் பற்றியோ பத்திரிகையில் தரக்குறைவாக எழுதியிருந்தால், அது சட்டசபை உரிமையை மீறினதாகும் என்பது சரியான வாதம் அல்ல. அது அன்றி, துக்ளக் பத்திரிகையில் மக்கள் மத்தியிலே தரக்குறைவாக பேரவையைப் பற்றி எழுதி, தவறான எண்ணங்கள் உருவாகும் வகையில் எழுதப்படுவது என்பது— தனிப்பட்ட ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைப் பற்றி குறிப்பிடாமல் இருந்தாலும் கூட— இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். சட்டசபையை விமர்சனம் செய்யலாம். கண்டனம் தெரிவிக்கலாம், ஆனால் அவையைப் பற்றி தரக்குறைவாக பேசுவதோ அல்லது எழுதுவதோ கூடாது. உறுப்பினர்கள் வரலாம், போகலாம், ஆனால் சட்டசபை நிரந்தரமானது என்பதை அந்தப்பத்திரிகை உணரவேண்டும். (Fourth Estate) என்றுதான் பத்திரிகைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர் சோ என்ற ராமசாமி அவர்கள், நான் மேலே குறிப்பிட்டபடி, இந்த அவையின் உரிமையை மீறியிருக்கிறார் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் இந்த ஒரு முறை மட்டுமல்ல, பல்வேறு சமயங்களில் இப்படி எழுதிக்கொண்டிருக்கிறார்கள். சட்டசபை கூடுகிறது என்றால் சட்டசபையைப் பற்றி, உறுப்பினர்களைப் பற்றி விமர்சனம்

என்ற பெயரால் நையாண்டி என்ற பெயரால் தாக்குவதும் தரக்குறைவாக எழுதுவதும் அவருக்கு சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிடுவதைப் போன்று வாடிக்கையாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் இந்த பேரவைக்கும் உங்களுக்கும் ஒரு பழைய நிகழ்ச்சியை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏழாவது சட்ட மன்றப் பேரவைக் கூட்டத்தில், இதே ஆசிரியர், இதே பத்திரிகையில் மாண்புமிகு உறுப்பினர்களைப் பற்றி, சட்டசபையைப் பற்றி எழுதியதை நான் உரிமைப் பிரச்சனையாக கொண்டு வந்தேன். சட்டசபையை மிருகக் காட்சிச் சாலைக்கு இணையாகவும், சட்டசபை உறுப்பினர்களை மிருகங்களுக்கு இணையாகவும் அவர்கள் எழுதியிருந்தார்கள் என்று சொல்லி அன்றைய தினம் நான் உரிமைப் பிரச்சனையைக் கொண்டு வந்தேன். அன்றையதினம் தங்களுடைய இடத்தில் இருந்த மாண்புமிகு இராசாராம் அவர்கள் அவருக்கே உரித்தான பெருந்தன்மையோடு, இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளாது, ஒரு எச்சரிக்கையாகவோ, அல்லது அறிவுறுத்தலாகவோ செய்யலாம் என்றவகையில் அன்றையதினம் எடுத்துக்கொண்டார்கள். அந்தக் காரணத்தால்தான் இந்தப்பிரச்சனை தொடர்ந்து வருகிறது.

[முற்பகல் 10–50]

எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம், இந்தப் பிரச்சினையில் நம்முடைய பெருந்தன்மையை காட்டி எதையோ எழுதிக் கொண்டு இருக்கிறார், எத்தனையோ எழுதிக்கொண்டு இருக்கிறார்; என்று மட்டும் சும்மா இருந்து விடாமல் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது மாதிரி இந்த அவையை பற்றி எழுதுவது, இந்த மன்றத்தைப் பற்றி மட்டும் அல்லாது, மக்களை அவமதிப்பதாக இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்சினையை மிகக் கடுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இதில் அவை உரிமை மீறல் பிரச்சினை இருக்கிறது என்று துவக்கத்திலேயே தெரிவிக்கிற காரணத்தால் இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டு நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் வேறு ஏதாவது கருத்துக்கள் இருந்தால் கூறலாம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு சட்டப்பேரவையின் தள நாயகர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு என். எஸ். வி. சித்தன் அவர்கள் கொண்டு வந்து முன் மொழிந்து இருக்கிற உரிமை மீறல் பிரச்சினையை நான் வழிமொழிகிறேன். தமிழகத்தி



னுடைய பண்பாட்டினை காப்பாற்ற வேண்டிய இந்தப் பேரவையை, அறிவாற்றலும், சான்றோர் நிறைந்த பேரவையின் உறுப்பினர்களையும், பேரவையினுடைய ஆட்சிமையை செலுத்துகிற ஆட்சியையும் இங்கே தரக்குறைவாக விமர்சித்து இருக்கின்ற துக்ளக், திங்கள் இரு முறை வரும் இதழ் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உரிமைக் குழுவுக்கு விடவேண்டும். இதழ் ஆசிரியர் மீது மட்டும் அல்லாமல் கார்ட்டூன் வரைந்து இருக்கிற அந்த ஓவியர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுத்தால் தான் மீண்டும் குற்றங்கள் எழாமல் பேரவையினுடைய மரபு, வழிவழியாக காப்பாற்றப் படும் என்ற உணர்வோடு சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழிந்து உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்களும் 15—6—1985 நாள் இடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள துக்ளக் இதழில் வெளி வந்த சில பல கூற்றுகள் பற்றி அவை அவை, உரிமைகளை மீறியதாகவும் அவை உறுப்பினர்களை அவமதித்து எழுதியதாகவும், தரக்குறைவாக அது அமைந்து இருக்கிற தன்மையை ஒட்டி, அந்த ஏட்டினுடைய ஆசிரியர், பதிப்பாளர் ஆகியவர்கள் மீது முறைப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவினுடைய அரசியல் அமைப்பைப் பொறுத்தவரையிலும் இது பார்லிமெண்டு டெமாகரசி என்று சொல்லப்படுகின்ற பாராளுமன்ற ஜனநாயக தத்துவத்தை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு, நம்முடைய அரசியல் அமைப்பு. இந்த பாராளுமன்ற ஜனநாயக முறைகளில் அமைக்கப்பட்டு இருக்கின்ற அரசியல் அமைப்புகளில் மிக முக்கியமான மூன்று கூறுபாடுகள் உண்டு. ஒன்று மக்களின் விருப்பங்களை அறிந்து நாட்டினுடைய தேவையைக் கருதி இந்த நாட்டில், இத்தகைய சட்டங்கள், இத்தகைய விதிமுறைகள், இத்தகைய கொள்கை, கோட்பாடுகள், திட்டங்கள் போடவேண்டும் என்ற முடிவைக் கட்டுகின்ற முழு பொறுப்பும் சட்ட மன்றம், பாராளுமன்றத்திற்கு அமைகின்றது. ஆனால் அவற்றை ஏற்று நடத்த வேண்டிய பொறுப்பு மற்றொரு பகுதியாக இருக்கின்ற நிர்வாகத்திற்கு அமைகிறது. நியாயத்தை நிலை நாட்டவும், நேர்மையை நிலை நாட்டவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும், சட்டங்களுக்கு விளக்கம் தரவும், விளக்கம் தருகின்ற சட்டத்தின்படி தீர்ப்பு வழங்குகின்ற பொறுப்பு நீதி இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான் பாராளுமன்ற ஜனநாயகத்தைப்

பொறுத்தவரையிலும், இந்த நாட்டினுடைய ஜனநாயகம் 3 கால்களில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஒன்று சட்டமன்றம், மற்றொன்று நிர்வாகம், மற்றொன்று நீதித்துறை. ஆக இது மூன்றும் தனித் தனியாக இயங்கக்கூடியது. ஆனாலும் மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு, இந்த மூன்றுக்கும் அடிப்படையாக அமைந்தது பாராளுமன்றமும், சட்டமன்றமும் என்பதை பாராளுமன்ற ஜனநாயக முறையில் நாம் முதலில் கவனிக்க வேண்டும்.

சட்டமன்றமும், பாராளுமன்றமும், என்ன சட்டங்களை நிறைவேற்றுகின்றதோ, அந்த சட்டத்தினுடைய அடிப்படையில் தான் உயர்நீதிமன்றம் ஆனாலும், பிற மன்றங்கள் ஆனாலும் தீர்ப்பு வழங்கவேண்டும். இந்தச் சட்டமன்றத்தில் என்ன சட்டங்களை நாம் நிறைவேற்றுகின்றோமோ, பாராளுமன்றத்தில் என்ன சட்டங்களை நிறைவேற்றுகிறார்களோ அதைத்தான் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டிய முழு பொறுப்பும் நிர்வாகத்தைச் சேர்ந்தது. ஆகவே, நிர்வாகத்திற்கும் சரி, நீதித் துறைக்கும் சரி, அடிப்படையாக விளங்குவது சட்டமன்றமும், பாராளுமன்றமும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஆகவே தான் ஜனநாயக பாராளுமன்றத்தில், பாராளுமன்றத்தினுடைய மதிப்பு காப்பாற்றப்படவேண்டும், இதனுடைய பெருமை நிலைநாட்டப்பட வேண்டும், இதிலே பங்கு ஏற்கிறவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிய மரியாதை கிடைக்க வேண்டும் என்ற தத்துவத்தை வைத்து மதர் பார்லிமெண்டு என்று சொல்லக்கூடிய தாய் பாராளுமன்றத்தை வைத்து நடத்தி பழக்கப்பட்டு வருகிறது.

அனுபவத்தின் அடிப்படையிலேயே பணிகளை ஆற்றிக் கொண்டு வருகின்ற பாராளுமன்றம் நடைபெறுகிறது. அதிலிருந்து சில பல நிகழ்ச்சிகளைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அந்த வகையிலே தான் இந்த அவையைப் பொறுத்தும், அவையிலே இருக்கிற உறுப்பினர்களைப் பொறுத்தும், அவர்களுக்கு தரவேண்டிய மரியாதையும் தராமல், மதிப்பையும் தராமல் இழிவுபடுத்துகின்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் இந்த வாசகங்கள் அமைந்து இருக்கின்றன என்பதற்கான விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய முன்னுரைப் பகுதியிலேயே, சுதந்திரம், வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறபோதே (Liberty of thought, expression,



belief, faith and worship) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, எப்படியும் எண்ண, அத்தனை பேருக்கும் உரிமை உண்டு. எண்ணங்களை வெளியிட உரிமை உண்டு. குறிப்பிட்ட கொள்கையிலே, மதத்திலே நம்பிக்கை வைக்க உரிமை உண்டு.

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட மொழியிலே பற்று வைக்க உரிமை உண்டு. அது மட்டுமல்லாமல், தங்கள் விருப்பப்படி வழிபடவும் அவரவர்களுக்கு உரிமை உண்டு என்ற வகையிலே தான் தரப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட, அப்படி முன்னுரையிலே சொல்லப்பட்டாலும் கூட, என்ன கட்டுப்பாட்டுக்குள்ளே அந்த உரிமைகள் எல்லாம் வழங்கப்படவேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களையும் அரசியல் அமைப்புச் சட்டத்திலே மிகத்தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த அரசியல் அமைப்புச் சட்டங்களைத் தழுவித்தான் சட்டமன்றம், பாராளுமன்றங்கள் இயங்கி வருகின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் உள்ளே சொல்லப்பட்டிருக்கின்ற பிரிவுகளின் அடிப்படையிலேதான் சட்டமன்ற விதிகளும், பாராளுமன்ற விதிகளும் வகுக்கப்படுகின்றன.

சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில், விதிகள் வகுக்கிற முழு உரிமையும் நமக்குத்தான் சேர்ந்தது. பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும், எப்படி நிகழ்ச்சிகள் இருக்கவேண்டும், என்னென்ன நடைமுறைகள் கடைப்பிடிப்பது என்று முடிவெடுப்பது பாராளுமன்றத்தைச் சேர்ந்தது.

தேர்தல் கமிஷனைப் பொறுத்த வரையில், தேர்தல் நடத்த ஆரம்பித்து, அதை நடத்தி முடிக்கின்ற வரையில் எப்படி நடத்த வேண்டும் என்று விதிமுறைகளை வகுக்கத்தான் தேர்தல் கமிஷனுக்கு உரிமை உண்டே தவிர, தேர்தல் முடிந்த பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர் என்று சொன்ன பிறகு, ———— தேர்தல் கமிஷன் தன்னுடைய பொறுப்புக்களை செய்யத் தொடங்கி விடுமானால், மத்திய அரசோ, மாநில அரசுகளோ அல்லது ஜனாதிபதியோ கூட அதிலே ஈடுபட உரிமை இல்லை. அவ்வளவு உரிமை தேர்தல் கமிஷன் ஆணையருக்கு தரப்பட்டிருக்கிறது. தேர்தலை நடத்தி முடிப்பதற்கு அவர்கள் சில பல வழிமுறைகள், தன்மைகளை கொண்டிருக்கிறார்கள்———— ஆனால் சட்டசபையை எப்படி நடத்துவது, சட்டமன்றத்தில் எப்படி விதிமுறைகளைக் கையாள்வது என்பதை நாம் அனைவரும் சேர்ந்து, 'ரூல்ஸ் கமிட்டி' என்று சொல்கிற விதிக் குழுவின் மூலமாக என்ன முடிவு எடுத்துச் சொல்கிறோமோ, அதை மாண்புமிகு தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும், அந்த இடத்திலே அமர்கிற தற்காலிகத் தலைவர்களும் நிறைவேற்றுபவர்களாக இருக்கிறார்கள். அந்த முறையில் சுதந்திரம் என்பது, ஜனநாயகத்திலே மிக மிகத் தேவைப்படுகின்ற ஒன்றுதான்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 19

பத்திரிகைச் சுதந்திரம் மிகத் தராளமாகத் தரப்பட்டு இருக் கிறது. ஏராளமாகத் தரப்பட்டிருக்கிறது. தரப்படவேண்டும். ஏனென்றால் ஜனநாயக நாட்டிலே, மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்கவேண்டும். அப்படி அவர்கள் இருக்கவேண்டுமென் றால், செய்தித் தாள்கள் எல்லாம் விமர்சனங்கள் செய்ய வேண்டும் ; சாதக-பாதகங்கள் எடுத்துச் சொல்லப்படவேண்டும். நன்மை-தீமைகள் எடுத்துச் சொல்லப்படவேண்டும். இருக்கிற விளைவுகள், எதிர்கால விளைவுகளை எடுத்துச் சொல்கிற முழு உரிமையைப் பத்திரிகைகள் பெற்றிருக்கின்றன. மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்துகின்ற பெரும் சாதனமாக பத்திரிகைகள், ஏடுகள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள் இருக்கின்றன என்பதை யாரும் இங்கே மறுக்கவில்லை.

அப்படி அது இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் தான், ஜனநாயகம் நிலைக்கும் , தழைக்கும், வாழும், வளரும். அந்த நம்பிக்கை யின் அடிப்படையிலே தான் தாராளமாகத் தரப்பட்டிருக்கிறது.

சுதந்திரத்திற்கு உவமையாக 'நெருப்பைக்' கொள்வோ மேயானால், நெருப்பு, சுதந்திரத்திற்கு ஏற்றதாக அமைந் திருக்கிறது. சுதந்திரம் என்ற அந்த நெருப்பை கட்டுப் பாட்டுக்குள்ளே வைப்பதா, இஷ்டப்படி விடுவதா என்று வருகிறபோது, நெருப்பு பலன் தான் தரவேண்டுமே தவிர, சுட்டுப்பாட்டு அடுப்புக்குள் அது இருக்கவேண்டும். எந்த வகையிலே பயன்படுத்துகிறோமோ, அந்த பயனுக்கான வகையில் நெருப்பு பயன்படவேண்டும் என்பது தான் நெருப்புக் குள்ள தன்மையே தவிர, எப்படி வேண்டுமானாலும் பயன் படுத்தலாம் என்று சிறு நெருப்புப் பொறியை எடுத்து குடிசை வாழ் மக்கள் பகுதியிலே வீசி எறிந்தால் குடிசைகள் அழிந்துவிடும். ஊரே அழிந்து விடும். சுதந்திரம் மிகவும் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கவேண்டும். 'டெமாக்ரஸி வித் டிஸிப்பிளின்' என்று தான் சொல்வார்கள். ஆக, ஜன நாயகம் இருக்கவேண்டும். அது கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

அந்தத் தன்மைகளை ஒட்டி ஏடுகள் இருக்கின்றன. ஆனால் அதற்கெல்லாம் விதிவிலக்காகவே தொடர்ந்து 'துக்ளக்' அமைந்து வருவது, அதன் பெயரின் காரணமாகவோ, என்ன வோ தெரியவில்லை. அந்தப் பண்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டதன் காரணமாக, தேடிப்பிடித்து அந்தப் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று தெரிய வில்லை. ஆகவே, வரலாற்றிலேயே, வியப்புக்குரிய, பரிக சிக்கக்கூடிய உருவமாக துக்ளக் வர்ணிக்கப்பட்டிப்பதை எல்லாம்கூட நாம் எல்லாம் காணலாம்.



1985 ஜூன் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆனால், துக்களக் என்ற பெயருக்கேற்ப நடத்துகின்ற அளவிற்குப் பல்வேறு எழுத்துக்களை எழுதுகிறார்கள். அப்படி எழுதுவதைப்பற்றி ஒன்றுமில்லை; விமர்சிக்கலாம், சாதகக் பாதகங்களை தாராளமாக எடுத்துச் சொல்லலாம். இந்தச் சட்டமன்றத்தினுடைய அரசியல் கட்சிகளினுடைய கொள்கை கள், கோட்பாடுகளை மறுக்கலாம்; தாக்கலாம்; அதை மறுத்து எடுத்துக் சொல்லி தங்களுடைய கருத்தையும் நிலைநாட்டுவதற்கும் முழு உரிமை உண்டு. ஆனால் யாரையும் கேவலப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. யாரையும் அவருடைய தகுதிக்குக் கீழே இழிவுபடுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. தனிப்பட்ட மனிதருக்கே அப்படியில்லை என்கின்றபொழுது உள்ளபடியே நாட்டி னுடைய பொறுப்பு முழுவதையும் கவனிக்கின்ற பொறுப்பு வாய்ந்த ஒரு சட்ட மன்றத்தினுடைய, அவையினுடைய உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்; அவையில் உள்ள தனிப்பட்ட உறுப்பினர்களுடைய உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும். அவையினுடைய உரிமையும், தனிப்பட்ட உறுப்பினர்களுடைய உரிமையும் காப்பாற்றப்பட வேண்டு மென்பது மட்டுமல்லாமல், அவர்களுடைய மதிப்பு குறையாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதும் மிகமிக முக்கியம்,

(முற்பகல் 11-00.)

மதிப்பு, மானம், தன்மானம் என்பவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குக் காரணமே இதுதான். மானம் என்ற சொல்லுக்குக்கூட, திருக்குறளுக்கு விளக்கம் பகர வந்த பரிமேலழகர் அழகாகச் சொன்னார், மானம் என்றால் தன் நிலையில் தாழாமையும், தாழ்ந்த வழி உயிர் வாழா மையும் மானம் என்றார். ஆகவே, தன் நிலையில் ஒருவன் தாழக்கூடாது; தாழாமல் வைப்பதுதான் மானம், மரியாதை, மதிப்பு என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இந்த அவையினுடைய மதிப்பு குறையக் கூடாது; குறையாத அளவிற்கு எவ்வளவு வேண்டுமானாலும் விமர்சனம் செய் வதற்கு யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அந்தவகையிலே பார்க்கின்றபொழுது, துக்ளக் எழுதியிருப்பது இந்த அவை யையும் அவமதித்து, அவையில் இருக்கின்ற உறுப்பினர் களையும் அவமதித்து தொடர்ந்து எழுதிக்கொண்டு வந்தாலும், இப்பொழுதுதான் நம் உறுப்பினர்கள் சில பேருக்குக் கண்ணுக்குப் பட்டு வந்ததன் காரணமாக பிரச்சினை யாக எழுப்பப்பட்டதன் காரணமாக எடுத்துக்கொண்டு வருகிறோம். தொடர்ந்து எழுதிக்கொண்டுதான் வருகிறார்கள்.

அரசியல் ரீதியிலே விமர்சிப்பார்களேயானால் அரசியல் வாதிகள் ஒவ்வொரு மேடையிலேயும் அதற்குப் பதில் எடுத்துச் சொல்கின்றார்கள். அரசியல் ரீதியிலே விமர்சிக்கின்றபொழுது அரசியல் ரீதியிலேயே ஒவ்வொரு அரசியல் மேடையிலேயும்

அதற்குப் பதில் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதைப்
பற்றிக்கூட நாம் கவலைப்படவில்லை. அப்படி வருகின்ற
பொழுதெல்லாம்கூட, ''பயனில்சொல் பாராட்டு வானை
மகன் எனல் மக்கட் பதடி யெனல்'' என்று வள்ளுவரும் கூறிய
தற்கேற்ப நாம் அரசியல் மேடைகளிலே அவர்களை
யெல்லாம் தள்ளிவிட்டுச் செல்கிறோம். ஆனால், இப்பொழுது
வந்திருக்கின்ற பிரச்னை, இங்கே அவையையும் அவமதித்து,
அவையில் இருக்கின்ற உறுப்பினர்களையும் அவமதிக்கின்ற
அளவிற்கு இந்த வாசகங்கள் அமைந்திருக்கின்ற காரணத்
தினாலேதான் இந்த அவை கவனிக்க வேண்டிய ஒன்றாகவும்,
இதுபற்றி ஒரு முடிவு கட்ட வேண்டிய ஒன்றாகவும், எதிா
காலத்திலே எப்படி எழுத வேண்டுமென்பதற்கு எடுத்துக்
காட்டாகவும், முன்னோடியாகவும் அமைப்பதற்குத் திட்டம்
வகுக்க வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துத்
தெரிவித்ததைப் போன்று மேல் அட்டையிலே வேறு பல
வைத்து இருக்கிறார்கள். அதில், அரசியல் கருத்து, விமர்
சனம், அதையெல்லாம் கூட தள்ளிவிடுகிறேன். ஆட்சியைப்
பற்றி விமர்சனம் சொல்கிறார்கள். நாம் அதற்கு வெளி
யிலே பதில் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், அப்படிப்
பட்ட பதில் சொல்லிச் சொல்லித்தான் நாமே வந்திருக்கிறோம்.
இந்த அவையிலே இருக்கிற அத்தனைபேரும் வந்திருக்கிறார்
கள். துக்ளக் விமர்சித்ததற்குப் பிறகுதான் ஆளுங்கட்சியாக
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
மூன்று முறையும் வந்திருக்கிறது. துக்ளக் விமர்சித்தபிறகு
தான் இந்தியாவிலேயும் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து
சேர்ந்திருக்கிறது. ஆனால், அவர்களுடைய கருத்துக்களுக்கு
யாரும் எந்தவிதமான மதிப்பையும் தரவில்லை என்பதை
நாடு ஏற்றுக் கொண்டாலும், உரிமைப்படி, சட்டப்படி
இந்த அவையைச் சொல்லிவிட்டதன் காரணமாக, சித்தன்
அவர்கள் காண்பித்தார்கள், ஆறு படங்களிலே—மற்றைய
படங்களிலே அரசியல்வாதிகளாகக்கூட நாம் பதில் சொல்லிக்
கொள்ளலாம். ஆனால், ஒரு படத்திலேதான் இந்த அவையையே
அவமதிக்கின்ற அளவிற்கு அமைந்திருக்கிறது. அதைத்தான்
சுட்டிக்காட்டுகிறேன், பட்டதாரிகளுக்கு சாராயக் கடை
என்று. சாராயக் கடைகளைப் பட்டதாரிகள் எடுக்கக்
கூடாது என்று ஒன்றுமில்லை. பட்டதாரியும் எடுக்கலாம்;
பட்டம் இல்லாதவனும் எடுக்கலாம்; பட்டம் பறக்க விடுப
வனும் எடுக்கலாம்; பட்டத்தை இழந்தவனும் எடுக்கலாம்;
பதவியை இழந்தவனும் எடுக்கலாம், பதவியை வைத்திருக்



கின்றவனும் எடுக்கலாம், யார் வேண்டுமானாலும் எடுக்கலாம்.
ஆக, பட்டதாரிகளுக்கு என்று அதை ஒன்றும் ஒதுக்கவில்லை;
பட்டதாரிகள் எடுக்கக்கூடாது என்றும் ஒன்றும் இல்லை.
ஆனால் ஒயின் ஷாப்புகளைக்கூட அநேக பட்டதாரிகள்
எடுத்திருக்கிறார்கள், எடுத்தான் என்றால் ஒழுங்காக நடத்
துவானா என்றுகூட தெரியவில்லை. ஆனால் அதில் யார்
வேண்டுமானாலும் எடுக்கலாம். அதைப்பற்றி நமக்குப்
பிரச்சினை இல்லை. முதல் வரியைப் பற்றிப் பிரச்னை இல்லை.

இரண்டாவது வரி, படிக்காதவர்களுக்கு சட்டசபை, இந்தச்
சட்டசபை இருப்பதே படிக்காதவர்களுக்காகத்தான்,
இதிலே வந்திருப்பவர்கள் எல்லாம் படிக்காதவர்கள்
தான். ஆகவே, அவர்களில் மரியாதைக்குரிய
வர்கள் யாரும் இல்லை என்கின்ற அளவிற்கு விமர்சனங்கள்
செய்கின்றபொழுதுதான், இருக்கின்ற நிலையையும் தாழ்த்தி,
மரியாதையையும் குறைத்து, மதிப்பையும் குறைக்கின்ற ஒரு
குற்றச்சாட்டுக்கு ஆளாகிறார்கள். ஆகவேதான் இதைக்
கவனிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த
வகையிலே, ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்'' என்று வள்ளுவர் சொன்னார்.
பலர் கற்றிருக்கலாம், ஆனால் உலகத்தோடு ஒட்ட ஒழுகுகின்ற
பண்பு தெரியாமல், மதிப்பு தெரியாமல், மரியாதையும்
தெரியாமல் ஒருவன் நடந்து கொண்டால், பேசுவானே
யானால், எழுதுவானேயானால், அவன் கற்றிருந்தாலும் கல்லாத
வர்களோடு இணைக்கப்பட வேண்டுமென்று வள்ளுவர்தான்
சொல்லியிருக்கிறார்கள். ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல
கற்றும் கல்லார், அறிவிலா தார்'' என்று சொல்லி
யிருப்பதில், வேறு பல கற்றிருக்கலாம், ஆனால் அந்த
பண்பைக் கல்லாதவர்கள், முறையைக் கல்லாதவர்கள்,
மரியாதையைக் கல்லாதவர்கள், மதிப்பைக் கல்லாதவர்கள்
கற்காதவர்கள் என்று முடிவு கட்டினார்கள். அந்த
இலக்கணத்திற்கு வேறு யார், யாரோ வரலாம். அதைப்
பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் இந்த அவையைப் பார்த்து,
'படிக்காதவர்களுக்கு சட்டசபை' என்று தீர்ப்பு வழங்கியிருப்பது,
இந்த அவையையே அவமதிப்பதாகும். இங்கே இருக்கிற அத்
தனை உறுப்பினர்களையும் அவமதிப்பதாகும். குறிப்பாக, தலை
வரையே அவமதிப்பதாகும். ஏனென்றால், நாங்கள் எல்லாம்
பார்த்து தேர்ந்தெடுத்து உட்கார வைத்திருக்கிற ஒருவரே
அதற்கு இலக்காக, ஆளாகிறார்கள் என்பதை உணரவேண்டும்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** சபையின் முன்னவர் அவர்கள் ' படிக்காதவர்களுக்கு சட்டசபை ' என்று எழுதியதைப் பற்றி மெத்த வேதனைப்படுகிறார்கள். ஒரு சமயம், துக்ளக் ஆசிரியர், துக்ளக் பத்திரிகையைப் படிக்காதவர்களுக்கு சட்ட சபை என்று கருதி இருக்கக் கூடும். ஆகவே, அதைப் பெரிது படுத்த வேண்டியதில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப் பார்த்தால் இப்பொழுது படித்து விட்டு வந்த நாமெல்லாம் குற்றச்சாட்டுக்கு ஆளானாலும் ஆளாகி விடுவோம். அவர்களே எடுத்துச் சொன்ன மாதிரி பக்கம் 32 இல் கேள்வியைக் கேட்டுப் பதில் எழுதுகிறார்கள். இந்தக் கேள்வி கேட்கிற முறையும் பதில் எழுதுகிற முறையும் பத்திரிகைகளை நடத்தி வந்தவர்களுக்குத்தான் தெளிவாகத் தெரியும். என்ன பதில் சொல்ல வேண்டுமோ, அதற்கு ஏற்ப கேள்வி உருவாக்குகின்ற திறம்படைத்தவர்கள் ஆசிரியர்கள் என்பதெல்லாம் பொதுவாகவே நாட்டுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் படித்துக் காட்டிய மாதிரி, கேள்வி என்னவென்றால், சட்டசபையில் மந்திரிக்கும், எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.க்கும் இடையே விவாதம் நடக்கும்போது ' அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன ' என்ற செய்தி வருகிறதே, இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன? என்று கேள்வி கேட்பவர் கேட்கிறார். அதற்குப் பதில் உரைப்பவர் உரைக்கிறார் : '' சட்ட சபையில் எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அவைக் குறிப்பில் இடம் பெறுகிற வார்த்தைகள், தகாத வார்த்தைகளாக இருக்கக் கூடாது''. அதுவரையில் தப்பில்லை. சட்டசபையில் யாரும் எதையும் பேசலாம். ஆனால் இடம் பெறக்கூடிய தகுதி படைத்த வார்த்தைகளைத் தான் பேச வேண்டுமே தவிர, தகுதிபடாத வார்த்தைகளைப் பேசக் கூடாது என்று அவர் முதல் வரியிலே சொல்லியிருக்கிறார். அதிலே ஒன்றும் தகராறு இல்லை. ஆனால், அதற்கடுத்து சொல்கின்ற பொழுதுதான், 'அவைக் குறிப்பு என்பது, காகிதக் கட்டு'. இது அவையை மட்டுமல்ல' அவை உறுப்பினர்களை மட்டுமல்ல, இந்தக் காகிதக் கட்டுக்கே அவமானம். இந்தக் காகிதக் கட்டினுடைய மதிப்பையும் குறைத்து, அவையினுடைய மரியாதையையும் போக்குகிற அளவுக்கு அவை மரியாதைக் குறைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் மரியாதை மட்டுமல்ல. காகிதக் கட்டுக்கே அந்தக் கதி வந்து சேர்ந்திருக்கிறது.

அதற்கடுத்து, ''சட்ட சபை என்பது ஒரு 'மனிதர் கூட்டம்'.'' சாதாரண மனிதர்கள்— அறிவு ஆற்றலுக்கு மதிப்பளிக்காத வகையில், மனிதத் தன்மைக்கே மதிப்பளிக்காத வகையில்— மனிதக் கூட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கும் மேலே சொல்லப்பட்டிருப்பது, ''காகிதத்தை விட கேவலமானவர்கள், நமது சட்டசபையை அலங்கரிக்கிறார்கள்....'' என்பது. பொதுவாக, உலகத்திலே என்று சொல்லிவிட்டாலும் பரவாயில்லை.





ஆனால் சட்டசபை என்கின்றபொழுது, இங்கே இருக்கிற சட்ட சபையைத்தான் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் காகிதக் கட்டைவிட்டக் கேவலமானவர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்கின்ற பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களை அவமானப்படுத்தும், அவமதிப்புக்கு உள்ளாக்கும் ஒரு குற்றத்தை இந்த ஆசிரியர் செய்திருக்கிறார்.

அடுத்து, 33-வது பக்கத்திலே சொல்கின்ற பொழுது '' தமிழக சட்ட சபையில் நடந்த அமளி துமளியைப் பற்றி ?. . என்று போட்டிருக்கிறார்கள். அதற்கு அவர் என்ன பதில் சொல்கிறார் என்றால், ''இது என்ன பெரிய ஆச்சரியம்? இது இனிமேல் செய்தியே அல்ல. ' இன்று சட்டசபையில் எம்.எல்.ஏ. க்கள் ரௌடித்தனம் செய்யவில்லை' என்று தெரிய வந்தால், அது செய்தி'' என்பது.

சட்டசபை உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை கிளப்புகிறார்கள். தங்களுடைய வாதங்களை எடுத்து வைக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. சில சமயம் பேரவைத் தலைவர் அதற்கு விளக்கம் தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் விளக்கத்தைக் கேட்டு உட்காருகிறார்கள். சில சமயங்களில், உணர்ச்சி வயப்பட்டு கேட்கப்படுகின்ற பொழுது கூட அதைத் தீர்க்க வேண்டியது சபைதான். தீர்த்து முடிக்க வேண்டியது சபைதான். பல சந்தர்ப்பங்களிலே இந்த அவைதான் தீர்த்திருக்கிறது. உணர்ச்சி வயப்பட்டு எடுத்துச் சொன்ன வார்த்தைகள், மற்றவைகள் எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. இதை மாண்புமிகு உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களிலே உணர்ச்சி வயப்பட்டு வாதப் பிரதி வாதங்களில் ஈடுபடுகின்ற பொழுது காரசாரமாகப் பேச வேண்டிவரும். சில பேர் மென்மையாகப் பேசுகிற இயல்பு கொண்டவர்கள், சில பேர் எதற்கெடுத்தாலும் காரசாரமாகப் பேசுகின்ற இயல்பு உடையவர்கள். ஆகவே, பேசாமல் இருந்தால் அன்றைக்குச் செய்திக் குறிப்பே வராமல் போனாலும் போய்விடும் என்று கருதுகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கக் கூடும். அவரவர்களுடைய இயல்புக்கு ஏற்ப எடுத்து வைப்பார்கள். ஆனாலுங்கூட ரௌடிகளாக நடந்து கொள்கிறார்கள் என்கிற குறிப்பை இந்த அவை ஏற்றுக் கொள்ள இயலாது. அதற்கேற்றபடி தீர்ப்பளிக்கின்ற பொறுப்பும், கட்டுப்படுத்துகின்ற பொறுப்பும், ஒழுங்கை நிலைநாட்டுகின்ற பொறுப்பும் அவைத் தலைவருக்கு இருக்கிறது. அவை அவ்வப்போது கட்டுப்பாடின்றி செல்லும்போது, அவையினுடைய உரிமைகளையும் காப்பாற்றி, அவையினுடைய ஒழுங்கையும் காப்பாற்றி, சட்ட விதிகளுக்கு மதிப்பளித்து, அதை நடைமுறைப்படுத்தி

வருகிறார்கள். அதற்குப் பாதகம் ஏற்படுத்துகிற அளவுக்கு, குந்தகம் விளைவிக்கிற அளவுக்கு எழுதியிருப்பது மிகமிகக்கேவலம் என்பது மட்டுமல்லாமல், இது அவை உரிமையை மீறுகின்ற அளவில் உள்ள ஒரு குற்றச்சாட்டு என்றுதான் நான் சொல்வேன்.

அதற்கு மேலும் சொல்கின்ற போது, "இந்தியாவிலேயே அதிக அளவு மரம் நடப்பட்டது எம்.ஜி.ஆர். ஆட்சியில் தான்.' என்று ஆர்.எம். வீரப்பன் கூறியுள்ளாரே? என்று ஒருவர் கேட்டிருக்கிறார்.

(முற்பகல் 11–10)

அதற்குப் பதில், அமைச்சரவையில் இருக்கும் மந்திரிகள் பலரைப் பற்றி இப்படிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். நாங்கள் எல்லாம் மரங்கள் (சிரிப்பு) இந்தியாவிலேயே அதிக அளவு மரம் நடப்பட்டது நம்முடைய மாநிலத்தில் என்று சொல்லியிருக்கிறார்கள். இருபது அம்சத் திட்டம் தமிழ்நாட்டில் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் நாம் முன்னணியில் இருக்கிறோம். 20 அம்சத் திட்டத்திலே ஒன்று மரம் நடுவது. அதிலும் முன்னணியில் இருக்கிறோம் என்று சொன்னதை வேண்டுமானால் அப்படி மரங்கள் நடவில்லை. நான் பார்க்கவில்லை என்று சொல்லலாம். அப்படிச் சொல்லியிருந்தால் அவருக்குக் கண் பழுது, பார்க்க முடியவில்லை என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அமைச்சரவையில் இருக்கிறவர்களை மரங்கள் மாதிரி சித்தரித்து, மந்திரிகள் பலரைப் பற்றி இப்படிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன் என்று சொன்னால் விளங்காது என்று நினைத்து, அதற்கு ஒரு படமும் போட்டு, மரத்தில் ஒரு தலையும் போட்டு, மந்திரியை மரமாக நடுகிறார் என்பது போல் விமர்சித்திருக்கிறார். வெளியிலே தனிப்பட்டவரைப் பற்றி பேசலாம். மேடையில் விமர்சிக்கலாம். அதற்கு உரிமை இருக்கிறது அவர்களுக்கு. வெளியிலே, மேடைகளிலே பேசும்போது சட்டதிட்டங்களை மீறினால் வழக்கு மன்றத்திற்குச் செல்ல வழிவகை இருக்கிறது. நீதிமன்றத்தில் நஷ்டஈடு கேட்கவோ, மான நஷ்டஈடு கேட்கவோ வழிவகை இருக்கிறது. ஆனால் இது இந்த அவையைப் பற்றிய செய்தி. இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களைப்பற்றி, அமைச்சர்களைப் பற்றிக் கேவலமாக, தரக்குறைவாக எடுத்துச் சொல்லியிருப்பதால் இது அவை உரிமையை மீறிய செயல் என்று நாம் கருத வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே இப்படிப் பல ... எழுதினாலும் பெரும் ... என்று கருதி, அவ்வப்போது விட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படி விட்டுக் கொண்டு வந்தது பலகீனம் அல்ல. பெருந்தன்மை. பெருந்தன்மையோடு விட்டு வந்ததைப் பலகீன



மாகக் கருதுகிற போது ஜனநாயகம் பாதிக்கப்படுகிறது. இந்த அவைக்கு பங்கம் ஏற்படுகிறது. உறுப்பினர்களுக்குக் களங்கம் ஏற்படுகின்றது. ஆகவே, இப்படிப்பட்டப் பிரச்சினைக்கு இப்போதாவது ஒரு முடிவு கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்".

என்று மக்கள் பண்பு இல்லாதவர்களைத்தான் மரத்திற்கு சமம் என்று சொல்லப்பட்டதே தவிர, அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்களை, அவையில் இருக்கிற உறுப்பினர்களை எல்லாம் இப்படிப்பட்ட மரம் என்று சொல்லவில்லை. அமைச்சர்களை மரம் என்று விமர்சித்திருப்பது, உறுப்பினர்களைக் கேவலமாக குறிப்பிட்டிருப்பது எல்லாம் இந்த அவையை அவமதிப்பதாகும். இந்த அவை அவமதிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களின் தகுதி தாழ்த்தப்பட்டிருக்கிறது; மதிப்பு, மரியாதை குறைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவையின் மதிப்பும், மரியாதையும் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதை அவை உரிமையை மீறிய ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆக, இதற்கு அந்த ஆசிரியர் மன்னிப்புக் கேட்கிறேன் என்று சொல்லலாம், அல்லது வேறு காரணங்கள் கூறலாம். இதற்கு உட்படியாகத் தீர்ப்பு வழங்க இடம் இருக்கிறது என்றாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் விரும்பினால் அவை உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பலாம். அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அந்த ஆசிரியரை, குழு அழைத்து விசாரித்து, குழுவினுடைய கருத்தை அறிக்கையாகக் கொடுக்கலாம். அந்த அறிக்கை வந்தபிறகு அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

இந்தப் பிரச்சனையின்மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கை மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்று கருதுகிறேன். அந்த வகையில் இதை அவை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவரின் விருப்பப்படி முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்ட பிரச்சனை பத்திரிகையில் வரும்போது நம்மைப் பற்றி ஒரு தரக்குறைவான எண்ணம் மக்களுக்கு ஏற்படும். தமிழ்நாட்டில் இந்தப் பத்திரிகையைப் படிப்பவர்கள் குறைவாகத் தான் இருக்க முடியும். ஆனால் இன்றைக்கு சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சனை தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல; மற்றவர்களும்

[திரு. ஐ. சுப்பிரமணியன்] [1985 ஜூன் 19

தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் எல்லாம் இதைப் படிக்கும்போது ''தமிழ்நாட்டு எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் படிக்காதவர்கள் என்று துக்ளக் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்'' என்று கூறுவார்கள்; அந்த எண்ணம் ஏற்படும். ஆகையால் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் ஒரு குறிப்பைப் படிக்கிறேன். அதையும் இதோடு இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பு வேறு ஒன்றும் அல்ல. இந்த மன்றத்தில் படித்தவர்கள், என்னென்ன கல்வி தகுதி பெற்றவர்கள் என்பதுதான்.

234 பேர்கள் இருக்கின்ற இந்த சட்டமன்றத்தில் பள்ளி இறுதித் தேர்வு பெற்றவர்கள் 61 பேர்; பள்ளி இறுதி மற்றும் மேல்நிலைப்பள்ளி தேர்வு பெற்றவர்கள் 62 பேர்; இன்டர்மீடியேட் மற்றும் புகுமுகப் படிப்பு பெற்றவர்கள் 17 பேர்; பட்டதாரிகள் (இளங்கலை) 15 பேர்; பட்டதாரிகள் (அறிவியல்;) 7 பேர்; பட்டதாரிகள் (வணிகவியல்) ஒருவர்; முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் (போஸ்ட் கிராஜுவேட்ஸ்) 14 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றவர் 3 பேர்; பொறியியல் பட்டதாரி ஒருவர்; சட்டக் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் 41 பேர்: மருத்துவக் கல்லூரி பட்டம் பெற்றவர்கள் 8 பேர்; மற்றவர்கள் 4 பேர். மற்றவர்கள் என்றால்—நான் இலங்கையில் சீனியர் கேம்பிரிட்ஜ் பள்ளியில் படித்தவன்; அப்படிப்பட்ட கல்வித் தகுதிகள் இதிலே வராது; அப்படிப்பட்ட தகுதி பெற்றவர்கள் 4 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நான் சொன்ன இந்த விவரங்களும் சேர்ந்து இன்றைய மாலைப் பத்திரிகைகளிலும், நாளைய பத்திரிகைகளிலும் வந்தால் நம்முடைய மரியாதை காப்பாற்றப்படும் என்ற வகையில் உங்கள் அனுமதியுடன் இதை அவைக்குறிப்பிலே ஏற்ற வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * *

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * *

(திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளியேறினர்.

---

(**) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1985 ஜூன் 19]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாகவே இந்த அவையினுடைய மரியாதையும் மதிப்பும் காப்பாற்றப்பட வேண்டும், கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம். எனவே, உறுப்பினராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, உணர்ச்சி வயப்படாமல் நியாயத்தின் அடிப்படையிலும், நேர்மையின் அடிப்படையிலும், விதி முறைகளினுடைய அடிப்படையிலும் அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல முன்வர வேண்டும்.

ஆகவே, கருத்துக்களை எந்தெந்த வகையிலே எடுத்து வைக்லாம் என்பதற்கு சட்டத் திட்டத்திலே விதி முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் திடீர் திடீர் என்று எழுந்து தங்களுக்குத் தோன்றியதை எல்லாம் எடுத்து வைத்து, அதற்கு உடனடியாக விளக்கம் வேண்டும் என்று கேட்பது ஜனநாயக மரபு அல்ல; சட்டமன்றத்தினுடைய மரபும் அல்ல. அதைக் கடைபிடிக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்களை அவை முன்னவர் என்ற முறையிலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலே இந்த அவையினுடைய கண்ணியத்தையும், மதிப்பையும், மரியாதையையும் காப்பாற்ற வேண்டியது அத்தனை பேர்களுடைய பொறுப்பு. ஆகவே, உறுப்பினர்கள் சற்று உணர்ச்சி வசப்பட்டாலும், பேரவைத் தலைவராகிய தாங்கள் உணர்ச்சி வயப்பட வேண்டாம் என்று இந்த அவையின் சார்பாக தங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குட்டை நீர் வெதும்பினால் குளத்து நீரைக் கொண்டு வந்து கொட்டலாம். குளத்து நீரே வெதும்பினால் ஏரி நீரைக் கொண்டு வந்து கொட்டலாம், ஏரி நீரே வெதும்பினால், கடல்நீரைக் கொண்டு வந்து கொட்டலாம், கடல் நீரே வெதும்பினால் எதைக் கொண்டு வந்துக் கொட்டுவது. இந்தக் கருத்தில் ''கடல் நீர் வெதும்பினால் வளவு நீர் இல்லது போலவும்'' என்று அகநானூற்றிலே ஒரு சொற்றொடர் உண்டு. அது போல நாங்கள் எல்லாம் உணர்ச்சி வயப்பட்டால் அடக்குவதற்கு தாங்கள் உண்டு. தாங்களே உணர்ச்சி வயப்பட்டால் தங்களை அடக்குவதற்கு இங்கே யாருக்கும் உரிமையும் இல்லை. ஆகவே, இதை மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும்.

சவால் விடுவது, அறைகூவல் விடுவது என்பதெல்லாம் உள்ளபடியே சட்டமன்றத்திற்கும் பொருந்தி வராது. சட்டமன்ற மரபுக்கும் பொருந்தி வராது. ஆகவே, அப்படிப் பேசப்பட்ட பேச்சுக்களை அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பதற்கு எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 19

உரிமை மீறல் பிரச்னையைப் பொறுத்தவரையில் முன்னறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள் யார் யாரோ அவர்கள் எல்லாம் தங்கள் கருத்தைக் தெரிவிக்க வேண்டும்; அதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது என்பது பற்றி உரிய அமைச்சரோ அல்லது அவை முன்னவரோ பதில் விளக்கம் தரலாம் என்பதை மரபாக வைத்திருக்கிறோம். இதில் மற்ற உறுப்பினர்கள் யாரையும் பேச அனுமதிப்பதில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் தங்களுடைய கருத்தை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சொல்லலாம். கேள்வி கேட்காமல், பிரைவேட் மெம்பர் குவஸ்டின் என்ற அடிப்படையில் கேட்கலாம். இப்படி ஒரு மரபு பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த வகையில்தான் தாங்கள் நடந்து கொண்டீர்கள். மரபுப்படி, முறைப்படிதான் நடந்து கொண்டீர்கள் என்றாலும், இதுவரையில் நடந்த இந்தப் பேச்சு வார்த்தைகள் மற்றும் தங்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையிலே நடந்த விவரங்கள் எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுவதுதான் இந்த அவைக்கு மதிப்பளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்னை குறித்த விவாதம் தவிர, இதுவரை நடைபெற்ற விவாதங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பெற ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் தெரிவித்த கருத்துக்களைக் கேட்ட பிறகு, இப்பிரச்சினையில் பேரவையின் தலையீடு தேவை என்பதாலும் இப்பிரச்சினையில் அவை உரிமைமீறல் இருப்பதாகத் தெரிய வருவதாலும், இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம் என்றோ அல்லது இப்பேரவையே இப்பிரச்சினை குறித்து விவாதித்து முடிவெடுக்கலாம் என்றோ, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிய அனுமதியளிக்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1985 ஜூன் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"15—6—1985–ஆம் தேதியிட்ட துக்ளக் இதழில் கேலிச் சித்திரம் மற்றும் கேள்விக்குப் பதில் ஆகிய தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்து, துக்ளக் பத்திரிகை, அதன் ஆசிரியர், வெளியீட்டாளர் மீதான உரிமை மீறல் பிரச்னை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிக்க இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

(முற்பகல்; 11-20)

5. கவன ஈர்ப்பு.

(அ) தமிழ் பயிற்று மொழிக்குத் தேவையான பாடநூல்களை பாடநூல் நிறுவனம் காலதாமதமாக வெளியிடுவது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், கல்லூரி தமிழ் பயிற்று முறைக்குத் தேவையான அறிவியல், கணித நூல்களை மொழி பெயர்த்து, அச்சிட்டு வெளியிடுவதில் ஏற்படும் காலதாமதத்தால் மாணவ, மாணவியர்களுக்கு உண்டாகும் சங்கடங்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்திய அரசின் ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தின்படி கல்லூரி மாணவர்களுக்கான மொத்தம் 27 பாடப் பிரிவுகளில் 910 பாடநூல்களும் பார்வை நூல்களும் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியிடப்பட்ட நூல்களுள் கணக்கு உட்பட அறிவியல் நூல்களின் எண்ணிக்கை 473 ஆகும். இவற்றுள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டவை 45 நூல்கள் மட்டுமே.

ஒரு கோடி ரூபாய் திட்டத்தின்படியான நிதியுதவி முற்றுப் பெற்ற பின்னர் இந்திய அரசினால் மேலும் நிதி எதுவும் வழங்கப் படவில்லை. எனவே, திட்டத்தின் இறுதி நிலையில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த 3 அறிவியல் நூல்களின் கையெழுத்துப் படிகள் மட்டும் வெளியிடப்படாமல் 1979 முதல் தேங்கியுள்ளன.

இப்போது மேற்காணும் திட்டத்தின்படி வெளியான நூல்களின் விற்பனைத் தொகையை ஒரு சுழல் நிதியாக உருவாக்கி அந்நிதியினைப் பயன்படுத்தி மறுபதிப்பு நூல்கள் மட்டும் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறு மறுபதிப்பாக வெளியிடப்படுபவை அனைத்தும் பாடத்திட்டப்படி எழுதப்பட்ட பாடநூல்கள் இவற்றுக்குத்தான் மாணவர்களிடம் தேவை உள்ளது. ஆனால் மொழி பெயர்ப்பு நூல்கள் அனைத்துமே பாடத் திட்டப்படி இயற்றப்படாத பார்வை நூல்கள். இவற்றின் படிகள் விற்பனையாகாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. எனவே, மொழி பெயர்ப்பு அறிவியல், கணக்கு நூல்கள் வெளியிடப்படுவது இந்தத் திட்டத்தின் கீழ் இனி வருவதற்கான வாய்ப்பு இல்லை.

புதிதாக மாற்றியமைக்கப்படும் பாடத்திட்டத்துக்கிணங்க முதல் பதிப்புப் பழைய பாடநூல்கள் முற்றிலும் திருத்தப்பட்டு மறுபதிப்பாக வெளியிடப்பட்டு வருகின்றன. முதல் பதிப்புப் பாட நூல்களின் கையிருப்புக் குறைந்து வரும்போதே மறு பதிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உரிய காலத்தில் தட்டுப்பாடே இல்லாமல் மாணவர்களுக்கான தேவை, நிறைவு செய்யப்படுகிறது.

எனினும், புதிய பாடத் திட்டத்துக்கு இணங்க புதிதாகவே பாடநூல்கள் இயற்றி வழங்குவதே சிறப்பாக இருக்கும் என்று கருதப்பட்டு சுழல் நிதியுள்ள நிதியைப் புதிய பாடநூல்கள் வெளியிடவும் பயன்படுத்தும் செயற் குறிப்பு ஒன்று தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் உள்ளது. நிறுவனத்தின் செயற்குழு அனுமதி பெற்று, இதனை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, தாய்மொழியாம் தமிழ் மொழியில் பயில ஊக்குவிக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கமாக இருந்து வருகிறது. அத்தகைய தாய் மொழிக் கல்விக்காக மத்திய அரசும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி அளித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். ஆனால் அந்த நிதியுதவி முற்றுப் பெற்றுவிட்டதென்றும் எனவே மொழி பெயர்ப்பு அறிவியல், கணக்கு நூல்கள் வெளியிடப்படுவது இந்தத் திட்டத்தின் கீழ் வருவதற்கான வாய்ப்பு இல்லையென்று இந்த விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே நிதி இல்லையென்பதற்காக வாய்ப்புகள் மறுக்கப்படுவது நம்முடைய நோக்கத்திற்கு உகந்ததாக இருக்காது. இந்தி மொழி வளர்ச்சிக்காக எந்தெந்த வகையிலோ எவ்வளவோ தொகைகளை மத்திய அரசு செலவழித்துக் கொண்டிருக்கிற இந்த நிலையில் இந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசு அதிகமாக நிதி ஒதுக்குவதுதான் நியாயமாக இருக்கும். எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அதிக நிதியுதவியை மத்திய அரசிடம் பெறுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதுகுறித்து மத்திய அரசிற்கு மாநில அரசு கடிதம் எழுதும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் மொழி பெயர்ப்பு நூல்கள் அனைத்துமே பாடத் திட்டப்படி இயற்றப்படாத பார்வை நூல்கள். இவற்றின் படிகள் விற்பனையாகாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றனவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பொதுவாக சிலபசிற்கு கொஞ்சமும் ரெலவன்சி இல்லாத சில தனியார்போட்ட புத்தகங்களை நாம் பார்வை நூல்களாகக் கொள்வது தான் என்று சொல்கிறார்கள். எனவே இப்படி பார்வை நூல்களை நாம் தயாரிக்கிறபோது அல்லது பார்வை நூல்களை நிர்ணயிக்கிறபோது சிலபசிற்குத் தகுந்த புத்தகங்களை, சிலபசை ஒட்டியுள்ள பாடப் புத்தகங்களைக் கொண்ட நூல்களாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு காலதாமதம் ஆவதற்கு அச்சகமின்மை காரணமாகச் சொல்லப்படுகிறது. எனவே தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்திற்கு தனியாக அச்சகம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது கல்லூரி மாணவர்களுக்கென்று தமிழிலே எழுதப்பட்ட பாடபுத்தகங்களை, பார்வை புத்தகங்களைப் பற்றியதாகும். இன்றைக்கு கல்லூரியில் தமிழ் போதனா முறை என்பது குறைந்த அளவில் இருந்து வருகிற காரணத்தாலும், பெருமளவில் ஆங்கில போதனா முறையிலேயே படிக்க விரும்பியதாலும் இந்த நிலைமை உருவாகி இருந்தது. ஆனால் இப்போது 11, 12-ம் வகுப்புகள் மேல்நிலைப் பள்ளிக்கு வந்து அங்கே தமிழ் போதனா முறையில் மாணவர்கள் அதிகமாக படிக்கிற காரணத்தால் ஓரளவிற்கு புத்தகங்கள் விற்கக்கூடிய நிலைமையை உருவாக்கி இருக்கிறோம். மேலும் இந்தச் சுழல் நிதியிலிருந்து மறுபதிப்புகள் வெளியிடுவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய பாடத் திட்டங்களுக்கு ஏற்ப தமிழில் பாட நூல்கள் தேவையென்ற நிலைமை ஏற்படுகிறபோது அதற்கான முயற்சிகளை அரசு நிச்சயமாக எடுக்கும். அப்படி ஒரு கருத்து தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்திடம் இருக்கிறது.

தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்திற்குத் தனி அச்சகம் தேவையென்று உணர்ந்து, அதற்கான முயற்சியில் தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது. ஒரு அச்சகம் அமைக்க வேண்டுமென்று அந்த நிறுவனத்திற்கு அரசு அறிவுரை தந்திருக்கிறது.

## (ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் பணிகள் நிதிப் பற்றாக்குறையினால் தடைபடுவது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவர் அவர்களே, "சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிதிநிலைமை மிக மோசமாக இருப்பதன் தொடர்பாக அதன் பணிகள் முடங்கிக் கிடப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டு நிதிக் கணக்கு தணிக்கை அறிக்கையின்படி, ரூ. 367.95 இலட்சம் பற்றாக்குறையாக உள்ளது. இந்த ரூ. 367.95 இலட்சத்தில் 1983-84 ஆம் ஆண்டில் மட்டும் நிதிக் கணக்கில் துண்டு விழுந்தது ரூ. 177.30 இலட்சமாகும். தணிக்கை அறிக்கையின்படி இந்த அளவிற்கு துண்டு விழுவதற்கு காரணங்கள் :—

(i) ஊதியச் செலவு அதிகரித்துள்ளது — அதிக அளவில் ஆசிரியரல்லா பணியாளர்கள் இருப்பதின் காரணமாக.

(ii) பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் வழங்கும் ஆசிரியர் பணியிடங்களுக்கான மானியம் ஐந்தாண்டுத் திட்டத்துடன் நிறுத்தப்பட்டு, பின்னர் அச்செலவினங்களை பல்கலைக்கழகம் அரசு மானியம் பெற்றுச் செலவிடுவது.







(iii) பல்கலைக் கழகம் தனது ஊழியர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க வங்கிகளிடம் ரூ. 89.00 இலட்சம் கடன் பெற்றுள்ளது.

(iv) அஞ்சல்வழிக் கல்விக் கணக்கில் ரூ. 66.00 இலட்சம் கையிருப்பு இருக்கும்போது ஏற்கனவே அரசு ஒவ்வொரு ஆண்டும் இத்துறைமூலம் வரும் வருமானத்தில் சுமார் 20 சதவீதம் பொதுநிதிக் கணக்குக்கு மாற்ற வேண்டும் என்று அறிவித்திருந்தும் அவ்வாறு மாற்றாமல் ஸ்டேட் பேங்கில் அதிகப்பற்று பெற்று அதற்காக ஆண்டுக்கு ரூ. 48.00 இலட்சம் வட்டி கட்டுவது.

2. இந்த நிதிப் பற்றாக்குறை நிலையினை அறிந்து அரசு, மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையில், கல்வி அமைச்சர். துணைவேந்தர் மற்றும் நிதித்துறை, கல்வித்துறை அலுவலர்களுடன் பேசி நிதிநிலையை ஓரளவிற்குச் சீர்செய்ய கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன: —

(1) பல்கலைக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை மனதில் கொண்டு ஒவ்வொரு ஆண்டுக்கும் அதற்கு முந்தைய ஆண்டில் பல்கலைக் கழகம் 1-4-1981-க்கு பிறகு வழங்கப்பட்ட அதிகப்படியான அகவிலைப்படி தவணைகளுக்கான செலவுகளைக் கணக்கிட்டு அதில் 75 சதவீதம் முன்மானியமாக வழங்கலாம். இதற்கான ஆணை 24-11-1984 நாளிட்ட 1827ஆம் எண்ணுள்ள ஆணையில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 1982-83 முடிய அகவிலைப் படி தவணைகளை முழுமையாக வழங்கி 1983-84 மற்றும் 1984-85-க்கு முன்மானியமாகவும் மொத்தம் ரூ. 46.00 இலட்சம் வழங்க கடந்த மார்ச் மாதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

(2) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்கலைக் கழக மானியக் குழுவால் வழங்கப்பட்ட பணியிடங்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் முன்னமேயே அரசின் ஒப்புதலைப் பெறவில்லை. ஆயினும் இவைகளைத் தனித்தனியாகப் பரிசீலித்து அரசு மானியம் வழங்கலாம். இதற்கேற்ப பல்வேறு திட்டங்களுக்கு மானியம் வழங்க ஒத்துக்கொண்ட அரசு, மானியமும் வழங்கி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்கலைக் கழக மானியக்குழு வழங்கிய திட்டங்கள் அனைத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு மானியம் வழங்க உறுதி அளித்துள்ளது. கடந்த 1984-85 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 119.59 இலட்சம் மானியம் தந்துள்ளது

(3) இதுதவிர அரசு, தற்சமயம் ஆண்டுதோறும் வழங்கும் ஒட்டுமொத்த மானியமாக ரூ. 66.00 இலட்சத்தை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

4. பல்கலைக்கழகம் தனது செலவினைக் கட்டுப்படுத்தி அரசு மானியங்களை முறைப்படி தணிக்கைச் சான்றுகளுடன் கருத்துரு அனுப்பிப் பெறுவதன் மூலம் பற்றாக்குறையைக் குறைக்க இயலும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன். :** துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய நிதிநிலைமை மோசமானதற்கான காரணங்களை இந்த விவர அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். அதிலே வேதனை தருகிற காரணங்களாக இரண்டு காரணங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அஞ்சல் வழிக் கல்வி கணக்கில் 66 லட்சம் ரூபாய் சர்ப்பிளஸாக இருந்தாலும் கூட அரசு ஆணைப்படி பணத்தை நம்முடைய பல்கலைக் கழகத்தினுடைய பொது நிதிக்கு மாற்றவில்லை என்றும், அங்கே ஆசிரியர்கள் அரசினுடைய ஒப்புதல் பெறாமல் நியமிக்கப்பட்டதன் காரணமாக நிதிநிலைமை பாதிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அறிக்கையில் சொல்லப்படாத முக்கியமான காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தினுடைய நிதி நிலைமை மோசமானதற்கு முக்கியமான காரணம் புகுமுக வகுப்பு அதாவது பிரியூனிவர்சிட்டி என்ற கோர்சின் பரிட்சைப் பணம் தான் முக்கியமான வருமானமாக இருந்தது, அந்தப் புகுமுக வகுப்பு

ஒழிக்கப்பட்டபோது, பிளஸ் டு எக்சாமினேஷன் வந்தபோது நிதிநிலை பல்கலைக் கழகத்திற்குக் குறையும் என்று சுட்டிக்காட்டப்பட்டபோது, அரசு அதற்குத் தகுந்த மானியம் அளிக்கும் என்று உறுதி அளித்து இருந்தும்கூட, இன்று வரையில் அந்த பிளஸ் டுவினுடைய எக்சாமினேஷன் பீசிலேயிருந்து நஷ்ட ஈடு கொடுப்பதாகத் தெரியவில்லை. அதைக் கொடுக்க அரசு முன் வருமா? தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களை அளவுக்கு மீறி அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான காரணம். இன்னொன்று பல்கலைக்கழக மானிய உதவியுடன் அவர்கள் திட்டங்களைத் துவங்குகின்றபோது, 5 ஆண்டுகளுக்குப் பிறகு, பல்கலைக் கழகம் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்





என்கிறபோது, அந்தச் செலவும் இதிலே வருகிறது. இது ஒரு காரணம். ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்காக 89 இலட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள். இது ஒரு காரணம். இப்படி சில காரணங்களை அவர்கள் தந்திருக்கிறார்கள். இதிலே நம்முடைய கருத்து, எதை அவர்கள் செய்தாலும், அரசினுடைய இந்த நிதி சம்பந்தப்பட்ட செயல் திட்டங்களில் அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டும் அல்லது பணம் கேட்கின்றபோது, தணிக்கைச் சான்றிதழுடன் கருத்துக்களை அனுப்பி அதற்கேற்ப பணத்தைக் கேட்க வேண்டும் என்றும் அவர்களுடைய நிதி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் இந்த அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையிலே ஒரு கூட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தி, அவர்களுக்குத் தக்க அறிவுரைகளை நாம் தந்திருக்கிறோம். ஆகவே, இனிமேல் இப்படிப்பட்ட நிலைமைகள் வளராது என்று நான் நம்புகிறேன்.

பி.யூ.சி.,யைப் பொறுத்த மட்டில், பி.யூ.சி. வகுப்பை எடுத்தபோது அவர்களுக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்து இருக்கலாமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த அளவிற்கு பி.யூ.சி. மாணவர்கள் பின்னாலே அதே அளவிற்குப் பட்ட வகுப்பில் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு வேலையில்லாமல் இருந்த ஆசிரியர்களுக்கு இன்றைக்கு வேலைகள் ஏற்பட்டு இருக்கிறது. புதிய பிரிவுகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. மாலை நேரப் பிரிவுகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. புதிய கல்லூரிகள், 4, 5 துவங்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, வருமானத்திற்கு என்று வைத்துக் கொண்டு, பி.யூ.சி. வகுப்பு என்று அந்த அடிப்படையில் மட்டும் இதை நோக்குவதாக இல்லை. பணம் தராததற்குக் காரணம் அவர்கள் சொன்னபடி கணக்கு வழக்குகளைத் தராதது தானே தவிர, பி.யூ.சி. என்று நாம் இதிலே பிரித்துப் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்கலைக் கழகத்திலே இருந்து பைனான்சியல் மேனேஜ்மெண்டுக்காக, பட்டப் படிப்பு, முதுகலைப் படிப்புகள் இருந்தும்கூட சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய பைனான்சியல் மேனேஜ்மெண்டு மிகவும் மோசமாக இருக்கிறது. இதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால் தங்களுடைய பணப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இன்றைக்குப் பல்கலைக் கழக மாணவர்களை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. இதற்கு நான் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது எலிஜிபிலிட்டி சர்ட்டிபிகேட் என்று சொல்லி, நம்முடைய இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் வெளியிடத்திலே இருந்து வரும்போது, 100 ரூபாய் என்றும், இலங்கை போன்ற வெளிநாடுகளில் இருந்து வருபவர்களிடம் 250 ரூபாய் என்றும் எலிஜிபிலிட்டி சர்ட்டிபிகேட்டுக்காக வாங்கு

கிறார்கள். அவர்கள் தாங்கள் படித்த படிப்பை சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய படிப்புக்குச் சரியானதுதான் என்று சொல்லுகின்ற ஒரே ஒரு காகிதத்திற்காக இதுபோன்று பணத்தை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற சர்ட்டிபிகேட்டுகளை பள்ளிக் கல்வி இயக்குநர் இனாமாகத் தந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, 100 ரூபாய், 250 ரூபாய் என்று சொல்லி, மாணவர்களிடத்திலே கொள்ளை அடிக்கப்படுகிறது. இந்த நிலை தடுத்து நிறுத்தப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்ளை அடிக்கப்படுகிறது என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் செய்கிற வேலைக்கு ஏற்ப அவர்கள் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது பல்கலைக் கழகத்தினுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தை துணைவேந்தர் அல்லது சிண்டிகேட் உறுப்பினர்களிடம் தெரிவித்து, இதற்குத் தீர்வு காணவேண்டுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

## 6. அறிவிப்புகள்.

(அ). பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு 1985. (ஆ. இ.),

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 8. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு

### மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 12,27,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

**திரு. கோ. வீரய்யன். :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, கீழ்த் தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயத் தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலி சட்டத்தை விரிவாக்காததால் ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானிய கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 12,27, 61,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழிற்சாலைச் சட்டங்கள் சரியாக அமலாக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலைமைகள்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 12,27,61,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

**Thiru N. S. V. CHITHAN ;** Sir, To discuss about the need to introduce compulsory insurance to all sections of Labouers with State participation I move the following cut-motin, viz, I "that the sum of Rs. 12,27,61,000,- under Demand No. 29--Labour including Factories be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய கொள்கைக் குறிப்புக்களை * அவையின் முன் வைத்து இருக்கிறேன். அதனை நான் இங்கே பேசியதாக ஏற்றுக்கொண்டு அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை சொன்ன பிறகு நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தற்போது நேரம் 11.37, 15 பேர் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். கட்டாயமாக உறுப்பினர்கள் 10 நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

***திரு.கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைகள் பற்றிய 29-ஆம் எண் உள்ள மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்து இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கூறிட விரும்பு கிறேன். சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினரின் நலனைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தவும், தொழில் உறவுகளை முறைப்படுத்துவதில் அரசு முக்கிய பங்கு வகிக்கிறது.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் சுமுக மான பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் மட்டுமே மன நிறைவு அடையத் தக்க வகையில் உடன்பாடு காணப்படுவதே முக்கிய நோக்கம் என்பதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் நல கொள்கை வடிவு அமைக்கப்படுகிறது. தொழில் அமைதியைப் பேணி கண்காணித்து வருவதுடன் பல்வேறு வளர்ச்சி நடவடிக்கை களில் மத்திய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதை கருத்தில் கொண்டு உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை விரிவு படுத்துவதில் நிர்வாகமும் தொழிலாளர்களும் பரஸ்பர ஒத்துழைப் பை;யும் ஒற்றுமையையும் பேண இந்த அரசு தன்னை முழுமை

* 165—255-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்று உள்ளது.





யாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன். பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், உற்பத்தியைப் பெருக்குதல், தொழில் திறமை, தொழில் முறைகளில் புதிய கண்டுபிடிப்புகள், மேம்பாடுகள், பொருள்கள் வீணாவதை குறைத்தல் போன்றவை குறித்து ஆலோசனைகள் வழங்குகின்ற தொழிலாளர்களை ஒவ்வொரு துறை வாரியாக, மாவட்ட வாரியாக ஊக்குவிக்க, உழைப்பு ஆற்றல் பரிசுகளை தகுதியானவர்களுக்கு வழங்கிட வேண்டு கிறேன்.

தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தொழிற்சாலைகள் பாதுகாப்பு பற்றிய ஆய்வுகள், திரைப்படங்கள், கருத்தரங்குகள், கருத்து திரட்டு ஆகியவற்றை பாதுகாப்பு பிரிவின் மூலம் இன் னும் திறம்பட அதிகமான அளவில் ஏற்பாடு செய்ய வேண்டு கிறேன். உற்பத்தித் திறன் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சமு ஆக இருப்பதால் நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் இந்திய அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

(முற்பகல் 11—40)

அந்த வகையில், கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் அனைத்தை யும் பயன்படுத்திக் கொள்ள அதிக கவனம் செலுத்தவும்; உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு, பணி குறித்தும் பணியின் பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற் கொள்ளவேண்டும்.

தொழிலாளர்களை ஊக்குவிக்க பணி நேரத்தினைக் குறைக்கவும், செயல் ஊக்க உதவித் திட்டங்களை அறிவித்தும் இந்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு கிறேன்.

1961-ம் ஆண்டு மோட்டார் வண்டி போக்குவரத்துத் தொழிலாளர் சட்டத்தின் விதிமுறைகளும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் முறை யாகச் செயல்படுத்தப்படவில்லை. போக்குவரத்துத் தொழி லாளர்களைப். பொறுத்தவரையில், பல்வேறு குறைகள் இருந் தாலும் ஒரு சிலவற்றை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

தற்போது உள்ள 13 போக்குவரத்துக் கழகங்களில் சற்றேறக் குறைய 70 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் வெவ்வேறு நிலை ஆணைகள் சட்டமுறைகள் இருப்பதால், ஒரே பிரச்சினையில் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் பல்வேறு சட்டச் சிக்கல்கள் வருகின்றன. அதனால், தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அனைத்துப் போக்குவரத்துக்

கழகங்களில் பேருந்துகளில் பயணக் கட்டணம் ஒன்றாக இருப்பதைப் போல், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே நிலை ஆணை, ஒரே சம்பளம், ஒரே வழிமுறை, ஒரே பணிமுறை முதலியவற்றைச் செயல்படுத்திட வேண்டுகிறேன்.

டீசல் மிச்சப்படுத்தும் ஊக்குவிப்புத் திட்டம் என்ற ஒன்றினை அறிமுகப்படுத்தி, ஓட்டுநர்கள் வேண்டுமென்றே பழி வாங்கப்படுகிறார்கள். அந்தப் பழி வாங்கல் முறைகளைத் தடுத்து நிறுத்தி, டீசல் மிச்சப்படுத்தும் செயல்பாட்டு முறையினை முறையாக விளக்கி, டீசலைச் சேமிக்கும் வகையில் பேருந்துகளை இயக்க அவர்களுக்குக் கற்றுத் தந்திட வேண்டுகிறேன்.

1983-ல் தொழிலாளர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் போக்குவரத்து தொழிலாளர்கள், நுகர்வோர் விலைவாசிக் குறியீட்டு எண் வீதத்தில், 437 புள்ளிகளுக்கு மேல் உயரும் புள்ளி ஒன்றுக்கு ரூ. 1.30-க்குப் பதிலாக, மத்திய அரசு நிர்ணயித்துள்ள ரூபாய் 1.65-ஐ நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு, அந்தக் கூடுதல் தொகையான 35 பைசாவை, கணக்கிட்டு வருகிற நிகரத் தொகையினை ஒவ்வொரு தொழிலாளிக்கும் வெகு விரைவில் கிடைக்கச் செய்திட வேண்டுகிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய சலவைப் படி, மருத்துவப் படி, சீருடை தையல் கூலியை உயர்த்தித் தருவதோடு, அவர்களுக்கும் ஏனைய அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப் போல், 5 நாள் பணியினை ஏற்படுத்தித் தருவதுடன், தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு முதலியவற்றையும் அதிகப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வர வேண்டுகிறேன்.

அண்ணா, சேரன், சோழன், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு குடும்பத்தோடு பயணம் செய்கிற இலவச குடும்பப் பாஸின் தூரத்தினை 2750 கிலோ மீட்டரிலிருந்து 3,500 கிலோ மீட்டர் வரை உயர்த்தித் தந்திட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் [illegible] செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] PRC NTC போன்ற கழகங்களில் இருக்கும் மருத்துவ [illegible] மற்ற போக்குவரத்து கழகங்களுக்கும் விரிவுப் [illegible] வேண்டுகிறேன்.





போக்குவரத்துக் கழகங்களில் வேலை செய்கிற பகுதி நேரத் தொழிலாளர்களை வேலையின் தன்மையைக் கருதி, முழு நேர ஊழியர்களாக, நிரந்தர ஊழியர்களாக ஆக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தை, திருச்சி சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரிந்து, வேலையிலிருந்து நீக்கியிருக்கிற 55 நேரக் காப்பாளர்களையும் திருச்சி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக, கூடு கட்டும் பிரிவில் பணி புரிந்து வேலை இழந்து, பின் திருச்சியிலிருந்து சென்னைக்கு பாத யாத்திரை மேற்கொண்ட 72 தொழிலாளர்களையும் மீண்டும் பணியில் அமர்த்திட வேண்டுகிறேன்.

சோழன் பிரிக்கப்பட்டதற்குப் பின்னாலே, தீரன் சின்னமலை தனியாக இயங்கி வருகிற இந்த நேரத்தில், கீழ்த் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் திருச்சியில் பணி புரிகிறார்கள். அவர்களைத் திருச்சியிலிருந்து தஞ்சைக்கு, குறிப்பாக பரிசோதகர்களை மாற்றி அவர்கள் பணியைப் பாதுகாக்க வேண்டுகிறேன்.

போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் தொழிலாளர்களும் முக்கிய பங்கு பெறுகிற வகையில் ஆலோசனைக் குழுக்கள் (Advisory Committee) அமைக்கச் செய்திட வேண்டுகிறேன்.

டால்மியாபுரத்திலே டால்மியா சிமெண்ட்ஸ், பாரத் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திலே சுமார் 3 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் 450 பேர் கடந்த இரண்டு மாத காலமாக வேலை இழந்து நடுத்தெருவில் நிற்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்திட அருள்கூர்ந்து தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழக அரசுக்குச் சொந்தமான கல்லக்குடி—முதுவத்தூர் மினி சிமெண்ட் ஆலை, கடந்த 3 ஆண்டுகளாக மூடப்பட்டிருப்பதால் அதில் பணி புரிந்த 150 தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கிட அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்தித் தாள் பணியாளர்களுக்கு 'பலேகர்' நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டுகிறேன். உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்பவர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியவர்கள் வேலை செய்கிறபோது அவர்கள் இறக்க நேரிடின் அவர்களுக்கு விபத்து இடர் உதவித்

திட்டத்தின் கீழ் இழப்பு ஈட்டுத் தொகையினை ரூபாய் 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்ததற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள், சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் முதலானோர் தங்களுடைய வறுமையின் காரணமாக வாடுவதைப் போக்கும் வகையில் ஈட்டுறுதி—ஓய்வுக்காலப் பயன் தனித் திட்டத்தை வகுத்துள்ள தமிழ்நாடு அரசை நான் பாராட்டுகிறேன்.

வறுமையில் வாடும் மக்களைக் காத்து அவர்கள் வாழ்வு வளம் பெற உதவுவதே ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாக இருப்பதால் இது குறித்து விரிவாகப் பரிசீலித்து, பின்னர் அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களின் நலனுக்காக தொகுப்புப் பணிக்கொடை நிதித் திட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் கல்வி நிலையத்தின் வாயிலாக, நல்ல தொழிற் சங்கங்களை ஏற்படுத்தவும், தொழிலாளர்கள் மீது நிர்வாகத்தினருக்கு சுமுகமான போக்கை ஏற்படுத்தவும், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளிடையே திறமையினை வளர்க்கவும், வெளியீடுகள் மூலம் கல்வி அறிவைப் பரப்பவும் வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கு. சுப்பராயன்.** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்ற தொழிலாளர் நலன்களைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சமுதாயத்தில் தொழிலாளர்கள் வீக்கர் செக்ஷன் என்ற முறையில் கவனித்து, அவர்களின் நிலைமைகளைப் புரிந்துகொண்டு பாடுபடுவதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை முதலிலேயே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த சில ஆண்டு காலமாகவே இந்தத் துறையில் மாநில அரசின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் கடுமையாகப் பறிக்கப்பட்டு, முடமாக்கப்பட்டிருக்கின்ற நிலையில், புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிலபல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகள் வெற்றியடைய எங்களின் கட்சியின் சார்பாக நல்லெண்ணத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.





பல்வேறு நல்ல பணிகளைத் துவக்குவதற்கு முன்னால் நடைமுறையில் செய்து முடிக்க வேண்டிய சிலபல குறிப்பான விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கும், நிருவாகத்திற்குமிடையே சுமுகமான பேச்சு வார்த்தை நடத்துவதே முக்கிய நோக்கமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் நலக் கொள்கை வடிவமைக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் சுமுகமான பேச்சுவார்த்தைகளுக்கு யார் எதிரி ? சுமுகமான பேச்சுவார்த்தைகள் யாரால் தடைப்படுகிறது என்பதை இந்த அரசு கண்டு கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுமுகமான பேச்சு வார்த்தைகளைத் தடைப்படுத்துவது முதலாளிகள்தான். ஆகவே, இந்த மாநில அரசு பெண்டுலம் மாதிரி, தேர்தலுக்குத் தொழிலாளர்கள் மத்தியில் ஆடுவதும், தேர்தல் முடிந்த பிறகு முதலாளிகளுக்குத் தொண்டூழியம் புரிவது போன்றும் தன்னுடைய நடைமுறைகளை மாற்றிக்கொள்கிறது என்பதையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இதற்கான உதாரணங்களை அடுக்கடுக்காகச் சொல்ல முடியும். ஆனால் காலம் வரம்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற, வரையறுக்கப் பட்டிருக்கின்றகாரணத்தினால் இந்த மாநில அரசால் பாழ்படுத்தப் பட்டிருக்கின்ற பல்வேறு விஷயங்களைப்பற்றி வெளியிடுகின்ற வாய்ப்பும் சுருக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் குறிப்பாக ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு எந்த அளவிற்குத் தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் நிறுவனங்களின் நிருவாகத்திற்கும் அத்தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தொழில் தகராறுகளை உரிய நேரத்தில் தலையிட்டு தீர்த்து வைப்பதன் மூலம் தொழில் அமைதியைப் பேணுவதே தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் முக்கிய பணியாகும் என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்த அறிக்கையில் இருப்பது ஒரு கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது. தொழிலாளர் நலத் துறையெல்லாம் முதலாளிகள் நலத் துறையாகத்தான் இயங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும். தொழிலாளர் நலத்திற்கான சட்ட உரிமைகளைக் குழி தோண்டிப் புதைத்து, சட்ட உரிமைகளுக்குச் சமாதி கட்டுவதுதான் தொழிலாளர் நலத் துறையின் திருப்பணியாகத் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது. அதற்கு ஒரு உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்செங்கோட்டிலே இருக்கின்ற ஒரு மில், சட்ட அமைச்சருக்கு மிகவும் அக்கறை உள்ள ஒரு பிரச்னை—அந்தத் திருச்செங்கோடு மில்லில் கடந்த மூன்று ஆண்டுகாலமாகப் பணியாற்றி வந்த தொழிலாளர்கள் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பூர்ணா லட்சுமி மில்லில் தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளின் அக்கறை என்ன? அங்கே எந்த விதமான சட்ட விதியும் அமுலில் இல்லை; தேசீய விடுமுறை இல்லை, பண்டிகை விடுமுறை இல்லை. இந்த மாநில அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர் நலச் சட்டங்கள் அங்கே அமலாக்கப்படவில்லை. ஒரு நாள் லீவ் எடுத்தால் அந்த முதலாளி அவ்வளவு பேர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்; டிஸ்மிஸ் செய்து விட்டார். அதற்குப் பிறகு, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என்று தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கியபோது கருங்காலிகளை வைத்து வெடிகுண்டுகளை வீசுகிறார்கள். இதற்கு இந்த மாநில அரசின் காவல்துறை முழுப் பாதுகாப்பை அளிக்கிறது; அந்தப் பிரச்னையை முதலாளிக்குச் சாதகமாக 'நோ கேஸ்' போட்டு இருக்கிறார்கள் என்றால் இந்த ஆட்சி என்ன ஆட்சி என்று கேட்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காக அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று வைத்துக் கொண்டு இருக்கின்ற இந்த ஆட்சி, அண்ணா சொன்னதை நடைமுறைப்படுத்துகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.



ஒரு அமைப்பை உருவாக்குவதற்காக. தொழிலாளர்களுடைய ஒற்றுமையை உடைக்க போட்டி சங்கம் உருவாக்கப்பட்டது. அங்கே என்ன நடந்தது? 450 பேர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள். அந்த 450 தொழிலாளர்களின் பிரச்சினைக்கு நியாயம் கிடைக்க அரசு இன்றைக்கு வரையிலும் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறதா? தொழிலாளர் துறை இதுபற்றி அக்கறை செலுத்தியதா? சில்லறைகளின் சலசலப்பில் தொழிலாளர் துறை சட்ட நியாயங்கள் சமாதி எழுப்பப்படுகின்றது. நான் கடுமையாக குற்றம் சாட்டுகிறேன். ஒவ்வொரு பிரச்சினையிலும் நோ-கேஸ் போடுகிறார்கள். நோ-கேஸ் போடுகிற அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது? இந்த அரசு அதிகாரத்தை எப்படி தவறாக முதலாளிகளுக்கு ஆதரவாக துஷ்பிரயோகம்செய்கிறது என்பதையும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவை பற்றிய பல விவரங்கள் இருக்கின்றன; நேரமில்லை.

மேலும் ஒன்று பெருமையாகச் சொல்லப்படுகிறது. மோட்டார் தொழிலாளர்களுக்குச் சட்டம் போட்டிருக்கிறார்களாம். என்ன சட்டம் போட்டிருக்கிறார்கள்? உங்கள் ஆட்சியில் என்ன சட்ட நியாயம் வாழ்கிறது? மோட்டார் தொழிலாளர்களுக்கு நடைமுறையில் உரிமை வழங்கப்படுகிறதா? மனசாட்சி இந்த ஆட்சிக்கு இருப்பது உண்மையானால், முதலாளித்துவ கறையான்கள்அவற்றை அரிக்காமல் இருப்பது உண்மையானால், தயவு செய்து சொல்லுங்கள், தனியார் துறை மோட்டார் முதலாளிகள், தனியார் துறை பஸ் கம்பெனிகள், தொழிலாளர்களுக்கு உரிமை வழங்குகிறார்களா? வழங்குவதே கிடையாது. நினைத்தால் அவர்கள் பஸ் கம்பெனி பெயர்களை டிரான்ஸ்பர் செய்வார்கள். ஆர், டி. ஓ. அதற்கு உடன்படுவார், டீ.டி.சி. அதற்கு உடன்படுவார். லேபர் ஆபீசரைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. தொழிலாளர் நலத் துறை எதற்கு இருக்கிறது? தொழிலாளர்களைக் களைப்படைய வைக்க. தொழிலாளி வர்க்கத்தைக் களைப்படைய வைத்து, நடைமுறையில் முதலாளிகளிடம் சரணாகதி அடைய வைப்பதற்கு இந்தத் தொழிலாளர் துறை நடைமுறையில் உங்கள் ஆட்சியில் பயன்படுத்தப்படுகிறது. அதை மாற்ற நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமா, இல்லையா?

ஒவ்வொரு வழக்கிலும் ரெபரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். தனியார் பஸ் கம்பெனி மோட்டார் தொழிலாளர்களுக்கு, நடைமுறையில், சட்ட உரிமைகள் அமுலாகவில்லை. சட்டம் இயற்றி, சட்டங்களை ஏட்டிலே எழுதி, அங்கங்கே தொங்க விட்டுக்கொண்டு வால் போஸ்டர் அடித்து, நாங்கள் இப்படி எல்லாம் சட்டம் போட்டிருக்கி

றோம் என்று ஊரிலே வெறும் கூத்து நடத்தாதீர்கள். நடைமுறையில் சட்டம் நிறைவேறுகிறதா? அதைத் தனியார் மோட்டார் முதலாளிகள் இன்றைக்கு நிறைவேற்றுகிறார்களா? நிறைவேற்ற வைப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

என் கையிலே இன்றைக்கும் ஒரு வழக்கு உண்டு. திருப்பூரிலே பீ. எஸ். டி. பஸ் கம்பெனி இருக்கிறது. அங்கே நினைத்தவுடன் பஸ்ஸை விற்று விட்டேன் என்றார் பஸ் முதலாளி. நான் லேபர் ஆபீசரிடம் சொன்னேன். கோவையிலே இருக்கக்கூடிய டி.சி.எல். லிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் கண்டும் காணாத போக்கை அனுஷ்டித்தார்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக. 15 தொழிலாளிகள் இன்றைக்கு தெருவிலே நிற்கிறார்கள்; அவர்களுக்கு எந்தவித உரிமைகளும் இன்றைக்கு அளிக்கப்பட்டு அமுல் நடத்தப்படவில்லை. நினைத்தால் மோட்டார் முதலாளி விற்று விடுவார். 10 வருஷம், 15 வருஷம் பணியாற்றிய தொழிலாளி என்ன ஆவார். நடுத்தெருவிற்குப் போக வேண்டியதுதான். அதுதான் உங்களுடைய நடைமுறை அலங்கோலம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு கந்தசாமி ஸ்பின்னிங் மில்ஸ் பொறுத்தவரையிலும் பலமுறை பேசப்பட்டது. ஒன்றும் நடவடிக்கை இல்லை. அதே போல, பவானிக்கு அருகிலே இருக்கக்கூடிய திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பிராசசிங் கம்பெனியில் எவ்வளவு நாட்களாக் ஸ்டிரைக் நடக்கிறது? 3 மாதத்திற்கு மேலாக ஸ்டிரைக் நடக்கிறது. இந்த ஆட்சி அதுபற்றி ஏதாவது அக்கறை செலுத்தி, தலையீடு செய்ததா? முடித்து வைக்க முயற்சித்ததா? முயற்சிக்கவே இல்லை; கண்டுகொள்ளவே இல்லை.

இன்னும் சொல்கிறார்கள், நாங்கள் நிறைய தொழில்களுக்கு மினிமம் வேஜஸ் நிர்ணயித்திருக்கிறோம், பல தொழில்களுக்குக் கூலி உயர்வு கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றார்கள். நான் குறிப்பாகச் சொல்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஜின்னிங் தொழிலாளர்களுக்கு இந்த மாநில அரசு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அறிவித்தது அல்லவா? அந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அறிவிக்கப்பட்டபடி அமுலாக்கப்படுகிறதா? இந்த மாநிலத்திஉள்ள தொழிலாளர்கள், இங்கே உங்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற குறைந்தபட்சக் கூலிச் சட்ட அனுகூலங்களை அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை. திருப்பூரில் அனுபவிக்கிறார்கள். [illegible] தயவால் இல்லை, தொழிலாளி வர்க்கத்தின்





போராட்டத்தால் கிடைத்த வெற்றி. தொழிலாளர் வர்க்கம் என்றால், ஒன்றும் பிச்சைக்காரர் கூட்டம் அல்ல, அரசு அள்ளிக் கொடுத்து வாங்கிக் கொள்ள. தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்றுக்கொண்ட வர்க்கமே தவிர, பிச்சை கேட்டு யாசித்துப்பெற்ற பிச்சைக் கூட்டம் அல்ல. ஆனால் மற்ற ஊர்களிலே, இடங்களிலே பெற்றார்களா? பெற வைக்க என்ன வழி? சட்டம் போட்டுவிட்டோம். ஆனால், நடைமுறைக்கு வராது என்ன பிரயோஜனம்?

இன்னும் ஒரு விஷயம், பஞ்சாலை முதலாளிகள், ஒரு போரையே தொழிலாளர்கள்மீது தொடுத்து விட்டார்கள். என்ன காரணம்? எங்கேயாவது கேள்விப்பட்டது உண்டா? முதலாளிகள் கோரிக்கை வைப்பார்களா? இந்த மாநில அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால், முதலாளிகள் நலன் கட்டாயமாக பாதுகாக்கப்படும் என்பதற்காக தொழிலாளர் கோரிக்கைக்கு எதிராக எதிர் கோரிக்கையாக 14 கோரிக்கைகளை முன் வைத்தார்கள்.

அது என்ன கோரிக்கை 'மோர் ஒர்க் லோடு'—அதிகமாக வேலை செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். சம்பளத்தை குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இப்படி முதலாளிகள் ஆலவட்டம் போடுகிறார்கள். இதற்கு எதிராக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

இந்தியா போர்ஜ் கம்பெனி 500 நாட்களுக்கு மேலாக மூடிக் கிடக்கிறது. தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். 1983 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் இந்தியா போர்ஜ் கம்பெனிக்கு இலாபம் வந்திருக்கிறது. இருந்தும் ஏன் அந்தக் கம்பெனி இன்றைக்கு மூடிக்கிடக்கிறது? அதை கண்டு கொள்ளாமல் உங்களுடைய ஆட்சி முடங்கிக் கிடக்கின்ற காரணத்தால் 5 தொழிலாளர்கள் பட்டினியால் உயிரிழந்திருக்கிறார்கள். கடந்த 10 ஆம் தேதி அந்தத் தொழிற்சாலை தொழிலாளர் ஒருவர் இறந்திருக்கிறார். ஆனால் இதுவரையில் இந்த அரசு அதிலே தலையிடவில்லை. அரசாங்கம் தலையிட்டு, அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுற்றுலா வளர்ச்சித் துறைத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள் மறுக்கப் படுகின்றன. இன்றைய நடைமுறையில், நாட்டில் அவர்களுக்கும் சங்கம் வைத்துக்கொள்ள உரிமை உண்டு. ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அதை நடைமுறைப்படுத்த மறுக்கிறீர்கள். சுற்றுலா வளர்ச்சித் துறையில் ஒரே ஒரு தொழிற் சங்கம்தான்—ஏ.ஐ.டி.யு.சி.தான் இருக்கிறது. ஆனால் அதை இன்று வரையில் அங்கீகரிக்கவில்லை. 'இம்பிளிமென்டேஷன் அன்ட

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜுன் 19

எவாலுவேஷன்' கமிட்டி ரெக்கமெண்ட் செய்தும் கூட இன்றுவரை சங்க அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஆனால் இந்த ஒரே சங்கத்தை இன்றுவரையில் அங்கீகரிக்கவில்லை என்பது மட்டுமல்ல. அண்ணா தி.மு.க. சங்கத்தை அதற்குப் போட்டியாக உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள். தொழிலாளர் வர்க்கத்தின்மீது பாய்ந்து, அவர்களுடைய உரிமையைப் பறித்துக்கொள்வது ஒன்றுதான் இந்த ஆட்சியின் முழுமையான பணியாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, (மணியடிக்கப்பெற்றது) உரிமைகளை நிலைநாட்ட வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன ; இந்த ஆட்சியில் ஜனநாயக நடைமுறைகள் சுருக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அருள் கூர்ந்து இறுதிவரையில் இங்கே இருந்து, அவர்கள் எழுப்பிய பிரச்சனைகளுக்குத் தக்க விளக்கத்தைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் மற்றும் தொழிற்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் சுப்பராயன் அவர்கள், அவர்களுக்கே உரித்தான பாணியில் உணர்ச்சி வசத்தோடு வார்த்தை ஜாலங்களைக்கொட்டினார்கள். அவர்களுக்கு நான் முதலிலேயே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு இந்த நாட்டு மக்களுடைய பிரச்சினைகள் பற்றிப் பேசியதற்காக அவர்களுடைய சகோதரர் தோழர் சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். குசேலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் சகோதரர் சுப்பராயன் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் இருந்து கொண்டு கூத்தடிக்கிறோம், கும்மாளம் போடுகிறோம் என்று பேசமுடிகிறது என்றால் அது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி சிறப்பாக, செம்மையாக, நியாயமாக நடப்பதைத்தான் காட்டுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்காலத்தில் இதைப்போன்ற நல்ல காரியங்கள் ஏராளமாக நடைபெற இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அவர்கள் பாணியிலே சொல்வதாக இருந்தால், கடந்த காலத்தில் இப்படிப் பேசியவர்கள் குரல் நசுக்கப்பட்டது. முதுகெலும்பு முறிக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்தி, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அந்த நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜுன் 19] [திரு. க. சோலைராசு]

இன்றைக்கு உழைப்பவர் உயர்வார் என்ற கருத்து நிலை பெற்றதே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தோன்றிய பிறகுதான். இந்த நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தை பாதுகாக்கும் சட்டங்கள் பல வந்தது இந்த ஆட்சியில்தான். உழைக்கும் கரங்களுக்கு உயர்வளித்து, பாட்டாளி வர்க்கத்தின் மீது பரிவு காட்டி, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி வருகிற ஒப்புயர்வற்ற அரசு இந்த அரசு என்பதை எடுத்துக் கூறி, என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களை மதிக்கின்ற வகையிலே, அவர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையிலே அவர்களுக்கு சிறப்பான சீரிய திட்டங்களை எல்லாம் இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. வாழ வேண்டுமென்றால் போராட வேண்டும், போராடினால்தான் வாழ முடியும் என்ற ஒரு தவறான கருத்தை இந்த நாட்டு தொழிலாளர் வர்க்கத்தினிடையே பரப்பி, அவர்களைத் தூண்டிவிட்டு அவர்களை ரோட்டிலே அலையவிட்டு, அவர்களை தெருவிலே அலையவிட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்த்து இத்தகைய சூழ்நிலைக்கு அவர்கள் எப்படித் தள்ளப்படுகிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து அவர்களுடைய வாழ்வு நலம் பெறவும், அவர்களுடைய வாழ்வு வளம்பெறவும் நல்ல வகையிலே பல திட்டங்களை எல்லாம் நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

(நண்பகல் 12–00)

தொழிற்சங்கத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு போராட்டத்தைத் தூண்டுவதையே மூலதனமாகக் கொண்டு செயல்படும் சிலரது வலையில் தொழிலாளர்கள் விழுந்துவிடக் கூடாது என்ற வகையிலும், ஒரு காணி நிலம் கூட இல்லாத தொழிற்சங்கத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு மாடமாளிகையிலே வாழ்ந்து கொண்டு இருப்பவர்களின் மத்தியில் இவர்கள் ஏமாந்துவிடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு புரட்சித் தலைவர் அவர்கள் தொழிற்சாலையில் பணி புரிபவர்களே தொழிற்சங்கத்தின் தலைவராக வேண்டும், அப்படி தலைவராக்கினால்தான் தொழிற்சாலையில் இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் அனுபவபூர்வமாக உணர முடியும் என்று ஏற்படுத்தினார்கள். முதலாளிக்கும், தொழிலாளிக்கும் கருத்து வேறுபாடு தோன்றினால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து காரியங்களை ஆற்றுகின்ற வகையில் ஒரு மனப்பக்குவம் வரும் என்ற வகையில் தொழிற்சாலைக்கு ஒரு தலைவர், ஒரு சங்கம் என்ற வகையில் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதைப்போல் இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழகத்தில் தான் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் பல நல்ல தொழிலாளர் நலச் சட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு இணையாக வேறு எந்த மாநிலத்திலும் போடப்படவில்லை;

என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர் வர்க்கத்தின் தோழன் என்றும், உழைக்கும் வர்க்கத்துக்கு எங்களை விட்டால் வேறு நாதியில்லை என்றும், உழைக்கும் மக்களின் வாழ்வு உயர நாங்கள் மட்டுமே பிறந்திருக்கின்ற அவதார புருஷர்கள் என்றும் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் ஆளுகின்ற மாநிலங்களில் கூட நம்முடைய மாநிலத்தைப் போன்று அடிக்கடி தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்படுவதில்லை. இன்றைக்கு பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி கட்டிடத் தொழிலாளர், சொற்ப நிலம் உடையவர்கள், கைத்தறி நெசவாளர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள், 10 பேர்களுக்கு மேல் பணிபுரிகின்றவர்கள் போன்றவர்களுக்காகவும் பல்வேறு சட்டங்களைப் போட்டிருக்கின்றது புரட்சித் தலைவர் அரசு.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்படத்தில் சொன்னது போல் மாட மாளிகையிலிருந்து மக்களைப் பார்ப்பவன் அல்ல நான், மக்கள் மத்தியிலிருந்து மாளிகையைப் பார்த்துக் கொண்டிருப்பவன் நான் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் இன்றைக்கு மாட மாளிகைகள் கட்டிவிட்டு, குடிசையிலே உறங்கிக் கொண்டிருக்கின்ற கட்டிடத் தொழிலாளி இருக்கிறானே அவன் இறந்துவிட்டால் அவனுக்கு உதவித் தொகை என்று சொல்லியிருக்கிறார்கள். சொற்ப நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறானே, கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி என்று சொல்லப்படுகின்ற அந்த விவசாயத் தொழிலாளி வேலைபார்க்கின்ற நேரத்தில் இறந்துவிட்டால், பூச்சி கடித்து இறந்துவிட்டால், கிணறு வெட்டுகிற போது இறந்துவிட்டால், மரம் ஏறுகின்றபோது இறந்துவிட்டால் அவனுக்கு உதவி வழங்கிக் கொண்டு இருக்கின்ற அரசு தான் புரட்சித் தலைவரின் அரசு என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஆலைத் தொழிலாளிக்கு மட்டுமல்லாமல் போராட முடியாத தொழிலாளர்களுக்கும் சொற்ப நிலத்தை உழுகின்றவர்களுக்கும் கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த இயக்கமாவது குரல் கொடுத்திருக்கின்றதா அல்லது அவர்களுக்காகப் போராடி இருக்கின்றதா என்றால் புரட்சித் தலைவரின் தாயுள்ளம்தான், புரட்சித்தலைவர் அவர்களின் சீரிய சிந்தனைதான் சொற்ப நிலம் உள்ளவர்களுக்கும் கட்டிடக்கலைஞர்களுக்கும் உதவவேண்டும் என்ற முறையில் அவர்கள் கோரிக்கை வைக்காத நேரத்தில், யாரும் கொடுக்காத [illegible] அந்தத் தாயுள்ளம் சிந்தனை செய்ததன் விளைவாக இன்றைக்கு அவர்களுக்குக்கெல்லாம் உதவிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்குப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கெல்லாம் [illegible] தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்படுகின்றபோது [illegible] 50 சதவிதம் ஊதியமும், 90 நாட்கள் முதல் 180 [illegible] வரையில் 75 சதவிதம் ஊதியமும், 180 நாட்களுக்கு [illegible] முழு ஊதியமும் தர வேண்டும் என்ற



திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தீட்டியிருக்கின்றது. அதுபோல் 1981 ஆம் ஆண்டு உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கி இருக்கின்றது. 240 நாட்கள் பணிபுரிபவர்களுக்கு பணிக்கொடை என்ற போனஸ் தரமுடியாது என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தபோது இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களும் சேர்ந்து, தொழிற்சங்கங்களும் சேர்ந்து அவலக் குரல் எழுப்பினார்கள். ஆனால் எந்த மாநிலமும் இதற்காகச் சட்டம் கொண்டுவரவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு உடனடியாக பணிக்கொடை சீர்திருத்த சட்டத்தை இந்த நாட்டுக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசு பணிக்கொடைச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வர இருக்கின்றது என்று சொன்னாலும் கூட அதற்காக காத்திருக்கக்கூடிய சூழ்நிலையில் புரட்சித் தலைவர் அவர்களின் தாயுள்ளம் பொறுக்காத காரணத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவவேண்டும், நலிந்து கிடக்கின்ற தொழிலாள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இந்தச் சட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடியாகக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தொழிலாளர்கள் எல்லாம் வாழ்வற்று, வகையில்லாத நேரத்தில் கலங்கரை விளக்கம்போல் நின்று எங்களைப் பாருங்கள், பாதை மாறாமல் வாருங்கள் என்று பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வண்ணம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செயல்படுகின்றது. 24 மாதங்களில் 450 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள் நிரந்தரம் என்று தொழிலாளர்களின் வாழ்வில் வசந்தம் வீசுகின்ற வனப்புத் திட்டத்தை இந்த அரசு தந்திருக்கின்றது. குறைந்த ஊதியத்தில் பணி நிரந்தரம் இன்றி நித்தம் செத்துக் கொண்டிருந்தவர்களை எல்லாம் நிரந்தரமாக்கி அவர்களை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கின்றது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு நலனில் அக்கறை கொண்டிருப்பவர்கள் என்று சொல்பவர்கள் ஆண்ட நேரத்தில் ஏறக்குறைய 16 ஆலைகள் பூட்டிக் கிடந்தன.

புரட்சித் தலைவர் அவர்களுடைய புனித ஆட்சி தமிழ் மண்ணில் தோன்றிய பிறகு, அந்த ஆலைகள் எல்லாம் திறக்கப்பட வேண்டும். அந்தப் பாட்டாளி வர்க்கத்தினுடைய குடும்பங்களில் குதூகலம் வரவேண்டும் என்ற சூழ்நிலையில், அவர்களிடம் வசனம் பேசி அவர்களைக் கெடுத்தவர்களிடமிருந்து காப்பாற்றி அந்தச் சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அரசின் உதவியாலும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியாலும் இன்றைக்குச் சென்னையிலே இருக்கிற இந்தியா மீட்டர் நிறுவனம், மதுரையிலே இருக்

13638

கிற ராஜா மில்ஸ், கோவையிலே இருக்கிற பத்மா மில்ஸ், நெல்லையிலே சிவக்குமார் மில்ஸ், திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் போன்றவைகள் எல்லாம் திறக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டைக் காக்க வேண்டிய கரங்களின் சொந்தக்காரர்களான பல்வேறு தொழிலாளர்களுக்கெல்லாம் ஏற்பட்ட பல்வேறு சங்கடங்களைப் போக்கி, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, தொழிலாளர்களுக்கும் முதளாளிகளுக்கும் பிரச்னைகள் தோன்றிவிட்டால், அந்தப் பிரச்னைகள் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலையில், அந்தப் பிரச்னைகள் வழக்குமன்றத்திற்குச் சென்றால் அவை நீண்டகாலம் நடைபெறும் என்ற காரணத்தால், அதனால் நியாயம் தோற்றுவிடும், நேர்மை தோற்றுவிடும் என்று உணர்ந்து, தொழிலாளர்களுக்கு உதவிட வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 10 (பி) என்ற சட்டப்பிரிவை கொண்டு வந்து, தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே சமரசத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அது போலவே 1981 ஆம் ஆண்டு அரசு, வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தை, தமிழ்நாடு தொழில் நிறுவனங்களுடைய தொழிலாளர்களுக்கு நிலையான தகுதி அளித்தல் சட்டத்தை, தொழில் தகராறு பற்றிய 1981 ஆம் ஆண்டு சட்டத்தை, கட்டிடக் கட்டுமானப் பணியாளர்களுக்கு ஒரு சட்டத்தை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை, தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் கூலி நிர்ணயச் சட்டத்தை, தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு 27—3—1982-லே ஒரு சட்டத்தை என்று இப்படிப் பல்வேறு சட்டங்களை தீட்டியிருக்கிறது. இது போல இந்திய துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் தொழிலாளர்களைக் காப்பாற்றுதவற்காக சட்டத்தை தீட்டவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு ஒன்றை பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களுக்காகவே ஆளுகின்ற அரசாக சொல்லப்படுகிற மேற்கு வங்காளம் போன்றவைகள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களுடைய புனித ஆட்சியிலே இப்படிப்பட்ட சட்டங்கள் எப்படி தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிவதற்காக புரட்சித் தலைவர் அவர்களிடம் நேரிடையாகவும், முன்னாள் தொழில் அமைச்சரிடமும் பேசி, அந்தச் சட்டத்தினுடைய நகல்களையும் பெற்றுச் சென்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, மதுரை, கோவை, சென்னை போன்ற பகுதிகளில் தொழிலாளர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்



பட்டிருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய புனிதப் பார்வை இப்போது மையப் பகுதியான திருச்சி மாநகரத்திலே பட்டிருக்கிற காரணத்தாலும், அது மையப் பகுதியாக இருப்பதாலும், திருச்சி நகரத்திலே தொழிலாளர்களுக்கு ஆலோசனைகளைக் கூறுவதற்காக நான்காவது குழுவை அங்கே ஏற்படுத்தித் தருமாறு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு தொழிலாளர் நலத் துறையில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் என்றும்) தொழிலாளர் ஆய்வு அலுவலகம் என்றும் இருக்கிறது. இவைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அவைகளைப் பிரிப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தி உண்மை என்று சொன்னால், ஒன்றோடொன்று தொடர்பு உடைய இந்த அலுவலகங்களைப் பிரிக்கக் கூடாது என்று பணிவோடு கேட்டுக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய புனித ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு வட்டாட்சியர்களுக்கு கூடுதலாக சம்பளத்தை அளித்திருக்கிறார்கள். அந்த வட்டாட்சியர்களுக்கு நிகராக இருக்கக் கூடிய தொழிலாளர் நல ஆணையர்களுக்கும், அந்த வட்டாட்சியருக்கு வழங்கப்படும் சம்பளம் போன்று சமமாக சம்பளத்தை வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

THIRU G. K. FRANCIS : Mr. Deputy Speaker Sir, with regard to the Policy note on Employment and Training which is Supplementary to Demand No. 29, permit me to make the following observations :

One of the global economic problems existing throughout the world and particularly in India, is the problem of unemployment. It is noteworthy to note that the Government, under the leadership of Dr. M.G.R. takes concrete measures and innovate programmes to solve the problem of unemployment. An outstanding feature of this Policy note is that the Government have resolved to provide 'one job per family, under the very popular scheme 'one job for one family'. This is a novel and outstanding measure and one of the hall marks of the Policy Note. The various measures taken under this scheme, I am sure, will help to solve the problem of unemployment, and bring relief to many families and solve the problem of poverty.

Another point on which I want to mention is the 'Vocational Guidance Employment Counselling' which is to be carried out in Higher Secondary Schools through the School Teachers. This is a very powerful means of spreading employment opportunities to young students. I request

[Thiru G. K. Francis] [1985 ஜூன் 19

the Government to include the 20 Anglo Indian Schools also under this Scheme. Many Anglo Indian School Students have a liking for crafts and skills. They can learn the techniques and avail employment opportunity.

Thirdly, a noteworthy feature of the Policy Note is the 'Unemployment Relief Scheme'. This is a very important means, by which the young people who got frustrated, who do not have job, would have money to meet their basic needs and basic wants in order to obtain jobs. I request the Government to help the Angel-Indians, of whom many are unemployed, especially the youths who are frustrated. Many of them are unaware of the relief given under this scheme. If they are given this relief, it will help them a long way in solving frustration and in alleviating the problem of unemployment.

In the policy note, the Government's policy of encouraging self-employment is noteworthy and excellent. Self-employment is a radical means of getting at the root of the problem of unemployment. It is commendable that the excellent work brought out by Special Vocational Guidance Cell at Vellore in North Arcot District has earned the goodwill of the Government of India and it has been stated that the Government of India have sanctioned the setting up of one more cell at Coimbatore. I request the Government to help the Anglo-Indian Community to avail themselves of these facilities to be self-employed. Many of them have the means and skills but they do not have the opportunities, and if they are given such facilities to put up a small shed or a bunk, I am sure they will make full use of this scheme.

Further one is happy to note the progress made by the Industrial Training Institutes in the State. The Industrial Training Institute has been the back-bone of industrialisation throughout the World. In Germany and Japan, these Industrial Training Institutes have given very high technical and technological base and it is remarkable to find that a third shift is started in the Industrial Training Institutes at Coimbatore, Madurai and North Madras during 1983-84. I request the Government to encourage private philanthrophists and educational institutions to establish Industrial Training Institutes. I am sure if the Government provides same help to Anglo-Indian Community, they can set up Industrial Training Institutes and provide industrial technique for Anglo-Indians to avail themselves of the technical training that is imparted. I must also point out, in this connection, to the Government that the Jain Community has set up an Industrial Training Institute and if the Government can give necessary recognition and support, it will go a long way in providing means for young people to obtain technical education.



1985 ஜூன் 19] [Thiru G. K. Francis]

Finally, in regard to the Overseas Man-power Corporation, which is in charge of sending skilled workers abroad, I request that the Government be sympathetic to Anglo-Indians and to help them to obtain facilities to go abroad.

(பிற்பகல் 12.10)

With these, I wholeheartedly support Demand No. 29.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி சென்னை நகரத்தில் தொழிற்சங்கத் தலைவர்களை கூட்டி ஒரு சொற்பொழிவு நடத்தினார்கள். அன்றைய தினம் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் புதிய வெளிச்சத்தையும், புதிய அணுகுமுறையையும் பார்க்கலாம் என்று. அதிலும் குறிப்பாக தொழிலாளர் நலத் துறையின் பாலிசி நோட்டிலே பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், பாலிசி நோட்டைப் பார்த்தால் மிகுந்த ஏமாற்றம் தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாளிகள் காட்டும் வெளிச்சம் தான் சென்ற காலத்தில் இருந்ததைப் போல இதிலும் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பல சட்டங்களை இயற்றி இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். பல சட்டங்களை இயற்றி இருக்கிறார்கள் என்பது, ஏட்டிலே சர்க்கரை என்று எழுதி சுவைத்துப் பார்த்தால் இனிக்காது என்பதைப் போல, சட்டங்கள் இயற்றுவதால் மட்டும் பலன் கிடைக்காது என்பதற்கு சில விவரங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்று பெர்மனென்ட் கன்பெர்மென்ட் ஆக்ட் என்ற ஒரு ஆக்ட் 1981 ஆம் ஆண்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 2 வருட காலம் ஆகியும், இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. இன்றைக்கு தனியார் முதலாளிகள் மட்டுமல்லாமல், அரசு முதலாளிகளாக இருக்கக்கூடிய எலக்ட்ரிசிடி போர்ட், டிரான்ஸ்போர்ட், கவர்ன்மென்ட் ரப்பர் கழகம், கோ-ஆப்பரேடிவ் இண்டஸ்ட்ரிஸ், ஸ்பின்னிங் மில்ஸ் போன்ற இப்படிப்பட்ட பல இடங்களில் இம்ப்ளிமென்ட் செய்யப்படவில்லை. இப்போது போக்குவரத்துத் துறையில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், அப்பரன்டிஸ் டிரைவர், அப்பரன்டிஸ் கண்டக்டர் என்ற நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த அவையிலே நான் கேள்வி கேட்ட நேரத்திலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை ஒரு பேஸ்டு புரோகிராம் என்ற அளவிலே ஸ்டெப் பை ஸ்டெப் என்ற முறையில் இம்ப்ளிமென்ட் பண்ணுவோம் என்று சொன்னார்கள். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன இதிலே ஸ்டெப் பை ஸ்டெப்

மற்றும் பேஸ்டு புரோகிராம் என்று எனக்குப் புரியவில்லை. இந்தச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. 480 நாட்கள் இருந்தால், அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று இருக்கிறது. இது அரசுத் துறையில் இம்ப்ளிமென்ட் பண்ணாமல் இருக்கிறது. அதற்கும் மேலே, இந்த ஹோசூர் ஏரியாவில் உள்ள பேக்டரி இன்ஸ்பெக்டர் அங்கே உள்ள சங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதாவது இரண்டு வருட காலமாக ஒரு ஆலையிலே வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளர்களை, தாய்க்குலத்தை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று முறையிட்டதற்கு இப்போது என்ன பதில் வந்திருக்கிறது என்றால் உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் காரணமாக இது அமுல்படுத்தப்படமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். இந்த மாதிரியான லட்சணத்திலே நம்முடைய லேபர் இலாக்காவினுடைய பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் முதலாளிகளுக்குச் சாதகமாக, இந்த விஷயத்தை முதலாளிகள் இம்ப்ளிமென்ட் பண்ணாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்துவிட்டு, இப்போது தனியார் முதலாளிகள் சொல்வதைப் போல, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் காரணமாக முடியவில்லை என்று சொல்கிறார்கள். இது தான் இன்றைக்கு உள்ள நிலைமை.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், அடிப்படைத் தொழிற் சங்க உரிமைகள் கூட இன்றைக்கு மறுக்கப்படுகிறது. வெள்ளைக்காரன் காலத்திலே நாங்கள் போராடிப் பெற்ற உரிமைகள் கூட இன்றைக்கு மறுக்கப்படுகிறது. அதாவது தர்ணா நடத்தினால், டெமான்ஸ்ட்ரேசன் நடத்தினால், சத்தியாகிரகம் நடத்தினால், தொழிலாளர்களுக்கு இன்றைக்கு சம்பளம் கட் செய்யப்படுகிறது. அதற்கும் மேலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், போக்குவரத்துத் துறையிலே ஒரு ஆணை போடப்பட்டு இருக்கிறது. தொழிலாளர்கள் லீவ் நாட்களில் ஆர்ப்பாட்டம் பண்ணினால் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இன்னொன்று. இந்த வார்ட் போர்டிலே எந்த தொழிற் சங்கத்தையும் வைத்துக்கொள்ள முடியாத அளவிலே இன்றைக்கு அங்கே ஆணை ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். ஹோசூர் டவுன்சிப்பில் உள்ள ஒரு அத்தாரிட்டி என்ன சொல்கிறார் என்றால், லோக்கல் பாடியிலே தொழிலாளர்கள் எந்தச் சங்கத்திலும் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இன்னொரு இடத்திலே, அதாவது அரசு முதலாளிகளாக இருக்கக் [illegible] இடங்களில் என்ன சொல்கிறார்கள் என்றால், நீங்கள் [illegible] சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி வேலை நிறுத்தப் போராட்டத்திலே [illegible] தொழிலாளர்களுக்கு போனஸ் கட், அதற்கும்



மேலே எக்ஸ்கிரேசியா கட். இப்படி தொழிலாளர் அடிப்படை ஜனநாயக உரிமைகள் கூட இன்றைக்கு இந்த மாநிலத்திலே மறுக்கப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசுத்துறையிலே 12 (3) செட்டில்மென்ட் இன்றைக்கு இம்ப்ளிமென்ட் பண்ணப்படாமல் இருக்கிறது. உதாரணமாக கோஆப்பரேடிவ்லே, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியா கோர் என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அங்கே ஊதிய உயர்வு ஒத்துக்கொண்டதற்குப் பிறகு இன்றைக்கு அது அமுல்படுத்தப்பட வேண்டும் என்றால், கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய ரிஜிஸ்ட்ராருடைய உத்தரவு இருந்தால்தான் முடியும் என்று சொல்கிறார்கள். இதைப் போன்று அரசு ரப்பர் கார்ப்பரேசனில் பல ஒப்பந்தங்களை அமுல்படுத்தாமல் , தொழிலாளர்கள் இன்றைக்கு நிரந்தரம் ஆக்கப்படாமல் தொழிலாளர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டு, இன்றைக்கு கான்ட்ராக்ட் முறையிலே அங்கே தொழிலாளர்களை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது.

இன்றைக்கு ட்வாட் போர்டிலே கூட நாம் என்ன பார்க்கிறோம் என்றால், உயர்நீதிமன்றத்தினுடைய தலையீட்டின் காரணமாகத்தான் அங்கே சங்கம் நடத்த முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறது. நாம் வெள்ளைக்காரன் காலத்திலே போராடிப் பெற்ற தொழிற்சங்க உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இன்று நீதிமன்றத்தினுடைய உதவியை நாடவேண்டிய அளவிற்கு விஷயங்கள் சென்றுகொண்டு இருப்பது என்பது அழகாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன், இந்த பாலிசி நோட்டிலே சொல்லப்பட்டு இருக்கிறது, The Minimum wages should be revised once in two years or whenever the cost of living index figures show an increase by 50 points on an average at a point of time. This has been strictly adhered to. இதை யாரை ஏமாற்றுவதற்குச் சொல்கிறார்கள், என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு இரண்டு முறைகள் தான் இருக்கின்றன. ஒன்றிலே மினிமம் வேஜஸ் ஆக்ட் நிர்ணயிக்க கமிட்டி கான்ஸ்டிடியூட் பண்ணவேண்டும் அல்லது ஸ்டேட் அட்வைசரி போர்டிலே ரிவிஷனுக்கு வைக்க வேண்டும். இதே அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது.

பக்கம் 30-ல் State Advisory Board met once during the year under review என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-20)

ஒரு வருடத்தில் ஒரு தடவை தான் அந்த Board கூடியிருக் கிறது என்றால் அந்த Mirimum Wages (State) Advisory Board இந்த 50 பாயின்டு உயர்வுக்கு எப்பொழுது கூடியது 1984-ல் 60 பாயின்ட் உயர்வுக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழகத் தில். அப்படி 50 பாயின்ட்டுக்கு ஸ்டிரிக்ட்டாக ரிவைஸ்டு செய்யப் பட்டு இருக்கிறது என்று இங்கே சொன்னால், ஒரு வருடத்தில் ஒரு தடவைதான் கூட்டப்பட்ட அந்த Minimum Wages Advisory Board-ஆல் அது முடியுமா ?

இந்த Mirimum Wages Committee—ஐ பொறுத்தவரையில் புதிதாக ஒரு தொழிலில் வேலை ஆரம்பிக்கப்பட்டால் அந்த கமிட்டி ஒரு தீர்ப்புக் கொடுத்து அமல் செய்வதற்கு 3 வருட காலம் ஆகிறது. இங்கே ஒரு வருடத்தில் 60 பாயின்ட் உயர்வு இருப்பதன் காரணமாக அதை அமல் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. Minimum Wages Advisory Committee யில் அந்த தொழிலோடு சம்பந்தப்பட்டவர்களை நியமனப் படுத்தாமல் இருப்பதனால் பலன் கிடைக்காமல் போய் விடுகிறது. இந்த முறையில் கேஷ்யூ தொழிலில் இருந்து ஒரு ரிப்போர்ட் வந்திருக்கிறது. ஆனால் அமல் செய்ய முடிவதில்லை. அதே போல் டானரி தொழிலில் ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அதில் தொழிலாளர்களின் பிரிதிநிதிகளாக இருந்தவர்களுக்கும் அந்த தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாததன் காரணமாக அவர் கள் ஓடிவிட்டு இன்று அந்த கமிட்டி செயல் ஆற்ற முடியாத நிலைக்கு வந்திருக்கிறது.

அடுத்து இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பது. கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்களுக்கு Minimum Wages implement படுத்துவது சம்பந்தமாக. அதை நீங்கள் ரிவைஸ் செய்ய வேண்டியது தானே. ஏன் ரிவைஸ் பண்ண வில்லை.

ஒரு இடத்தில் சொல்கிறீர்கள் பேர் வேஜ் இருக்கிறது ஆகவே நாங்கள் செய்யவில்லை என்று. Minimum Wages revise செய்யப்பட்டு இந்த 50 பாயின்ட் என்ற முறையில் வந்தால் இப்படித்தான் ஊதியம் வருமா என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று 50 பாயின்ட் ரிவைஸ் செய்யப்பட்டு இருக்கிறது என்றால் எந்த எந்த தொழிலில் அப்படி ரிவைஸ் செய்யப்பட்டு இருக்கிறது என்ற பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் [illegible] நேரத்தில் படித்தால் அது உபகாரமாக இருக்கும்.



பக்கம் 26ல் Implementation of Palekar Tribunal's recommenda- tions சம்பந்தமாக இருக்கிறது 39 இடங்களில் அமல் செய்யப் பட்டதுஎன்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 116 இடங்களில் இந்த 39 தொழிலில் மட்டும் அமல் செய்யப்பட்டது என்றால் மீதி இருப்பதில் அமல் செய்யவில்லை. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏன் அந்த பத்திரிகை முதலாளி களை விட்டு வைத்து இருக்கிறீர்கள்? அது மட்டும் அல்ல, அதை அமல் செய்வதற்கு அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. இது சம்பந்தமாக ஏதாவது விஷயம் இருந்தால் மத்திய அரசை அணுகுவதற்கும் அதிகாரம் இருக்கிறது. அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தானே. அதை பயன்படுத்திக் கொள்ள வில்லை. அதற்கு மாறாக ஒரு Tripartite Committee இருக்கிறது, அந்த Committee கூடவில்லை. அதை கூட்டு வதற்கான நடவடிக்கையும் எடுக்கவில்லை. Existing Minimum Wages இன்று பலயிடங்களில் implement செய் யாத நிலை இருக்கிறது. பிளான்டேஷனில் இம்பிளிமெண்டு செய்யவில்லை, சின்கோனாவில் இம்பிளிமெண்டு செய்யவில்லை. ஹாண்டுலூமிலும் அதை இம்பிளிமெண்டு செய்யவில்லை. கடலூரில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, Equal Remuneration Act- ஐப் பொறுத்தவரை யில் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த Equal Remuneration Act- ஐ பல இடங்களில் இம்பிளிமெண்டு செய்யவில்லை. அரசினுடைய ரப்பர் தோட்டத்தில்கூட இம்பிளி மெண்டு செய்யவில்லை. அதற்காக ஒரு கமிட்டி அமைக்கப் பட்டது. ஆனால் 3 வருடமாக அந்தக் கமிட்டி கூடவில்லை. அதிலேயும் பெரிய அம்சம் என்ன என்றால், State Labour Ad- visory Board- சென்ற ஜூலை 1984-ல் கூடியது. அதற்குப் பிறகு கூடவில்லை. எனக்குத்தெரிந்த தகவல் சரியாக இருந்தால் 1983-ல் ஒரு தடவை தான் கூடியிருக்கிறது. மாநிலத்தில் தொழில் அமைதி ஏற்படுத்த வேண்டிய State Labour Advisory Board—கூடாத நிலை என்றால் எப்படி தொழிலாளர்கள். பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்த முடியும். அதே நேரத்தில் Labour Welfare Board என்று ஒரு போர்டு இருக்கிறது. அது கூடி ஒரு வருடம் ஆகிவிட்டது. அதனுடைய பட்ஜெட் புர போசல் கூட அந்த போர்டு கூட்டத்தை கூட்டி அதில் வைக்க வேண்டும். அப்படியும் கூட்டப்படவில்லை. அந்த ஆக்ட்டில் போர்டு கூட்டாமலேயே அந்த பட்ஜெட் பாஸ் செய்து கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது.

அடுத்து, அரசினுடைய அதிகாரிகளே அதாவது industrial disputes conciliation- க்கு போகப்படாத ஒரு நிலை இருக் கிறது. அதற்கு மாறாக இன்று கன்சியலேஷனை அவமதிக்கக் கூடிய நிலையில் அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

உதாரணமாக, எலக்டிரிசிட்டி போர்டிலே உள்ள தொழிலாளர்கள் ஒரு வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தார்கள். ஜாயின்ட் கமிஷனர் ஒரு கன்சிலியேஷன் மீட்டிங்கை வைத்து நீங்கள் வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கவேண்டும் என்று அட்வைஸ் பண்ணினார்கள். மானேஜ்மெண்ட் இடம் "விக்டிமைசேஷனை" தவிர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதில் என்ன பார்க்கிறோம் என்றால், தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் எலக்டிரிசிட்டி போர்டு சேர்மன் அந்தத் தொழிற் சங்கங்களைக் கூப்பிட்டு, என்ன சொன்னார் என்றால், நீங்கள் வேலை நிறுத்தம் செய்து இருக்கவேண்டியதுதானே, யார் வேண்டாம் என்று சொன்னார்கள்? எனக்கு வேலை நிறுத்தத்தை சந்திக்கிற வாய்ப்பை இழந்து விட்டேன் என்று வருத்தப் பட்டுச் சொன்னாராம். இதுதான் இன்று அரசினுடைய லேபர் டிபார்ட்மெண்ட்டைப் பொறுத்த வரையில் அரசினுடைய மற்ற துறையின் தலைவர்கள் மதிக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலையிலே எப்படித் தொழிலாளர்களுடைய அமைதியை நாம் சந்திக்க முடியும்? இன்னொரு விஷயம் என்ன வென்றால் கோர்ட்டினுடைய முடிவுகள் கூட மதிக்கப்படுவது இல்லை. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே 30 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டது சம்பந்தமாக டிரிப்யூனலுக்குப் போய், 25 பேரை டிஸ்மிஸ் செய்தது சரியில்லை என்று டிரிப்யூனல் தீர்ப்புக் கொடுத்தது. ஆனால், அவர்களுக்கு வேலையும் கொடுக்கவில்லை. அப்பீலும் செய்து கொள்ளப்பட வில்லை. இது சம்பந்தமாக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் மானியத் திலே பேசிய நேரத்திலே, அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்லாமல் பை—பாஸ் பண்ணிவிட்டார்.

நான் குறை சொல்வதற்காக வேண்டி சொல்லவில்லை. உண்மையான நிலை என்ன? நெட் ரிசல்ட் என்ன? லேபர் டிபார்ட்மென்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அரசு, தனியார்கள் இருக்கிற ஸ்தாபனங்களிலே எபெக்டிவாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்களை செட்டில் பண்ண முடியாத ஒரு அவல நிலையிலே லேபர் டிபார்ட்மெண்ட் சென்றிருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று, "குளோசர் ஆப் இன்ஜினீரிங் பாக்டரீஸ்" ரா—மெடீரியல்ஸ் ஷார்ட்டேஜ் சம்பந்தமாக, அதே போன்று, பிக்அயர்ன் மற்றும் கோல் கிடைக்காத காரணத்தால், மிஸ்—மானேஜ்மெண்ட் காரணமாக பல இன்ஜினீயரிங் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன.



உதாரணமாக, அசோக் லேலண்டு, ஒசூரிலே இன்றைக்கு 'சஸ்பென்ஷன் ஆஃப் புரொடக்ஷன்' என்று சொல்லி குளோஸ் பண்ணினார்கள், இது 'ஆண்டி—நேஷனல் அண்டு ஆண்டி சோஷியல் ஆக்ட்' என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நேரத்திலே நாம் ஒரு பக்கத்திலே சொல்லிக் கொண்டிருப்பது தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அது உற்பத்தியை பாதிக்கிறது; ஆகவே, அதை அனுமதிக்கக் கூடாது; என்கரேஜ் பண்ணக்கூடாது என்று. அதை 'கன்டெம்ன்' பண்ணுகிறீர்கள். ஆனால் முதலாளிகளுடைய நடவடிக்கைகளை 'கன்டெம்ன்' செய்யவில்லை.

தொழிலாளி வேலை நிறுத்தம் செய்தால் ஜெயிலிலே அடைக் கிறார்கள்; ஏன் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஒப்புக் கொள்ளுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமை யாக இதை லேபர் மினிஸ்டர்ஸ் கான்பரென்ஸிலே சொல்லி இருக்கிறார். எடுத்துக் காட்டியிருக்கிறார். அது மட்டும் காணாது. அந்த முதலாளிகள் மேலே தகுந்த நடவடிக்கை எடுத்து அந்த குளோசரை புரொஹிபிட் பண்ணக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல், இன்றைக்கு ராணிப்பேட்டையிலே 'இந்தியா பேரிங் அண்டு புஷிங்ஸ்' என்ற ஸ்தாபனம் மூடப்பட்டிருக்கிறது. ஒரு வருட காலமாகிறது. முதலாளிகள் கன்சிலியேஷன் மீட்டிங் கிற்கு திரும்பிக்கூட பார்ப்பதில்லை, 'இந்தியா ஃபோர்ஜ்' என்ற பாக்டரி சென்னையிலே மூடிவிட்டு, அவர்கள் ஓசூருக்குப் போகிறார்கள். காரணம் என்னவென்றால், ஒசூரிலே சீப் லேபர் கிடைக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சய மாகத் தவிர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

கான்டிராக்ட் முறையிலே இன்றைக்குத் தொழிலாளர்களை அவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறார்கள். கான்ட்ராக்ட் அபாலிஷன் போர்டிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிமென்ட் அண்டு பேப்பர் இண்டஸ்டிரிக்கு ஒரு சப்-கமிட்டி கான்டிராக்ட் அபாலிஷன் போர்டிலே உருவாக்கப்பட்டது. அந்தக் கான்டிராக்ட் ஒழிப்பு சம்பந்தமாக இந்த இரண்டு துறை யைப் பற்றி பரிசீலனை செய்து ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்த சப்-கமிட்டி ரிப்போர்ட்டிலே என்ன சிபாரிசு என்றால், கான்டிராக்ட் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான். சிமென்ட் சம்பந்தமாக ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதில்,

இந்த வார்த்தையை நான் உபயோகிப்பதற்கு வருந்துகிறேன்—அது ஒரு ஆணும் இல்லாத பெண்ணும் இல்லாத ஒரு ஆர்டர்—அதை இம்பிளிமெண்ட் பண்ண முடியாத ஒரு நிலை ஏற்பட்டு, புல்வேறு முறையிலே இன்டர்பிரேட்டேஷனுக்கு இடம் கொடுக்கக் கூடிய ஒரு ஜீவோவாக மாறி அமல்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

பேப்பர் இன்டஸ்டிரியிலே அதே போல் கான்டிராக்ட் முறையை ஒழிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் பேப்பர் இன்டஸ்டிரியிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்கள் சொல்லுகிறார்கள்—சேஷசாயி பேப்பர் மில் முதலாளியையும், சன் பேப்பர் முதலாளியையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். உண்மை என்ன என்று தெரியாது. அது எனக்குக் கிடைத்த தகவல்தான்.

ட்ரிப்யூனல்ஸ் அண்டு லேபர் கோர்ட்ஸைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இங்கே ஒரு கருத்துச் சொல்லப்பட்டது.

(பிற்பகல் 12-30).

அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்தில், ஏறத்தாழ இரண்டாயிரம் கேஸ்கள் பெண்டிங்கில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் இது சம்பந்தமாக ஐ. என். டி. யூ. சி. மாநிலக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தினைக் கொடுக்க விரும்புகிறேன்.

"....The Committee noted that upto the end of December 1984, 2,362 Labour disputes were pending before courts in Tamil Nadu. During 1983 and 1984 Government of Tamil Nadu had referred 1,804 disputes to Industrial tribunals and 2,037 cases to labour courts for adjudication. The industrial tribunals had taken 323 days in 1983 and 279 days in 1984 for disposing of the dispute. In the labour courts the time taken was 730 days in 1983 and 1984. But the time taken by the tribunals and labour courts is unduly long as they do not tell the whole story. Thereafter the disputes go before High Courts and Supreme Court where they will take years to give a final disposal...."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நான் சொல்ல விரும்புகிறேன். பலயிடங்களில் லேபர் கோர்ட்டுகள் டு கோர்ட்டுகளாக இருப்பதால், யாராவது வி. ஐ. பி. வந்தால் கோர்ட்டை நடத்த முடியாமல் அட்ஜர்ன் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் மாதக் கணக்கில் வழக்குகளில் தாமதம் ஏற்படுகிறது. டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளுக்கு வாகன



வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் இவர்களுக்கு அந்த வசதிகள் கொடுக்கப்படவில்லை. பல நேரங்களில் எக்சிபிட்ஸ் எல்லாம் கொண்டு வரப்படாததன் காரணமாக வாய்தா கொடுக்கப்படுகிறது. இரண்டு மூன்று அடிஷனல் கோர்ட் என்று வைக்கப்பட்டிருப்பதை மாற்றி, இரண்டு மூன்று மாவட்டங்களுக்கு ஒரு தொழில் நீதிமன்றம் என்ற நிலையில் செய்தால் அபிவிருத்தி அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஹேண்ட் லூம் ஆக்டைப் பொறுத்தவரையில் இம்ப்ளிமென்டேஷன் சம்பந்தமாக, ஹேண்ட் லூம் டிபார்ட்மென்டிலேயிருந்து லேபர் டிபார்ட்மென்டுக்கு வந்திருக்கிறது. ஆனால் அதை இம்ப்ளிமென்ட் செய்வதற்கு போதுமான மெஷினரி வசதிகள் செய்யப்படவில்லை. அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிம்ஸனைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உள்ள நிலைமை என்னவென்றால், அந்த நீதிமன்றத்தில் உள்ள கேஸ்களை, தொழிலாளர்கள் சம்பந்தமாக முடிவு செய்ய முதலமைச்சரிடம் விடப்பட்டிருந்தது. ஆனால் முதலமைச்சரவர்களால் அதில் முடிவெடுக்கப்படாமல், நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லி, முடிவெடுக்காமல் திருப்பி விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சரியல்ல. எல்லோரும் சேர்ந்து முதலமைச்சருக்குக் கொடுத்திருக்கின்ற அதிகாரத்தின் அடிப்படையில் முடிவெடுத்து அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

***திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசு, தமிழகத்தில் தொழில் அமைதி நிலவ வேண்டுமென்பதற்காகவும், தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காகவும் பல நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறது.

குறிப்பாக, அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்காகவும் பல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கின்ற பாங்கினை நாம் இந்த மானியக் கோரிக்கையிலே காண்கிறோம். ஏழை விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் போன்றவர்களுக்கும், பரந்து விரிந்து கிராமப்புறங்களில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கும் பல நல்ல திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. காப்பீட்டுத் திட்டம், ஓய்வுகாலப் பயன் தனித் திட்டம், போன்றவை அவற்றில் சில. தொழில் செய்யும் நேரங்களில்

தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அதனால் ஏற்படும் இழப்பைக் கருதி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் 5,000 ரூபாய் தொகையை 10,000 ஆக உயர்த்திக் கொடுப்பது போன்ற திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக எத்தனை நன்மைகளைச் செய்ய முடியுமோ அத்தனை நன்மைகளையும் செய்து தருவதற்கு அரசு முயன்று கொண்டிருக்கிறது என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பின் மூலமாக அறிய முடிகிறது. தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் காப்பு இல்லங்கள், பாலர் பள்ளிகள், படிப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நிதி உதவிகள் ஆகியவற்றைத் தொழிலாளர் நல வாரியம் தந்து கொண்டிருக்கின்றது. சென்னையில் தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக பத்து இலட்சம் ரூபாய் செலவில் ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லம் அமைக்கப்பட்டிருக்கிறது. குற்றாலத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில் விடுமுறை இல்லம் ஒன்று கட்டப் பட்டிருக்கிறது.

இப்படித் தொழிலாளர்கள் நலனிலே அக்கறை காட்டிக் கொண்டிருக்கக்கூடிய அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு என்பதிலே சந்தேகம் இல்லை.

அது மட்டுமல்லாமல், இங்கே புள்ளி விவரக் கணக்குகளை நாம் எடுத்துப் பார்ப்போமானால், 1977-ல் விபத்துக்கள் 30,000 ஆக இருந்தது. அது படிப்படியாகக் குறைந்து, தற்போது 1983-ஆம் ஆண்டு 20,000 ஆகக் குறைந்திருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம், இன்று தமிழக அரசு தொழிலாளர்களுக்குத் தருகின்ற பயிற்சி, பாதுகாப்பான இயந்திரங்களை வாங்க வேண்டுமென்று நிர்வாகத்தினரை அரசு வற்புறுத்துகின்ற காட்சி. இதனால்தான் விபத்துக்கள் படிப் படியாகக் குறைந்து வருகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட தொழிலாளர் நலனிலே அக்கறை காட்டுகின்ற அரசினை எடுத்தெறிந்து பேசுகின்ற வார்த்தைகளை, மாற்றுக் கட்சியினர், குறிப்பாக, பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்திலே தொழிலாளர்கள் மத்தியில் சாம்ராஜ்யத்தை நடத்திக் கொண்டிருந்தவர்கள் இன்று [illegible]த்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் [illegible] மாண்புமிகு முதலமைச்சரும் தொழிலாளர் மத்தி[illegible] செல்வாக்கு பெறுகின்ற காரணத்தாலே, எரிச்சலிலே [illegible], இன்று என்ன, எதையோ பேசுகின்றார்கள் என்பதைத்





தவிர மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் சொல்வதிலே எந்தவித உண்மையும் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படிப் பல்வேறான நல்ல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கும் சிலபல நன்மைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலை நேரங்களிலே விபத்து ஏற்பட்டால், ரூ. 5,000 தருவதை, ரூ. 10,000-ஆக உயர்த்தி இருப்பதை நூற்பாலைத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், 5 நாள் வேலைத் திட்டத்தை தொழிலாளர் மத்தியிலும் அமுல் படுத்த வேண்டும். குறிப்பாக, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் அரசினைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நிர்வாகத்தினர் சில நேரங்களில் தொழிலாளர் நல அதிகாரிகளைத் தங்களுடைய கைக்குள்ளே போட்டுக்கொண்டு அதன்மூலமாக தொழிலாளர்களுக்குச் சில பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கக் கூடிய நிகழ்ச்சிகள் எங்கோ ஒருசில இடங்களிலே நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்காக, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக ஒரு குழு அமைத்திட வேண்டும். அதன்மூலம் தொழிலாளர் நல அலுவலர்களைக் கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கிராச்சுவிட்டி என்று சொல்லப்படுகின்ற பணிக்கொடை, சில நிர்வாகத்தினரால் சரியாகக் கொடுக்கப்படவில்லை. மேலும் சில நிர்வாகத்தினர், பஞ்சாலைத் தொழிலிலே நிரந்தரமாக 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் வேலை பார்க்கக் கூடிய நிரந்தரத் தொழிலாளர்களைக்கூட அன்றாடத் தொழிலாளர்களாகப் பாவித்து, அவர்களுக்கு நிரந்தரமல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிற போக்கினை மாற்றுவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட செயல்களைச் செய்யும்போது இன்னும் பல நல்ல காரியங்களை அரசு செய்தாக வேண்டுமென்று இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பல இடங்களிலே தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி

செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த பசுமலையிலும் மதுரை மாநகரைச் சேர்ந்த செந்தூரிலும் மருந்தகங்கள் தொழிலாளர்களுக்காக இருக்கின்றன. அவற்றிலே, பசுமலையிலே (பழங்காநத்தம்) இருக்கக்கூடிய மருந்தகம் இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். முக்கிய மருந்துகள் அங்கே கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இந்நிலை போக்கப்படவேண்டும் என சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பசுமலையிலே அமைந்திருக்கக்கூடிய மகாலட்சுமி மில்லில் தொழிலாளர்களுக்குச் சரியானபடி வேலை வாய்ப்பு தருவ தில்லையென்றும், தொழிலாளர்களுக்குச் சம்பளம் சரியான முறையிலே பட்டுவாடா செய்யப்படவில்லையென்றும் பலமுறை புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றை யும் கவனத்திலே கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

முடிவாக, திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த திருநகருக்கு அருகிலே உள்ள சீதாலட்சுமி மில்லைப் பொறுத்த வரை இங்கே நான் விரிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த நூற்பாலையில் கடந்த 29–5–1985 முதல் வேலை நிறுத்தம் நடந்து வருகின்றது. 3 சக தொழிலாளர்களை 27–5–1985 தேதி முதல் எந்தக் காரணமும் இன்றி எந்த விசாரணையும் இன்றி நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய் திருக்கிறார்கள் என்பதன் காரணமாக அங்கே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த சீதா லட்சுமி மில்லைச் சேர்ந்த நிர்வாகிகள் தொழிலாளர்களோடு எந்தவித ஆலோசனையும் செய்யாமல், தொழிலாளர்களைக் கலந்து கொள்ளாமல், வேலை பளுவை அதிகரிப்பதும், ஷிப்ட் முறைகளை மாற்றுவதுமான தன்னிச்சையான செயல்களிலே ஈடுபட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அமைதியான முறையிலே வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கும் தொழி லாளர்கள் மத்தியிலே நிர்வாகத்தினர் சென்று அங்கே தொழி லாளர்களைப் பெயர் சொல்லி அழைத்து நீங்கள் வேலைக்கு வாருங்கள் என்று கூப்பிட்டு ஒரு அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அமைதியற்ற சூழ்நிலையை நீக்குவதற்கும் சுமார் 1,400 குடும்பங்கள் பட்டினி கிடந்து சாகின்ற ஒரு நிலையினைத் தவிர்ப் பதற்கும் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு வருவதற்கும் அங்கே தொழிலாளர்—நிர்வாகத்தினருக்கு இடையிலே சுமுகமான உறவு ஏற்படுவதற்கும் அரசு நேரிடையாகத் தலையிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நேரடி யாக இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டு, அவர்களே நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இதில் ஒரு நல்ல முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி தொழிலாளர் நலத்திற்காகவே இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது ; தொழிலாளர்கள் இந்த அரசின் பக்கம் இருக்கிறார்கள் ; தொழிலாளர்கள் இந்த அரசில் நன்மை பல பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லி, நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12–40.)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னகத்தின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுகின்ற தொழில் நகரமான கோவை மாவட்டத்தின் பிரதிநிதி என்ற முறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மூலமாக தந்திருக்கிற தொழிலாளர் நல மானியக் கோரிக் கையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னால், தமிழ்நாட்டில் தொடர்ந்து தொழிற் சாலைகள் பெருகி வருவதற்கும் தொழிலாளர்கள் கூடுதலாக வேலைவாய்ப்பு பெறுவதற்கும் காரணமாக இருப்பது தொழில் அமைதிதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அதன் காரணமாகத்தான் நாளுக்கு நாள் சிறு தொழில்களும், மத்திய ரகத் தொழில்களும் தனியார் துறையில் நிறைந்த அளவில் தொடங்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் களுக்கு மட்டுமல்லாமல்' வேலையில்லாமல் இருக்கிற இலட்சக் கணக்கான இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற வகையிலும் கடந்த 8 ஆண்டு காலமாக சீராக தொழில் அமைதி இருந் திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு பக்கம் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் களுக்குப் பாதுகாப்பு என்கிற வகையிலே பல சட்டங்கள் போடப்பட்டுள்ளன. மறுபக்கம் தொழில் அமைதியைக் காத்து, புதிய தொழில்கள் உருவாவதற்கான நடவடிக்கைகளை சீராக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இங்கே தரப்பட்டிருக்கிற தொழில் மானியத்திற்கான விளக்கங்கள் நமக்கு சான்றாக இருக்கின்றன.

1984—ஆம் ஆண்டில் மட்டும் 11,920 தொழிற்சாலைகள் நம்முடைய 48-வது ஆண்டு சட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. 1984—ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 11,920 ஆக இருந்த தொழிற்சாலைகள் 30–11–1984-ல் 12,562 ஆக உயர்ந்திருப்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

அது மட்டுமல்ல. சிறு தொழில்களில் 119 சதவீதம் என்கிற அளவுக்கு, மத்திய அரசு கோடிட்டு காட்டியிருக்கிற குறியீட்டையும் தாண்டியிருக்கிறோம் என்பது தமிழ்நாட்டில் தொழில் திட்டம் சரியாக இருக்கிறது என்பதற்கு மற்றொரு உதாரணமாகும்.

ஆக, நாம் நிறைவேற்றி வருகிற நடைமுறைகள், தொழில் அமைதி இன்று முற்போக்கு கூட்டணி ஆட்சி நடைபெறுகின்ற மாநிலங்களில் இல்லை. மேற்கு வங்கத்திலும் இந்த அமைதி இல்லை; கேரளத்திலும் இல்லை. தொழில் முனைவர்கள் அங்கே செல்ல அஞ்சுகிறார்கள். தொழில் தொடங்குவதற்கான புதிய வாய்ப்புகள் அங்கே இல்லை. மக்கள் நலனை கருத்திற் கொண்டிருக்கிற அரசு, தொழிலாளர் நலனில் அக்கறைக் கொண்டிருக்கிற அரசு தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ஆக, எண்ணற்ற தொழிலாளர்களைக் காப்பாற்றும் பொறுப்பில் இந்த அரசு இருக்கிறது; இந்த பொறுப்பு மேற்கு வங்கத்தில் காப்பாற்றப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசின் கொள்கைகள், தொழிலாளர் நலச் சட்டங்கள்தான் இதற்குக் காரணமாக இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த வகையில் தொழில் அமைதியைக் காத்து, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கொண்டுவராத தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டுவந்து இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை தொழிலாளர்கள் சார்பிலே பாராட்டவும் நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

'அன்-ஆர்கனைஸ்ட்' தொழிலாளர்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசில் கொண்டுவந்ததைப்போன்ற சட்டம் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டுவரப்படவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநிலம் அல்லது முற்போக்கு என்று சொல்கிறவர்கள் ஆளுகிற மாநிலங்களிலே இதைப்போன்ற ஒரு சட்டத்தைக்கொண்டுவரும் முயற்சி கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதில் ஒன்று "Accident Benefit Scheme for Unorganised Labourers" என்பது. ஆக, இங்கே அதிக அளவில் சந்தா செலுத்துகிற ஆர்கனைஸ்ட் லேபர்ஸ் பற்றித்தான் அதிகமாகக் கவலைப்பட்டு வந்தோம். ஆனால் அன்றாட கூலிக்கு வழியில்லாமல், எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருந்த தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்காக, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக யாரும் கவலைப்படாமல் இருந்தபோது, அக்கறை எடுத்துக்கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதை அறிந்து, இலட்சக்கணக்கான சாதாரண கூலி தொழிலாளர்கள், விவசாய கூலிகள் இந்த அரசை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



அந்த வகையில் வெறும் 10 ரூபாய் மாதத்திற்குச் செலுத்தி 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரையில் விபத்துக் காலத்தில் பெறுகின்ற அளவுக்கு வழிவகை செய்திருக்கின்ற இந்தத் திட்டத்தையும் ஓய்வூதியத்தை வழங்குகின்ற அந்தச் சட்டத்தையும் உழைக்கின்ற மக்களின் சார்பில் Unorganised Labour என்ற அந்த செக்டாரில் இருக்கின்ற பல தொழிலாளர்களின் சார்பில் வரவேற்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனாலும் இன்றைக்கு கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் அது பற்றிய வழிமுறைகளை அறியாமல் இருக்கிறார்கள்.

அதற்காக தொழிற்சங்கத் தலைவர்கள் தாங்களே ஊக்கமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. உரிய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பது கூட ஒரு பக்கம் இருந்தாலும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இன்றைய அளவில் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் தாசில்தாரை அமைத்து அதற்குத் தக்க பிரச்சாரத்தை செய்து இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் முயற்சித்து இருப்பதை சாதாரணமாக எண்ணக்கூடாது. அந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்றபோதுதான் உழைக்கின்ற வர்க்கம் அனைத்திற்கும் நாம் பாதுகாப்பு செய்தவர்களாகக் கருத முடியும் என்ற வகையில் ஒரு பெரும் திட்டத்தையும் இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தந்ததன் காரணமாக இது தொழிலாளர் அரசு என்பதை நிரூபித்திருக்கிறோம். எனவே தொழிலாளர் விரோதப்போக்குடைய அரசல்ல இது என்பதற்கு இது ஒரு அச்சாரமாக அமைந்திருக்கின்றது.

இன்று நாம் கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தைப் பற்றி கட்சி பேதம் இருக்கின்ற காரணத்தால் அதாவது நம்மோடு இணைந்து இருந்தபோது ஒன்றாக இருந்தபோது புரட்சித் தலைவர் அவர்களின் தொழிலாளர் கொள்கைளைப் பற்றி நம்மைவிட சிறப்பாக எடுத்துச் சொல்லி பாராட்டிப் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் இன்று இந்தச் சட்டத்தைப் பார்த்தும், இந்த அரசைப் பார்த்தும் ஏதோ தொழிலாளர் விரோத அரசு என்ற வகையில் மறைமுகமாகவும், நேரடியாகவும் சொல்வது கண்டு நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

இங்கே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 10-பி அமென்ட்மென்ட் வந்தபோது அதனை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் இது ஏதோ தொழிலாளர் விரோதமான அமென்ட்மென்ட் என்றும் சொன்னார்கள். ஆனால் பாரி அன்ட் கம்பெனியில் தொழிலாளர் தகராறு வந்தபோது—அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்—அந்த 10 பி-யை இன்வோக் செய்யவேண்டும் என்று வாதிட்டார்கள். எனவே நீங்கள் தான் இரட்டை நிலை எடுக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கனவே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்திருந்த நேரத்தில் கூட தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை அன்றைக்கே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக ஹேன்ட்லூம் ஒர்க்கர்ஸ் பேரில் கன்ஃபர்மென்ட் ஆப் பெர்மனன்சி ஆக்ட் கொண்டு வந்தபோது அந்தச் சட்டங்களில் இருக்கக்கூடிய ஹோல்ஸ் சிலவற்றை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டங்களை அறிமுகப்படுத்திப் பேசுகின்றபோது சொல்கிற விளக்கங்களை கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்த அவையில் இருந்தபோது பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் மறக்க விரும்பவில்லை. தொடர்ந்து நாம் கொண்டுவந்துகொண்டிருக்கின்ற சட்டங்கள் தொழிலாளர் விரோதமான சட்டங்கள் அல்ல என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு வேறு கட்சியோடு சேர்ந்து கொண்டு இந்த அரசு தொழிலாளர் விரோத அரசு என்று சொல்லி கூக்குரல் கொடுக்கின்ற காரணத்தால்தான் இதைச் சொன்னேனே தவிர வேறல்ல. உங்கள் சங்கங்கள் அதாவது ஏ.ஐ.டி.யு.சி மற்றும் சி.ஐ.டி.யு. போன்றவை தொழிற்சங்கங்களை நடத்துகின்ற இடமாக இல்லாமல் இருந்தால் அவற்றை முறியடிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று சொல்லக்கூடியவர்கள் தங்கள் தொழிற்சங்கங்கள் அல்லாத மற்ற சங்கங்களை வெளியேற்ற வேண்டும் என்பதற்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.



உதாரணமாக ஒன்றைச் சொன்னால், டெக்ஸ்மோ என்ற இன்டஸ்ட்ரி ஒன்று இருக்கிறது. அதிலே 750 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிலே மிகப் பெரிய சங்கமாக சி.ஐ.டி.யு.-வின் சங்கம் இருக்கிறது. இடது சாரியினுடையது. நமது மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தது. அந்த நிறுவனத்திலே உள்ள 45, 50 தொழிலாளர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் ஜனதா கட்சியைச் சார்ந்தவர்களும் தங்களுக்குரிய எண்ணத்தோடு தனியாக தொழிற்சங்கம் வேண்டுமென்று நினைத்து, அப்படி அமைக்க முன் வந்தபோது, அங்கேயிருக்கிற சி.ஐ.டி.யு. சங்கத்தினர் அந்த தொழிலாளர்களையும், அந்த அணுகுமுறையையும் எதிர்த்தார்கள் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை.

(பிற்பகல் 12–50)

அந்த சங்கத்தினுடைய கொடியை நானும், நண்பர் யு. ஆர். கிருஷ்ணன் அவர்களும் ஏற்றி வைத்துவிட்டு வெளியே வந்தவுடனே, அத்தனை தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதை நான் குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் எங்கள் கட்சிக்காரர்களுக்கு வாதாட வேண்டும் என்றும் சொல்லவில்லை. ஆனால் அந்த சங்கத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கள் இஷ்டப்படி ஒரு தொழிற் சங்கத்தை ஆரம்பித்த ஒரே காரணத்தினால் அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போது நீங்கள் முதலாளிகளோடு மேனேஜ்மென்டோடு தொடர்பு கொண்டு, அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதை பார்த்துக் கொண்டிருக்கவில்லையா ? அந்தத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்பட்டன ? இன்னும் கூட பல தொழிலாளர்கள் நிர்க்கதியாக நின்று கொண்டிருக்கிறார்கள். இதுதான் உங்களுடைய தொழிலாளர் நல உரிமையைப் பாதுகாக்கிற கொள்கையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோலத்தான் சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் என்ற ஒரு நல்ல திட்டத்தை நமது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கொண்டு வந்திருக்கிறது. 50 நாட்களுக்கு பாதி சம்பளம் என்றும், 75 நாட்களுக்கு 3/4 சம்பளம் என்றும், 125 நாட்களுக்கு மேலே போனால் முழு சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் அதில் தந்திருப்பதை நீங்கள் வரவேற்பீர்கள் என்று கருதுகிறேன்.

அதேபோல கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்புச் சட்டம், என்று பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை இந்த அரசு தீட்டியிருக்கிறது. தொழிற் தகராறு என்று வருகிறபோது, கட்சி மாச்சரியங்களுக்கு இடம் தராமல், எந்தக் கட்சியின் தொழிற் சங்கமாக இருந்தாலும் கூட நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அதனை பாரபட்சம் இல்லாமல் தலையிட்டு தீர்த்து வைத்திருக்கிறது.

அது மட்டும் அல்லாமல், போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நீங்கள் கேட்காமலேயே பலமுறை பல சலுகைகளை, உங்களால் கேட்பதற்கு இனிமேல் ஒன்றும் பாக்கியே இல்லை என்கிற வகையில் கொடுத்திருக்கிறார்கள். பல நல்ல திட்டங்களை, இன்செண்டிவ் போன்றவைகளையெல்லாம் கூட தந்திருக்கிறார்கள். எவ்வளவோ பிரச்னைகள் சிரமங்கள் போக்குவரத்தில் இருந்தும், டிக்கெட்டின் விலையைக் கூட உயர்த்த முடியாத நிலைமை இருந்தும் கூட, தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, இந்த அரசு இவ்வாறு கொடுத்திருக்கிறது. உங்களால் அதில் ஒன்றும் குறை சொல்லவே முடியாது. அதற்குக் காரணம் அது முழுக்க முழுக்க தமிழக அரசின் கார்ப்பரேஷனாக இருப்பதுதான். அதில் மட்டும் கிட்டத்தட்ட 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) இதோ முடித்து விடுகிறேன், ஒரு நிமிடம் தொழிற்சாலைகளில் பிரச்னைகள் வருகிறபோது, புரட்சித் தலைவர் அவர்களின் அரசினுடைய அணுகு முறை சீரிய முறையில் இருந்ததன் காரணமாகத்தான் தொழிற் தகராறுகளின் காரணமாக எந்த ஆலையும், அல்லது தொழிற்சாலையும் தமிழகத்தில் மூடப்படவில்லை. வட மாநிலங்களில் ஏற்பட்ட ஒரு காம்படிடஷன் காரணமாகத்தான் பல தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறபோது கோவை மாவட்டத்தில் கூட எவ்வளவோ பஞ்சாலைகள் இருந்த போதிலும் 3 ஆலைகள் தான் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளும் கூட பல்வேறு பிரச்னைகள் காரணமாக, முக்கியமாக நிர்வாகப் பிரச்னையின் விளைவாகத்தான் மூடப்பட்டிருக்கின்றனவே அல்லாமல், தொழிற்தகராறுகளின் காரணமாக மூடப்படவில்லை. அப்படி அந்தப் பிரச்னைகள் தொழிற் தகராறுகளுக்கு உட்பட்டது அல்ல என்று புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின், தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வாளா இருந்திடவில்லை,





அதை எப்படியும் திறக்க வேண்டும். உங்களுடைய தொழிற் சங்கத் தலைவர்களை வைத்து, மானேஜ்மென்டிடம் பேசி அதிலே சுமூகமான தீர்வை ஏற்படுத்த அரசாங்கம் அவர்களுக்கு கேரண்டி கொடுத்து, அவர்களுக்கு ஒரு உறுதியை கொடுத்து அல்லது அரசாங்கம் கடன் வசதியை செய்து கொடுத்து அந்த மில்களை எல்லாம் திறந்து ஓட்ட வேண்டுமென்று தொழிலாளர் நலன் கருதி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை நாம் சாதாரணமாக எண்ணிவிட முடியாது.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிற புதிய பஞ்சாலைக் கொள்கை நம்மை அச்சுறுத்துவதாக இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். அதிலே என். டி.சி. நடத்துகிற மில்கள் லாபத்திலே இல்லையென்றால், நடத்த முடியாது என்றால், எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளக் கூடாது. இலாபகரமாக இல்லை என்பதால் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் அதிலே இருக்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்துவதற்கு வழியில்லாமல் ஆகிவிடுவார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு பார்த்தால், அந்தத் தொழில் கொள்கையை நிறைவேற்றுகிற நேரத்திலே என்னென்ன பிரச்னைகள் எழுமோ நமக்கு தெரியாது. அவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு முன்னாலே தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். விசைத்தறிகள் வருவதன் மூலமாக கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று நாம் எப்படி கூறுகிறோமோ, அதேபோல் இதுபோன்ற கொள்கையின் மூலமாக, எக்கனாமிக்கலி நாட் வயபிள் என்று இருக்கக் கூடிய, இலாபம் ஈட்டமுடியாத தொழிற்சாலைகளை அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது, அரசு உதவக் கூடாது என்ற அந்த நிலையைநாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

அதேநேரத்தில் இதுபோன்ற நிலையை ஒரு தொழிற்சாலை எய்துவதற்கு முன்னால், நாம் அந்தத் தொழிற்சாலை மூடப்படுவதற்கான அபாயத்தில் இருக்கிறதென்று நிலையை உணர்ந்து, அந்த அபாயத்தை நாம் முன்கூட்டி தெரிந்து கொள்வதற்கான வகையில்—ஒவ்வொரு தொழிற்சாலையும், 50 அல்லது 100க்கு .மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிற தொழிற்சாலைகள்—ஆண்டிற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படவேண்டும். அது தொடர்ந்து இலாபத்தில் நடக்குமா, மூட வேண்டிய சூழ்நிலை வருமா, என்று ஆய்வு செய்து அதற்கான நல்ல நிவாரணங்களை அவர்களுக்கு மூடப்படுகிற நிலை வருவதற்கு முன்னாலே ஆலோசனையாக கூறி, வேண்டிய உதவிகளை வங்கி மூலமாகவோ அல்லது அரசு மூலமாகவோ தந்து, அது மூடப்படக் கூடிய கடைசிக் கட்ட நிகழ்ச்சிக்கு வராமல் தடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை பற்றி கூற வேண்டுமென்றால் அது பேச்சுவார்த்தையில் இருக்கிறது. எல்லா தொழிற்சங்கங்களும் போராட்டத்திற்கு முனைந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், பஞ்சாலைத் தொழில் தொடர்ந்து கோவையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடக்குமென்பதற்கு உத்தரவாதம் இல்லை. பஞ்சாலைத் தொழில் நடத்துபவர்களிடம் இருக்கிற பிரச்சினையையும் நாம்தெரிந்து கொள்ளாமல் இருக்கக்கூடாது. அது வட இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற காம்படிஷனா, அல்லது மத்திய அரசினுடைய தொழில் கொள்கை காரணமாகவா என்பதைப்பார்க்க வேண்டும். அந்தப் பிரச்சினை ஒரு சிக்கலான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆகவே நிரந்தரத் தொழிலாளர்களை நாம் முழு அளவிற்குப்பாதுகாக்க வேண்டும். கோவையில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழில் நசிந்து விடாமல் அது பொருளாதார தன்மையில் நிலைத்து இருக்கிற அளவிற்கு அந்தப் பிரச்சினைகளை அரசு ஆராய வேண்டும். அதன் மூலம் அதற்கான தீர்வுகளைக்காண வேண்டும். தொழிலாளர்கள் உரிமைகளை பாதுகாக்கிற கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நினைவு கூர்ந்து தொழில் தகராறுகளை நடத்துகிற நீதிமன்றங்களுக்கு முழு அளவிற்கு தொழில் தகராறுகளைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று செய்யவேண்டும். நான் இது பற்றி ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அவர்கள் சிவில் வழக்குகளை எடுத்துக் கொள்வதால் தொழில் வழக்குகள் காலதாமதமாகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு தொழில் தகராறுகளை தீர்க்க மாவட்ட நீதிமன்றங்கள் தொழிலாளர்களுக்காக நடத்தப்படுகிற நீதிமன்றங்களாக ஆகவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்து அமர்கிறேன்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்பதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தலைவரவர்கள் தயவு செய்து அதிகமான நேரத்தை எனக்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருகாலத்தில் சொன்னானே, பாரதிதாசன்.

"பேரன்பு கொண்டவரே, பெரியோரே, என்
பெற்றதாய் மாரே, நல் இளஞ் சிங்கங்காள்
நீரோடை நிலங்கிழிக்க, நெடு மரங்கள்
நிறைந்தபெருங் காடாக்கப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் படுக்கைக்கல்லின்
நெடுஞ்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி
சிற்றூ ரும் வரப்பெடுத்த வயலும் ஆறுதேக்கிய நல்



வாய்க்காலும் நற்சேர வகைப்படுத்தி உழுது துழுது
பயன் விளைக்கும் நிறை உழைப்புத் தோள்கள்
எல்லாம் எவரின் தோள்கள்
கல் பிளந்து, மலை பிளந்து கனிகள் வெட்டி
செய்து தந்த கைதான் எவரின் கைகள்?
பொன் துகளை கடல் முத்தைப் போல் எடுக்க
அடக்கிய மூச்சு எவரின் மூச்சு? அக்கால
உலகின் இருட்டை தலைகீழாக்கி அழகிய தாய்
வசதியாய் செய்து தந்தார் இக்கால நால்வருணம்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றி புக்க பயன் உண்டா?
பொழுது தோறும் புனலுக்கும் அனலுக்கும்
சேற்றினிக்கும் கக்கும் விஷப் பாம்பினிக்கும் கடும்
பனிக்கும் இடையறா நோய்களுக்கும் பச்சை ரத்தம்
பரிமாறி இந்த நாட்டை சலியாத வருவாய் உடைய
தாகத் தந்தவர் எவர்? அவர்கள் தான்
தீண்டத் தகாத தொழிலாளர்கள்.

அவர் எல்லாம் இப்போது எலியாக, முயலாக சமுதாயத்திலே தீண்டத் தகாதவர்களாக இருக்கிறார்கள். தீண்டத்தகாத தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்று அன்றைக்குச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-00.)

அதுமட்டுமல்ல. நாம் காண்பதெல்லாம் இதைத் தீண்டத்தகாத தொழிலாளர்கள் செய்தால் அவன் காணத் தகுந்தது பொருமையாம் அவன் பூனத் தகுந்தது வறுமையாம் என்று சொன்னார்கள். அதை மட்டும் சொல்லவில்லை, அன்றைக்கு மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இந்த நாட்டினுடைய தேசத் தந்தை காந்தி அவர்கள் சொன்னார்கள், தீண்டத் தகாதவர்களை அரிசனங்கள் என்று சொல்லி, அந்த அரிசன மக்களுக்காக பல கொள்கைகளின் அடிப்படையிலே அவர்கள் தொழிலில் ஈடுபட வழிகாட்ட வேண்டும் என்று சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த நாட்டின் சட்டத் தந்தையாக இருக்கக் கூடிய மறைந்த பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு பெரிய அடைமொழியைச் சொன்னார்கள். "Most part of the world have had their type of what words calls the lowly. The Romans had their slaves, the Spartans their helots, the British their Villains, the Americans their Negroes and the Germans their Jews. So the Hindus have their untouchables. But none of these can be said to have been called upon to face a fate which is Worse than the fate which pursues the untouchables. Slavery serfdom, willainage have all vanished. But untouchability still exists and bids fair to last as long as Hinduism will last."

என்று சொன்னார்கள். இந்தச் சமுதாயத்திலே சாலை ஓரத்திலே வேலையற்றுக் கிடக்கக்கூடிய தேயிலைத் தோட்டத்திலே இன்றைக்கு கிட்டத்தட்ட 1 லட்சம் பேர்கள் மலைத் தோட்டத்திலே, ரப்பர் தோட்டத்திலே வாழக்கூடிய மக்கள் சார்பாக நான் முதன்முதலாக இங்கே பேச வந்திருக்கிறேன். இன்றைக்குத் தேயிலைத் தோட்டத்திலே இருக்கக்கூடிய மக்களாக—அவர்கள் வால்பாறையாக இருந்தாலும் சரி, நீலகிரியாக இருந்தாலும் சரி திண்டுக்கல்லாக இருந்தாலும் சரி, ஏற்காடாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கக்கூடிய மலை முகடுகளிலே வாழக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு இந்தியா மின்னல் வேகத்திலே முன்னேறிக்கொண்டு தான் இருக்கிறது. பாரதப் பிரதமர் வாலிப வருடன், தியாகத் தென்றல் , யுகப் புரட்சித் தலைவர், டோட்டல் ரெவில்யூசனரி லீடர் ராஜீவ் காந்தி அவர்களுடைய தலைமையிலே இன்றைக்கு பொன்மனச் செம்மல், 4½ கோடி மக்களின் நாயகன், யுகப் புரட்சித் தலைவரின் அன்புக்கும் பாத்திரமாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவர் ரெவில்யூசனரி லீடர் இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே இன்றைக்கு மின்னல் வேகத்திலே தொழிலாளர் நலத் துறை பரிசுகள் பெற்று நன்றாக பாராட்டப்பெற்று, நாட்டிலே முன்னேறிக் கொண்டு இருக்கிறது. ஆனால் போடுகின்ற சட்டங்களை போடுகின்ற திட்டங்களை அதிகாரிகள் இந்த அரசினுடைய அமுல்படுத்துகிறார்களா என்றால் நான் வெட்கப் படுகிறேன். வேதனைப் படுகிறேன். அதிகாரிகளில் ஒருசிலர் நல்லவர்களாக இருக்கிறார்கள். There are some exceptional cases. At the same time I want to condemn some important officials மலைத் தோட்டங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள் டீ பிளான்டேசனில் அதிகாரிகளாக இருக்கக்கூடிய டெபுடி கமிஷனராக இருந்தாலும் சரி, கமிஷனர் ஆப் லேபராக இருந்தாலும் சரி, ஏ.சி. யாக இருந்தாலும் சரி தேயிலைத் தோட்டங்களில் இருக்கக்கூடிய அந்த அதிகாரிகள் இன்றைக்கு என்ன செய்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்றால் இன்றைக்கு தேயிலைத் தோட்டங்களில் வாழக்கூடிய தீண்டத் தகாத ஒடுக்கப்பட்ட, வறுமைக் கோட்டுக்கு கீழே வாழக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நசுக்கிப் பொசுக்கி, அவர்களை அடிமைப்படுத்துவதற்காக அங்கே துந்துபி பாடிக்கொண்டு, துணை போகக்கூடியவர்களாக இருக்கிறார்களே தவிர, சட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று நினைக்கக்கூடிய ஒரு நினைப்பு அவர்களுக்கு இருக்கிறதா, என்றால் இல்லை.

கடந்த 1984 லே இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய சங்கம் என்று சொல்லக்கூடிய சங்கத்தின் வாயிலாக அங்கே இருக்கக்கூடிய டி. சி. ஆப் லேபர் என்று சொல்லக்கூடிய அலுவலகத்திலே கூலி உயர்வு பற்றி நடந்த ஒரு கூட்டத்திலே நானும் கலந்து கொண்டேன். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் முதலாளிகள் என்று சொல்லக்கூடிய ஆனமலை பிளான்டர்ஸ்



அசோசியேஷன் என்று சொல்லக்கூடிய அந்த முதலாளிகளை தனியாக அழைத்து ஏதோ பேசி வெளியே அனுப்புகிறார்கள். பிறகு தொழிலாளர்கள் சங்கத் தலைவர்களாக இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்களை, தனியாக அழைத்து, ஏதோ பேசி வெளியிலே அனுப்புகிறார்கள். இதைப் பார்க்கின்றபோது தொழிலாளர்கள் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய அந்த பிரச்சினைகள் அங்கே தீர்க்கப்படுமா என்பதை எண்ணிப்பார்க்கின்றபோது, அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் 85 காசுகளைப் பெற்றுக் கொண்டு இருக்கக்கூடிய வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடிக்கொண்டு இருக்கிற வால்பாறைத் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் அந்த மலை, முகடுகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் இன்றைக்குச் செத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு கிள்ளித் தரக்கூடிய தேயிலையினுடைய மொத்த .மதிப்பீடு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது என்றால் இந்த 300 ரூபாய், 400 ரூபாயை தொழில் அதிபர்களுக்கு ஈட்டித் தருகின்ற அந்த தொழிலாளர்களுக்கு தினக் கூலித் தொழிலாளர்களுக்கு நியாயமாக தினக் கூலியாக 30 ரூபாய் வேண்டும் என்று கேட்கிறேன். ஆனால் என்னுடைய குரல்வளை அங்கே நசுக்கப் படுகிறது. என்னுடைய குரல்வளை அங்கே குரல் இல்லாத வளையாக மாற்றப்படுகிறது.

இப்படி நியாயமாக கோரிக்கைகள் கொடுக்கிறபோது அங்கே இருக்கக்கூடிய தொழிற் சங்கமும், அங்கே இருக்கக்கூடிய தொழிற் சங்கத் தலைவர்களும் இவர்களும் பேரம் பேசிவிடுகிறார்கள். இவர்களுக்கு ஒரு சில அதிகாரிகள் துணை போவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நம்முடைய பொற்கால ஆட்சி நடத்தக் கூடிய இந்த பொன்மனச் செம்மல் ஆட்சியில் இவர்களைத் தயவு செய்து அடையாளம் கண்டு அவர்கள் இல்லாமல் செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஏ.பி.ஏ. என்று சொல்லக்கூடிய நிர்வாகம் அங்கே ஆனமலை பிளான்டேஷன் அசோசியேஷன் என்ற பெயரில் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அதை அரிசி பதுக்கல் அசோசியேஷன், ஏ.பி.ஏ., என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாதம் ஒன்றுக்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய அரிசியில் ஒரு கோடி ரூபாய்க்கு அங்கே கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய அளவுக்கு அங்கே லஞ்ச லாவண்யம் கொள்ளை லாபம் புரிகிற அதிபர்கள் என்று சொல்லக்கூடிய கேப்பிட்டலிஸ்டு என்று சொல்லக் கூடிய இண்டஸ்ட்டிரியலிஸ்டு என்று சொல்லக்கூடிய அந்த ரூபத்தில் இருக்கக்கூடிய பகல் கொள்ளைக்காரர்களை இங்கே அடையாளம் கண்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. வி. தங்கவேலு] [1985 ஜூன் 19

தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த கூலி கொடுக்கின்ற அதே நேரத்தில் நியாயமான விலையில் கிடைக்கின்ற அந்த நுகர் பொருள்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் வசந்தமான வாழ்க்கையை எண்ணிப் பார்ப்பதற்கு கனவு காண்பதற்கு அங்கே வழி வகை உண்டாக்கப்படவேண்டும். தேயிலைத்தோட்டத்தில், மலைத்தோட்டத்தில், ரப்பர் தோட்டத்தில் இருக்கக்கூடிய அந்த தொழிலாளர்களுக்கு இன்றைக்கு அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய சட்டத்தில் இருக்கக்கூடிய அந்த சட்டங்களும், திட்டங்களும் அவர்களுக்கு சென்று சேராத நிலைமை இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய வீடுகளில் குடியிருக்க முடியவில்லை. அவர்களுக்கு குடிநீர் இல்லை. அவர்களுடைய குழந்தைகளுக்கு கம்பளி கூட இல்லை. அந்த அளவுக்கு அங்கே சுரண்டல் ஏகாதிபத்தியம் தலை விரித்து தலைவிரி கோலமாக ஆடுகிறது. அதற்கு காரணம் அதிகாரிகளுடைய அட்டகாசமான நிலைமைகள் தான்

ஆகவே இவைகளை இந்த நாட்டில் திருத்தி அமைக்க வேண்டும், மாற்றி அமைக்க வேண்டும் என்பதை மெத்த பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். ஆயிரம், லட்சம் என்று இருக்கக்கூடிய அந்த தொழிலாளர்களின் வாழ்வை நல்ல முறையில் வளம் உள்ளதாக ஆக்க வேண்டும். அதே நேரத்தில் இன்றைக்கு இந்த நாட்டில் தீண்டத்தகாதவர்கள் என்ற முறையில் இங்கே துப்புரவுத் தொழிலாளர்கள் என்று சொல்லக்கூடிய கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய பஞ்சாயத்தில் இருந்து, நகர பஞ்சாயத்தில் இருந்து, கார்ப்பரேஷனில் இருந்து இன்னும் சொல்லப்போனால் While he is unclen, he is cleaning others ஏன் அவன் அசுத்தமாக இருக்கிறான், அவன் பிறருக்காக சுத்தம் செய்கிறான், ஆகவே அவன் அசுத்தமாக இருக்கிறான் என்று சொல்லக்கூடிய இந்த மக்களுக்கு இன்றைக்கு பொன் மனச்செம்மல் ஆட்சியில் யுக புரட்சித் தலைவர். பாரத பிரதமர் ராஜீவ் காந்தி ஆட்சியில் இவர்களுக்கு ஒரு விடிவு காலம், ஒரு விடிவு பொழுது, ஒரு பொன் காலைப்பொழுது உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிற காரணத்தால் தயவுசெய்து துப்புரவுத் தொழிலாளர்கள் இன்றைக்கு பிரைவேட் செக்டரிலும் பப்ளிக் செக்டரிலும், திருச்சியில் இருக்கக்கூடிய பெல் நிர்வாகத்திலும், ராணிப்பேட்டையில் உள்ள பெல் நிர்வாகத்திலும் இங்கே உள்ள எம்.ஆர்.எல்.விலும், மற்றும் ஐ.ஓ.சி யிலும், எம்.எப்.எல்.விலும் இப்படிப்பட்ட பல இடங்களில் 10 லட்சம், 15 லட்சம் என்ற அளவில் இந்த மக்கள் அங்கே வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். மலம் அள்ளுகிறார்கள், கக்கூஸ் சுத்தம் செய்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு சரியான Untouchable Labour Welfare Union என்று சொல்லக்கூடிய இந்த தீண்டத்தகாத சேவை செய்யக்கூடிய இந்த மக்களுக்காக தனியாக ஒரு வாரியம் அமைத்து இவர்களுக்குப் புதுமையான நல்ல வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 19]

திரு ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த மானிய கோரிக்கையின் பேரில் சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

இன்று தமிழகத்திலே தொழிலாளர்கள் காலம் தொட்டு, போராடிப் போராடி இன்று பல வகைகளிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதிலே குறை சொல்லி விட முடியாது.

ஆனால், தமிழகத்திலே இன்று பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலைமைகள், அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டிய நிலையிலே அரசும், அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள் என்று இந்த மன்றத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வானது ஒப்பந்தம் 5 ஆண்டுக்காலம் முடிந்து, 6-வது ஆண்டு ஆகிறது. ஓராண்டுக் காலமாக ஆலை முதலாளிகளோடு தொழிற்சங்கங்கள் பேச்சு வார்த்தை நடத்தின. ஆனால் ஒரு முடிவும் இதுவரை ஏற்படவில்லை.

ஆலை முதலாளிகள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு நீண்ட நாட்களாகக் கொடுத்து வந்தவர்கள், இந்த ஆண்டிலே பிடிவாதமாக இருந்து கொண்டிருக்கிற நிலைமையினை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதற்காக தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத்து இரண்டு முறை கோவையிலேயும், சென்னையிலேயும், அமைச்சரவர்கள் எங்களோடு பேசினார்கள். லேபர் டிபார்ட்மென்டிலே இருக்கிற கமிஷனர், செக்ரட்டரி போன்ற அதிகாரிகளும் உடன் இருந்தார்கள். பேச்சுவார்த்தையானது, இரண்டு முறை, ஆலை முதலாளிகள் சங்கத்தோடு நடைபெற்றது. ஆனால், அவர்கள் ஒரு முடிவுக்கும் வருவதாக இல்லை.

இருந்தாலும், தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றாகக் கூடி, ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்ற முடிவினை நாங்கள் எடுத்து இருக்கின்றோம். வரும் ஜூலை 16-ம் தேதி அன்று தமிழகம் முழுவதும் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தை நடத்த வேண்டும் என்ற முடிவினை நாங்கள் எடுத்திருகின்றோம். அதற்கு முன்னாலேயே, அமைச்சர் அவர்கள், இதிலே தலையிட்டு சுமுகமான ஒரு முடிவினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

காரணம், 1979 ஆம் ஆண்டிலே இதே போன்று தான் ஆலை முதலாளிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் கருத்து வேறுபாடு வந்த காரணத்தினால், நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு எங்களை எல்லாம் அழைத்து சுமுகமான ஒரு முறையிலே பேச்சுவார்த்தைகளை நடத்தி, அன்று எங்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுத் தந்தார்கள். அதற்கு மேலாக, பஞ்சப்படியும் கூட்டிக் கொடுத்தார்கள். இரண்டு நாட்கள் ஓய்வுச் சம்பளத்தையும் பெற்றுக் கொடுத்தார்கள். அதே வகையிலே, இந்த அரசாங்கம் தலையிட்டு, இப்போதைய பிரச்சினைக்கும் முடிவு காணவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், மூடப்பட்ட ஆலைகளுக்கு, அரசாங்கமும், அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதிலே எங்களுக்குக் கிஞ்சித்தும் சந்தேகம் இல்லை. பல முயற்சிகளை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உறுதுணையாக, கமிஷனர் அவர்களும், செயலாளர் அவர்களும் இரண்டு, மூன்று முறைகள் எங்களையும், ஆலை முதலாளிகளையும் வைத்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதையும் காலதாமதப் படுத்தாமல் உடனடியாக தொழிலாளர்களுக்கு ஒரு வாழ்வு அளிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று தொழில் தகராறு சட்டங்கள் பல ஆலை முதலாளிகளாலே மீறப்படுகின்றன. ஆனால், எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம், அங்கத்தினர்கள் எல்லாம், இங்கே அதிகாரிகளைக் குறை சொன்னார்கள். நிச்சயமாக அதை நான் சொல்ல விரும்பவில்லை. காரணம், முழு நேரமாக, அனுதினமும், நமது அதிகாரிகள், தொழிலாளர்கள் பிரச்சினைகளை எடுத்து அணுகிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலே லேபர் டிபார்ட்மென்ட்டானது நல்ல முறையிலே செயல்பட்டு, அவ்வப்போது நாங்கள் என்ன என்ன முறையிடுகிறோமோ, அதை தக்கவாறு, கடூரமாக இருக்கக் கூடிய ஆலை முதலாளிகளையும் அழைத்து, அதற்குத் தக்கவாறு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அங்குமிங்குமாக ஒரு சிலர் வேண்டுமானால் ஆலை முதலாளிகளுக்குச் சாதகமாக இருந்து இருக்கலாம் ; இல்லையென்று சொல்லவில்லை.

எங்களுக்குக் கூட சில இடங்களில் சில அதிகாரிகள் முரணாக இருக்கிறார்கள் ; நியாயத்தைச் செய்யவில்லை என்று நாங்கள் மேல் மட்டத்திலே இருக்கிற கமிஷனர் அவர்களிடமும், அமைச்சர் அவர்களிடமும் முறையிட்டு இருக்கிறோம், அப்படிப்பட்ட தொழில் தகராறு சட்டங்கள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும்.



மத்திய அரசும், மாநில அரசும் கொண்டு வந்திருக்கக்கூடிய நல்ல சட்டங்களை எல்லாம் முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை ஆகும். அதில் நீங்கள் முழுமையாகக் கவனம் செலுத்தி எங்கெங்கு எல்லாம் குறைபாடுகள் வருகின்றதோ அந்தக்குறைபாடுகளை எல்லாம் மனதிலே வைத்து, காலம் கடத்தாமல் அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

சில ஆலை முதலாளிகள் சங்கத்தின் மேல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், விரோதத்தின் காரணமாகவும் ஆங்காங்கு ஆலைகளில் பணிபுரிகின்ற முன்னோடியாக இருக்கக் கூடிய தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்கின்ற நிலைமையையும் நாம் பார்க்கிறோம். பொய் வழக்குகள் போட்டு டிஸ்மிஸ் செய்கிறார்கள். அந்த வழக்குகள் லேபர் டிபார்ட்மெண்ட் மூலமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சிபார்சு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு வரும்பொழுது நல்ல முறையிலே பரிசீலித்து நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்னாலே கமிஷனரிடத்திலேயும், அமைச்சரிடத்திலேயும் நான் கூறியிருக்கிறேன். இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் சென்று தொழிலாளர்கள் செய்தது தவறா, ஆலை நிர்வாகம் செய்தது தவறா என்பதை நீதிமன்றம் நல்ல முறையில் விசாரித்து முடிவெடுத்து நீதி வழங்கினால் நலமாக இருக்கும். அதற்காக நம்முடைய அரசாங்கம் நீதிமன்றத்திற்கு அந்தக் கேஸ்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வெளியே நடந்த நிகழ்ச்சிகளுக்காக, குறிப்பாக தூத்துக்குடியிலே ஒரு சம்பவம் நடந்தது. வெளியே கட்சிக்குக் கட்சி, தொழிற் சங்கத்திற்குத் தொழிற்சங்கம் சம்பவம் ஏற்பட்டு, அது சம்பந்தமாக போலீஸ் கேஸ் என்று சொல்லி ரிமாண்ட் செய்தார்கள். தொழிலாளிக்கு ஆறு மாத காலம் வேலைக்கு போக முடியவில்லை. அதற்காக ஆலை நிர்வாகம் லீவ் கொடுக்க மறுத்து டிஸ்மிஸ் செய்தது. லேபர் டிபார்ட்மெண்ட்டாலே நல்ல முறையிலே ரிப்போர்ட் அனுப்பப்பட்டும் அரசாங்கத்திலேயிருந்து அது கோர்ட்டுக்குக் கிடைக்கவில்லை. ''நோ கேஸ்'' என்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நானாகவே அமைச்சரிடத்தில் கேஸ் கொடுத்தேன். அதுவும் நேற்றைக்கு முன் தினம் நோ கேஸ் என்று திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் அருள் கூர்ந்து கோர்ட்டிற்கு அனுப்புவார்களேயானால் அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டு,

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அதை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அப்ரன்டிஸ் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசாங்கம், இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை பார்த்திருந்தால் அவர்களை பர்மனென்ட் செய்ய வேண்டும்; முழுச் சம்பளம் தர வேண்டும்; முழுத் தகுதியைத் தர வேண்டும் என்ற சட்டத்தை பாஸ் செய்திருந்தோம் ஆனால் ஆலை முதலாளிகள் மேல் கோர்ட்டிற்குச் சென்று அந்தச் சட்டம் செல்லாது என்று ஆக்கிவிட்டார்கள். அதனால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்திலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சுமார் 10, 15 ஆண்டுகளாக அப்ரன்டிஸாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கின்ற முறையிலே, கோர்ட்டிலே தோல்வியுற்ற அந்தச் சட்டம் எந்த பாயிண்டிலே தோற்றது என்பதை மனத்தில் வைத்து, அதற்குத் தகுந்த மாதிரி இந்தச் சட்டத்தைத் திருத்தி, தொழிலாளர்கள் 480 நாட்கள் வேலை செய்திருந்தால் அவர்களை பர்மனென்ட் செய்ய வேண்டுமென்ற அந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்றும், அதுவும் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வர வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கிராஜுவடி திட்டத்தைப் பொறுத்த வரையில், வயதான தொழிலாளர்கள் 240 நாட்கள் வேலை செய்திருந்தால் தான் அவர்களுக்கு கிராஜுவடி என்று கோர்ட்டிலே சொல்லப்பட்டது. ஆனால் அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருந்தோம். மத்திய அரசாங்கமானது இன்றைக்கு 240 நாட்கள் இல்லாவிட்டாலும் கூட அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் கிராஜுவடி கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை அனுப்பியிருக்கிறார்கள். அது நம்முடைய கூட்டுறவு ஆலைகளிலேயும், சர்க்கார் நடத்துகின்ற என்.டி.சி. ஆலையிலும் அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் தனியார் ஆலைகளில் அது அமல்படுத்தப்படவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, கிராஜுவடி வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளிலே சரியான முறையிலே வசதிகள் இல்லை என்று தொழிலாளர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அங்கே வைத்திய வசதிகள் சரியாக இல்லை; மருந்துகள் சரியாக இல்லை. இருக்கைகள் சரியாகச் சுத்தம் செய்யப்படுவது இல்லை என்ற குறைபாடுகளை எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்





சில பேக்டரிகளிலே ஈ.எஸ்.ஐ. வசதிகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன; ஈ.எஸ்,ஐ. திட்டமேவராமல் இருக்கிறது, நம்முடைய அரசாங்கம் ஈ.எஸ்.ஐ. அதிகாரிகளை அனுப்பி, இன்ஸ்பெக்டர்களை அனுப்பி, அவர்களுக்கெல்லாம் ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஈ. எஸ். ஐ.-க்காகத் தொழிலாளர்களிடமிருந்து பெறுகின்ற பணம், பிராவிடன்ட் பண்ட் பணம் ஆகியவைகளை ஆலை முதலாளிகள் அரசுக்குக் கட்டாமல் அவர்களே செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் ஈ.எஸ். ஐ. மருத்துவமனை வசதிகளைப் பெற இயலாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.20)

அதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது, இல்லையென்று நாம் சொல்ல முடியாது. அதற்காகச் சென்ற மாதத்திலே கூட இரண்டு பேர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் என்பது எனக்குத்தெரியும். என்றாலும் அதைத் துரிதப்படுத்த வேண்டும். இ.எஸ்.ஐ. வசதியைச் செய்து கொடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே கோவையிலே தொழிலாளர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடி இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் 25 ஆண்டுகளாக அந்த வீடுகளில் இருப்பதால், அந்த வீடுகளை எல்லாம் ஏதாவது ஒரு தொகை நிர்ணயித்து அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை எல்லாம் அனுப்பியிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

லேபர் டிபார்ட்மென்டிலே வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு ஜாயின்ட் கமிஷனர்களை கோவையிலும் மதுரையிலும் போடுவார்களானால் அது பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால், .கோவையும் மதுரையும் தொழிலாளர்கள் நிறைந்திருக்கக்கூடிய பகுதிகள். அங்கே இரண்டு ஜாயின்ட் கமிஷனர்களை நிரந்தரமாகப் போடுவார்களானால் தொழில் தகராறுகள் சீக்கிரத்திலே முடிவதற்கு வசதியாக இருக்கும் என்றும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் கோர்ட்டுகளில் வழக்குகள் முடிவுற 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் ஆகிக் கொண்டிருக்கிறது. கேஸ்கள் சீக்கிரத்திலே முடிவடைவதில்லை. அதனால் சஸ்பென்ட் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இன்

னும் அதிகப்படியான நீதிமன்றங்களை ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு பெரிய தொழில் ஏரியாக்களிலும் அமைத்து, அந்த நீதிமன்றங்கள் வழக்குகளைத் துரிதமாக பைசல் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்னைகளை சீக்கிரத்திலே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஆர். ரெங்கசாமி. மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் அமைதிக்குப் பெயர் பெற்றது. அந்த முறையிலே நம்முடைய அமைச்சர் அவர்களும் லேபர் டிபார்ட்மெண்டை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றார்கள்; அது மகிழ்ச்சிக்குரியது. 1984-லே இழந்த உழைப்பு நாட்கள் 37,08,400 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது கொஞ்சம் ஜாஸ்திதான். ஏனென்றால், ஸ்டிரைக் செய்த பிறகு தீர்த்து வைப்பதை விட, ஸ்டிரைக் பண்ணட்டும் என்று வெயிட் செய்யாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் இப்பொழுது அதைத்தான் செய்கிறார்கள். ஆகையினால் அந்த ஸ்டிரைக் வராத அளவுக்கு அவர்கள் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த 37,08,400 இழப்பு நாட்கள் என்பது வேஸ்ட் என்று நினைக்கிறேன். ஆகவே, அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்தப்படியாக லேபர் டிஸ்பியூட்கள், நெகோஷியேஷன், கன்சிலியேஷன், போன்றவை லேபர் கோர்டுக்குப் போகின்றன லேபர்கோர்ட்க்குப் போனபிறகு, அது தீர்க்கப்பட இரண்டுஆண்டு ஆகின்றன. இதனால் தொழிலாளர்கள் மனது சோர்வடைகிறது. அவர்களுக்கு அதிலே நம்பிக்கையில்லாமல் போகிறது. ஆகவே, நம்பிக்கையை ஊட்டுவதற்கும் சோர்வை மாற்றுவதற்கும் குயிக்காக டிஸ்போசல் கொடுக்கவேண்டும். அதற்காக ஐ.என்.டி.யூ. சியில் ரெசலூஷன் போட்டிருக்கிறோம். இன்றைக்குக் கோர்ட்டிலே உள்ள முறை என்ன வென்றால் வாய்தா கேட்பதுதான்.

இரண்டு பார்ட்டியும் சேர்ந்து சார் வாய்தா என்றால் கொடுத்துவிடுகிறார்கள். இதை மாற்றியமைக்க வேண்டும் அதற்கு என்ன வழி என்றால் வாலண்டரி ஆர்பிட்ரேஷன்தான் நல்லது. அப்படியானால் இரண்டு பேரும் சேர்ந்து பேசி, மத்யஸ்தர் மூலம் முடித்துக்கொள்ளலாம். அதற்குப் பின்னால் அப்பீலுக்குப் போகமாட்டார்கள். இப்போது என்ன நடக்கிறது? லேபர் கோர்ட், அதற்குப் பின்னால் ஹைகோர்ட், அதற்குப் பின்னால் ரிட் அப்பீல் பின்பு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அதனால் பெருத்த டிலே ஏற்படுகிறது. இதை





மாற்ற உகந்த வழி வாலண்டரி ஆர்ப்பிட்ரேஷன் ஒன்றுதான். அதையும் கூட இப்போது அரசாங்கத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் ஒத்துக்கொள்வதில்லை. அரசாங்கம் இதிலே ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். "They should be a model employer. When there is a dispute between the employer and the employee that should be referred to voluntary arbitration" என்ற கொள்கையை ஏற்றால்தான் பாக்கிப்பேர்களும் ஒத்துக்கொள்வார்கள். முதலிலே இந்த லேபர் கோர்ட்டிலே அதிகமாக இருக்கிறது. இப்போது அங்கே நிறைய கேஸ் இருக்கிறது. அதனால் லேபர் கோர்ட்டினுடைய நம்பரை அதிகப்படுத்த வேண்டும். முதல் கட்டமாக வேலூரில்நிறைய கேஸ் இருக்கிறது கேஸ் ஜாஸ்தியாக இருப்பதால் இன்னொரு லேபர் கோர்ட்டை அங்கே அமைக்க வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தப்படியாக இந்த லேபர் கோர்ட் அல்லது ட்ரிபியூனல் அவார்டு வந்தபிறகு அதை அமுல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது. அவார்டு வந்த பின்னாலும் அதற்கு வரவேண்டிய பணத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதை வாங்குவதற்காக அரசாங்கத்திற்குப் பெட்டிஷன் போடுகிறோம். அவர்கள் விசாரணை பண்ணி, நடவடிக்கை எடுப்பதற்கு டிலே ஆகிறது. இதை மாற்ற லேபர் கோர்ட்டிலேயே டிகிரி கொடுக்க வேண்டும். எப்படி சிவில் கோர்ட்டில் டிகிரிகொடுத்து, ஏற்பாடுகள் செய்கிறார்களோ அதைப்போன்று லேபர் கோர்ட்டிலும் இருக்க வேண்டும். இப்போது இருக்கிற முறையில் அரசாங்கத்திற்குப் போய், டிபார்ட்மெண்டுக்குப் போய், என்குயர் பண்ணி, கலெக்டர் ஆபீசுக்குப் போய் வருவதில் பெருமளவில் காலதாமதம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க லேபர் கோர்ட் தீர்ப்பிலேயே பணத்தைப் பொறுவதற்கு, உரிய பலனைப் பெறுவதற்கு சிவில் கோர்ட்டில் இருப்பதைப்போல வழிவகை செய்யவேண்டும். அதுதான் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மேற்கொண்டு நம்முடைய அரசு ஒன்றை கவனிக்க வேண்டும் லாட் ஆஃப் காசுவல் லேபரர்ஸ் இருக்கிறார்கள், கான்ட்ராக்டர்ஸ் இருக்கிறார்கள். நிறைய டெம்பரரி ஓர்க்கர்ஸ் இருக்கிறார்கள். இதை மாற்றி, ஒழுங்கு படுத்ததான் ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள். இரண்டாண்டுகளில் 480 நாள் வேலை செய்தால் பெர்மனன்ட் பண்ண வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அப்படி பண்ணுவதில்லை. ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே பண்ணினார்கள். இப்போது ஹைகோர்ட்டிலே. கேஸை தள்ளிவிட்டார்கள். ஆனாலும் "It is not Applicable to apprentices and also Badly workers". என்று சொல்லிவிட்டார்கள். அது பாக்கி பேருக்கும் பொருந்தும். இருந்தாலும்கூட செய்வது கிடையாது. ஹைகோர்ட் தீர்ப்புக்கு மேலே அப்பீல் பண்ணவேண்டும் அல்லது சட்டத்தை அமென்ட் பண்ண வேண்டும். அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எஞ்சினீயரிங், டெக்ஸ்டைல்ஸ், ஷிகர்ஸ் போன்ற எல்லா இன்டஸ்ட்ரீஸிலும் காஸுவல் ஒர்க்கர்ஸ் மாதிரி நிறையபேர் இருக்கிறார்கள். காசுவல் லேபரர்ஸ், டெம்பரரி ஒர்க்கர்ஸ் எல்லாம் பெர்மனன்ட் ஒர்க்கர்சுக்கு ஈக்குவலாக பணி செய்கிறார்கள். இதை மாற்றியமைக்க ஒரு சட்டம் அவசியம் தேவைப்படுகிறது.

அடுத்தப்படியாக காண்ட்ராக்ட் சிஸ்டம் இருக்கிறது. இதை ஒழுங்குபடுத்த சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தச் சட்டம் அமுலாகவில்லை. இன்றைக்கு காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸ் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். திருவெற்றியூரில். அசோக் லேலான்டில் இருக்கிறது. அதேமாதிரி அம்பத்தூர் பகுதியில் இருக்கிறது. இப்படி தமிழ்நாடு முழுவதும் இருக்கிற தொழிற்சாலைகளில் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் டான்சி எலக்ட்ரிசிட்டி போர்டு, ட்ரான்ஸ்போர்ட், பி.டபிள்யூ.டி. போன்ற எல்லா டிபார்ட்மென்டுகளிலும் இன்றைக்கு காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸ் இருக்கிறார்கள். இதை சீர் செய்ய அரசாங்கம்தான் முயற்சி எடுக்க வேண்டும்; காண்ட்ராக்ட் முறையை மாற்ற வேண்டும். நிரந்தரமான வேலைகளுக்கு கூட காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸை வைத்திருக்கிறார்கள். டி.என்.இ.பி. யில் லைன்மென் தேவை. இது பெர்மனன்ட் வேலை. அதற்கு ஏன் காண்ட்ராக் வைக்க வேண்டும்? அதைப்போன்று உற்பத்தி வேலை வைக்கிறார்கள். எல்லா ப்ரொடக்ஷன் ஜாபிலும் என்.எம்.ஆர். வேலைக்கு வைக்கிறார்கள். அதற்கும் காண்ட்ராக்ட் வைத்திருக்கிறார்கள். இதை மாற்றியமைக்க வேண்டும். இல்லை என்றால் பெரிய குழப்பம் வந்து சேரும்.

அப்புறமாக மத்திய ஆட்சியில் வந்து சமீபத்தில் ஐ.டி. ஆக்ட் எல்லாம் மாற்றியமைத்தார்கள். அதற்கு நம்முடைய ஸ்டேட் கவர்ன்மெண்ட்தான் ரூல்ஸ் பிரேம் பண்ண வேண்டும். அதிலே டிலே இல்லாமல் உடனடியாகச் செய்ய வேண்டும்.

இப்போது இருக்கிற முக்கியமான பிரச்சனை, பஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில் சென்ற லாங் டெர்ம் செட்டிலமென்ட் 1984 செப்டம்பருடன் முடிந்துவிட்டது. அதன் பிறகு புதிய கோரிக்கைகள் போட்டு, பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடத்தினார்கள். ஆனால் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. வே. இரா. ஜெயராமன்) அவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. ஆர். ரெங்கசாமி :** எல்லோரும் சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்கிறார்கள் அதற்கு நாம் சர்க்கார் அளவுக்கு தலையிட்டு உதவி பண்ணவேண்டிய அவசியம் ....



They are prepared to give wage increase என்று சொல்கிறார்கள். ஆனால் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் ஒர்க் லோடை லிங்க் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். இது என்றைக்குமே இல்லாத சமாச்சாரமாகும். Work load depends upon the type of machinery. ஒர்க் லோடைப் பொறுத்தவரையில் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் மில்வாரியாக; யூனிட் வாரியாக இது பற்றிப் பேசி முடித்துக் கொள்ளலாம். எனவே அந்த வகையிலே தொழிலாளர்களை அழைத்துப் பேசி நல்ல முடிவு காண வேண்டும்.

அடுத்து சர்க்கரைத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை. அங்கே வேஜ் போர்ட் செட்டில்மென்ட் மார்ச் மாதத்திலே முடிந்து விட்டது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மேனேஜ்மென்டைப் பொறுத்த வரையில் அவர்கள் சொல்கிறார்கள், They want wage Board at All India level. அது அமைட்மோடட், வேஜ் போர்ட் அமைப்பதற்கு 2 வருஷம் ஆகும். பிறகு அது பரிசீலனை செய்ய 2 வருஷம் ஆகும், அதன்பிறகு தீர்ப்பு சொல்ல 2 வருஷம் ஆகும். ஆக மொத்தம் 6, 7 வருஷங்கள் ஆகிவிடும். எனவே வேஜ் போர்டே தேவையில்லை. எனவே அந்த வேஜ் போர்ட் இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தேயிலைத் தோட்டத்தைப் பொறுத்தமட்டில் 1983-ஆம் ஆண்டிலே They have appointed Minimum Wage Committee for fixing minimum wages அந்த கமிட்டி அரசாங்கத்திற்கு அறிக்கையை அனுப்பி விட்டது. அவ்வாறு அனுப்பியும் கூட இன்னும் அரசு பரிசீலிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? இவ்வாறு வேஜ் ஃபிக்ஸ் பண்ணுவதற்கே இவ்வளவு நாட்கள் ஆகின்றன. அறிக்கை அனுப்பியும் அரசு பண்ணவில்லை. இதற்கிடையில் காஸ்ட் ஆப் லிவிங்ஸ் எல்லாம் ஏறிக்கொண்டே போகின்றது. இவ்வாறு கமிட்டி அமைக்க 2 வருஷம் டிலே ஆகின்றது. அதற்குப் பிறகு என்கொயரி பண்ண 2 வருஷம், ரிப்போர்ட் வர 2 வருஷம் என்று பல வருஷங்கள் ஆகிவிடுகின்றன. எனவே இதற்கு எல்லாம் ஒரு லிமிட் பிக்ஸ் பண்ண வேண்டும். இப்படி பல ரிப்போர்ட்கள் வந்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே அரசாங்கம் மேற்கொண்டு டிலே பண்ணாமல் இதை எல்லாம் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ப்ளான்டேஷனைப் பொறுத்தவரையில் 1978-லே ஒன்மேன் கமிட்டி அப்பாயின்ட் பண்ணினார்கள். One Man committee was appointed to decide the question of ratio between land and labour. என்ற முறையில் கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டி 1982-லே ரிப்போர்ட் கொடுத்தாகிவிட்டது. ஆனால் இதுவரையில் கவர்ன்மென்ட் ரிப்போர்ட்டைப் பரிசீலனை பண்ணவில்லை. அது

பற்றி ஒன்றும் செய்யவும் அது பற்றிப் பரிசீலனை பண்ணினால்தான் எவ்வளவு ஒர்க்கர்ஸ் தேவை என்பதை எல்லாம் முடிவுபண்ண முடியும். எனவே உரிய ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். In plantation Industry whether they are perment or temporary, they were getting equal pay for the Jobs. சமீபத்திலே அந்த ப்ளேன்டேஷனிலே உள்ள முதலாளிகள் சம்பளத்தைக் குறைத்துவிட்டார்கள். 15 ரூபாய் 17 பைசா என்பது கூலி. டெம்பரரி ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் 9 ரூபாய் 80 பைசா கொடுக்கிறார்கள். எந்தவிதமான காரணமும் இல்லாமல் நோட்டீஸ் இல்லாமல் அங்கே உள்ள தோட்ட முதலாளிகள் கூலியைக் குறைத்துவிட்டார்கள். அதில் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இது நியாயமும் இல்லை.

அடுத்து பேக்டரி இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பேக்டரிகளில் சென்று பார்க்கும்போது மேனேஜ்மென்டை மட்டும் பார்த்து விட்டு வந்துவிடுகிறார்கள். அங்கேயுள்ள தொழிலாளர்களைப் பார்ப்பதில்லை. தொழிலாளர்களைப் பார்த்தால்தான் உண்மை நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியும். எனவே They should meet the workers also. Then only they will know the position.

அடுத்து கேன்டீன் பிரச்சினை. இப்போது எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் கேன்டீன் இருக்கிறது. சில மேனேஜ்மென்ட் நிறுவனங்களும், டி. வி. எஸ். போன்ற பெரிய நிறுவனங்களும் அவர்களே கேன்டீன்களை நடத்துகிறார்கள். அது ஓரளவுக்கு பரவாயில்லை. சில பேர்கள் கோவாப்பிரேட்டிவ் முறையிலே நடத்துகிறார்கள். அதுவும் பரவாயில்லை. ஆனால் ஒரு சில இடங்களில் காண்டிராக்ட் முறையில் கான்டீன் நடத்த விடுகிறார்கள். அதுதான் சரியில்லை. ஆகவே அந்த கான்டிராக்ட் கான்டீன் முறையை நிறுத்தி விட்டு, ஒன்று நிர்வாகமே நடத்த வேண்டும் அல்லது கூட்டுறவு முறையில் நடத்த வேண்டும். The Management themselves should run the canteen or it should be run through Co-operatives என்ற வகையில் அரசாங்கம் சட்டம் கொண்டு வந்துசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாலேகர் அவார்டு என்று ஒன்று கொடுக்கப்படுகிறது, மத்திய அரசினால், அதில் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் ஒரு சில நிறுவனங்களைத் தவிர, பல நிறுவனங்கள் அதைப் பற்றிக் கவலைகூடப் படுவதில்லை. அப்படி ஒரு பொருள் இருப்பதாகவே அவர்கள் நினைப்பதில்லை. ஏனென்றால் நமக்கு ஒன்றும் அதெல்லாம் வராது என்ற நினைப்பு. ஆகவே அரசாங்கம்





உடனடியாக அந்த நிறுவனங்களை எல்லாம் அழைத்து பேசி' தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி அந்த அவார்டுகளை பெறும் வகையில் அவர்களை ஊக்குவிக்க ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஈ. எஸ். ஐ. இதைப் பொறுத்த மட்டில் ஆரம்பக் காலத்திலே மிக நன்றாக இருந்தது. அரசாங்கம் வெகு வேகமாக இதை பரவலாக அமல் படுத்தினார்கள். இப்போது அவ்வளவு வேகமும் இல்லை. அவைகளை சரிவர கவனிப்பதும் இல்லை. எனவே இந்த நிலைமையை மாற்றி அரசாங்கம் கொண்டு வந்த ஈ.எஸ். ஐ. திட்டத்தை எல்லா ஊர்களுக்கும், எல்லா தொழிற் சாலைகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதேபோல அந்த ஈ. எஸ். ஐ. டிஸ்பென்சரியிலே சரியாக மருந்துகள் கிடையாது. ஏதோ சில மருந்துகள் வரு கின்றன. ஒரு வாரம் அவை ஸ்டாக்கில் இருக்கின்றன. அதற் குப் பிறகு அவைகளைக் காணோம். அது மாதிரி இல்லாமல் எல்லா டிஸ்பன்சரிகளிலும், எல்லா மருந்துகளும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஐயனாவரம், கருணாநிதி நகர் போன்ற இடங் களில் ஈ. எஸ். ஐ. ஹாஸ்பிட்டல் இருக்கிறது. ஆனால் அங்கே நல்ல மெயின்டென்ஸ் கிடையாது. அங்கே பேன் ஓடுவதில்லை, தண்ணீர் கிடையாது, கக்கூசுக்கு கதவு கிடையாது. அப்படி மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் சரி செய்து ஒழுங்கான முறையிலே கொண்டு வர அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும் என்று நான் பிரியப்படுகிறேன்.

நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முன்பு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர் களுக்குத் தெரியும் இன்றைக்கு தமிழகத்திலே உள்ள கூட்டுறவு துறையிலே பணிபுரியும் தொழிலாளர்கள் எந்த நிலையில் இருக் கிறார்கள் என்று, அவர்களுடைய நிலை மிகவும் மோசமானது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் கவர்ன்மெண்ட் சர்வெண்டுகள் தானே, பிரைவேட் எம்பிளாயிஸ் அல்லவே, ஏன் அவர்களுக்கு மட்டும் ஒழுங் கான சம்பளம் கிடையாது ; ஒழுங்கான டி. ஏ. கிடையாது, மற்ற அலவன்சுகளும் ஒழுங்கான முறையில் கிடையாது. ஏன் இந்த நிலைமை? ஆகவே தமிழகத்தில் பணியாற்றக் கூடிய எல்லா கூட்டுறவுத் துறை தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியான சம் பளம், ஒரே மாதிரியான டி. ஏ. மற்றும் மற்ற அலவன்சுகளையும் கொடுக்க நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்களுடைய நிலைமை ரொம்ப மோசமானது. அதை அரசாங்கம் கட்டாயம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல லேபர் டிபார்ட்மென்டைப் பொறுத்தவரையில்; தொழிற் தகராறு வந்தால், தனியார் துறை என்று சொன்னால் அதற்கு ஒரு மரியாதை, போக்குவரத்துத் துறை அல்லது மின்சார வாரியத் துறை ஊழியர்கள் என்று சொன்னால் அதற்கு வேறு ஒரு மரியாதை. ஏன் அந்த வித்தியாசம் ? எல்லோரும் தொழிலாளர்கள் தானே, இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் மூலமாகவோ, அல்லது மின்சார வாரியத்தில் இருப்பவர்களோ அல்லது டான்சி நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களோ ஏதாவது கோரிக்கை கொண்டு வந்தால் அதை எடுத்துக் கொள்ள, லேபர் டிபார்ட்மென்ட் தயங்குகிறார்கள். காரணம் அது கவர்ன்மென்ட் ஆபிற்றே என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இப்படி தனியார்கள் என்றும் பொதுத்துறை நிறுவனங்கள் என்றும் வித்தியாசம் பார்க்காமல், தொழிலாளர்களுக்கு இடையில் எந்தவித வேறுபாடும் இல்லாமல், ஒரே மாதிரியாக இந்தக் கோர்ட்டுக்கு விடுவதில் அணுகு முறை இருக்க வேண்டும். அரசு அதை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40.)

அடுத்து, பொதுவாக லேபர் டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய குறை இருக்கிறது. 10 ஆண்டுகளாகக் கூட அங்கே ஆபிசர்கள் வேலை செய்கிறார்கள். ஏ.சி.எல். அக டி.சி.எல். ஆக அவர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து இருக்கிறார்கள். 10 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு எந்தவித பிரமோஷனும் கிடையாது.

லேபர் டிப்பார்ட்மெண்ட் ஆபீசர்கள் மற்றவர்களுக்கெல்லாம் உதவி செய்கிறார்கள். They help the employees to get promotion, wage increase and everything. But they are remaining in the same position for 10 years. ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை இருப்பது ரொம்பவும் வருத்தப்படவேண்டிய காரியம். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலே இருந்தால் அவர்கள் ஆட்டோ மெடிக்காக பிரோமோஷன் போன்ற மற்ற வசதிகளை பெறுகிற அளவில் செய்ய வேண்டும். தமிழ் நாட்டில் தொழில் அமைதி நிலவுவதற்கு பெருமளவில் உதவி வருகிற துறையாக அந்தத் துறை இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்கிற சம்பளமும் மிககுறைவாகத் தான் இருக்கிறது. "The people on the Management side are drawing more than 5,000 rupees. But the officers in Labour Department are getting lesser pay.





ஆகவே அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பேக்டரி இன்ஸ்பெக்ட்ரேட் தொடர்ந்து லேபர் டிப்பார்ட்மெண்ட் கீழே இயங்கி வரவேண்டும்.

அடுத்து இன்றைக்கு லேபர் ஆபீசுகளிலும், லேபர் கோர்ட்டிலும், கவர்ன்மெண்ட் லெவலிலும் தாமதம் இருக்கிறது. அந்த தாமதம் இல்லாமல் செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்புகள் தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப மானியக் கோரிக்கைகள் பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெறுவதில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

25–6–1985 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 26–6–1985 (புதன் கிழமை) ஆகிய நாட்களில் எடுத்துக்கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பெற்றிருந்த மானியக் கோரிக்கைகள் எண் 15—காவல் துறை மற்றும் எண் 16—தீயணைப்புப் பணிகள் ஆகியவை 8–7–1985 (திங்கள் கிழமை) மற்றும் 9–7–1985 (செவ்வாய்க் கிழமை) ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்ளப்பெறும். 8–7–1985 (திங்கள் கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பெற்றிருந்த மானியக் கோரிக்கைகள் எண் 13—நீதி நிர்வாகம் மற்றும் எண் 14—சிறைச்சாலைகள் ஆகியவை 25–6–1985 (செவ்வாய்க்கிழமை) அன்றும், 9–7–1985(செவ்வாய்க் கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப் பெற்றிருந்த மானியக் கோரிக்கைகள் எண் 33—வீட்டு வசதி மற்றும் எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி ஆகியவை 26–6–1985 (புதன் கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப் பெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. வரவு—செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மணி நேரமாக தொழிலாளர் நல மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல நல்ல ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை எல்லாம் நல்கியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் துறையினுடைய சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பொதுவாக சிறப்பாக மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்தில் தொழில் அமைதி நிலவி வருகிற பாங்கினைப் பற்றியும், அந்தத் தொழில் அமைதி காரணமாக இன்றைக்கு மக்களுடைய பொருளாதாரவளம் பெருகி இருக்கிற பாங்கினைப் பற்றியும் விவரமாக, விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக சம்பந்தப்பட்ட தொழிலாளர் இயக்கங்களின் தலைவர்களுக்கும், அதே போல முற்போக்கு எண்ணம் கொண்ட நல்ல நிர்வாகங்களுக்கும நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்தக் கொள்கை அறிக்கையில் மிகத் தெளிவாக 1984—ஆம் ஆண்டு தமிழகத்தில் நிலவி வந்த தொழில் தகராறுகள் பற்றியும், அவை முடிக்கப்பட்ட வகைப் பற்றியெல்லாம் விவரமாக இன்றைக்கு உங்களுடைய மேலான பார்வைக்கு வைத்திருக்கிறேன்.

குறிப்பாக சென்ற நான்கு மாதங்களில் மூன்றாவது முறையாக எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு 13 நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளை நம்முடைய தொழிலாளர் நலத் துறை ஒரு இணக்கமான வகையில் முயற்சிகளை மேற்கொண்டு அங்கெல்லாம் இன்றைக்கு ஒரு சுமுகமான நிலைமை உருவாகி இருக்கிறது. இதையெல்லாம் இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எல்லாம் அறிவார்கள். குறிப்பாக 1½ ஆண்டுக்காலமாக தீராமல் இருந்த, பொதுத் துறையில் இருக்கின்ற டான்சி நிறுவனத்தினுடைய 4 ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு, மற்றும் இது சம்பந்தமான துணை நலன்களை எல்லாம் உள்ளடக்கி ஏறக்குறைய ஒவ்வொரு தொழிலாளிக்கு 65 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை இன்றைக்கு ஊதிய உயர்வு பெறக்கூடிய ஒரு சுமுகமான சூழ்நிலை டான்சி நிறுவனத்திலே உருவாகியிருக்கிறது. இதிலே ஏறத்தாழ 4 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் 8 தொழிற் சங்கங்கள், 8 அரசியல் கட்சிகளுடைய தலைமையிலே இருக்கக் கூடிய தொழிற்சங்கத் தலைவர்கள் இன்றைக்கு இதை ஏற்றுக் கொண்டு, அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, நிர்வாகத்தோடு பேசி முடிவு கண்டு, அதன் மூலம் 4 ஆயிரம் பேர்களுக்கு ஊதிய உயர்வு, மற்ற சலுகைகளை எல்லாம் இந்த 4 மாதக் காலத்திலே இந்த அரசு பெற்றுத் தந்திருக்கிறது.

அதைப்போலவே, இன்னொன்று. 1½ ஆண்டுகாலமாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருந்த இந்தியா சிமென்ட்ஸ் பவுண்டரி என்ற நிறுவனத்தினுடைய அந்த நிலைமைகளை தீர்த்து, இன்றைக்கு அந்த ஆலையும் ஓடுகின்ற முயற்சியில் அரசு தலையிட்டு, அந்தக் காரியத்தையும் செய்து இருக்கிறது. அதற்குத் தலைவராக என்னுடைய இனிய சகோதரர் மாண்புமிகு திரு. வி. பி.





சிந்தன் அவர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள்தான் என்னிடத்திலே பேசி, ஒரு மாத காலமாக பேசி, இன்றைக்கு அது தீர்க்கப்பட்டு அந்த நிர்வாகம் ஓடிக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போலவே 700 தொழிலாளர்கள் இருக்கின்ற இந்தியன் டுபாக்கோ கம்பெனி என்று சொல்லக்கூடிய அந்த ஐ.டி.சி என்ற மல்டி நேஷனல் கம்பெனியில் ஒரு வேலைநிறுத்தம் ஏற்பட்டு, ஒரு கசப்பான நிலைமை திருவொற்றியூர் பகுதியில் இருந்தது. 4 மாதங்களுக்கு முன்பாக, நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையும், நிர்வாகத்தினரையும் அழைத்து, அவர்களுக்குள்ளே இருந்த பிரச்சனைகளை எல்லாம் பற்றி பேசி, சுமுகமான நிலைமையை ஏற்படுத்தி, 700 தொழிலாளர்களைக் கொண்ட அந்த ஐ.டி.சி. என்ற நிறுவனம், திருவொற்றியூர் பகுதியில் உள்ள அந்த நிறுவனம், இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அந்தத் தொழிற் சங்கத்தை நடத்துபவரும் என்னுடைய இனிய நண்பரான, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த திரு. வி. பி. சிந்தன் அவர்கள்தான். எனவே அந்தத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட தகராறையும் போக்கி, இன்றைக்கு ஐ.டி.சி என்ற அந்த நிறுவனம் தொடர்ந்து நடக்கிறது என்பதை, இந்த நான்குமாத காலத்திற்குள் நடைபெற்றது என்பதை, நான் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதைப்போலவே பல நிறுவனங்கள். லிப்டன் இந்தியா நிறுவனத்திலே ஒரு தகராறு இருந்து, அது தீர்க்கப்பட்டது. கார்பராண்டம் யுனிவர்சல், திருவொற்றியூரில் உள்ள ஒரு நிறுவனத்தில் இருந்த தகராறு தீர்க்கப்பட்டது. கரூரில் எஸ். ஜி. பாலகிருஷ்ணன் பிரதர்ஸ் என்ற அந்தக் கம்பெனியில் இருந்த தகராறும், தீர்க்கப்பட்டது. இந்த 4 மாத காலத்திற்குள்ளாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பிறகு, 13 நிறுவனங்களில் உள்ள தகராறுகளை போக்கி, பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்ற வகையில் அரசு முயற்சிகளை எடுத்து வென்றிருக்கிறது என்பதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைய நிலையில் குறிப்பாக தமிழ்நாட்டில் தொழில் அமைதி எப்படியிருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். எத்தனை ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன, எத்தனை பஞ்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன, எத்தனை இன்ஜினியரிங் ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன, எத்தனை ஹோட்டல்கள் மூடப்பட்டு-

இருக்கின்றன என்றெல்லாம் உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். என்னிடம் இருக்கின்ற தகவல்படி, இன்றைய நிலவரப்படி 13 நிறுவனங்களில் இன்றையதினம் கதவடைப்பு இருக்கிறது, இன்றைய தினம் மூடப்பட்டு இருக்கிறது, அந்த 13 நிறுவனங்களில், கோவையில் உள்ள 5 பஞ்சாலைகளும் மூடப்பட்டு இருக்கின்றன.

(பிற்பகல் 1-50)

Padma Mills, Tamil Nadu Spinning Mills, Janardhana Mills, Sri-Hari Mills, Vasantha Mills, இன்ஜினியரிங் துறையில் India Forge, Upper India Forgings Southern Castings, Premier Steels. தஞ்சாவூரில் உள்ள Kasturi Kanniya Gurukula Industrial Section என்ற வகையிலும், மிசலெனியஸ் என்ற வகையில் 3, தோல் தொழிற்சாலை ஒன்றும், அதேபோல் இம்பாலா ஓட்டல் பிரச்சினை என 13 நிறுவனங்களில் ஏறத்தாழ 5 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த 13 நிறுவனங்களில் இருக்கிற 5 ஆயிரம் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு வேண்டிய முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். குறிப்பாக 5 ஆலைகள்—Closed Mills—அது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அன்பிற்குரிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் அதனை மிக தெளிவாக உணருவார்கள். கடந்த 12, 13 ஆம் தேதிகளில் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரையும், கோவையில் இருக்கின்ற சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையும், இவர்களுக்கு நிதி வசதி கொடுக்கின்ற வங்கிகளையும், அதேநேரத்தில் இதை எடுத்து நடத்துகின்ற ஹாண்ட்லூம் துறையைச் சேர்ந்தவர்களையும், ஆக அனைத்து தரப்பு மக்களையும் அழைத்து 2 நாட்களாக நானும் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களும் ஆழமாக ஆய்ந்து அந்த நோய்க்கு என்ன காரணம்? அவைகள் எல்லாம் ஏன் நலிவுற்றன. மற்ற ஆலைகள் எல்லாம் சரியாக இருக்கும்போது இந்த 5 ஆலைகள் மட்டும் தொடர்ந்து இப்படி இருக்கிறதே, இவைகளுக்கு நிதி பற்றாக்குறை இல்லை, அங்கே இருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் நவீன இயந்திரங்களாக இருக்கின்றன. அதேநேரத்தில் அனுபவம் மிக்க தொழிலாளர்கள் நல்ல இளைஞர்களாக இருக்கிறார்கள். எல்லா சார்புகளும் இருந்தும் மற்ற ஆலைகள் எல்லாம் நூற்றுக்கு மேற்பட்ட ஆலைகள் கோவையில் சிறப்பாக இருக்கும்போது இந்த குறிப்பிட்ட 5 ஆலைகள் மட்டும் ஏன் நலிந்து இருக்கின்றன? இந்த நலிவுக்கு என்ன காரணம் என்பதை ஆழமாக, முழுமையாக தெரிந்து கொள்வதற்காக நிர்வாகமும், தொழிற்சங்கமும், நிதி நிறுவனமும் அதேநேரத்தில் அரசு துறையும் இப்படிப்பட்ட பல அம்சங்களை கண்டறிந்து ஓரளவுக்கு ஒரு சுமுகமான நிலைமை விரைவில் உருவாகக்கூடிய ஒரு காலம் வந்து கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்





விரைவாக அந்த ஆலைகளை எல்லாம் திறப்பதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக இந்த மாத இறுதிக்குள் மீண்டும் சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் அழைத்து 12, 13 ஆகிய தேதிகளில் நடந்த அந்த விவாதத்தின் தொடர் நடவடிக்கைகளை எடுத்து ஒரு நல்ல விடையை, ஒரு பரிகாரத்தை, மூடப்பட்ட ஆலைகளுக்கு உண்டாக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதனைப் போலவே இன்ஜினியரிங் துறையில் இருக்கின்ற 5 நிறுவனங்கள் மற்றும் இந்த 3 நிறுவனங்கள், ஆக மொத்தம் 8 நிறுவனங்களில் இருக்கின்ற அந்த நிலவரங்களை ஆய்ந்து விரைவில் அவைகளை எல்லாம் சுமுகமாக தீர்ப்பதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய அன்பிற்குரிய திரு. செங்காளியப்பன், அன்பிற்குரிய மாண்புமிகு ரெங்கசாமி, மாண்புமிகு சின்னராஜ் அவர்கள் எல்லாம் நம்முடைய டெக்ஸ்டையில் இண்டஸ்டிரிசில் இன்றைக்கு வேஜ் ரிவிஷனுக்காக நடைபெற்றுக் கொண்டு வருகின்ற பல பேச்சுவார்தைகள் பற்றி சொன்னார்கள். சைமா இன்றைக்கு 14 கோரிக்கைகளைக்கொடுத்து இருப்பதையும் நினைவுபடுத்தினார்கள். தொழிற் சங்கம் இன்றைக்கு 28 கோரிக்கைகள் கொடுத்து இருக்கிறார்கள் என்ற அந்தப்பாங்கினை எல்லாம் சொன்னார்கள். ஆக பல முறை, கடந்த 2, 3 மாதமாக இன்றைக்கு நிர்வாகமும், தொழிற்சங்கமும் பேசிப், பேசி இன்றைக்கும் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களையும் கடந்த மே மாதம் நான் சந்தித்தபோது அவர்கள் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். சைமாவும் இன்றைக்கு விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக நம்முடைய மாண்புமிகு திருசெங்காளியப்பன், மாண்புமிகு திருரங்கசாமி அவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பு இதே கோவை மாவட்டத்தில் இந்தப் பஞ்சாலையில் ஒரு பிரச்சினை எழுந்தபோது உரிய நேரத்தில் தலையிட்டு ஒரு சுமுகமான நிலையில் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடினார்கள். அப்படிப்பட்ட ஒரு முன் மாதிரியில் இந்தப் பிரச்சினையை கையாள வேண்டும் என்று சொன்னார்கள். நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு இதற்கு ஒரு நல்ல சுமுகமான முடிவை, வேலை நிறுத்தம் ஏற்படாமல், நிச்சயமாக தொழிலாளர்களையும் பாதிக்காமல் அதே நேரத்தில் இன்றைக்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு காரணமாக, ஒரு அம்சமாக இருக்கிற நிர்வாகமும் பாதிக்காமல்—இன்றைக்கு இது ஒரு பிரத்தியேகமான பிரச்சினை. என்னை விட

128-176—19

தொழிற்சங்கத்தில் நீண்ட அனுபவம் பெற்ற திரு. ரெங்கசாமி அவர்களுக்குத் தெரியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு அந்த ஆலை நிர்வாகத்திற்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன.

அதை நான் ஒதுக்கிவிட்டால் தொழில் வளராது. இன்றைக்கு நம்முடைய அனுபவம்—பம்பாயை எண்ணிப் பார்க்கவேண்டும் அண்மையிலே டெல்லியினாலே அறிவிக்கப்பட்ட நியூடெக்ஸ்டைல் பாலிசி நமக்கு சில சாதகங்களையும் தந்திருக்கிறது. அதே நேரத்திலே அறைகூவல்களையும், எச்சரிக்கைகளையும் விட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல, கோவையிலிருந்து வந்து இருக்கிற உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். இன்றைக்கு ஏதோ விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு, 25 விழுக்காடு ஆலை முதலாளிகள் தான் நல்ல முதலீடுகளோடு இருக்கிறார்கள். கட்டுக் கோப்போடு இருக்கிறார்கள். எந்த ஒரு வேலைநிறுத்தம், சங்கடம், சிரமம் வந்தாலும் தாங்கக்கூடிய வலிமை சில ஆலைகளுக்குத் தான் இருக்கிறது.

பெரும்பான்மை ஆலைகள் ஒரு முறை விழுந்துவிட்டால்—நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்—ஒரு முறை நின்றுவிட்டால் மீண்டும் எழுவதற்குப் பல நாட்கள் ஆகும். இன்றையதினம் அந்த ஆலை வரவு செலவைப்பார்த்தால், தொழிலாளிகளுக்காக கொடுப்பது ஒரு 10 சதவிகிதம் தான், இருக்கலாம்.

ஒரு ஆலை முதலாளி 100 ரூபாய் செலவு செய்தால், 10 ரூபாய் தொழிலாளிக்கு 'வேஜ் செக்மென்ட்'—ஆக கொடுக்கிறார். ஆனால், அதற்கு அப்பால், அவர் வாங்கிய கடன்கள், மற்ற விவகாரங்கள் எல்லாம் 2 மாதம் 3 மாதம் என்றால், இதுவே பெரிய பிரச்சினை ஆகி, அதுவே ஒரு நலிந்த நிலை ஆகி விடும். இது பெரிய ஆலைகளுக்கு அல்ல. வசதியானவர்களுக்கு அல்ல. செல்வாக்கு மிக்கவர்களுக்கு அல்ல. நல்ல செல்வம் மிக்கவர்களுக்கு அல்ல. இன்றைக்கு ஆலை நடத்துபவர்கள் எல்லாம் செல்வந்தர்கள் அல்ல.

படித்தவர்கள், டெக்னோகிராட்ஸ், ஆலையிலே பயிற்சி பெற்றவர்கள், டி.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களிலே கடனை வாங்கிக் கொண்டு, உடுமலை, பழனி, பொள்ளாச்சி போன்ற பகுதிகளில், சின்னஞ்சிறிய, நடுத்தரக் குடும்பத்திலே இருப்பவர்கள், அவர்களுடைய சொத்துக்களை விற்று அடமானம் வைத்து, வங்கிகளிலே பணத்தைப் போட்டு, இன்றைக்கு சிறிய சிறிய ஆலைகளை, நூற்றுக் கணக்கான ஆலைகளை வைத்து இருக்கிறார்கள்,



அது இன்றைக்குத் தான் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆலைகள் 2 மாதங்கள் நின்று விட்டால் அதுவே அவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை. எனவே, இந்த அம்சத்தையும் தயவு செய்து, தொழிற்சங்கத் தலைவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும், நிர்வாகத்திலே இருக்கிற அந்தத் தோழர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்து, மாடர்னிசேஷன், வடபுலத்திலே இருக்கக்கூடிய ஆலைகள், ஆந்திரா போன்ற பகுதிகளிலே இதுவரை இல்லாத அளவுக்கு பஞ்சாலைகள் வளர்ந்து வருகின்றன் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு காலத்தில் மான்செஸ்டர் என்று பெருமையாக கோயம்புத்தூரைச் சொல்வோம். இன்றைக்கு அப்படி இல்லை. நமக்குப் போட்டியாக ஆந்திரா வந்துவிட்டது.

வடபுலத்திலே பல இடங்களில் இன்றைக்கு பஞ்சாலைகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. ஒரு கற்பனையிலே கூட சில சகோதரர்கள் இருக்கிறார்கள்—தமிழ்நாடுதான் முன் அணியிலே இருக்கிறது என்று—ஒரு காலத்திலே இருந்தது.

தோல் தொழில் ஒரு காலத்திலே இங்கேதான் இருந்தது. 80 சதவிகிதம் சென்னை துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். அண்மையிலே, 4, 5 ஆண்டுக்காலமாக, மத்திய அரசினுடைய அந்தக் கொள்கையின் காரணமாக, எங்கெங்கு மூலப் பொருட்கள் கிடைக்கிறதோ, ஆங்காங்கே தோல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாம் என்றவுடன், ஆந்திராவிலே அது, பெருகி வருகிறது. மத்தியப் பிரதேசத்தில் பெருகி வருகிறது.

வாணியம்பாடியை, பேரணாம்பட்டை நம்பிக் கொண்டிருந்த நிலை மாறி, இன்றைக்கு எல்லாம் அங்கேயே மூலப் பொருட்கள் இருக்கின்றன. இன்றைக்கு இயந்திரங்களை நம் சகோதரர்கள் தயாரிக்கிறார்கள். ஆலைகள் இருக்கின்றன. தோல் ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளுக்கு வேண்டிய தோல் அங்கே இருந்து வருகிறது.

அதேபோல் பனியன் தொழில். திருப்பூர் என்பது ஒரு காலத்திலே கொடி கட்டிப் பறந்தது. '' எக்ஸ்க்ளுசிவ் மார்க்கட் ''. நாம்தான் அதை விரிவாக்குவோம். அப்போது கல்கத்தாவிலே ஒரு பகுதி அதைச் செய்து கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு பஞ்சாபிலே, அரியானாவிலே அது வளர்ந்து விட்டது. இன்னும் சொல்லப் போனால் 2 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோடி ரூபாய்க்கு சோவியத் ரஷ்யாவிற்கு பனியன்களை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஆர்டர் வந்த நேரத்திலே, அங்கே இருப்பவர்கள் பெற்றுச் சென்றார்கள். ஆனால் நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் மூலமாக அந்த ஆர்டரை திருப்பூருக்கு பெற்றுக் கொடுக்க வசதி ஏற்பட்டது.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே கட்டுக்கோப்பாக சில தொழில்கள் தான் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அதிலே ஒன்று நம்முடைய பஞ்சாலை. அதில் நாம் கையாள்கின்ற அவசரத்தினாலோ, உற்சாகத்தினாலோ சில நேரங்களில் ஏதாவது பிழை செய்துவிட்டால், 90, 100 ஆண்டுகளாக இருக்கிற அந்தத் தொழில் நசித்து விடுமோ என்பதை தொழிற்சங்கத் தலைவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேசமயம், நிர்வாகத்திலே உள்ளவர்களும் மாடர்னிசேஷன் செய்து இருக்கிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு ஆள் குறைப்புச் செய்யலாம் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது.

நிச்சயமாக இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும், அப்படிப்பட்ட முயற்சிக்கு என்றைக்குமே—தொழிலாளி வேலை இழக்கிற வாய்ப்புக்கு—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உறுதுணையாக இருக்கமாட்டார்கள் என்பதை மட்டும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு சொல்லிக் கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில், நாம் நவீனப்படுத்தாவிட்டால் மற்ற பகுதி மக்கள் வேகமாக, தரமான பொருள்கள் செய்கின்ற நேரத்தில் நாம் தரம் இல்லாத பொருட்களைச் செய்தால், நம்முடைய தொழிலுக்குச் சந்தை இருக்காது.

நமக்குப் போட்டி இருக்கிறது. அவைகளை எல்லாம் எண்ணிப்பார்த்து, மாடர்னிசேஷன் செய்துவிட்டோம். எனவே நீங்கள் வேலைப் பளுவை திருத்தி அமைக்கின்ற வழியைக்காணுங்கள் என்று கேட்கிறார்கள். இது ஆழமான பிரச்சினை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் கட்டத்திலே நாங்கள் எங்களுடைய உணர்வுகளைச் சொல்லத் தயாராக இல்லை.

(பிற்பகல் 2—00)

இன்றைக்கு நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அடுத்த கட்டமாக, கமிஷனரைவிட்டு, அடுத்த சில நாட்களுக்குள்ளாக பேசச் சொல்வோம். இடைவெளி குறையும் என்று கருதுகிறேன். கடைசியில் அவசியம் ஏற்பட்டால் ஒரு சுமுக நிலையை உருவாக்குவதற்குக் கட்டாயமாகத் தமிழக அரசு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தலையிட்டு எப்படி 82-ஆவது ஆண்டு போனஸ் பிரச்சினையிலே சுமூகப் பிரச்னையை ஏற்படுத்தி, ஏறத்தாழ, இரண்டு இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு அமைதியை உருவாக்கினார்களோ, அப்படி இன்றைய தினம் இந்த வேஜ் ரிவிஷனிலேயும் நிச்சயமாக இந்த அரசு மிகுந்த அக்கறையோடு, பொறுப்புணர்ச்சியோடு, தலையிட்டு, உரிய வகையில், தொழிலும் கெடாமல், தொழிலாளர்கள் நலனும் கெடாமல் ஒரு நிலையை உருவாக்கும்—அதுதான் எங்களுடைய அணுகுமுறை. ஏற்கனவே, என் போன்றவர்களுக்கு ஒரு அச்சம் இருக்கிறது.





இன்றைக்கு நமக்குப் போட்டி வேறு பக்கத்திலேயிருந்து வருகிறது; அறைகூவல் வந்து கொண்டு இருக்கிறது; வளர்ந்த இந்தத் தொழிலை நாம் இழந்து விடக் கூடாது. அதே நேரத்திலே தொழிலாளர்களுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும், இன்றைக்கு ரேஷனலைசேஷன் என்று சொல்லியோ, மாடர்னைசேஷன் என்று சொல்லியோ நவீனப்படுத்துகிறேன், சீரமைக்கிறேன் என்றெல்லாம் சொல்லி அந்தப் பணிப் பாதுகாப்புக்கு நிச்சயமாக ஊறு தேடாத வகையில் ஒரு சுமூகமான நிலையில் முடிவை எடுப்பதற்கு திறந்த மனத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் இன்றைய தினம் முயன்று கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தினுடைய வாயிலாகத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், அதே நேரத்திலே சைமா போன்ற ஆலை முதலாளிகளுடைய சங்கமாக இருக்கின்ற, நிர்வாகத்திலே இருக்கின்ற அந்தச்சகோதரர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து அந்தக் காலக் குறியீடுகளையெல்லாம் நீங்கள் மனத்திலே வைத்துக்கொண்டு ஒரு திறந்த மனத்தோடு விரைவாகப் பேசி ஒரு சுமூகமான, முடிவை எடுக்க வேண்டும். எங்கள் உதவி தேவைப்படுகின்ற நேரத்திலே, நிச்சயமாக என்றைக்கும் நாங்கள் விரிமனத்தோடு இருக்கிறோம்; என்றைக்கும் காத்திருக்கிறோம் அந்தப் பணிக்கு நாங்கள் உறுதுணையாக இருந்து நிச்சயமாக அந்த இரண்டு இலட்சம் தொழிலாளர்களுடைய குடும்பத்திலே ஒரு அமைதியை, அதே நேரத்திலே கட்டுக்கோப்போடு இருக்கின்ற தன்மைமிக்க அந்த ஜவுளித் தொழில், மான்செஸ்டர் என்று கருதப்படுகின்ற அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழில் நசிந்துவிடாத ஒரு நிலை இந்த இரண்டு கோணங்களோடு, இரண்டு அணுகுமுறையோடு இந்தப் பிரச்சினையை அணுகுவோம் அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஷுகர் இன்டஸ்ட்ரீஸ் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, தமிழகத்தில் 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இதிலே கூட்டுறவுத் துறையிலே 11 ஆலைகள்; தனியார் துறையிலே 8 ஆலைகள்; அதைப்போலவே மாநில அரசின் மேற்பார்வையில் இன்றைக்கு இயங்குபவை 2; மத்திய அரசின் பார்வையில் 1; ஆக இன்றைய தினம் தமிழ்நாட்டில் 22 ஆலைகள்; 20,000 தொழிலாளர்கள் அதிலே பணிபுரிந்து வருகிறார்கள். என்னுடைய அருமைச் சகோதரர்களெல்லாம் சொன்னதைப் போல இன்றைக்கு, கடந்த 31—3—1985-ஓடு அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இன்றைக்கு ஒப்பந்தம் வேண்டும். வேஜ் போர்டு அமைப்பதைப்பற்றி தன்னுடைய நிலையிலேயிருந்து ஐ.என்.டி.யூ.சி. தொழிற்சங்கத் தலைவர் அன்பிற்குரிய ரெங்கசாமி அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஐ.என்.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்த அதிலே ஒரு காலத்திலேயிருந்த நம்மூடைய தொழிலாளர் அமைச்

சர் அஞ்சையா அவர்கள் அண்மையில் டெல்லியில் தெளிவாக, திட்டவட்டமாக ஒரு அறிவிப்பைக் கடந்த 16-3-85 அன்று சொல்லி இருக்கிறார்கள். The Labour Mininiste Mr. Anjiah announced in Parliament to-day the Central Government's deceision to set up third Wage Board for the Sugar Industry which should submit its report within one year. ஒரு ஆண்டுக்குள்ளாக ஷுகர் இன்டஸ்ட்ரிக்கு ஒரு வேஜ் போர்டை அமைத்து ஒரு ஆண்டுக்குள்ளாக சீரமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள், பாராளுமன்றத்திலே. ஆனால் உங்கள் அச்சத்திலேயும் பொருள் உண்டு. அந்த அச்சத்தோடு நான் பார்க்கிறேன். இதற்கு முன்பெல்லாம் அந்த வேஜ் போர்டிலே 2 ஆண்டு, 4 ஆண்டு, 5 ஆண்டு என்று தாமதமாகிக் கொண்டே வந்து, அதன் காரணமாக மெத்தக் கடினமான ஒரு போக்கை தொழிலாளர் சகோதரர்கள் அனுபவித்தார்கள். அது இருக்கக்கூடாது என்பதுதான் இன்றைக்கு மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் திரு. ரெங்கசாமியைப் போலவே அரசு கருதுகிறது.

எனவே, இந்த வாக்குறுதியை அடிப்படையாக வைத்துக் கொண்டு, வருகிற 29-ஆம் தேதி டெல்லியிலே தொழிலாளர் நல அமைச்சருடைய மாநாடு நடைபெற இருக்கிறது, அதற்கு நான் செல்கிறேன், செல்லுகின்ற நேரத்தில், உங்கள் உணர்ச்சிகளையெல்லாம் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, நீங்கள் பாராளுமன்றத்திலே ஓர் ஆண்டுக்குள்ளே இதை அறிவித்தபிறகு, அதனுடைய பரிந்துரையை, ரிப்போர்டைக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள் என்பதையும் சொல்லி, அதற்கு அப்பால் இங்கேயிருக்கின்ற நிலவரங்கள், இங்கேயிருக்கின்ற சில பிரச்னைகளையெல்லாம் கொண்டு வந்து ஒரு சுமூகமான தீர்வை இன்றைய தினம் அந்தச் சர்க்கரை ஆலைத் தொழிலிலேயும் உருவாக்குவோம். அதற்குப் பிறகு டெல்லி என்ன சொல்கிறது என்பதையும் இங்கேயிருக்கிற தொழிற்சங்கத்தினுடைய பார்வைக்குக் கொண்டு வருவேன். உங்களைக் கலந்து ஒரு சுமூகமான நல்ல முடிவை எடுத்து, 20,000 தொழிலாளர்கள் அதை நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பைக் கொடுக்கலாம்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு திரு. ரெங்கசாமி அவர்களும் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும், மற்ற நண்பர்களும் நம்முடைய பத்திரிகையாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக பலேகர் அவார்ட் இம்ப்ளிமென்டேஷனிலே சில குறைகளெல்லாம் இருக்கின்றன என்று சொன்னார்கள்.





குறிப்பாக, இன்றையதினம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பலேகார் அவார்ட் என்பது 43 நிறுவனங்களுக்கு அப்ளை ஆகிறது. சோ பார் இம்ப்ளிமென்டட் 40 நிறுவனம் என்ற தகவலை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற 40 பத்திரிகை நிறுவனங்களுக்கு இந்த பலேகர் அவார்ட் என்பது பொருந்தும். இன்றைய தினம் 40 பேர்கள் அதை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 3 பேர் -'நாட்இம்பிளிமென்டட்' ஒன்று கலைமகள்; இரண்டாவது ராம்நாத் பப்ளிகேஷன், மூன்றாவது கிராம ராஜ்யம் இந்த 3 பத்திரிகை நிறுவனங்கள்தான் பலேகர் அவார்ட்டைச் செயல்படுத்தவில்லையென்று சொல்கிறார்கள். என்றாலுங்கூட தமிழ்நாட்டிலேஇருக்கிற நம்முடைய பத்திரிகையாளர்களும் உழைக்கும் பத்திரிகையாளர்களும் தொடர்ந்து ஒரு வேஜ் போர்ட் போட வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, 1979-ஆம் ஆண்டுதான் இந்த வேஜ் போர்டைப் போட்டார்கள். 5 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டது. மீண்டும் ஒரு பரிசீலனை, மற்ற துறைகளிலே இருப்பதைப்போல, இந்த நியூஸ்பேப்பர் இன்டஸ்டிரியிலும், துறையிலும் இருக்க வேண்டுமென்ற கருத்தில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

Last revision of Wages for the Newspaper Industry was brought into force from October 1979 throughout the country under the Palekar Award. The Madras Union of Journalists and the Indian Federation of Working Journalists have been urging the Government of India to constitute a New Wage Board or Tribunal for Revision of wages for the employees of the Newspaper Industry since an upward revision is long overdue. The employees of the Newspaper Industry, particularly the Journalists, work under great stress and strain and their demand for reasonable wages should be considered. I appeal to the Centre on behalf of the Government of Tamil Nadu to constitute a wage Board at the earliest and that interim relief should be announced soon.

என்ற அந்தக் கோரிக்கையைஇந்த மன்றத்தின் சார்பாக டெல்லிக்கு வைக்கிறேன். ஒரு வேஜ் போர்டை விரைவாக அவர்கள் நியமிக்க வேண்டும், 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது, விலைவாசிகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன; பல துறைகளிலே இப்படிப்பட்ட முயற்சிகளையெல்லாம் எடுக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலிலும் எடுக்கிறார்கள். அந்த வகையிலே பத்திரிகைத் துறையிலும் அவர்கள் எடுப்பதற்கு டெல்லி விரைவாக வேஜ் போர்டை அமைத்து அவர்கள் இந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற அந்த வேண்டுகோளைத் தமிழக அரசின் சார்பாக, டெல்லியை நான் கேட்கிறேன்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1985 ஜூன் 19

அடுத்து நம்முடைய அன்பிற்குரிய திருப்பரங்குன்றம் திரு. மாரிமுத்து, மதுரை சீதாலட்சுமி மில்லிலே ஒரு தொழில் தகராறு ஏற்பட்டு 3 தொழிலாளர்களை அவர்கள் வேலையிலிருந்து நீக்கிய காரணத்தால் அங்கே 10, 15 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். சீதா லட்சுமி மில்லிலே அந்த வேலை நிறுத்தத்தைப் போக்குவதற்காக, கடந்த 4 நாட்களுக்கு முன்னாலே, நான் மதுரை சென்ற நேரத்திலே, நேரே தலையிட்டேன். 3 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து, மதுரை சீதாலட்சுமி மில்லுக்கு, தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் நேற்று, 18—6—1985 அன்று, மதுரைக்குச் சென்று இரு தரப்பாரிடமும் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்ட 3 தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள நிர்வாகம் நேற்றைய பேச்சில் இணங்கவில்லை.

எனவே, அப்பிரச்னையை, நடுவர் தீர்ப்புக்கு, வாலன்டரி ஆர்பிட்ரேஷன் அல்லது தொழில் தகராறு சட்டப் பிரிவு 10(2)ன் கீழ் வாலன்டரி அட்ஜூடிகேஷனுக்கு விட்டுவிடலாம் என்ற ஆலோசனையை நேற்றைக்குத் துறையின் சார்பாக நாங்கள் தெரிவித்தோம். மேற்கொண்டு இதில் தனித் துணை ஆணையர் வருகிற 28—6—1985 அன்று பேச்சு வார்த்தை நடத்தயிருக்கிறார். இப்பேச்சு வார்த்தையில் இருதரப்பினரிடையே ஒரு இணக்கமான உடன்பாடு ஏற்பட எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, சீதாலட்சுமி மில்லிலே ஒரு சுமுகமான முடிவு உருவாகும் என்பதை நம்முடைய திருப்பரங்குன்றம் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல், புதுக்கோட்டையில் நமனசமுத்திரத்திலே லட்சுமி சண்முகா டெக்ஸ்டெயில்சிலே, 600 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து அந்த ஆலையில் இருக்கிற சங்கடங்களைப் போக்குவதற்கு இன்றைக்கு முயன்று கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் ஆட்டோமொபைல் இன்டஸ்ட்ரியிலே ஒரு சிறந்த இடத்தை வகிக்கின்ற எண்ணூரிலே இருக்கிற அசோக் லேலன்டிலே இருக்கிற பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். சஸ்பென்ஷன் ஆப் ப்ரடக்ஷன், அதாவது உற்பத்தியை முடக்க, லே ஆப் செய்யாமல், குளோஷர் செய்யாமல், தொழிலாளர்களுக்கு வரவேண்டிய பணமெல்லாம் விரைவில் கிடைக்காமல் செய்வதற்கு ஏப்ரல் மாதம், மே மாதம், ஜூன் மாதம், ஆக சுமார் 75 நாட்களாக ஒரு முறையைக் கையாள்வதாகச் சொன்னார்கள். எனவே, தெளிவாகவே, எனது தொழிலாளர் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறேன்.



1985 ஜூன் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இன்னும் 4, 5 நாட்களுக்குள் நிர்வாகத்தினரை அழைத்துப் பேச இருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தை அரிபட் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பேசியிருக்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கத் தலைவர், வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லோரையும் அழைத்து, நிர்வாகத்தினரையும் அழைத்துப் பேசி, சுமுகமான முறையிலே ஹோசூர் அசோக் லேலான்ட் தொழிற் சாலையைத் திறப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு, இப்போது முதல் கட்ட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2—10)

அதைப்போன்று ஏற்கெனவே மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்களுக்கு விளக்கம் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். அவற்றை எல்லாம் திறந்து தொழிலாளர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பு அளிக்க இந்த அரசு முயலும்.

குறிப்பாக நிறைய விவரங்கள் இருக்கின்றன என்றாலும் வாய்ப்பு வரும்போது, சந்தர்ப்பம் வரும்போது அவற்றை எல்லாம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அருமை சகோதரர், திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே இருந்தால் சில விவரங்களைச் சொல்லியிருக்கலாம். அவசர வேலையின் காரணமாக செல்லவேண்டியிருக்கிறது ான்று என்னிடம் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்குள்ள கவலை ால்லாம், குறை, நிறைகளைப் பற்றிச் சொல்லலாம். இப்போது பொறுப்பில் இருக்கும்போது எல்லா நன்மைகளையும் செய்தோம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் எல்லாம் குறை ான்று சொல்ல முடியாது. இருக்கிற சூழ்நிலைகளை அனுசரித்து, ட்டங்களை வைத்து, ஆர்வத்தோடு, அக்கறையோடு விசுவாசத் தாடு, இடதுசாரி கட்சிகளுக்கு இருக்கிற உணர்வுகளோடு தாழிலாளர்கள் நலன் கருதி, பொறுப்புகளை ஏற்றிருக்கிற ாங்கள் என்னென்ன செய்ய முடியுமோ அதை மற்ற அரசு ளைவிட அதிகமாகவே செய்து வருகிறோம். இடதுசாரி ட்சிகள் ஆளுகின்ற அரசை விட, மற்ற மாநில அரசுகளைவிட, றிப்பாக தொழிலாளர் அரசு என்று சொல்லுகின்ற மேற்கு ங்க அரசைவிட பல காரியங்களைச் செய்வதில் மாண்புமிகு, ாட்சித் தலைவர் வென்றிருக்கிறார்கள், நின்றிருக்கிறார்கள், ன்லத்திருக்கிறார்கள் என்பதிலே எங்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை ருக்கிறது.

குறிப்பாக திருப்பூர் பற்றி இங்கே சொன்னார்கள். 15,000 அல்லது 20,000 தொழிலாளர்கள் 4 மாதங்களாக பனியன் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்து, முதலாளிகள் ஊதிய உயர்வு கொடுக்காமல் அதேநேரத்தில் டி.என்.எல். அகவிலைப்படியும் கொடுக்கமாட்டோம் என்ற சொன்ன நேரத்தில் 10 (பி) வந்தது. இந்த 10 (பி) மேற்கு வங்க அரசில் இல்லை. இன்டஸ்டிரியல் டிஸ்டிபியூட் ஆக்டுக்கு அமென்ட்மென்ட் வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் அதில் மாறுபட்டார்கள். அதிலே உடன்பாடு இல்லை அவர்களுக்கு. அது அவர் சார்ந்திருக்கிற கட்சியின் நிலை ஆனால் இந்த 10 (பி) வந்த பிறகுதான் அவர்கள் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில் தோன்றிய பிளான்டேஷன் பிரச்சனை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதைப்போன்று திருப்பூரில் இருக்கிற 15,000 தொழிலாளர்களுக்கு இந்த 10 (பி) தான் பயன்பட்டது

அதைப்போன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளிப்பன் வெற்றி பெற்று வந்திருக்கிற கோவையில் இருக்கிற பஞ்சாலை போனஸ் பிரச்சனையில் 10 (பி) தலையிட்டுத்தான் வேலை நிறுத்தம் தடுக்கப்பட்டது. கோர்ட்டுக்குப் போவதும் தடுக்கப்பட்டது. ஆக, மூடப்பட்டதும் தடுக்கப்பட்டு, வேலை நிறுத்தமும் தடுக்கப்பட்டது இந்த 10 (பி) என்கிற ஆயுதத்தினால்தான். ஆனால் இந்த ஆயுதத்தைக் கொண்டு வந்ததால் இது தொழிலாளர் நல அரசு இல்லை என்று சொல்கிறார்கள்.

நான் வங்கத்தை மதிப்பவன். அதை ஆளுகின்ற சகோதரர்களைப் போற்றுபவன். ஆனால் அவர்கள் எடுக்காத சில நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். நாம் எடுக்காத சிலவற்றை அவர்கள் எடுத்திருக்கக்கூடும். இதை எல்லாம் நீங்கள் ஒட்டுமொத்தமாகப் பார்த்து, பாராட்டியிருந்தால் நிச்சயமாக எங்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். 10 (பி) பற்றி உங்களுக்குத் தெரியும். என்னை விட திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் விவரங்கள் எல்லாம் வைத்திருக்கிறேன். இந்த வேலை நிறுத்தத்தை எப்படித் தடுக்கலாம் என்று கேட்டார்கள். தடுப்பது என்பதல்ல. வேலைநிறுத்தம் அராஜகமாக இருந்தால், பொது நலனுக்கு உகந்ததாக இல்லாத நேரத்தில் அராஜகமாக இருந்தால், பொது நலனுக்கு உகந்ததாக இல்லாத நேரத்தில், பப்ளிக் யுட்டிலிட்டி சர்வீஸ் இருக்கிற நேரத்தில் தொழிற்சங்கம் யாரிடம் இருக்க வேண்டும் என்பதற்காக தொழிலாளர்கள் களமாக ஆக்கப்படுகிறபோது, காயாக ஆக்கப்படுகிறபோது அதை தடுத்து நிறுத்தி, 'தேர்டு பார்ட்டியாக' இருக்கிறார்களே மூன்றாவது பகுதி மக்கள், அவர்களுடைய நலன் காப்பது ஒரு மக்கள் நல அரசின் கடமை. அந்தக் கடமையைச் செய்வதுதான்



இந்த 10 (பி). இன்னும் சொல்லப்போனால் 10 (பி) வந்தது உங்களுக்குத் தெரியும். 1982 ஆகஸ்ட் 15லிருந்து அது அமுல்படுத்தப்படுகிறது. நான்கு தொழில்களிலே இன்றைக்கு அமைதி இருக்கிறது.

இன்றைக்குத் தொழிலாளர் மத்தியிலே பேச்சுவார்த்தை, வாலன்டரி ஆர்பிட்ரேஷன் என்று சொல்கிறார்கள். அதை அரசு விரும்புகிறது. இதிலே நாங்கள் முன்மாதிரியாக இருந்து, அரசு நிறுவனங்களிலே நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துகிறோம். ஆனால் இன்றைக்கு அதற்கு ஒரு சூழ்நிலையை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய அன்புக்குரிய திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழிலாளர் நலச்சட்டங்களை இம்ப்ளிமென்ட் செய்கின்றபோது அதிலே சற்று சுணக்கம் இருக்கின்றது என்றும் செட்டில்மென்ட் ஆப் டிஸ்ப்யூட்ஸ் தொழிலாளர்கள் தகராறைத் தீர்ப்பதில் கவலையற்ற நிலைமை இருக்கிறது என்றும் சொல்லி சில விவரங்களையும் சொன்னார்கள். ஒரு விவரத்தை இந்த மன்றத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

1984-ஆம் ஆண்டிலே நம்பர் ஆஃப் ஸ்ட்ரைக்ஸ் அன்ட் லாக் அவுட்ஸ் தமிழ்நாட்டிலே நடைபெற்றது 211. இந்த ஸ்ட்ரைக்ஸ் அண்ட் லாக் அவுட்ஸிலே நம்பர் ஆப் ஒர்க்கர்ஸ் இன்வால்வ்ட் 1,12,312. அதாவது இவ்வளவு தொழிலாளர்கள் அன்றைக்குப் பாதிக்கப்பட்டார்கள். இதன் காரணத்தால் நம்பர் ஆப் மேன் டேஸ் லாஸ்ட் அதாவது வீணான உழைப்பு நாட்கள் 37,08,401. அதாவது 211 ஸ்ட்ரைக்ஸ் அண்ட் லாக் அவுட்ஸில் 1,12,312 பேர் பாதிக்கப்பட்டு 37,08,401 மேன் டேஸ் லாஸ் ஏற்பட்டது. ஆனால் அதேநேரத்தில் மேற்கு வங்கத்தில் நம்முடைய அன்புக்குரிய இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கின்ற அரசோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. ஒரு தகவலுக்காக ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். வெஸ்ட் பெங்காலில் நம்பர் ஆப் ஸ்ட்ரைக்ஸ் அன்ட் லாக் அவுட்ஸ் 1984-ல் நடைபெற்றது 183. அதிலே நம்பர் ஆப் ஒர்க்கர்ஸ் இன்வால்வ்ட் 3.70,470 நம்பர் ஆப் மேன் டேஸ் லாஸ்ட் 2,94,70,751. அப்படி என்றால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மேன் டேஸ் லாஸ்ட் 37,08,401 தான். ஆனால் அங்கே 2,94,70,751. இங்கே 1984-ல் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,12,312. அங்கே பாதிக்கப்பட்டவர்கள் 3,70,470 பேர். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதேனும் கேட்கவேண்டும் என்றால் கடைசியில், நான் பேசி முடித்தற்குப் பிறகு விளக்கம் கேட்பதுதான் சரியாக

இருக்கும். உங்களுக்கு அந்த உரிமை உண்டு. எனவே குறை இருந்தால் திருத்திக்கொள்கிறேன். பிறகு சொல்லுங்கள். நான் இவ்வாறு இந்த விவரங்களைக் கூறியது குறை சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல. அங்கே பல முற்போக்கானவற்றைச் செய்திருக்கிறார்கள்; இடதுசாரி அணியில் சென்றிருக்கிறார்கள்; சமதர்மத்தைப் புகுத்தியிருக்கிறார்கள்; தொழிலாளர் நலன்கள் பலவற்றைச் செய்திருக்கிறார்கள்; ஆனால் ஸ்ட்ரைக்ஸ் அன்ட் லாக் அவட்ஸ் தமிழ்நாட்டைவிட அங்கே அதிகமாக நடத்திருக்கின்றது.

இவ்வாறு அங்கே அதிகமாக நடைபெற்றதன் காரணத்தால் அது பிற்போக்கான அரசு என்று நான் சொல்லமாட்டேன்; தொழிலாளர் விரோத அரசு என்று ஜன்மத்துக்கும் சொல்ல மாட்டேன். அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவ்வாறு கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் ஏதோ ஒரு குறை இருந்திருக்கின்றது. அவர்களிடத்திலே 10(பி) இல்லை. நம்மிடத்திலே (10) பி இருந்ததால்தான் திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் நம்மால் அமைதியை உண்டாக்க முடிந்தது. கன்னியாகுமரியில் ரப்பர் ப்ளேன்டேஷனில் அமைதி உண்டாக்க முடிந்தது. கோவை பஞ்சாலையில் அமைதியை உண்டாக்க முடிந்தது. அதேபோல் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் ஒரு போராட்டம் வந்தபோது 10பி-யை இன்வோக் பண்ணி அந்த சர்க்கரைத் தொழிலாளர்கள் மத்தியில் அமைதி உருவாக்கப்பட்டது. அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எந்தெந்த வகையில் முடியுமோ அந்தந்த வகையில் சட்டங்களைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகின்றது.

அடுத்து இன்னொரு கருத்தை நான் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தில் பெருமை மிக்க பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் அண்மையில் அமெரிக்கா திருநாடு சென்று சோவியத் நாட்டுக்கு சென்று நமக்கெல்லாம் பெருமை அளித்திருக்கிறார்கள். இந்தியா இன்றைக்கு வாழ்த்திக்கொண்டிருக்கின்ற அந்தப் பெரிய நல்ல செய்தியை, சுற்றுப்பயணம் பற்றிய செய்தியை கடந்த 15, 20 நாட்களாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றது. நம்முடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், அவர்களுடைய சுற்றுப்பயணத்தின் ஊடே திரும்பி வருகிறபோது நேற்றைக்கு முன்தினம் ஜெனிவா சென்று இருந்தார்கள். அங்கே தான் இன்டர்னேஷனல் லேபர் ஆர்கனைஷேஷனின் 71-வது செஷன் நடந்தது. அதில் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியிருக்கிறார்கள். அந்த 71-வது செஷன் ஜெனிவாவில் நடந்திருப்பது ஜூன் மாதம் 17-ஆம் தேதி. அங்கே பிரதமர் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதை இங்கே நினைவுபடுத்தி அந்த உணர்வை மாண்புமிகு புரட்சித்தலைவர்





அவர்கள் எப்படிச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்று சில விவரங்களை ஒப்பிட்டுக் காட்டி உரையை முடிக்க விரும்புகிறேன். குறிப்பாக அவர்கள் சொன்னார்கள். பல விவரங்களையெல்லாம் சொல்லிவிட்டு, பல கருத்துக்களை எல்லாம் பாராட்டிவிட்டு, 'Referring to vast number of workers in the unorganised sector in developing countries, Mr. Gandhi called upon I.L.O. to suggest ways in which they could be made major focus of activities.' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-20)

இன்றைக்கு தமிழகத்திலே எடுத்துக் கொண்டால், ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸ் என்ற வகையில் டெக்ஸ்டைல்ஸ் இருக்கிறது. பிளான்டேஷன் இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் இருக்கிறது. என்ஜினீயரிங் இருக்கிறது. இவைகள் தான் இன்றைக்கு கட்டுக்கோப்பான நிறுவனங்கள், இவைகளில் 10 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அன்-ஆர்கனைஸ்டு என்று சொல்லக் கூடியவைகளில், ஹேண்ட்லூம் இருக்கிறது. அக்ரிகல்சர் லேபர் இருக்கிறது. அதேபோல மேன்யூவல் லேபர் எனச் சொல்லக் கூடிய உடல் உழைப்பினாலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே பல பிரிவுகள் இருக்கின்றன. என்னிடத்திலே இன்னும் விவரம் இருக்கிறது— ஷாப்ஸ் மற்றும் எஸ்டாபிளிஷ்மென்ட் என்று சொல்லக் கூடிய கடைகள் இருக்கின்றன. அதில் 3 இலட்சம் கடைகள் இடம் பெறுகின்றன. அதேபோல பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் டெக்ஸ்டைல்ஸ் துறையிலே, பிளேன்டேஷன் துறையிலே, என்ஜினீரிங் துறையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு இருப்பது போன்ற சலுகைகள் கிடைக்க முடியாத சங்கடம் இருக்கிறது.

கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட் என்று சொல்லக்கூடிய துறையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உணவகங்கள் இருக்கின்றன. அதில் ஏறத்தாழ 75 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பீடி எஸ்டாபிளிஷ்மெண்ட்டில் ஏறத்தாழ 2 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதனைப் போலவே ஹேண்ட்லூம் துறையில் 14 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அக்ரிகல்சர் வொர்க்கர்ஸ் என்ற வகையில், எனக்குக் கிடைத்த விவரத்தின்படி 80 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இப்படி ஏறத்தாழ 1 கோடி பேர்கள் அன்-ஆர்கனைஸ்டு செக்டாரிலே இருந்து கொண்டிருப்பதால், அவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாமல், தொழிலாளர் நலச் சட்டங்கள் அவர்களுக்கு எந்தவித பயனும் தராமல் பைனான்சியல் சூழ்நிலையிலும் எந்தவித மாறுபாடும் இல்லாமல், இந்த ஒரு கோடி பேர்களும் இருக்கிறார்கள்.

இவர்களைப் பற்றித்தான் ராஜீவ் காந்தி அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த அன்-ஆர்கனைஸ்டு லேபர் அனை வரும் முக்கியத்துவம் பெற வேண்டும், அவர்களுக்கும் அந்தச் சலுகைகள் போய்ச் சேரவேண்டும் என்று ஐ.எல்.ஓ.விலே சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே கேட்டார்கள். அன்-ஆதரைஸ்டாக 15 இலட் சம் பேர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அவர்களுக்கு முதலிலே சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப் பட வேண்டும் என்றார்கள்.

ஆர்கனைஸ்டு என்ற வகையில் 10 இலட்சம் பேர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ, அவைகள் அத்தனையும் இந்த ஒரு கோடி பேர்களுக்கும் கொண்டு வரவேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களின் விருப்பமும். அதற் காகத்தான்—பில்டிங் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படும் கட் டிடத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நாடு வளர்ந்து வரும் நிலையில் பல கட்டிடங்கள் ஆங்காங்கே கட்டப்படு கின்றன. அந்தத் தொழிலாளர்களுக்கு, இந்த வகையில்தான், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கட்டிடத் தொழிலாளர்களுக்காக சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதைப் போலவே அக்ரிகல் சர் தொழிலாளர்களுக்காகவும் இரண்டு சட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது.

அவைகளாவன—

(1) 'Accident Relief Scheme for Agricultural Labourers—Small and Marginal farmers and village Artisans'
(2) Insurance-cum-Retirement Benefit Special Scheme for the workers in the unorganised sector.'

அதாவது பணிக்காலத்தில் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிற திட்டம். அதனைப் போலவே 58 வயதிற்குப்பிறகு இண்டஸ்ட்ரியல் வொர்க்கர் ஒருவருக்கு என்ன பாதுகாப்பு கிடைக்கிறதோ அதைப்போலவே இந்த அன்-ஆர்கனைஸ்டு லேபருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது ஒரு திட்டம். சிங்காநல்லூரிலே லஷ்மி மில்ஸ்லே வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு 58 வயதிற்குப் பிறகு என்னென்ன பாதுகாப்பு, என்னென்ன நலன்கள் கிடைக் கிறதோ. அது நன்னிலத்திலே உள்ள ஒரு விவசாயிக்கு 58 வயதிற்குப் பிறகு கிடைக்காத சூழ்நிலையிருக்கிறது. அவர் களுக்கு எந்தவித பாதுகாப்பும் கிடையாது. ஆகவே, ஒரு ஆலைத் தொழிலாளிக்கு என்ன பாதுகாப்பு அளிக்கிறோமே அதனைப் போலவே ஒரு அக்ரிகல்சர் லேபருக்கும் கிடைக்க வேண்டும்.





தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இன்றைய சூழ்நிலையில் unbalanced growth, lopsided growth என்று கொண்டு, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கூறியது போல் அன் ஆர்கனை- ஸ்டு லேபருக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், அவர்கள் கவனிக்கப்பட வேண்டும், அவர்களை உயர்த்தவேண்டும். இண்டஸ்ட்ரியல் வொர்க்கர்களோடு அவர்களையும் கொண்டு வரவேண்டும் என்றுதான். 18-ஆம் தேதியன்று அவர்கள் எந்தக் கருத்தைச் சொன்னார்களோ அந்தக் கருத்தைத் தான் மனத்திலே கொண்டு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, உடல் உழைப்புச் செய்கிற தொழிலாளர்களுக்காக, ஹேண்ட்லூமிலே இருக்கிற தொழிலா ளர்களுக்காக, விவசாயிகளாக இருக்கிற தொழிலாளர்களுக்காக, பீடித் தொழிலாளர்களுக்காக இன்னும் அதுபோல் உள்ள ஒரு கோடி தொழிலாளர்களுக்காக—இந்த அரசு பெருமைப்பட லாம்—இந்த அரசு தொழிலாளர்களுக்கு என்ன செய்திருக் கிறது ? என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்களே— இந்த ஒரு கோடி பேர்களுக்கும் நலனைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று முயற்சி எடுத்து, அவர்களுக்கு தன்னால் முடிந்த அளவுக் குச் செய்து, அந்த சமுதாயத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த அளவிற்கு ஒரு கோடி பேர்களுக் காக வாதாடுகிற ஒரு அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இருக்கிறது.

இதுபோல் இன்னும் பலவிவரங்களைக் குறித்தும் என்னுடைய மதிப்பிற்குரிய அருமை சகோதரர்கள் எல்லாம் சொன்னார்கள்.

கடைசியாக ஒரே ஒரு கருத்து. இன்றைக்கு இந்தியத்துணைக் கண்டத்தையே உலுக்கிக் கொண்டிருப்பது போபால் விஷ வாயுச் சம்பவம். உங்களுக்குத் தெரியும். தொழிற்சாலைகளிலிருந்து விஷ வாயுவை விடக்கூடாது என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. நம்முடைய தமிழ் நாட்டிலே கூட கோத்தாரி ஆலையில் அதுபோன்ற சம்பவம் ஏற்பட்டது. ஏற்பட்ட பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு சம்பந்தப் பட்ட சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் அங்கேயே இருந்து, ஒரு மாதம் அந்த ஆலை மூடியிருந்து அதனை சரி செய்த பிறகு தான் இன்றைக்கு அந்த ஆலை ஓடுகிறது. அதற்குப் பிறகு இன்றைய தினம் தமிழ் நாட்டில் கோத்தாரியைப் போல, மணலியைப் போல, கெமிக்கல்ஸ் காம்ப்ளக்சிலே இருக்கிற அந்த ஆலைகளிலிருந்து விஷ வாயு வரக்கூடாது என்பதற்காக நம்முடைய டாக்டர் சாந்தப்பா அவர்களுடைய தலைமையில் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு குழுவைப் போட்டு இன்றைக்கு அந்தக் குழு அவைகளை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

அவர்களுடைய பணியெல்லாம் இன்றைக்கு முடிந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக முதல் கட்டமாக 25—6—1985 அன்று சென்னையில் இருக்கிற தொழிற்சாலைகளை எல்லாம் முதல் முறையாகப் பார்த்து அவர்கள் அறிக்கையை அனுப்ப இருக்கிறார்கள். குறிப்பாக மூன்று மாதங்களுக்குள்ளாக தொழிற்சாலைகளில் இருக்கிற நிலவரங்களைப் பார்த்து, இந்தத் தொழிற்சாலைகள் என்ன செய்யவேண்டுமென்று அரசு ரீதியிலே கட்டுப்படுத்த, அவைகளுக்கு வகைப்படுத்த உத்தரவிட்டு—இன்றைக்கு அந்தப் பரிந்துரைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பரிந்துரைகள் விரைவில் வரும். வந்த பிறகு இரசாயனத் தொழிற்சாலைகளில் இருக்கிற குறைபாடுகள் எல்லாம் போக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன.

அதேபோல சிவகாசியில் இருக்கிற நிலைமை உங்களுக்குத் தெரியும். அங்கே நம்மையெல்லாம் உலுக்கிக் கொண்டிருப்பது சைல்ட் லேபர் என்ற பிரச்னை. அந்த சைல்ட் லேபரைப் பற்றி இன்றைக்கு தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்து பரிந்துரை இன்றைக்கு நல்க இருக்கிறோம். அதேபோல டெல்லியும் அக்கறையோடு சைல்ட் லேபர் எங்கெங்கு இருக்கிறதோ அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று இருக்கிறார்கள். அந்தப் பிரச்னை இன்றைக்கு சமுதாயப் பிரச்னையாகவும், பொருளாதாரப் பிரச்னையாகவும் இருந்து வருகிறது. எளிதில் போக்க முடியாத பிரச்னையாகவும் இருக்கிறது. அதை எப்படியும் கட்டுப்படுத்தி ஆகவேண்டிய சமுதாய கடமையிருக்கிறது என்ற வகையில் அவைகளை ஆராய்வதற்காக ஜூலை மாதம் இரண்டாம் வாரத்தில் நம்முடைய மாண்புமிகு திரு அஞ்சய்யா அவர்கள் தமிழ் நாட்டிற்கு வரவிருக்கிறார்கள். இந்த அரசோடு கலந்து பேசி நல்ல முடிவை எடுக்க வருகிற ஜூலை இரண்டாவது வாரத்தில் நம்முடைய மாண்புமிகு டெல்லி தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே வர இருக்கிறார்கள்.

வருகிற 29-ஆம் தேதியன்று கூட டெல்லியில் ஒரு மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டினுடைய நோக்கம், அடுத்து வருகிற ஆகஸ்ட் மாதம் என்று கருதுகிறேன். ஏறத்தாழ நீண்ட நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற இந்தியன் லேபர் கான்பரன்ஸ் என்ற முறையில் ஒரு மாநாட்டை அகில இந்திய அளவில் கூட்டி, எம்ப்ளாயர்ஸ், எம்ப்ளாயீஸ், ட்ரேட் யூனியன்கள் இவர்களை எல்லாம் கூட்டி, நம்முடைய தொழிலாளர் சட்டங்களில் இருக்கிற குறைகளை, இன்வால்வ் மெண்ட் ஆப் தி ஒர்க்கர்ஸ் வித் மானேஜ்மெண்ட்' இவைகளை எல்லாம் குறித்தும், விவாதிக்க இருக்கிறது. நேஷனல் வேஜ் பாலிசி, இன்றைக்கு ஊதியங்களில் வேறுபாடுகள் இருக்கின்றன.



இவைகளை எல்லாம் ஆராய்வதற்காக ஒரு உட்குழுவைப் போட்டு இருக்கிறார்கள். அதிலே தமிழ் நாட்டிற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே உறுப்பினராக நானும் இருக்கிறேன். வருகிற 29-ஆம் தேதி அந்த உட்குழு டெல்லியிலே கூடவிருக்கிறது. அப்போது இந்தப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும். குறிப்பாக ஷுகர் இண்டஸ்ட்ரீஸ் ஸிற்கு வேஜ் போர்டு போடுவதற்கு ஒருவருடம் என்று சொல்லி இருக்கிறீர்களே, அதைத் துரிதப்படுத்த வேண்டும். மாண்புமிகு ரெங்கசாமி அவர்கள் இதுகுறித்து சொல்லி இருக்கிறார்கள் என்று அவர்களிடத்தில் சொல்லி அதைத் துரிதப்படுத்துவதற்கு இது ஒரு சந்தர்ப்பம்.

அதைப்போல இந்த சைல்ட் லேபரைப் பொறுத்தவரை யில் என்னென்ன அரசாங்கத்திலே செய்யவேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பாக ஜாப் பெர்மனன்சி பற்றி சொன்னார்கள். ஏற்கனவே கேள்வி நேரத்தில் பதில் . அளிக்கிற போது கூட நான் சொல்லி இருக்கிறேன். நீதிமன்றம் அதை தவறு என்று சொல்லியது. அப்ரெண்டிஸ் பற்றிச் சொன்னார்கள். அதே நேரத்தில் 'எக்ஸ்பிளனேஷன்' என்பதை எடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டமன்றத் தொடருக்குள்ளாகவே ஒரு சட்டத் திருத்தத்தை—அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு, நீதிமன்றமும் இன்றைக்கு பரிந்துரை செய்திருக்கிறதே, சஜஸ்ட் செய்திருக்கிறதே, யோசனை சொல்லி இருக்கிறதே, அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு—கொண்டு வரவிருக்கிறது. குறிப்பாக பதிலியை வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், அப்ரெண்டிஸ் வைக்கக்கூடாது என்று நீதிமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இதை நாம் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று நம்முடைய நிலைமையை மீண்டும் வற்புறுத்தி- அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்யும் அந்த அம்சங்களுக்காக மற்றும் எக்ஸ்பிளனேஷன் என்பதை எடுக்க வேண்டுமென்பதற்காக, சீரமைப்பதற்கு ஒரு சட்டமுன்வடிவை இந்தத் தொடரிலே கொண்டு வருவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன் காரணமாக நிரந்தரம் ஆக்காமல் இருக்கிற பலப்பல இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தின் வாயிலாக நிச்சயமாக பாதுகாப்பைப் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் மனதிலே கொண்டு துரிதமான நடவடிக்கைகளை, போர்க்கால அடிப்படையில் எடுப்பதைப்போல எடுத்து இங்கே தொழில் அமைதியையும், அதேநேரத்தில் தொழிலாளர் நலத்தை

பேணுவதற்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு முயலும் என்பதை உங்களின் மேலான கவனத்திற்குக்கொண்டு வருகிறேன. பல மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் சொன்ன விளக்கத்திலே அவர்கள் மனநிறைவு பெற்று இருப்பார்கள்.

(பிற்பகல் 2—30)

அப்படியும் ஏதாவது விளக்கம் வேண்டுமானால், தொடர்ந்து எங்கள் செயலை நாங்கள் எதிர்காலத்திலே ஆற்ற இருக்கி றோம், எனவே அதை நம்பி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நீங்கள் மனமுவந்து திரும்பப் பெற்றுக் கொண்டு, நான் முன்மொழிந்து இருக்கிற மானியக் கோரிக்கை யை நிறைவேற்றித்தருமாறு கண்ணியமிக்க இந்த மன்றத்தை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 10-பி சம்பந்தமாக நாங்கள் என்ன கருத்தை சொன்னோம் என்றால் தற்சமயம் இம்மீடியட்டாக வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பதற்காக உதவுகிறதே தவிர, நீதி மன்றங்களுக்கு ரெபர் பண்ணுவதால் உடனடியாக ஒரு தீர்வு ஏற்படாமல் காலதாமதத்தை அது ஏற்படுத்துகிறது என்ற நிலையைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டினோம். இதுபோன்று மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பட்டியலைப் படித்தார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நான் நினைக் கிறேன். அங்கே லாக்-அவுட் காரணமாகத்தான் அதிகமான மேன் டேஸ் நஷ்டம் ஏற்படுகிறது என்பதுதான் எங்களுக்கு உள்ள தகவல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் சொல்லுகின்றபோது, இன்றைக்கு தொழிலாளர்களுடைய பணி யிலே, தொழிலாளர்களுடைய இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்டிலே, கோயம்புத்தூர் பகுதி வளர்ந்துவிட்டதால், அங்கே ஒரு ஜாயின்ட் கமிஷனர் வேண்டும்—இப்பொது டெப்டி கமிஷனர் இருக்கிறார், அந்தப் பதவியை அப்கிரேட் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். எனவே அங்கே ஜாயின்ட் கமிஷனர் கோயம்புத்தூரிலே அமர்த்தப் படுவார் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் செங்காளி யப்பன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள். கோ. வீரய்யன், கு. சுப்பராயன், மற்றும் என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,27,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 24–6–1985 திங்கட்கிழமை காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

222. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம் பாட்டுக் கழகத்தின் 1982–ஆம் ஆண்டிற்கான முதல் ஆண் டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

223. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1983-ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்.பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்.

119. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

120. வேலை வாய்ப்பு-பயிற்சி குறித்து கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

121. ''அமைப்புகள் அல்லாத துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான ஈட்டுறுதி—ஓய்வுக்கால நலச் சிறப் திட்டம்'' என்ற புத்தகம் (ஆங்கிலம்).

122. வேளாண்மைத் தொழிலாளர்கள், சிறிய மற்றும் குறைந்த அளவு நிலமுள்ள உழவர்கள், கிராமக் கைவினை ஞர்கள் ஆகியோருக்கான விபத்து நிவாரணத் திட்டம் என்ற புத்தகம் (ஆங்கிலம்).

123. 1985ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) இணைப்புடன்.

124. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 25 வரை).



இணைப்பு.

(88 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

நம் மாநிலத்தைப் போன்றதொரு வளங்கெழு மாநிலத்தில், பொருளாதார, சமூகத் துறைகளில் அரசு பொறுப்புகளும், ஆற்ற வேண்டிய கடமைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும். சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினரின் நலனைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தவும் தொழில் உறவுகளை முறைப்படுத்துவதில் அரசு முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களும் தொழில் உறவுகளில் பெரிதும் அக்கறை கொண்டுள்ளனர். பணி நிறுத்தங்களால் இன்றியமை யாத பணிகள் பாதிக்கப்படுவதை எதிர்த்து அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கு மிடையே மோதல்கள் ஏற்பட்டு தொழிலில் அமைதியின்மை உருவாகுவதைத் தடுப்பதற் பதற்காக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அரசு, சில பொறுப்புகளை ஆற்ற வேண்டியது அவசியமென்பதை அறிந்துள்ளது. தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையே சுமுகமான பேச்சு வார்த்தை நடத்துவதே முக்கிய நோக்கமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் நலக் கொள்கை வடிவமைக்கப்படுகிறது. தொழிலாளருக்கும், நிர்வாகத்திற்கு மிடையே சுமுகமான பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் மட்டுமே மனநிறைவடையத்தக்க வகையில் உடன்பாடு செய்து கொண்டு, அதனைச் செயற்படுத்த இயலும் என்று அரசு முழுமை யாக அறிந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாநிலத் தொழிலாளர் நலத்துறை பணி நிறுத்தப்பட்ட எல்லா தொழிற் சாலைகளிலும் தலையிட்டு சுமுகமான உறவு ஏற்படுவதையும் நல்லுறவு நிலவுவதையும் கவனித்துக் கொள்கிறது. சிம்சனில் முக்கிய தொழிற் பிரிவுகள், அதன் கிளை நிறுவனங்கள் ஆகிய வற்றிற்கும் சுமார் 14,000 தொழிலாளர்களுக்குமிடையே சுமுக மான நல்லுறவை ஏற்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பணியினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். முடிவில் தீர்வு காணப்பட்டு, நிருவாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்குமிடையே ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. இம் முயற்சி இந்த ஆட்டோமொபைல் தொழில் பிரிவுகளில் அமைதி ஏற்படுவதற்கு வழிகோலியது என்பதை ஐயமின்றிக் கூறலாம்.

## தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்—தொடர்ச்சி

இதுபோன்றே, திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தொழில் அமைதியின்மை, சென்னை பி அண்ட் சி ஆலைகளில் செய்த பணி நிறுத்தம் ஆகியவற்றிற்கு சுமுகமாக தீர்வு காணப்பட்டது. இவ்விரண்டு தொழிற்சாலைகளிலும் சுமார் 35,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். தொழில் உறவுகளில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டு, அதனால் 21,10,106 மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டது தவிர, பெரிய அளவில் தொழில் அமைதியின்மை ஏதும் ஏற்படவில்லை. தொழி உறவுகளில் வன்முறை ஏற்பட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்பதையும் இதற்கு ஊக்கமளிக்கக் கூடாது என்பதையும் அரசும், தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் நன்கு உணர்ந்து உள்ளனர். தங்களுக்கு சமூகத்தில் பொறுப்பு உள்ளது என்றும், தேவையற்ற வகையில் உற்பத்தியைத் தடை செய்தால், மாநிலத்திற்கு இழப்பு ஏற்படுவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது சிறந்ததல்ல என்றும் படிப்படியாக தொழிலாளர்களும், நிருவாகத்தினரும் உணர்ந்துள்ளனர். சுருக்கமாகக் கூறின் 1984 ஆம் ஆண்டின் தொழிலாளர் போராட்டங்கள் ஏதுவில்லை என்பதையும், பொருளாதார வளர்ச்சியை நிலையாகப் பேணி வருவதில் தொழிலாளர்களும், நிருவாகமும் மிகவும் ஒத்துழைத்தனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம்.

தொழில் அமைதியைப் பேணி கண்காணித்து வருவதுடன், அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அரசு ஆர்வமாக உள்ளது. இது தொடர்பாக, அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களில் அதிகமாக உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக அரசு இந்த ஆண்டில் சட்டம் இயற்றியது. அட்டவணையிடப்பட்ட பல்வேறு தொழில்களில் குறைந்த அளவு ஊதியங்கள் முதல் தடவையாக திருத்தப்பட்டுள்ளன அல்லது வரையறுக்கப்பட்டுள்ளன. குறைந்த அளவு ஊதியங்கள் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அல்லது வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் புள்ளி விவரங்கள் ஒரு சமயத்தில் சராசரியாக 50 புள்ளிகளுக்கு மேல் அதிகமாகும் போது திருத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு பிறப்பித்த உத்தரவுகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளில் மத்திய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதன்மூலம் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் நிர்வாகமும் தொழிலாளர்களும் பரஸ்பர ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் பேணி வருவதற்காக அவர்களுக்கு இவ்வரசு தன்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.



தொழிலாளர் நலத் துறையின் அலுவல்கள், பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றன:—

1. அமைப்பு முறை.
2. தொழில் உறவுகள்.
3. தொழிற்சாலைகள் நிருவாகம்.
4. தொழிலாளர் நிருவாகம்.
5. ஊதியங்கள் சட்டம்.
6. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
7. தொழிலாளர் நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
8. பயிற்சி.
9. எடைகள், அளவைகள்.

### அத்தியாயம் 2.

### தொழிலாளர் நலத்துறையின் நிருவாக அமைப்பு முறை.

தொழிலாளர் நலத் துறை அரசு அளவில் அரசு தொழிலாளர் நலத் துறையின் ஆணையாளர், செயலாளர் பொறுப்பின் கீழும் தொழிலாளர் நல ஆணையாளரைத் துறைத் தலைவராகக் கொண்டும் செயல்படுகிறது.

தொழில் நிறுவனங்களின் நிருவாகத்திற்கும் அத்தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தொழில் தகராறுகளை உரிய நேரத்தில் தலையிட்டு தீர்த்து வைப்பதன் மூலம் தொழில் அமைதியைப் பேணுவதே தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் முக்கியப் பணியாகும். இது தவிர, தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளித்தல், சிறந்த பணி நிலைகளையும், நலனையும் மேம்படுத்தல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் ஆகியவற்றிற்காக இயற்றியுள்ள பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துவதும் இவர்களின் பொறுப்பாகும்.

ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ் இயங்கும் தொழிலாளர் நலத் துறையில், தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள், எடைகள், அளவைகள், பிரிவுகள் முதலியவை உள்ளன.

துறைத் தலைவர் என்ற வகையில் தொழிலாளர் நல ஆணையாளர் பல்வேறு சட்டப்படிக்கான பணிகளையும் பிற பணிகளையும் புரிவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 1947 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் தொழில் தகராறுகளில் சமரசம் செய்வது மேற்சொன்ன அவருடைய பணிகளில் முக்கியமானதாகும். பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பிற சட்டப் படிக்கான பணிகள் தவிர, 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச்

தொழிலாளர் நலத் துறையின் நிருவாக அமைப்பு முறை
தொடர்ச்சி.

சட்டத்தின் கீழ் ஆணையாளராகவும், 1926 ஆம் ஆண்டு தொழில்
சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற்சங்கப் பதிவாளராகவும்,
1946 ஆம் ஆண்டு தொழில் வேலை வாய்ப்புச் (நிலையாணைகள்)
சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அதிகாரியாகவும் உள்ளார்.

தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட பல்வேறு விவகாரங்
களில் முடிவு செய்வதிலும் பல்வேறு தொழில்ளாளர் நலச்சட்டங்
களை செயல்படுத்துவதிலும் ஆலோசனை கூறுவதற்காக
அரசு அமைத்த சட்டப்படிக்கான பிரிவுகள், பிறபிரிவுகள் ஆகிய
வற்றின்.கீழ் வரும் பல்வேறு முத்தரப்புச் சங்கங்களுடன் தொழி
லாளர் நல ஆணையாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

தொழிலாளர் நல ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட பல்வேறு
சட்டப்படிக்கான பணிகளையும், பிற பணிகளையும் நிருவகிப்
பதில், அவருக்கு தலைமையிடத்திலும், வட்டாரங்களிலும் முது
நிலை அதிகாரிகள் உதவி புரிகின்றனர். தொழிலாளர் நலப்
பிரிவில் சமரசத் தரப்பில் அவருக்கு தொழிலாளர் நல இணை
ஆணையாளர்கள் இருவரும், தொழிலாளர் நலத் தனி துணை
ஆணையாளரும், தொழிலாளர்நல உதவி ஆணையாளரும் (தலை
மையிடம்) உதவி புரிகின்றனர். நிருவாகத்தில் தொழிலாளர்
நல ஆணையாளருக்கு தொழிலாளர் நல இணை ஆணையாளர்
(நிருவாகம்) தவிர, தொழிலாளர் நல உதவி ஆணையாளரும்
(பணியாளரமைப்பு— பொது) நிருவாக அதிகாரி இருவரும் (இவா
களில் ஒருவர் மக்கள் தொடர்பு அதிகாரி என்று அழைக்கப்படு
கிறார்) உதவி புரிகின்றனர். எடைகள், அளவைகள் சட்டத்தை
செயற்படுத்துவதில், தலைமையிடத்திலுள்ள தொழிலாளர் நலத்
துணை ஆணையாளர்களில் ஒருவர், எடைகள் அளவைகள் கட்
டுப்பாட்டு அதிகாரி என அழைக்கப்படுகிறார். இவருடைய பணி
களில் நிருவாக அதிகாரி ஒருவர் இவருக்கு உதவி புரிகிறார்.
தலைமையிடத்தில், குறைந்த அளவு ஊதியச் சட்டத்தைச் செயற்
படுத்துவதற்காகத் தொழிலாளர் நல ஆணையாளருக்கு துணை
ஆணையாளர் உதவி புரிகிறார். இவர் தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர் (குறைந்த அளவு ஊதியங்கள்) என அழைக்கப்
படுகிறார். இவருடைய பணிகளில் நிருவாக அதிகாரி ஒருவர்
இவருக்கு உதவி புரிகிறார். அட்டவணையிடப்பட்ட பல்வேறு
தொழில்களில் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்
களை நிர்ணயிப்பதில் திருத்துவதில் ஆலோசனை அளிப்பதற்
காகக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்படி அவ்வப்போது
அரசால் நியமிக்கப்படுகிற ஆலோசனைக் குழுக்களின் தலைவராக
இத்தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் அறிவிக்கப்பட்டு
வருகிறார்.

கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் கீழும், பணிக்கொடை
வழங்கல் சட்டத்தின் கீழும் வழக்குகளை விரைந்து முடிவு செய்
வதற்காகத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் உள்ளார்.
இவர் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் (மேல்முறையீடு)



என்று அழைக்கப்படுகிறார். செங்கற்பட்டு .மாவட்டத்திலும்.
சென்னையிலும் தாக்கல் செய்யப்படுகிற வழக்குகளைத் தமிழ்
நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின்
41-ஆம் பிரிவின்கீழ் விசாரிக்கவும், 1972-ஆம் ஆண்டு பணிக்
கொடை வழங்கல் சட்டத்தின் 7-ஆம் பிரிவின்கீழ் மேல்முறை
யீடுகளை முடிவு செய்யவும் இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்
டுள்ளது. சென்னையிலுள்ள தொழிலாளர் நல வட்டாரத்
துணை ஆணையாளர்கள் இருவரின் பணிச் சுமைகளைக் குறைக்
கும் நோக்குடன் இத்தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இதனால், இம்மாவட்டங்களில் உள்ள பெருந்தொழில் பிரிவுகளில்
ஏற்படும் தொழில் தகராறுகளை சமரசம் செய்து தீர்த்து வைக்
கவும் அவர்களுக்குப் போதிய கால அவகாசம் இருக்கும்.

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வழக்குகளை விரைந்து
திறம்பட முடிவு செய்யவும் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதி
களில் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்தவும், இம்
மாநிலம் 7 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வட்
டார அதிகாரிகள் சென்னை, (இரு வட்டங்கள்) மதுரை,
திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர்
ஆகிய இடங்களில் செயற்படுகின்றனர். ஒவ்வொரு வட்டாரமும்
தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் பொறுப்பின் கீழ்
செயற்படுகிறது. சமரசப் பிரிவில் இவருக்கு தொழிலாளர் நல
உதவி ஆணையாளர்களும், தொழிலாளர் நல அதிகாரிகளும் சட்
டங்களை செயற்படுத்தும் பிரிவில் தொழிலாளர் நல ஆய்வாளர்
களும், மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆய்வாளர்களும்
உதவி புரிகின்றனர். தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்
படுத்துவதிலும், எடைகள், அளவைகள் சட்டத்தை நிருவகிப்
பதிலும் தொழிலாளர் நல ஆய்வாளருக்கு தொழிலாளர் நலத்
துணை ஆய்வாளர்களும், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்
களும், முத்திரையிடும் ஆய்வாளர்களும் (இப்பதவி இருக்குமிடங்
களில்) உதவி புரிகின்றனர்.

மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தை நிருவகிப்
பதில் மலைத் தோட்ட ஆய்வாளர் தவிர, உதகமண்டலத்திலும்,
நாகர்கோயிலிலும் ஒருவராக மருத்துவ அலுவலர்கள் இருவர்
உள்ளனர். மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழும்,
அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழும், அளிக்கப்படும் மருத்
துவ வசதிகள் தொடர்பான அலுவல்களைக் கவனிப்பது இவர்
களின் பொறுப்பாகும். மலைத் தோட்ட ஆய்வாளர்களும்,
மருத்துவ அலுவலர்களும் சட்டங்களைச் செயற்படுத்தும் பிரிவி
லுள்ள வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும்,
அவர்கள் தொழிலாளர் நல இணை ஆணையாளரின் (நிருவாகம்)
வழிகாட்டுதலுக்கிணங்க பணி புரிகின்றனர். இவர் மலைத்
தோட்டத் தலைமை ஆய்வாளராவார். இதுபோன்று, மோட்
டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தையும் 1966-ஆம்

ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தையும் செயற்படுத்துவதில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளரின் (ஆய்வு) வழிகாட்டுதலுக்கிணங்க பணி புரிகிறார்கள். இவர் அந்தந்த சட்டங்களின் கீழ் செயற்படுகிற தலைமை ஆய்வாளருமாவார்.

தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிற்சாலைகள் சட்டத்தையும், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் நிருவகிப்பதில் தொழிலாளர் நல ஆணையாளருக்கு தலைமையிடத்தில் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர்கள் இருவர் உதவி புரிகின்றனர். ஒருவர் சுகாதாரத்தையும், பாதுகாப்பையும் கவனித்துக் கொள்கிறார். மற்றவர் பொது நிருவாகத்தையும், ஆய்வுகளையும் கவனித்துக் கொள்கிறார். தொழிற்சாலை முழுவதற்கும் பொறுப்புவகிக்கும் தலைமை ஆய்வாளர் இருவரும் அலுவல் சார்பில் தொழிலாளர் நல ஆணையாளரின்கீழ் (1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 8-ஆம் பிரிவு) பணி புரிகிறார்கள். இவர்கள் தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்தவராவர். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (நிருவாகம்-ஆய்வு) தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற சட்டங்களையும் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாவர். தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற சட்டங்களையும் நிருவகிப்பதில் அவருக்கு கோயம்புத்தூரில் தொழிற்சாலைகள் இணைத் த்லைமை ஆய்வாளர் ஒருவரும், வெவ்வேறு வட்டாரங்களில் 12 துணைத் தலைமை ஆய்வாளர்களும், 27 தொழிற்சாலை ஆய்வாளர்களும், 21 தொழிற்சாலை உதவி ஆய்வாளர்களும் உதவி புரிகின்றனர். தலைமையிட அளவில் .தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு (நிருவாகம்—ஆய்வுகள்) தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் ஒருவரும் (இவர் நிருவாக அதிகாரியெனப்படுகிறார்) உதவி புரிகின்றனர்.

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களின் வட்டார அலுவலகங்கள், சென்னை (3 வட்டங்கள்) வேலூர், சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சிவகாசி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்-பாதுகாப்பு) தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், பணி நிலைகளுக்குப் பொறுப்பாவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்-பாதுகாப்பு) பொறுப்பின்கீழ் சென்னையில் தொழில் சுகாதாரம் .உடல்நலப் பிரிவு இணைந்த ஆய்வுக்கூடம் ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவை தலைமை மருத்துவரும்





(தொழிற்சாலைகள்) சான்றளிக்கும் மருத்துவர்கள் (மருத்துவ
அதிகாரிகள் (தொழிற்சாலைகள்) ஆறுபேரும் நிருவகிக்கின்றனர்.
இவர்கள் சென்னை, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, சிவ
காசி, திருநெல்வேலி, ஆகிய இடங்களில் உள்ளனர். இம்
மருத்துவ அதிகாரிகள் 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள்
சட்டத்தின் 10-ஆம் பிரிவின்படியும் தமிழ்நாடு 1950-ஆம்
ஆண்டு தொழிற்சாலை விதிகளின்படியும் சான்றளிக்கும் மருத்
துவர்களின் கடமைகளைப் புரிகின்றனர்.

மருத்துவப் பணிகள் உதவி இயக்குநரின் பதவித் தரத்தி
லுள்ள தலைமை .மருத்துவ அதிகாரி சென்னையிலுள்ள
தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட
தொழில், சுகாதாரம், .உடல்நலப் பிரிவு இணைந்த ஆய்வுக்
கூடத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். இப்பிரிவு, அபாயகர
மான தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை
மருத்துவ சோதனை செய்வதையும், உயிர் மங்கள் மாதிரியை
ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யும் பணியையும், தொழிலில்
ஏற்படும் அபாயங்கள் குறித்து ஆய்வு நடத்துவதையும் மேற்
கொள்கிறது. அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கு
இது போன்று மருத்துவ பரிசோதனை செய்வதற்கு மதுரையில்
மருத்துவப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மதுரையி
லுள்ள இச் சுகாதாரப் பிரிவு தொழிலாளர் நலக் காப்புறுதி
திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு சிகிச்சையளிப்ப
தோடு, தடுப்பு மருத்துவப்பணி வசதியும் அளிக்கிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில்
தொழிற்சாலை தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு)
கட்டுப்பாட்டின்கீழ் மூன்று பாதுகாப்பு பிரிவுகள் இயங்கு
கின்றன. இப்பிரிவுகளை தொழிற்சாலை ஆய்வாளர் நிருவகிக்
கிறார். ஒவ்வொரு பிரிவிலும் தொழிற்சாலை உதவி ஆய்
வாளர்கள் உள்ளனர். அதிக அளவில் விபத்துக்கள்
ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும் தொழிற்சாலைகளில் விபத்து
ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வதற்காக பாதுகாப்பு
ஆய்வை நடத்துவதே பாதுகாப்புப் பிரிவின் முக்கிய பணியாகும்.

தலைமையிட அளவில், குழந்தை பெண் தொழிலாளர்
தொடர்பான பாதுகாப்பு-சுகாதாரம் பற்றிய விதித்துறை
களைச் செயற்படுத்துவதில் தொழிற்சாலைகள் தலைமை
ஆய்வாளருக்கு (சுகாதாரம்-பாதுகாப்பு) தொழிற்சாலை பெண்
ஆய்வாளர்கள் உதவி புரிகின்றனர்.

மேற்சொன்னவை தவிர, தொழிற்சாலைகள் தலைமை
ஆய்வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு) மேற்பார்வையின் கீழ்
காற்றழுத்த தளவாடப் பிரிவு செயல்படுகிறது. இப்பிரிவின் கீழ்,
சென்னை (இரு அதிகாரிகள்) மதுரை கோயம்புத்தூர் ஆகிய
இடங்களிலுள்ள நான்கு துணைத் தலைமை ஆய்வாளர்கள் துறை

மேற்பார்வையின் கீழ் தொழிற்சாலைகளில் இயந்திரம் நிறுவனம் நிர்ணயித்த தரத்தின்படி காற்றழுத்த தளவாடங்களைச் சோதனை செய்யும் பணியைக் கவனிக்கின்றனர். இம்மாநிலத்திலுள்ள 4,000 காற்றழுத்த தளவாடங்களைச் சோதனை செய்யும் நடைமுறையில் இத்துணைத் தலைமை ஆய்வாளர்களுக்கு தொழிற்சாலை ஆய்வாளர் ஒவ்வொருவரும் உதவி புரிகின்றனர்.

1985-86-ஆம் ஆண்டில் பின்வருமாறு துறைப் பணியாளர்களைக் கூடுதலாக்குவதெனக் கருதப்படுகிறது. தொழில் உறவுகளை மேம்படுத்தவும், வெளியூர்களில் ஏற்படும் பெரும் தொழில் தகராறுகளைத் தீர்த்துவைப்பதிலும், தொழிலாளர் நல ஆணையாளருக்கு ஏற்படும் பணிச்சுமைகளிலிருந்து அவரை விடுவிப்பதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல இணை ஆணையர் இருவர் நியமிக்கப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பெண் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியை முதற்கண் கவனிக்க தொழிலாளர் நல பெண் ஆய்வாளர்கள் இருவர் அடங்கிய தனி அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கு தற்போது எவ்விதப் பாதுகாப்பும் இல்லாததால், இவ்வகைத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை தொகுப்புத் திட்டத்தை அரசு கொண்டு வர இயலும் வகையில் இத் தொழிலாளர்கள் பற்றிய புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கு தொழிலாளர் நல உதவி ஆணையாளர் ஒருவர் தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவர், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்கள் ஐவர் ஆகியோரும் துணைப் பணியாளர்களும் அடங்கிய தனிப் பணியாளரமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சிப்பம் செய்யப்பட்ட பொருள்கள் விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளைச் செயற்படுத்துவதற்காகத் தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் முத்திரையிடும் ஆய்வாளர் தனியான தொகுதிக்கு ஒப்புதலளிப்பதன் மூலம் எடைகள் அளவைகள் பணியாளர் பிரிவு வலுப்படுத்தப்படுகிறது.

பளுதூக்கும் கருவிகள், சாதனங்கள், மின்தூக்கிக்கான இரும்புக் கயிறு, பாரந்தூக்கி இயந்திரப் பொறிகள் முதலியவற்றைச் சோதனை செய்வதற்கும், உற்பத்தித்திறன் பிரிவு, பாதுகாப்புப் பிரிவுகள் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளவும் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஆராய்ச்சிப் பிரிவை நிருவகிப்பதற்காக முதுநிலை ஆராய்ச்சி அதிகாரி பதவி ஒன்றுக்கும்



ஆராய்ச்சி அதிகாரி பதவி ஒன்றுக்கும் அனுமதி வழங்குவதன் மூலம் தமிழ்நாடு தொழிலாளர் நல நிறுவனம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அடையாறில் இந் நிறுவனத்திற்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு கொள்கையளவில் ஒப்புதலளித்து, நடப்பாண்டில் நிதி ஒதுக்கியுள்ளது.

அத்தியாயம் 3.

## தொழில உறவுகள் தொடர்பானது.

## 1947 ஆம் ஆண்டு தொழில் தராறுகள் சட்டம்.

இந்த ஆய்வு ஆண்டில் தகராறுகள் சம்பந்தப்பட்ட மொத்த வழக்குகள் 7,925-ல், 6,277 வழக்குகள் இணக்க அதிகாரியால் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் விவரங்களை இணைப்பு 1-ல் காண்க.

### வேலைநிறுத்தங்கள்.

1984 ஆம் ஆண்டில், ஏற்பட்ட 211 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் காரணமாக, வீணான உழைப்பு நாட்கள் 37,08,409 ஆகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டு இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இணைப்பு—2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தின் காரணமாக, வீணான உழைப்பு நாட்கள் 37,08,409-ல் பின்வரும் முக்கியமான மூன்று வேலை நிறுத்தங்களின் காரணமாக வீணான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 21,10,106 என்று கணக்கிடப்பட்டது.

1. சிம்ஸன் க்ரூப் நிறுவனங்களில் நடைபெற்ற 112 நாட்கள் வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் 14,000 பேர்.

2. சென்னை, பி அண்டு சி ஆலையில் நடைபெற்ற வேலை நிறுத்தம் (1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் 1984-ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான கால அளவில்).

3. திருப்பூர், பனியன் தொழிற்சாலையில் 20,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வேலை நிறுத்தம்.

1984ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால் தீர்வு காணப்பட்ட விவரங்கள் இணைப்பு—3-ல் காணலாம்.

1983, 1984 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத் தங்கள், கதவடைப்புகள் பற்றிய தொழில்வாரியான விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இம் மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழிலாளர் நீதி மன்றங்களுக்குத் தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 33–சி (2) பிரிவின் கீழ் தொழிலாளர் நீதி மன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை, இணைப்பு 4-லுள்ள இக் குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இந்த ஆய்வு ஆண்டில் நீர்வுகாணப்பட்ட முக்கிய விவகாரங்கள்.**

துறை அலுவலர்களின் முயற்சியால், 6,277 தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இதுபற்றிய விவரங்களை இணைப்பு–3-ல் காணலாம். தொழிலாளர் நல ஆணையரும் துறையின் ஏனைய முதுநிலை அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக பின்வரும் தொழில் தகராறுகள் தீர்வு செய்யப்பட்டன. முக்கியத் தகராறுகள் சிலவற்றைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு முதலமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர், தொழில் துறை அமைச்சர் ஆகியோர் தலையிட்ட தால் தீர்த்து வைக்கப்பட்டவை.

துணி ஆலை.

**1. துணி ஆலையில் ஊதிய கொடைக்கான தொழில் தகராறுகள்**

தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளில் பணிபுரியும் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1983ஆம் ஆண்டுக்கு (1983–84) ஊதியக் கொடையும், முந்தைய ஆண்டுகளில் அதாவது, 1978–79, 1979–80, 1980–81ஆம் ஆண்டுகளில் வழங்கியதைப் போன்று கூடுதல் தொகையையும் வழங்குமாறு கேட்டு வேலை நிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தனர். 1984, ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10, 11ஆம் நாட்களில் தொழி லாளர் நலத் துறை ஆணையர் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அவர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக தொழிலாளர் நல ஆணையர் முன் நடைபெற்ற இணக்கப்பேச்சு வார்த்தைகளினாலும், 11–10–1984 ஆம் நாளன்று, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 1965ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின்படி, தொழிலாளர்களுக்கு 1983-ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை வழங்க உடன்படிக்கையில்



வகை செய்யப்பட்டது. இதைத்தவிர, தொழிலாளர்களின் வருமானத்தில் 3.67 சதவிதத் தொகைக்கு சமமாக தனித் தொகையும் தொழி லாளர்களுக்கு வழங்கப்பட்டது. வசூலிக்கத்தக்க முன் பணத் தொகை ரூ. 100-ஐ வழங்குவதற்கும் உடன்படிக்கையில் வகை செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கை மூலம் சுமார் 1,50,000 துணி ஆலைத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**2. சென்னை பி. அண்டு சி. மில்ஸ் லிமிடெட்.**

இந்த ஆலைத் தொழிலாளர்களின் சார்பில் சென்னைத் தொழிலாளர் சங்கம் 28–12–1983 ஆம் நாளன்று சில கோரிக்கைகளை வெளியிட்டு, வேலை நிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தது. அவையாவன : 1981ஆம் ஆண்டில் தனி அலுவலர் தொழிலாளர்களுக்காக வரையறுத்த விதிமுறைகளைத் திருத்தி யமைத்தல், தொழிலாளர் சிலருக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையைத் திரும்பப் பெறுதல் முதலியன. 14–1–1984 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் துணைத்தனி ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர், தொழிலாளர் நல ஆணை யர் ஆகியோரின் முன்னிலையில் பல்வேறு நிலையில் இது குறித்து, விவாதிக்கப்பட்டது. இந்த இணக்கப் பேச்சு வார்த்தை யின் பயனாய் உடன்படிக்கை ஏதும் ஏற்படாததால், தொழில் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு இதனை அரசு அனுப்பியது. இதன் பின்னர் 7–5–1984 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினைக் கைவிட்டு, பணியில் சேர்ந்தனர். ஆனால் நிருவாகம், இழப்பீடு ஏதுமின்றித் தற்காலிகமாக வேலையை நிறுத்தி வைத்தது.

நீண்ட காலமாக எண்ணற்ற தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் நிலையைக் கருதிப் பார்த்தும் இந்த ஆலையைத் தனித்தியங்கத்தக்க ஒரு தொழிற் பிரிவாக ஆக்கவேண்டுமென்கிற காரணத்தாலும், தொழில் துறையின் மாண்புமிகு அமைச்சர், தொழிலாளர் நலத் துறையின் மாண்புமிகு அமைச்சர், தொழில்துறையின் அரசு ஆணையாளர்–செயலாளர், தொழிலாளர் நலத்துறையின் அரசு ஆணையாளர்–செயலாளர் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் ஆகியோரின் முன்னிலையில் இருதரப்பினருக்கிடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. தொழிலாளர் நலத் துறை ஆணையர் இது குறித்து மேற்கொண்டு விவாதித்தபோது, அவர் முன்னிலையில், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின் கீழ், நிருவாகத்திற்கும் சென்னை தொழிலாளர் நலச் சங்கத்திற்கு மிடையே 23–11–1984 ஆம் நாளன்று உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின் தொடர்ச்சியாக, 29–11–1984ஆப்

நாளிலிருந்து ஆலை செயல்படத் தொடங்கியது. பணியாளர்கள் தொடர்பான பிரச்சனைகளும், 26–12–1984 ஆம் நாளன்று தொழிலாளர் நல ஆணையர் நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தையில் தீர்த்து வைக்கப்பட்டன.

3. திருப்பூர் பனியன் தொழிற்சாலை.

திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 20,000 தொழிலாளர்கள், அவர்களின் கோரிக்கைகளான ஊதியம், அகவிலைப்படி வீதம், பணிச்சுமை ஆகியவற்றைத் திருத்தியமைக்குமாறு வலியுறுத்தி 20–4–1984 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல இணை ஆணையர் (இணக்கம்) முன்னிலையிலும், தொழிலாளர் நலத்துறை மாண்புமிகு அமைச்சர் முன்னிலையிலும் நடைபெற்ற இணக்கப்பேச்சு வார்த்தைகள் பலனேதுமளிக்கவில்லை. எனவே, இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கும் பொருட்டு தொழில் தனி நடுவர் மன்றத்திற்கு இந்த வழக்கினை அரசு அனுப்பியது. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-B பிரிவின் விதித்துறைகளை அரசு பயன்படுத்தியது (தொழிலாளர் நலத் துறையின் 8–6–1984 ஆம் நாளிட்ட 1242 ஆம் எண் அரசாணையைக் காண்க). தொழிலாளர்கள் பணியை மீண்டும் தொடங்கிய நாளிலிருந்து அவர்கள் தற்போது பெறும் ஊதியத்தில் 10 சதவீதத்தை இடைக்கால ஊதிய உயர்வாக நிருவாகம் கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால அகவிலைப்படியாக ரூ. 46 தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அரசு கட்டளையிட்டது. இடைக்கால அகவிலைப்படி ரூ. 46 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக அரசு பிறப்பித்த ஆணையை எதிர்த்து, ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்ததன் மூலம் நிருவாகம் நீதி மன்றத் தடை ஆணையைப் பெற்றது. இந்த இடைக்கால தடை ஆணையை உயர் நீதி மன்றம் பின்னர் நீக்கியது. இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்கவும், தொழில் அமைதியைப் பேணுவதையும் கருத்தில் கொண்டு, 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாளன்று இவ்விருதரப்பினரிடையே தொழிலாளர் நல ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் பயனாக இவர்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு, இரு தரப்பினர்களுக்கும் தொழிலாளர் நல ஆணையர், தன் ஆலோசனையை வழங்கினார். இந்த ஆலோசனைக்கிணங்க, தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 பி பிரிவின்கீழ் அரசு பிறப்பித்த ஆணைகளைச் செயல்படுத்த நிருவாகமும், தொழிலாளர்கள் சங்கங்களும் ஒப்புக்கொண்டன. 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாளன்று தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பினர். நடுவர் மன்றத்தின் முன்னிலையில் நிலுவையாக உள்ள நடைமுறைகளை விரைவில் முடிப்பதற்குத் தொழில் தனி நடுவர் மன்றத்திற்கு ஒத்துழைப்பு தருவதாக இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.



பொறியியல் தொழில்.

4. ஒசூர் அசோக் லேலண்ட் லிமிடெட்.

இந்நிறுவனத்தில், பணிபுரியும் சுமார் 1,000 தொழிலாளர்கள் ஊதியம், உற்பத்தி ஊக்கத் தொகை, தொழிலாளர்களின் வேலையை உறுதியாக்குதல் போன்ற கோரிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தி 27–6–1984 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். நிருவாகம் 2–7–1984 ஆம் நாளன்று 199 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதற்கான ஆணையைப் பிறப்பித்தது. சென்னை, தொழிலாளர் நலத் துணைத் தனி ஆணையர் பலமுறை தொடர்ந்து நடத்திய இணக்கப் பேச்சின் மூலம், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்கீழ், 12–7–1984 அன்று உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி, நிருவாகம் ஆட்குறைப்பிற்கான ஆணையைத் தள்ளுபடி செய்து, மூன்று நிலைகளில் 176 தொழிலாளர்கள் பணியமர்த்தப் படுவர்; 1982 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் உற்பத்தி அளவில் எய்திய சாதனையைப் போல தொழிலாளர் பணியை மேற்கொள்வர். தொழிலாளர் நலத் துணைத் தனி ஆணையரின் முன்பு கோரிக்கைகளின் பட்டியல் குறித்து மேற்கொண்டு விவாதித்தல் ஆகியவை பரிசீலிக்கப்படும். 14–7–1984 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினைக் கைவிட்டனர்.

5. பட்டாபிராம் சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் லிமிடெட்.

அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, இரவு முறை மாற்றுப்பணி, பிற சலுகைகள் போன்ற கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட தகராறு, 22–8–1984 ஆம் நாளன்று தொழிலாளர் நல இணை ஆணையர் (இணக்கம்) நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்து வைக்கப் பட்டது.

6. பின்னி லிமிடெட் (பொறியியல் பிரிவு) சென்னை துறைமுகப் பணிகள்.

நாட்கூலித் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்து பின்னி கடற்கரைப் பொறியியல் தொழிலாளர்கள் சங்கம் எழுப்பிய கோரிக்கைகள் பற்றி சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையர் (நிருவாகம்) நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தைகளின் பயனாக, 18–6–1984 ஆம் நாளன்று உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

7. மேட்டூர் துணி ஆலை லிமிடெட், மேட்டூர் அணைக்கட்டு

சுமார் 2000 தொழிலாளர்கள்.)

தளவாடங்கள், இயந்திரங்கள், தொழிலாளர்கள் முதலிய யவை குறைவாகப் பயன்படுத்தப்பட்டன என்றும், இதன் பயனாக ஆலையின் தொழில்திறன் குறைந்தது என்றும், இதன் விளைவாக தொழிலாளர்களுக்கு இடர்பாடுகள் ஏற்பட்டன என்றும் தொழிலாளர் நல ஆணையருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் மேட்டூர் அணைக்கட்டு; மேட்டூர் துணி ஆலை நிறுவனத் தொழிலாளர்கள், பல்வேறு தொழில் சங்கங்களின் மூலம் முறையீடு செய்துள்ளனர். இந்த முறையீட்டினைத் தொடர்ந்து, ஆலையின் நிலையையும், 13–3–84 ஆம் நாள் நிலவரப்படி அந்த ஆலையின் பணி நிலையையும் ஆய்வு செய்வதற்காக, சென்னை, தொழிலாளர் நலத் துணைத் தனி ஆணையர், ஆலையைச் சென்று பார்வையிட்டு, ஆலையின் முழுத் திறனையும் பயன்படுத்தி, செயல்படுத்துவதற்கான வழி வகைகளைக் கண்டறியும் பொருட்டு, நிருவாகத்தின் பிரதிநிதிகளுடனும் சங்கங்களுடனும் தொடக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இதனையடுத்து, இரு தரப்பினர்களும் 24–4–1984 ஆம் நாளன்று தொழிலாளர் நலத் துறையின் மாண்புமிகு அமைச்சரின் முன்னிலையில் விவாதித்தனர். இந்தப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து பல்வேறு தினங்களில் தொழிலாளர் நலத் துணைத் தனி ஆணையர் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த ஆலையை பழைய நிலையில் விரைவாகச் செயல்படச் செய்யவும், இந்த ஆலையை தனித்தியங்கவல்ல ஓர் ஆலையாக ஆக்கவும், வங்கிகளிடமிருந்து இந்த ஆலைக்குத் தேவையான நிதி உதவி கிடைக்க வசதி செய்து கொடுக்கவும் தொழிலாளர் நலத் துணைத் தனி ஆணையர், நிருவாகத்திற்கும் சங்கத்திற்கும் தனது திட்டங்களைத் தெரிவித்தார். இத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 11–10–1984 ஆம் நாளன்று இரு தரப்பினர்களிடையே நடந்த இணக்கப் பேச்சு வார்த்தையில் உடன்படிக்கை ஏற்பட்டது.

8. மலைத் தோட்டத் தொழில்கள்.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின்கீழ் 31–12–1983 ஆம் நாளன்று செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கால அளவு முடிவடைந்ததைத் தொடர்ந்து, தமிழ் நாட்டிலுள்ள தேயிலை, காப்பி மலைத் தோட்டத் தொழிலாளர்களின் 14 தொழிற் சங்கங்களும் குன்னூர் மலைத் தோட்டத் தொழிலதிபர் சங்கமும் 2–1–1984 ஆம் நாளன்று, இரு தரப்பினர்களுக்கிடையே நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஊதியங்கள் தொடர்பாக புதிய உடன்படிக்கை செய்து கொண்டனர். இதனையடுத்து, 29–9–1984 ஆம் நாளன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையர் முன்னிலையில் இச்சட்டத்தில் 12(3) ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கையில் ஒப்பமிடப்பட்டது. ஊதியங்கள், அகவிலைப் படிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதற்கு இந்த உடன்படிக்கை வகை செய்கிறது. 31–12–1986 ஆம் நாள் வரையில், இந்த உடன்படிக்கை செயலில் இருக்கும்; தமிழ்நாட்டில் அமைந்துள்ள தேயிலை மலைத் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர் அனைவருக்கும் இது பொருந்தும்.





2. இதைத் தவிர, சம்பளம், ஏனைய படிகள் ஆகியவை தொடர்பான கோரிக்கைகள் குறித்து, தமிழ்நாடு தேயிலை, காபி மலைத் தோட்டத் தொழிலாளர் நீங்கலாக, பணியாளர் வகையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், தென் இந்திய ஒருங்கிணைந்த மலைத் தோட்டத் தொழிலதிபர் சங்கம், தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலதிபர் சங்கம் ஆகியவற்றின் மூலம் நிருவாகத்திற்குமிடையே சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வுகள்) முன்னிலையில், இச்சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை 31–12–1986 ஆம் நாள்வரை செயலில் இருக்கும்.

வழக்குத் தொடருதல்.

1984 ஆம் ஆண்டில், பின்வரும் மூன்று வழக்குகளைத் தொடர அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

| | |
|---|---|
| (1) ஸ்ரீமுருகன் ரைஸ் மில், மதுரை<br>(2) கோகுல் பிரிண்டிங் பிரஸ், சென்னை.<br>(3) கணேஷ் பிரிண்டிங் பிரஸ், மதுரை. | தொழிலாளர் நல நீதி மன்றங்களின் தீர்ப்பை செயல் படுத்தாமை. |

மாண்புமிகு முதலமைச்சரின் மக்கள் துயர் தணிப்பு நிதியிலிருந்து நிதி உதவி அளித்தல்.

பின்வரும் நிறுவனங்களில் 1984 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரின் மக்கள் துயர்தணிப்பு நிதியிலிருந்து தொழிலாளர் ஒருவருக்கு துயர்தணிப்புத் தொகை ரூபாய் 200 வழங்குமாறு அரசு ஆணை பிறப்பித்தது :—

| | |
|---|---|
| 1. பத்மா மில்ஸ், கலப்பட்டி | 110 தொழிலாளர்கள். |
| 2. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் அனைப்புதூர், கோயம்புத்தூர். | 250 தொழிலாளர்கள். |
| 3. ஸ்ரீ ஜனார்தனா மில்ஸ், கோயம்புத்தூர். | 659 தொழிலாளர்கள். |

**1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தில் சில முக்கிய திருத்தங்கள்.**

1982 ஆம் ஆண்டு 46 ஆம் எண் மத்தியச் சட்டத்தின் மூலமும், 1984 ஆம் ஆண்டு 49 ஆம் எண் மத்தியச் சட்டத்தின் மூலமும், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன. இந்த முதன்மைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் 21–8–1984, 18–8–1984 ஆம் நாட்கள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட முக்கிய திருத்தங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1. பிரிவு 2 (S) | .. | ''தொழிலாளர்'' என்பதன் கீழ் ஊதிய உச்சவரம்பு ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 1,600 என்று திருத்தப்பட்டுள்ளது. |
| 2. பிரிவு 11 (4) | .. | அழைப்பாணை அனுப்புவதற்கான அதிகாரம் தொழிலாளர் நல அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| 3. அத்தியாயம் (V-B) | .. | உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பிற்கிணங்க, தற்காலிகப் பணி ஒத்திவைப்பு (பிரிவு 25 M) ஆட்குறைப்பு (பிரிவு 25 N) மூடிவிடுதல் (பிரிவு 25 O) ஆகியவை தொடர்பான விதித் துறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.<br><br>இந்த அத்தியாயத்தின் (25 K) கீழ் 300 தொழிலாளர்களின் எண்ணிக்கை 100 ஆகக் குறைக்கப்பட்டது. |
| 4. புதிய அத்தியாயம் | .. | அத்தியாயம் V-C.<br>தொழிலாளர்களின் நியாயமற்ற செயல்கள், அதற்கான தண்டனை ஆகியவையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>(i) தொழிலதிபர்களுக்கும் தொழில் சங்கங்களுக்கும்<br><br>(ii) தொழிலாளர்கள், தொழிலாளர்களின் தொழில் சங்கங்கள் குறித்தும், தொழிலாளர்களின் நியாயமற்ற பல்வேறு செயல்கள் குறித்தும், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 5ஆம் விவர அட்டவணை விளக்குகிறது. |



| | | |
|---|---|---|
| 5. பிரிவு 36 (b) | .. | இச் சட்டத்தின் பல்வேறு விதித் துறைகளிலிருந்து ஒரு தொழில் நிறுவனத்திற்கு விலக்களிக்க தகுதியான அரசுக்கு அதிகாரம் வழங்கும் விதித்துறை. |

பின்வரும் அதிகாரிகள், அத்தியாயம் (Vb) இன் கீழ் விண்ணப்பங்களை முடிவு செய்ய அதிகாரம் பெற்றவர்களாக அரசு அறிவித்துள்ளது :—

| | |
|---|---|
| பிரிவு 25 M(தற்காலிகப்பணி ஒத்திவைப்பு) | தொழிலாளர் நல இணை ஆணையாளர். |
| பிரிவு 25 N (ஆட்குறைப்பு). | தொழிலாளர் நல ஆணையாளர். |
| பிரிவு 25 O (மூடுதல்) .. | தொழிலாளர் நல ஆணையாளருக்கு இந்த பிரிவின்கீழ் விண்ணப்பங்களை முடிவு செய்ய, அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. மேலும், ஆய்வு செய்யவும், பரிசீலிக்கவுமான அதிகாரத்தை அரசே வைத்துக்கொண்டுள்ளது. |

**தொழில் பிரிவு பணியாளர் அமைப்பை விரிவுபடுத்துதல்.**

தொழில் விரைவாக வளர்ந்து வருவதாலும், தொழிற்சங்கங்களும், தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் கூடி நடத்தும் பேச்சு வார்த்தை பெருகி வருவதாலும், தொழிலுறவுகள் தொடர்பான பிரச்சினைகள் மேலும், மேலும் சிக்கலாகிக் கொண்டே வந்துள்ளன. தொழிலமைதியை நிலையாகப் பேணி வரவும் பயனுள்ள வகையிலும், விரைவாகவும் பிரச்சினைகள் தீர்த்து வைப்பதற்கும், வட்டார அளவில் பணி அனுபவமிக்க இணக்கம் செய்வதில் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்களின் பணி தேவைப்படுகிறது.

வட்டார தொழிலாளர் நல துணை ஆணையாளர்களின் தற்போதைய பணிகள் ஓரளவு நீதி முறை சார்புடையவையாகவும், நிர்வாகம் தொடர்பானவையாகவும், இணக்கம் செய்வனவாகவும் உள்ளன. ஓரளவு நீதிமுறை சார்புடைய நிருவாகப் பணியில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம், பணிக்கொடை வழங்கல் சட்டம், வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம், ஆகியவற்றின் கீழ் கோரிக்கைகளை உடனடியாகவும், விரைவாகவும் முடித்தல் வேண்டும்.

இவ்வதிகாரிகள், பெரிய தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்த இயலாமல் உள்ளனர். பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் தொழில் தகராறுகளை உடனடியாக விரைந்து தீர்த்து வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்களை தவிர்ப்பதற்காக தலைமையிடத்திலுள்ள தொழிலாளர் நல ஆணையாளரையும்,முதுநிலை அதிகாரிகளையும் அணுகுகின்றனர். இணக்கம் செய்வது தொடர்பான பணிகளில் தொழிலாளர் நல ஆணையரின் பணிச் சுமையைக் குறைக்கும் பொருட்டும், வெளி யூர்களில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் நடைபெறக் கூடிய வகையில் ஏற்படக்கூடிய தொழில் தகராறுகளைக் குறித்து விரைவான நடவடிக்கை மேற்கொண்டு தீர்த்துவைப்பதற்கும், கோயம்புத்தூர், மதுரை போன்ற தொழிற்சாலை நிறைந்த இடங்களில், தொழிலாளர் நல இணை ஆணையாளர் பதவித் தரத்தில் முதுநிலை அதிகாரி தேவை என்று கருதப்படுகின்றது.

இந்த ஏற்பாடுகள்,தொழிலாளர் நல துணை ஆணையாளர்கள் ஓரளவு நீதி முறை சார்புடைய நிருவாக அதிகாரியாகச் செயல்பட பயனளிக்கும் வகையில் இருக்கும். தொழிலாளர் நல இணை ஆணையாளர் பதவித் தரத்தில் உள்ள முதுநிலை அதிகாரி யின் திறம்மிக்க நிருவாகத்திற்குப் பேருதவியாக இருக்கும். தலைமையிடத்தில் உள்ள அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டு மென்ற அரசின் கொள்கைக்கு இணங்கவும் இவை இருக்கும்.

தற்காலிகப் பணி ஒத்திவைப்பு, கதவடைப்பு, மூடுதல் முதலிய வற்றில் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் இந்திய அரசு சமீபத்தில் பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது. இணக்கம் செய்வதில் அனுபவம் பெற்றவர், தொழில் தகராறுகள் ஏற்படாத வகையில் இரு தரப்பினருக்கும் அறிவுரை நல்க இயலும். 1985-86 ஆம் ஆண்டில் மேற்கூறிய நோக்கங்களை எய்தும் வகையில், துணைப் பணியாளர்களுடன் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தொழிலாளர் நல இணை ஆணையாளர் இருவரை நியமனம் செய்யக் கருதப்பட்டுள்ளது.

### தொழிற் சங்கங்கள்.

1—1—1984 அன்றுள்ளவாறு, பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,713. இவ்வாண்டில், 535 தொழிற் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 152 தொழிற்சங்கங் களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. மூன்று பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் இணைக்கப்பட்டன. 15 தொழிற் சங்கங் களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. நான்கு தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப் படி, பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 4,104 ஆகும்.



### சுமூகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

தொழில் நிறுவனங்களில் நிருவாகத்தினருக்கும், அவர்களால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குமிடையே சுமூகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ''சுமூகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்'' என்றழைக்கப்படும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத் தின் கீழ் ஒவ்வோராண்டும் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு பரிந்துரைத்ததன் அடிப்படை யில் 1981 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்கள் தெரிந் தெடுக்கப்பட்டு முதல் பரிசாக சுழற்கோப்பை ஒன்றையும், நிலையாக வைத்துக்கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றையும் இரண்டாம் பரிசாக, தகுதிச் சான்றிதழ் ஒன்றையும், இதற்கென சென்னையில் 24—1—1984 அன்று நடத்தப்பட்ட விழாவில் கொடுக்கப்பட்டன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட விழாவில், இப்பரிசுகளை மாண்புமிகு தொழில் அமைச்சர் வழங்கினார்.

1982 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களை முன்பே அரசு தேர்ந்தெடுத்துள்ளது. விரைவிலேயே பரிசுகள் வழங் கப்படவிருக்கின்றன. 1983 ஆம் ஆண்டுக்குரிய பரிசுக்கான விண்ணப்பங்கள் சரிபார்ப்பதற்காகவும், தெரிந்தெடுக்கவும் குழுவின்முன் வைக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 4

### தொழிற்சாலைகள் நிருவாகம்.

1984-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டு தொழிறசாலைகள் சட்டத்தின் கீழ் 11,920 தொழிற்சாலை கள் இருந்தன. 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 617 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டு, 1,259 தொழிற் சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டதுடன் சேர்த்து தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 12,562 ஆக உயர்ந்தது. 31-12-1984 அன்றுள்ளவாறு, இச்சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,93,769 ஆகும்.

இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடரப்பட்ட வழக்கு களின் விவரங்கள் முறையே இணைப்புகள் 5, 6, 7 இல் தரப் பட்டுள்ளன.

[1985 ஜூன் 19

1985-ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணங்களை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. உரிமக் கட்டணங்களை உயர்த்துவதற்காக வரைவு திருத்தத்தை அரசு ஏற்கனவே வெளியிட்டுள்ளது. இத்திருத்தம் விரைவில் உறுதி செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. உரிம தொகை ரூ. 128.61 (கூடுதல் வருவாய் ரூ. 64 லட்சம்) வசூலிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**விபத்துக்கள்**

தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982 .. .. . | 50 | 25,889 |
| 1983 .. . .. | 45 | 20,547 |
| 1984 . .. .. | 46 | 15,638 |

1983, 1984-ஆம் ஆண்டுகளில் விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. தொழில் பாதுகாப்பு மேம்படுத்துகிற மும்முர நடவடிக்கைகளான ஒழுங்கான பாதுகாப்புப் பயிற்சி வகுப்புக்கள் பாதுகாப்பு சுற்றாய்வு முதலிய வற்றை நடத்தியதாலும், தொழிற்சாலைகள் சட்டத்தின் பாதுகாப்பு விதித்துறைகளை அடிக்கடி சிறந்த முறையில் ஆய்வு செய்து செயற்படுத்தியதாலும், இது சாத்தியமாயிற்று.

**பயிற்சி :**

பயிற்சித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, 1984-ல் ரூ. 8000 செலவில் (1) அபாயத்தின் நிறம், (2) பாதுகாக்கப்பட்ட சுற்றுச் சூழல்—மொத்த இழப் பினை கட்டுப்படுத்துதல், (3) இரைச்சல் ஆகியவை பற்றிய திரைப்படங்கள் மூன்று வாங்கப்பட்டன. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்—பாதுகாப்பு) தன்னுடைய திரைப்பட நூலகத்தில் 32 திரைப்படங்களை வைத்துள்ளார். கிழ்க்காணும் தொழில்களில் அதிக எண்ணிக்கையில் விபத்துக்கள் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளதால், கிழ்க்காணும் விளம்பர 'சிலைடு' களை வாங்க அரசு அனுமதி வழங்கி யுள்ளது.



1985 ஜூன் 19]

(1) அரைவைத் தொழில் பாதுகாப்பு.

(2) கல்நார் சிமிட்டி மேற் கூரைபோடும் தொழிலில் பாது காப்பு. ஒப்பந்தத் தொழிலாளர்கள் மேற் கூரைகளையும் அரைவை இயந்திரத்தையும் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும் போது பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ள விவரங்கள் தெரிய வந்தது. கல்நார் சிமிட்டி மேற் கூரைகளை சுத்தம் செய்தல், பழுதுபார்த்தல், தேய்மான சக்கரங்களைப் பயன்படுத்தல் ஆகிய வற்றின் பொது பாதுகாப்பு முறைகள் பற்றி தொழிலாளர்களுக்குக் கல்வி புகட்ட மேற் சொன்ன ''சிலைடுகள்'' பயன்படும். பணியாளர்களது பயனுக்காக பெரம்பூரில் உள்ள தென்னிந்திய இரயில்வே கேரேஜ் வேன் பட்டறையில் தொழிற்சாலை தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்-பாதுகாப்பு) பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடத்தினார்.

**அரசு வழங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பரிசுகள்.**

**உழைப்பு ஆற்றல் பரிசுகள் :—**

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெறுவதைப் பாராட்டி இம்மாநிலத்தில் பாது காப்பு நடவடிக்கைகளுக்கான பரிசு வழங்கும் முறை, நிரு வாகிகள், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினரின் நல்லெண் ணத்தையும் பேணிவர 1966-ல் கொண்டுவரப்பட்டது. இம்முறை தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 'சுழல் முறை' ஷீல்டு வழங்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது. வெற்றிபெறுபவர்களுக்குத் தற்போது தனித்தனியாக ஷீல்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை அவர்கள் தாங்களே வைத்துக் கொள்ளலாம். இவ்வரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசைத்தவிர, பாதுகாப்பை உறுதி படுத்துதல், உற்பத்தியைப் பெருக்குதல், தொழிலில் திறமை, தொழில் முறைகளில் புதிய கண்டுபிடிப்புகள், மேம்பாடுகள், பொருள் வீணாவதைக் குறைத்தல் முதலியவை குறித்து ஆலோ சனை வழங்குகின்ற தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு உழைப்பு ஆற்றல் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

1982, 1983 ஆம் சாதனை ஆண்டுகளில் அரசு வழங்கும் பாதுகாப்பு நடவடிக்கைக்கான பரிசுகள் உழைப்பு வீரர் பரிசுகள் ஆகியவற்றிற்குறிய விண்ணப்பங்கள் பெறப் பட் டுள்ளன. இவ் விண்ணப்பங்கள் அரசால் இது காரியத்திற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் அவற்றிற்குரிய பரிசுகளைக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982 முதற் கொண்டு, ரொக்கப் பரிசுகள் கொடுக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

**பாதுகாப்புப் பிரிவுகள்.**

மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு
பிரிவுகள் இரண்டு செயல்பட்டு வருகின்றன. 1984 ல்
சென்னையில் கூடுதலாக பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்
படுத்தியுள்ளது. 7-7-1984 முதற்கொண்டு அது செயல்
பட்டு வருகிறது. பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படுகின்றன
தொழிற்சாலைகளில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புக்களை பாது
காப்பு பிரிவு நடத்துகிறது. பயிற்சி பெறாத பணியாளர்கள்
வேலைக்கமர்த்தப்பட்டுள்ள புதிய தொழிற்சாலைகக்குத்
தேவையான ஆலோசனையையும் மேற் சொன்ன பாதுகாப்புப்
பிரிவு வழங்குகிறது. சென்னையிலுள்ள வட்டார தொழிலாளர்
நல நிலையம், தேசியப் பாதுகாப்புச் சபை, தொழிலதிபர்
நலச்சங்கம், முதலியவற்றின் ஒத்துழைப்புடன் பாதுகாப்புப்
பயிற்சி வகுப்புகள் சில நடத்தப்பட்டன. தொழிற்சாலை
பாதுகாப்பு பற்றிய ஆய்வுகள், கருத்தரங்குகள், கருத்துத்
திரட்டு ஆகியவற்றை பாதுகாப்புப் பிரிவுகள் நடத்தியுள்ளன.
இதைத் தவிர, தொழிற்சாலை பாதுகாப்பு பற்றிய திரைப்
படங்கள் காண்பிக்கப்பட்டன.

**1985–86 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புப் பிரிவுகளின் கீழ் வருகின்ற புதிய திட்டங்கள்.**

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் ஒப்புதல் வழங்கிய
தகுதி வாய்ந்த நபர்களால் காலந்தோறும் பாரந்தூக்கிகள்
மின் ஏற்றப்பொறி - பளுந்தூக்கி இயந்திரம், கம்பிதடம்,
கயிறுகப்பிகலன் ஆகியவற்றைச் சோதனையிடும் நடைமுறைத்
தொழிற்சாலைச் சட்டம் வரையறுக்கிறது. மேற் சொன்ன தகுதி
வாய்ந்த நபர்கள், பெரிய மாநகரங்களில் மட்டுமே உள்ளனர்.
அவர்கள் மேற் சொன்ன பணிகளை பகுதி நேரமாக செய்து
வருகின்றனர். அவர்கள் சோதனையிடும் பணிக்கு முக்கியத்துவம்
அளிப்பதில்லை. கயிறுகப்பிகலன்கள் 12,000மும், பாரந்
தூக்கிகள் 300-ம் மின் ஏற்றப்பொறிகள் 1,000மும் உள்ளன.
சோதனைப் பணியினை துறையே மேற்கொள்ளக் கருதப்பட்
டுள்ளது. அடுத்து இயந்திர சாலை சோதனைப் பிரிவுகள்
இருப்பதைப் போன்று சோதனைப் பணிகளுக்கு கட்டணங்கள்
வசூலிக்கலாம். இத்திட்டத்தின் மூலம் அரசுக்கு அதிக வருவாய்
கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதால், இது ஓர் சுய ஆதரவு
திட்டமாகவும். சென்னையில், தொழிற்சாலைகள் இணைத்
தலைமை ஆய்வாளர் ஒருவரையும் உடன் பணியாளர்களுடன்
தொழிற்சாலைத் துணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரையும்
நியமனம் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.



**உற்பத்தித்திறன் குழுவை ஏற்படுத்துதல்.**

உற்பத்தித்திறன் இருபது அம்ச திட்டத்தின் கீழ் வருகின்ற
ஓர் முக்கிய அம்சமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தித் திறனை
மேம்படுத்துவதில் இந்திய அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது
1982 ஆம் ஆண்டு உற்பத்தித் திறன் ஆண்டாக கருதப்பட்டது.
தற்போதுள்ள வளங்களைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க
தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக, பணி நேரங்களைக்
குறைத்தல், செயல் ஊக்க உதவித் திட்டங்கள் குறித்து கருத்து
தெரிவிக்கப்பட்டன. கீழ்க்காணும் முக்கிய அலுவல்களைக் கவ
னிக்க உற்பத்தித் திறன் குழு ஒன்றை ஏற்படுத்த இத்திட்டம்
வகை செய்கிறது :—

1. மனித ஆற்றல் இழப்பினைத தடுப்பது தொடர்பான
ஆலோசனைகளைக் காலந்தோறும் வழங்குவதன் மூலம் உற்
பத்தித் திறனை மேம்படுத்த தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்.

2. கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் அனைத்தையும் பயன்
படுத்திக் கொள்ள அதிக கவனம் செலுத்தல்.

3. பொருட்கள், எந்திரங்கள், ஆகியவை வினாவிகிதக்
குறைத்தலும், தவிர்த்தலும்.

4. பணிவழி முறைகளை ஆய்வு செய்வதன் மூலம், தொழிற்
சாலைகளில் பல்வேறு வகை பணி செயல்முறைகள் குறித்து
கோட்பாடுகள் வரையறுத்தல்.

5. உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு பணி
குறித்தும் பணியின் பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும்
ஆய்வு மேற்கொள்ளுதல்.

இத்திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்துவதற்காக,
1985-86 ல் சென்னையில் பணியாளர் வசதியுடன் தொழிற்
சாலை இணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரை நியமிக்க
கருதப்பட்டுள்ளது.

**பாதுகாப்புப் பிரிவுகளின் மூலம் பரவலாக பாதுகாப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்வதற்கான திட்டம்.**

தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் சென்னை
மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பாதுகாப்புப் பிரிவு
கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. (i) விபத்துக்கள் பற்றிய
புள்ளி விவரங்களைச் சேகரித்தல்-தொகுத்தல், (ii) பாதுகாப்பு
குறித்த ஆய்வுகள்—தொழில் சார்ந்த சுகாதார ஆய்வுகள் மேற்
கொள்ளுதல், (iii) தீ, தூசி, நச்சு வாயு, புகை முதலியவற்றின்
காரணமாக ஏற்படுகின்ற தீங்குகளை ஆராய்தல், (iv) தனியே
வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு உத்திகள், (v) பாதுகாப்பு பயிற்
வகுப்புகள் நடத்துதல், (vi) பொதுவாகப் பயன் படுத்தப்ப

[1985 ஜூன் 19

**மாநிலப் பாதுகாப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலை சுகாதார ஆரோக்கிய சூழல் ஒருங்கிணைந்த பிரிவும் ஆய்வகமும்.**

இம்மாநிலத்தில் தொழில் வழியாக ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும், 1971 ஆம் ஆண்டில் தொழிற் சாலை சுகாதார ஆரோக்கிய சூழல் 'ஒருங்கிணைந்த பிரிவு ஆய்வகத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இப்பிரிவு சென்னை யில் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் தலைமை மருத்துவ அதிகாரி (தொழிற்சாலை
கள்) 31 தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு, உடற்கூறு
தொடர்பான 469 மாதிரிகளை அதாவது தொழிலாளர்களிட
மிருந்து இரத்தம், சிறுநீர், சளி ஆகியவற்றைச் சேகரித்து பரி
சோதனை செய்தார். பரிசோதனையின் முடிவுகள் நிர்வாகத்
தினர்களுக்கு அனுப்பப்பட்டன. அத்துடன் பாதிக்கப்பட்ட
தொழிலாளர்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பது குறித்தும்,
பணி புரியும் சுற்றுப்புற சூழ்நிலைகளை மேம்படுத்துவது குறித்
தும், தொழில் வகையில் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத்
தவிர்ப்பதற்கு தொழிலாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு
சாதனங்களை வழங்க வேண்டிய அவசியம் குறித்தும் அறிவுரை
யும் வழங்கப்பட்டது. சுகாதாரம், பாதுகாப்பு குறித்த கருத்
தரங்குகளில் தலைமை மருத்துவ அதிகாரி (தொழிற்சாலைகள்)
கலந்து கொள்வதுடன், பல்வேறு பயிற்சியாளர்களுக்கு அறி
வுரையும் நிகழ்த்துவார். மேலும், தொழில் முறையிலான
சுகாதாரம் பாதுகாப்பு குறித்த பணிகளில் ஆய்வகத்திற்கு
உதவியும் செய்கிறார். கோயம்புத்தூர் மாவட்டம், சிறுமுகை
யிலுள்ள தென் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட்டின் பாலினாஸ்
பைப்பர் தொழிற்சாலையின் நூற்பு முதல் வெட்டும் பிரிவுகள்
வரையிலான பணி நிலைகள் குறித்த ஆய்வுக் குழுவில் தலைமை
மருத்துவ அதிகாரி (தொழிற்சாலைகள்) ஒரு உறுப்பினராவார்.
பணிச் சூழல் சுகாதாரக் கேடுகள் தொடர்பான தனது பரிந்
துரைகளை இக்குழு கொடுத்துள்ளது. சென்னை, வட்டாரத்
தொழிலாளர் நல நிறுவனமும், தொழில் சுகாதாரப் பிரிவும்,
சுகாதாரக் கேடுகள் குறித்து, சென்னையிலுள்ள கோத்தாரி
கெமிக்கல்ஸ் நிறுவனம், மேட்டூர் கெமிக்கல்ஸ் அண்டு இண்டஸ்ட்
ரியல் கார்ப்பரேஷன், அதன் குளோர்-ஆல்காலி தொழிற்சாலை
ஆகியவற்றில் ஆய்வுகள் நடத்தின. பணி நிலைமைகளில் சில
மேம்பாடுகளைச் செய்யுமாறு இக்குழு பரிந்துரைத்துள்ளது.
வேலூர், மருத்துவ அதிகாரி (தொழிற்சாலைகள்), அரக்கோணம்,
சதர்ன் அஸ்பெஸ்டாஸ் நிறுவனத்தில் தொழிலாளர்களுக்காக
விரிவான மருத்துவ பரிசோதனைகளையும் நடத்தியுள்ளார்.



1985 ஜூன் 19]

**தொழிலாளர் சுகாதார நலனிற்கான மருத்துவப் பிரிவு.**

மதுரையில் இயங்கும் மருத்துவப்பிரிவு, தொழிலாளர்கள்
செறிந்துள்ள பகுதிகளான பசுமலையில் ஒன்றும், செல்லூரில்
ஒன்றும் என இரு மருந்தகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை,
அமைப்பு ரீதியின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ
வசதிகள் அளித்து வருகின்றன. மதுரை முதன்மை மருத்துவ
நிலையத்தில் 1984 ஆம் ஆண்டில் 1,632 தொழிலாளர்களுக்கு
மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு
இந்நிலையத்தில் 439 தொழிலாளர்களுக்கு மட்டுமே மருத்துவ
சிகிச்சை அளிக்கப்பட்டது. செல்லூர் துணை மருத்துவ நிலை
யத்தில் 1983 ஆம் ஆண்டில் 1,983 பேருக்கு சிகிச்சை அளிக்கப்
பட்டது. இவ்வாண்டில் 2,212 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்
டது. 1983 ஆம் ஆண்டில் பசுமலை துணை மருத்துவ நிலையத்
தில் 466 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இவ்வாண்டில்
429 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது

**தொழிற்சாலை ஆரோக்கிய சூழல் குறித்த ஆய்வகத்தை நவீனப்படுத்துதல்**

தொழிலாளர்களின் பணிச் சூழலையும், சுகாதாரத்தையும்
கண்காணிக்க அவசியமான நவீன கருவிகள், சாதனங்கள்
ஆகியவற்றுடன் சென்னையிலுள்ள தொழிற்சாலை தூய்மை
ஆய்வகத்தை நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய
நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலை தூய்மை
குறித்து பயிற்சி பெறுவதற்காக தொழிற்சாலைகள் ஆய்வாளர்
அலுவலகத்தின் பணிமூப்பு அலுவலர்கள் முகமையில் அனுப்பப்
படுகின்றனர் என்பதை இது தொடர்பாக இங்கு குறிப்பிடுவது
சிறந்ததாகும்.

**சிறு தொழில் நிறுவனங்களில் தொழில் சுற்றுப்புற சூழல் ஆய்வு நடத்துவதற்கான பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்புத் திட்டம்.**

சிறு தொழில் நிறுவனங்களில் தொழில்-சுற்றுப்புறச் சூழல்
ஆய்வு நடத்துவதற்காகப் பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு
திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் இருவரை
நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆய்வு
குறித்த ஆரம்பப் பணிகள் தொடர்பான கூட்டங்களில் அவர்கள்
ஏற்கனவே கலந்து கொண்டுள்ளனர்.

## சான்றிதழ் வழங்கும் மருத்துவர்கள்

வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 10(1) பிரிவின் விதித்துறைகளின்படி, இச் சட்டத்தின் செயல் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு சான்றளிக்கும் பணிகளை நிறைவேற்றுவதற்காக, தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளை வரையறுக்கப்படக்கூடிய உள்ளூர்ப் பகுதிகளில் மாநில அரசு நியமிக்க வேண்டியுள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரிய இளைஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குவதும், குறிப்பிட்ட சில அபாயம் நிறைந்த பணிகள், பணி முறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களைச் சட்டத்தில் கோரப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவப் பரிசோதனை செய்வதும் சான்றிதழ் வழங்கும் மருத்துவ அதிகாரிகளின் முக்கிய பணிகளாகும்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் மருத்துவத் துறையைச் சேர்ந்த 196 மருத்துவ அதிகாரிகளை சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களாக நியமித்ததுடன் அவர்களுக்கு சில பகுதிகளையும் வரையறை செய்து அரசு முதலில் அறிவித்தது. அரசு மருத்துவமனைகள் முதலியவற்றில் மருத்துவ அதிகாரிகளாகப் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளை சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களாகச் செயல்படுமாறு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டதால் அவர்கள் தங்களது ஏனைய இயல்பான பணிகளுடன் இவற்றையும் சேர்த்துப் பார்க்க இயலவில்லை. தொழிற்சாலைகள் சட்டத்தில் கோரியுள்ளவாறு மருத்துவச் சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களாகப் பணிகளை அவர்களால் நிறைவேற்ற இயலவில்லை. இந்த இடர்பாட்டினை நீக்கவும், மருத்துவ அதிகாரிகளை இக்கூடுதல் பணியிலிருந்து விடுவிக்கவும் மதுரை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்டு உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர் பதவித் தரத்தில் 6 மருத்துவ அதிகாரிகள் பதவியினை 1980 ஆம் ஆண்டு அரசு ஏற்படுத்தியது. இளைஞர்கள், தொழிற்சாலை உணவகங்களில் பணியாற்றுவோர், அபாயகரமான பணிகளில் ஈடுபட்டுள்ளோர் ஆகியோரை மருத்துவச் சோதனைச் செய்து இளைஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கும் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். அபாயகரமான பணிகளில் ஈடுபட்டுள்ளோரையும் இவர்கள் மருத்துவச் சோதனை செய்கின்றனர். இம் மருத்துவ அதிகாரிகள் (தொழிற்சாலைகள்) தங்கள் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக, 1983 ஆம் ஆண்டில் இவர்கள் தொழிற்சாலைகள் கூடுதல் ஆய்வாளர்கள் என்று அறிவிக்கப்பட்டனர். 1984 ஆம் ஆண்டில் இம் மருத்துவ அதிகாரிகள் (தொழிற்சாலைகள்) அபாயகரமான பணிகளில் ஈடுபட்டிருந்த 7,456



தொழிலாளர்களை மருத்துவச் சோதனைச் செய்து பல்வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றும் 3,780 இளைஞர்களுக்குச் சான்றளித்தனர். மேலும், 1,346 உணவகத் தொழிலாளர்களையும் மருத்துவப் பரிசோதனை செய்தனர்.

## அழுத்தக் கருவிகளைச் சோதிக்கும் பிரிவு :

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக் கருவிகள் கலன்கள் ஒவ்வொன்றும் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் முழுவதுமாக சோதனை செய்து, அவை செயல்படுவதற்குகந்த முறையில், நல்ல நிலையில் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டமும், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளும் வரையறுக்கின்றன. இதற்கு முன்னர் இந்த ஆய்வுகளையும் சோதனைகளையும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் (சுகாதாரம்-பாதுகாப்பு) தகுதி வாய்ந்தவர்களென சான்றளிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைப் பொறியாளர்களால் அல்லது வெளி முகவரமைப்புகளால் நடத்தப்பட்டன.

அழுத்தக் கருவிகளை/கலன்களை ஆய்வு செய்து சோதனையிடும் இம் முக்கியப் பணியை தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்த பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும், அரசு தற்போது தீர்மானித்து, இப்பணியை ஆய்வாளர் அலுவலகங்கள் மேற்கொள்வதற்குத் தேவையான ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

இந்நோக்கத்திற்காக, ஆரம்ப கட்டமாக, தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் நால்வரை அரசு நியமித்துள்ளதுடன், சென்னை (வடக்கு, தெற்கு), கோயம்புத்தூர், மதுரை ஆகிய நான்கு இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நான்கு அழுத்தக் கருவி சோதனைக் கோட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகள் சட்டத்தின்படி அழுத்தக் கருவிகளை/கலன்களை ஆய்வு செய்து சோதனையிடும் பணியும் தொழிற்சாலை நிருவாகத்தினர்களுக்குத் தேவையான சான்றிதழ் வழங்கும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சான்றிதழ்கள் வழங்குவதற்காகப் பெறப்படும் கட்டணங்கள் மூலம் இந்த அழுத்தக் கருவி சோதனைக் கோட்டங்களுக்கு நிதியுதவி செய்யப்படுவதால், இந்த அழுத்தக் கருவிகள் சோதனையிடும் கோட்டங்கள் சுய ஆதரவுத் திட்டங்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 5.

### தொழிலாளர் நிர்வாகம்.

ஏனைய பயன்தரும் தொழிலாளர் நலச் சட்டங்களை செயல் படுத்துவது குறித்த விவரங்கள் இந்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன :—

### தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.

1984ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் செயல்பட்ட கடைகள், நிறுவனங்கள் இவற்றில் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் | .. | 2,80,769 |
| பணியமர்த்தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை | .. | 2,65,292 |

### நிரந்தர, தற்காலிக விதிவிலக்குகள்.

இந்த ஆண்டில், தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து 3 நிறுவனங்களுக்கு நிரந்தரமாகவும், 3 நிறுவனங்களுக்குத் தற்காலிகமாகவும் (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் தவிர ஏனையவை) அரசு விதிவிலக்கு அளித்தது. தொழிலாளர் நல ஆணையர் பொருட் காட்சிகள், திருவிழாக்கள் உட்பட 26 தற்காலிக விதிவிலக்கு களை அளித்துள்ளார்கள்.

தொழிலாளர் நலத் துணை ஆணையர் 93 நிறுவனங்களுக்குத் தற்காலிக விலக்களித்துள்ளதுடன், 11 இனங்களில் இச் சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இச் சட்டத்தின் 51ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று முடிவுறாமலுள்ளது.

தொழிலாளர் நல துணை ஆணையர் அலுவலகத்தில் தொழி லாளர் நல உதவி ஆணையர்கள் நியமிக்கப்படுவதற்குப் பதி லாக (தொழிலாளர் நலத்துறையின் 15—5—1984 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணை) தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர் நல துணை ஆணையர் மேல்முறையீட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட இனங்கள் குறித்த விவரங்கள் 5, 7, 8 ஆம் எண்களுள்ள இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.



### தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள்.

இச் சட்டத்தின் கீழ் 1984ஆம் ஆண்டில் 25,900 நிறுவனங் களும், அவற்றில் பணி புரிந்த 74,238 பணியாளர்களும், பயன் பெற்றனர். ஆய்வாண்டில் பதிவுக் கட்டணம்/புதுப்பித்தலுக் குரிய கட்டணம்/கூடுதல் கட்டணம் என்ற வகையில், 2,92,771 ரூபாய் கிடைத்தது.

இச் சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள். தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட இனங்கள் குறித்த விவரங்கள், 5, 7, 8 ஆம் எண்களுள்ள இணைப்பு களில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டிலுள்ள உணவகங்கள் அவற்றின் பெயர்ப்பலகை களை தமிழில் எழுதி வைத்திருக்க வேண்டுமென்று கோரி, 42ஆம் விதியின் கீழ் அறிவிக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. (தொழிலாளர் நலத்துறையின் 29—2—1984 ஆம் நாளிட்ட 499 ஆம் எண் அரசாணை.)

### 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம் தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) விதிகள்.

இம் மாநிலத்தில் 1,218 தொழில் வளாகங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 11,993 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட் டுள்ளனர். பீடித் தொழிலில் சுமார் 2 இலட்சம் வீட்டில் தங்கி தொழில் புரிவோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இக் கால அளவில் உரிமக் கட்டணமாக 23,656 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள் 5, 7 ஆம் எண்களுள்ள இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### பீடித் தொழிலாளர் நலம்.

பீடித் தொழிலாளர் நலனிற்காக இந்திய அரசு செஸ் வசூ லிப்பதுடன், அவர்களது நல நடவடிக்கைகளுக்காக அமைப்பு ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாண்டில், இந்த அமைப் பானது இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும் ஒத்துழைப் புடனும் பின்வரும் நல நடவடிக்கைகளை தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளது :—

வீட்டு வசதி.

இதுவரையிலும் வட ஆற்காடு மாவட்டம் வேலூருக்கருகி லுள்ள சத்துவாச்சாரியில் 180 வீடுகள் கட்டப்பட்டு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டியிலும், திருநெல் வேலி மாவட்டம் முக்கூடல், மேலப்பாளையம் ஆகிய இடங் களிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும் பீடித் தொழி லாளர்களுக்காக 150 வீடுகளைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது.

மேற்சொன்ன நோக்கத்திற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக வருவாய்த் துறை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

சுகாதாரம் :

முக்கூடலில் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை கட்டுதல்.

முக்கூடலில் 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காக நிலத்தைக் கையகப்படுத்துமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

சென்னை, குடியாத்தம் ஆகிய இடங்களிலுள்ள நிலையான மருந்தகங்களை இயங்கும்-நிலையான மருந்தகங்களாக மாற்று வது குறித்த செயற்குறிப்புகள் இந்திய அரசின் பரிசீலனை யில் இருந்து வருகின்றன.

இந்த ஆண்டில் மருத்துவமனைகளில் வசூலிக்கப்படும் கட்டண விதத்தில் சளி, எக்ஸ்ரே ஆகிய ஆய்வுகளுக்காகும் செலவினை ஈடு செய்வதென்று இந்திய அரசு முடிவுசெய் துள்ளது.

இவ்வாண்டில், இந்நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள மருத் துவமனைகளில் அக நோயாளிகளாகத் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிக்களுக்கான உணவுக் கட்டணம் 5 ரூபாயிலிருந்து 7 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது இம் மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவ நிலை யங்களும் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத் துக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கின்றன.



விரிவான சுகாதாரப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள மருத்துவ நிலையங்கள் பீடித் தொழிலாளர் களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவ வசதி அளித்து வருகின்றன.

படிப்புதவித் தொகைகள்.

படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்காக, வரையறுக்கப் பட்டுள்ள மாத வருவாய் எல்லை ரூ. 600 என்பது ரூ. 1,250 ஆக இந்த ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மாணவர்களுக் கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்காக ரூ. 3,47,455.20 செலவிடப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச்சட் டத்தின் 5ஆம் பிரிவின்படி, தமிழ்நாடு அரசு மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் 9 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை, தமிழ்நாடு மாநிலத்திற்கென மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் நடவடிக்கைகளை மேலும் மேற்கொள்ள பல்வேறு வழிவகைகள் குறித்து ஆலோ சனை செய்யும்பொருட்டு, இக்குழு, இவ்வாண்டில் இருமுறை கூடி ஆலோசனை செய்தது.

1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.

1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளும், அதன்கீழ் இயற் றப்பட்ட விதிகளும், இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செய லாக்கப்பட்டு வருகின்றன.

1984 ஆம் ஆண்டில் 58,843 தொழிலாளர்கள் அடங்கிய 1,592 போக்குவரத்து நிறுவனங்கள் இயங்கி வந்தன. ஆய்வு ஆண்டில் ரூ. 80,981.88 பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

நடத்தப்பட்ட ஆய்வுகள், விதித்துறைகளை மீறியவர்கள்மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5 மற்றும் 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் விதி களைச் சேர்ந்த 32(5) (a) ஆம் விதியின் விதித்துறைகளிலிருந்து 3 போக்குவரத்துக் கழகங்களுக்கு, அரசு நிரந்தரமாக விலக்கு அளித்துள்ளது. மேற்சொன்ன சட்டம், விதிகள் ஆகியவற்றின் அனைத்து விதித்துறைகளிலிருந்து, அனைத்துக் கல்வி நிறுவனங் களுக்கும், அரசு தற்காலிகமாக மூன்றாண்டுக் காலத்திற்கு விலக் களித்துள்ளது.

[1985 ஜூன் 15

**1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் பிற செய்தித்தாள். பணியாளர்கள் (பணி நிலைமைகள்) பல்வேறு விதித்துறைகள்) சட்டம்**

இச்சட்டம் வெளியூர்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில், தொழிலாளர் நல ஆணையாளர் (சென்னை) அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச் சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**செய்தித்தாள் பணியாளர்களுக்காகப் 'பலேகர்' நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயலாக்குதல்.**

112 வெளியீடுகளை வெளியிடுகின்ற 39 செய்தித்தாள் நிறுவனங்கள் (செய்தித்தாள்கள்—பத்திரிகைகள்) 'பலேகர்' நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளன.

இச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட 3 தொழில் தகராறுகளை தொழிலாளர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் தீர்த்து வைத்தனர்.

**1976 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.**

மருந்தாக்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துகிற இச் சட்டம், இச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயலாக்கப்பட்டுவருகிறது.

**1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.**

1984 ஆம் ஆண்டு தொடக்கத்தில் சுமார் 92,361 தொழிலாளர்கள் பணி புரியும் 454 தோட்டங்கள் இருந்தன. இந்த ஆண்டில், 62 தொழிலாளர்கள் பணியாற்றும் 11 தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 122 தொழிலாளர்கள் பணியாற்றும் 5 தோட்டங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. ஆண்டு இறுதியில் 460 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 31—12—1984 ஆம் நாளன்றிருந்தவாறு தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,301 ஆகும்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்), தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச் சட்டத்தின் விதித் துறைகளைச் செயலாக்குவதில் இவருக்கு உதவியாக மலைத்தோட்ட ஆய்வாளர்கள் ஏழு பேர் உள்ளனர்.



1985 ஜூன் 19]

இவர்களின் தலைமையகம் உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ளன. மேற்சொன்ன ஆய்வாளர்களைத் தவிர, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய இரு இடங்களிலும் பணி புரியும் மருத்துவர்கள் இருவர் இச்சட்டத்தின்படி மருத்துவ வசதிகள் அளிப்பதோடு, மலைத் தோட்டப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்கின்றனர். இந்த ஆண்டில், இம் மருத்துவ அதிகாரிகள், 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித் துறைகளின் கீழ், வழக்கமான ஆய்வுகளை 949 முறையும், 18 தனி ஆய்வுகளையும், 84 விடுமுறை ஆய்வுகளையும் 14 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

இச் சட்டத்தின்கீழ் மேற்கொண்ட ஆய்வுகள் தொடுக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரம் 5, 7 ஆகிய இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின் 51(2)ஆம் விதியின் கீழ் செய்து கொள்ளப்பட்ட 9 மனுக்களை, கோயம்புத்தூர் தொழிலாளர் நல நீதிமன்றம் முடித்து வைத்தது.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல்—நீக்குதல்) சட்டம்.**

இச் சட்டத்தைத் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன.

இச்சட்டத்தின் கீழ், 1984 ஆம் ஆண்டில் பதிவு அதிகாரிகள் 110 முதன்மைத் தொழிலதிபர்களைப் பதிவு செய்தனர். உரிமம் வழங்கும் அதிகாரிகள் 470 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கினர்.

மேற் கொண்ட ஆய்வுகள், தொடுக்கப்பட்ட வழக்குகள், அவற்றின் முடிவு ஆகியவை குறித்த விவரம் 5, 7 ஆம் இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆலோசனைக் குழு.**

1977 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தத் தொழிலாளர்நல மாநில ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இது 1984 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. இக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த/நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

15—5—1984 ஆம் நாளன்று நடைபெற்ற இக் குழுக் கூட்டத்தில் மேற் சொன்ன குழு தெரிவித்த பரிந்துரைகளின் அடிப்படையில் (1) பொறியியல் தொழில், (2) தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல் வேறு அனல் மின் நிலை யங்கள், மின் உற்பத்தி பிரிவுகள் உட்பட தமிழ்நாடு மின் வாரியம் ஆகியவற்றில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை ஆய்வு செய்வதற்காக 1984 ஆம் ஆண்டில், இரு துணைக் குழுக்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவின் பணி நடைபெற்று வருகிறது.

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலை வாய்ப்பு (நிலை ஆணை கள்) சட்டம்.

1984 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள், 72 நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங் கினர்; 16 இனங்களில், நிலை ஆணைகளின் திருத்தங்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். இவ்வாண்டில், மேல்முறையீட்டு அதி கார மன்றங்கள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றம் இச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் 7 மேல் முறையீடுகள் மீது தீர்ப்பு வழங்கியது. இச் சட்டத்தின் 13-A ஆம் பிரிவின் கீழ் வரப்பெற்ற 1 மனுவின் மீது இந் நீதிமன்றங்கள் தீர்ப்பளித் தன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விதி முறைகள்) சட்டம்.

இவ்வாண்டில், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், ஆய் வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரம் 5, 7 ஆகிய இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இச் சட்டம். இத் துறையின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம்.

இச் சட்டம், 24 திங்கள்களில் 480 நாட்கள் தொழிலாளர் கள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு நிலையான அந்தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச் சட்டம், இம் மாநிலத் தில், தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற் சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும் 1—1—1982-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச் சட்டத்தின் விதித் துறைகளை எதிர்த்து சென்னை



உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். மேற் சொன்ன சட்டத்தின் செயல்திறனைச் சரி என்று கூறி உயர்நீதிமன்றம் அந்த ரிட் மனுக்களுக்குத் தீர்ப்பளித்தது. அவ்வாறு தீர்ப் பளித்தபோது.—

(a) தொழிற் பயிற்சி பெறுபவர்கள்/பதிலிகள் ( Badlis ) ஆகியோருக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும்,

(b) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை செயல் திறனற்றது என்றும் தெரிவித்தது.

மேற்கண்ட உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்மேல், டெல்லியில் உள்ள உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யுமாறு, தமிழ்நாடு அரசு வழக்குரைஞரை (உச்ச நீதிமன்றம்), அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டில், ஆய்வகம் மேற் கொண்ட ஆய்வுகளின் விவரம் இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 6.

## ஊதிய நிர்ணயச் சட்டங்கள்.

1984 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்காணும் வேலைகளை பொறுத்த மட்டில் குறைந்த அளவு ஊதிய வீதத்தை திருத்தி அமைத்துள்ளது :—

புகையிலை தயாரிப்பில் வேலை. (பீடித் தொழிலில் பீடி சுற்றுவோர் உட்பட.)

பின் வரும் தொழில்களைப் பொறுத்தமட்டில், அரசு, குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு ஒன்றை ஏற்படுத்தி யுள்ளது :—

1. ஜவ்வரிசித் தொழிலில் வேலை;
2. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், தோல்பொருள் தயாரிப்பிலும் வேலை;
3. அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை;
4. சலவை நிலையங்கள், துணி வெளுப்பு தொழிலில் வேலை;
5. தேயிலைத் தொழிற்சாலையில் வேலை;
6. நார்ப்பொருள் தயாரிப்பில் வேலை;
7. அரிசி, மாவு, பருப்பு ஆலைகளில் வேலை;
8. எண்ணெய் ஆலைகளில் வேலை;
9. மூக்குப் பொடித் தயாரிப்புத் தொழிலில் வேலை;
10. பொதுப் பொறியியல், கட்டுமானத் தொழிலில் வேலை;
11. உப்பளங்களில் வேலை;
12. மோட்டார் பட்டறைகளில் வேலை;
13. அங்காடிகள், சந்தைகள்.

(பொருட்காட்சிகள், அங்காடிகள் ஆகிய இடங்களிலும் அதைப் போன்ற ஏனைய இடங்களிலும், சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை.)

பின்வரும் வேலைகளைப் பொறுத்த மட்டில், குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்தல்/திருத்தியமைத்தல் ஆகிய வற்றிற்காக குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்புக்கள் பற்றி கருதி பார்க்கப்பட்டு வருகிறது.—

1. கழிவுப் பஞ்சாலையில் வேலை;
2. கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை;
3. காப்பி பதப்படுத்தும் தொழிலில் வேலை;
4. திரைப்படத் தொழிலில் வேலை;
5. செயற்கை வைரம் அறுப்பதில் வேலை;
6. வனத் தொழிலில் வேலை;
7. தகரக் கொள்கலன்கள் தயாரிப்பு தொழிலில் வேலை;

(சமையல்) பாத்திரங்கள் தயாரிப்பு வேலைக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்கவும், மலைத்தோட்ட வேலைக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தி யமைக்கவும், குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு தெரிவித்த பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

ஆய்வு ஆண்டில், அரசு, கழிவுப் பஞ்சாலை வேலையை, 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துள்ளது.

''வெளுப்பாக்குதல்'', ''சாயம் தோய்த்தல்'' தொழில் தொடர்பான வேலை என்னும் தலைப்பை, ''வெளுப்பாக்குதல் அல்லது சாயம் தோய்த்தல் அல்லது இவ்விரு தொழில்கள் சம்பந் தப்பட்ட வேலை'' என்ற தலைப்பாகத் திருத்தம் செய்து அறி விக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

ஆய்வு ஆண்டில், கள் இறக்குதல், பதனீர் இறக்குதல்போன்ற வேலைககளைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கும் வகையில், வரைவு அறிக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. மேற் சொன்ன வரைவு அறிவிக்கையை உறுதி செய்வது தொடர்பாக அரசு கருதிப் பார்த்து வருகிறது.

### குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு.

ஆய்வு ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோ சனைக் குழு ஒரு முறை கூடியது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள் குறைந்த அளவு ஊதியம் வழங்க வேண்டுமெனக் கோரி வரப்பெற்ற 7 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளித்தனர்.



### வேளாண்மைத் தொழில் வேலைகளுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள்.

வேளாண்மை, அதன் துணைத் தொழில்கள் ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்கள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இறுதியாகத் திருத்தியமைக் கப்பட்டது; மேற்சொன்ன ஊதிய வீதங்கள், தமிழ்நாடு வேளாண் மைத் தொழிலாளர்கள், நியாய ஊதியங்கள் சட்டம் செய லிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தின் 11-வட்டங்கள் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள ஏனைய அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தக்கூடியதாகும். இந்த ஊதிய வீதங்கள் வருவாய்த் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர் நல ஆய் வாளர் அலுவலகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5, 7 ஆம் இணைப்புக்களில் கொடுக் கப்பட்டுள்ளது.

சென்னை, துறைமுகப் பணியாளர் சங்கம் கட்டிட நிதிக்காக, 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 7(2) (kk) பிரி வின் கீழ் சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் தொழி லாளர்களின் ஊதியங்களிலிருந்து பிடித்தம் செய்ய அரசு ஒப்பு தலளித்துள்ளது.

### தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம்.

தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட் டிருக்கும்போது, அவர்களுக்குத் தொழிற்சாலை நிருவாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தின் 4ஆம் பிரிவின்படி இவ்வாண்டு தொடக்கத்தில் வாழ்க்கைப்படி வழங்கக்கோரி வரப் பெற்ற 68 கோரிக்கை மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில் அத்தகைய 240 மனுக்கள் துறை அலுவலர்களால் பெறப்பட்டன. இவற்றுள் 178 மனுக்கள் குறித்து முடிவு செய்யப்பட்டது; இவ்வாண்டின் இறுதி நிலவரப் படி 130 மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படவில்லை.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் தொடர்பாக வரப்பெறும் மனுக்களை முடிவு செய்யும் அதிகாரத்தையும் தொழிற்சாலைகளிலுள்ள பணியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குவதற்கான அதிகாரத்தையும் அந்தந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையர்களுக்கு வழங்கி அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

## அத்தியாயம் 7.

### சமூகப் பாதுகாப்பு.

**1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்.**

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி 173 தொழிற்சாலைகளுக்கு அல்லது குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி வருங்கால வைப்புநிதி, குடும்ப ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றிற்காக மூன்று திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், இச்சட்டம் புதிய தொழில்கள் எதற்கும் நீட்டிக்கப்படவில்லை.

**நிறுவனங்களையும், சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொணருதல்.**

1984 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை, இச்சட்டத்தின்கீழ் கொணரப்பட்ட நிறுவனங்கள், பணியாளர்கள், சந்தாதாரர்கள் ஆகியோர் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் படாதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 422 | 18,059 | 18,481 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3,45,520 | 12,50,283 | 15,95,803 |

**1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வரும் சந்தாதாரர்கள்.**

1984ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இத்திட்டத்தின் கீழ் வந்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 11,54,035 ஆகும்.

**1976ஆம் ஆண்டு பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின்கீழ் உறுப்பினராதல்.**



அனைத்து உறுப்பினர்களும், அதாவது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட, விலக்களிக்கப்படாத நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆயினும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் கூட்டு காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூடுதல் பயன்பெறும் ஏற்பாட்டைத் தொழிலதிபர்கள் செய்திருக்கும்பொழுது, அவர்கள் பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் சேருவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதுவரை, 47,647 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட 125 நிறுவனங்களுக்கு இந்த விலக்களிக்கப்பட்டுள்ளது.

**கேட்பு, வசூல், நிலுவை.**

மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1984ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை விவரம் வருமாறு :—

| (1) | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. (2) | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம் (3) | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| கேட்பு .. | 6,983.57 | 1,251.72 | 249.80 |
| வசூல் .. | 6,569.95 | 1,197.93 | 238.55 |
| நிலுவை .. | 413.62 | 53.79 | 11.25 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும் பகுதி பின்வரும் வகைத் தொழில் நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்கப்படாது முடங்கிக் கிடக்கின்றன :—

| | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி. | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகளைப் பொறுத்த மட்டில் அவற்றை எடுத்துக் கொள்வதற்கு முன்பிருந்த கால அளவுக்குரிய நிலுவைகள். | 57.15 | .. | .. |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2. மேற்கூறிய திட்டம் பொருந்துவதை எதிர்த்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 162.19 | 7.37 | 4.45 |
| 3. கலைக்கப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் | 16.39 | 0.84 | 0.29 |
| 4. மூடப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் | 8.74 | 0.76 | 0.19 |
| மொத்தம் .. | 244.47 | 8.97 | 4.93 |



நாட்டுடமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து அவை நாட்டுடமையாவதற்கு முன்பிருந்த காலத்திற்குரிய நிலுவைத் தொகையை வசூலிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

ரூ. 169.15 இலட்சம் நிலுவைத் தொகையை முனைப்பாக வசூலிப்பதற்கு இந்த அமைப்பு வரி வசூல் சான்றிதழ்களை ஏற்கனவே அளித்துள்ளது. 396 இனங்களைப் பொறுத்தமட்டில் ரூ. 108.44 இலட்சம் வரையிலான வசூல் விவகாரம் மாவட்ட ஆட்சியர்களிடம் முடிவடையாமல் உள்ளன. இத்துடன் 1984ஆம் ஆண்டு டிசம்பர் 31 நிலவரப்படி, நிலுவை வசூல் தொடர்பாக, பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 1,504 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

**பணியாளர்கள் வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்து தீர்த்தல்.**

1984ஆம் ஆண்டில் 56,828 இனங்களைப் பொருத்தமட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 3,167.40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

1984ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமை கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (அ) 31—12—1983 ஆம் நாள் நிலவரிப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,548 |
| (ஆ) 1984ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 67,073 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 74,621 |
| (ஈ) 1984ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 56,828 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 12,368 |
| (ஊ) 31—12—1984ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,425 |

1984ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) இறப்பு .. .. .. | 2:552 |
| (ஆ) வயது முதிர்வு பெற்றமை .. .. | 8,059 |
| (இ) நிரந்தரமாக இயலாமையுற்றது .. | 272 |
| (ஈ) பதவியை விட்டு விலகியது .. .. | 38,896 |
| (உ) ஆட் குறைப்புச் செய்யப்பட்டது .. | 4,558 |
| (ஊ) இடம் பெயர்தல் .. .. .. | 303 |
| (எ) பணியிலிருந்து நீக்கப்பட்டது .. .. | 422 |
| (ஏ) பல்வகை .. .. .. | 766 |
| மொத்தம் .. | 56,828 |

1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31—12—1983ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,870 |



| | |
|---|---|
| (ஆ) 1984 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 62,901 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 70,771 |
| (ஈ) 1984 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 46,581 |
| (உ) குறைபாடுகளை சரி செய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 18,300 |
| (ஊ) 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,890 |

1984 ஆம் ஆண்டில் தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட 46,581 கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 141.61 இலட்சமாகும்.

31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,715 ஆகும்.

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்படாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 834 |
| (ஆ) 1984 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,147 |
| (இ) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,981 |
| (ஈ) 1984 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,070 |
| (உ) திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,136 |
| (ஊ) 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 775 |

தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 94.74 இலட்சமாகும்.

## முன் பணங்கள்.

60,357 இனங்களைப் பொறுத்தமட்டில், சந்தாதாரர்களுக்கு மொத்தம் ரூ. 1,525.57 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரம் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டம்.

இம் மாநிலத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற 10 பேரும் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிறசாலைகளுக்கும் மின்சக்தியைப் பயன்படுத்தாத 20 பேர் அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத் திட்டம் பொருந்தும். புதிய துறைகளில் 20-ம் அதற்கு மேலும் பணியாளர்கள் உள்ள கடைகள், ஓட்டல்கள், உணவகங்கள், பத்திரிகை நிறுவனங்கள், திரையரங்குகள் உட்பட திரைப்பட நிறுவனங்கள், தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் பயன்பெறுவர். இந்த ஊதிய அளவு 27—1—1985 முதல் ரூ. 1,6000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது :—

(1) மருத்துவ உதவி—மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது.

(2) உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(3) தற்காலிகமாக ஏலாமையுற்றோருக்கு உதவி பணமாக அளிக்கப்படுகிறது.

(4) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.



(5) பேறு கால உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை—பணமாக அளிக்கப்படுகிறது.

(7) நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(8) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(9) சார்ந்துள்ளவர்கள் நல உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு காப்புறுதி திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், காப்புறுதி செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் எண்ணிக்கை .. | 5,19,000 |
| (ஆ) காப்புறுதி செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 5,25,400 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 6,25,400 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை | 24,26,600 |

1984—85-ல் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் பின் வரும் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1. தேனி (மதுரை மாவட்டம்).
2. சாத்தூர் (காமராசர் மாவட்டம்).
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்).

மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1 : 7 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. இக் கழகம் மருத்துவ செலவிற்காக செலவிடப்படும் தொகைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது. தற்போதுள்ள உச்சவரம்பு தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 130 காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி ஆகும்.

[1985 ஜூன் 19

மேற்சொன்ன உச்சவரம்பிற்கு மேற்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள் மருந்துப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ. 25-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 55-க்கு உட்பட்டு தொகை தொடர்ந்து வழங்கப்படும்.

தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தின்கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை கோயம்புத்தூர், வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவமனைகளும், 19 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதிநேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | படுக்கைகள். |
|---|---|
| 1. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, அயன்புரம் (சென்னை). | 16 |
| 2. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கே.கே. நகர், சென்னை. | 34 |
| 3. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. | 9 |
| 4. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 540 |
| 5. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்). | 50 |

ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 40 மருந்தகங்களும் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய மருந்தகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

**1985–86 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்.**

நடப்பாண்டில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மேலும் அதிகப் பகுதிகளைக் கொண்டு வருவதற்குப் பின்வரும் திட்டங்களை அனுமதிக்க அரசு கருதியுள்ளது:—

பெரியார் மாவட்டம், பவானி பகுதிக்கு தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தை நீட்டித்தல் ;



1985 ஜூன் 19]

2. கோயம்புத்தூர் மாவட்டம், வீரபாண்டி வருவாய்க் கிராமத்திற்குத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தை நீட்டித்தல் ;

3. வட ஆற்காடு மாவட்டம், கருகம்புத்தூருக்கு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தை நீட்டித்தல் ;

4. கெங்கம்பாக்கம் பகுதியில் கவுல் பஜார், கோயிலம்பாக்கம் கீழ்க்கட்டளை, சித்தூர் ஆகிய பகுதிகளுக்கு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தை நீட்டித்து பல்லாவரத்திலுள்ள தொழிலாளர் நலக் காப்பக மருந்தகத்துடன் அவற்றை இணைத்தல். தற்போதுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகத்தை I,II ஆகப் பிரித்தல்.

இத்துடன் அவசியமான இடங்களிலெல்லாம், மருத்துவ அதிகாரிகள், ஏனைய பணியாளர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்தவும் அரசு அனுமதித்துள்ளது. மேற்சொன்ன திட்டங்களை செயற்படுத்துவதற்காகும் மொத்த செலவு ரூ. 38,07,900.

**1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம்.**

1923-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம் பின்வரும் நேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது:—

(அ) தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்து.

(ஆ) தொழிலால் நோய் ஏற்பட்டு மரணமடைதல் அல்லது ஏலாமையுறுதல்.

இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப் பணியாளர்கள், இரயில்வே பணியாளர்கள், குறிப்பிட்ட சில தீங்கு விளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு (தொழிலதிபர்களின் வர்த்தக அல்லது வணிக காரியங்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்கு நியமிக்கப்பட்டு உள்ள நாட்கூலி பெறும் பணியாளர்கள் நீங்கலாக) ஆகியோருக்குப் பொருந்தும்.

தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையாளரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1923-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டத்திற்கு 1984-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் (திருத்தச்) சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட முக்கியமான திருத்தங்கள் வருமாறு :—

1. 2-ஆம் பிரிவு—ஊதிய உச்சவரம்பு நீக்கப்பட்டது.

2. 4-ஆம் பிரிவு—வயதைப் பொறுத்து இழப்பீட்டுத் தொகை கணக்கிடல்.

3. விவர அட்டவணை III மற்றும் IV திருத்தப்பட்டது.

(இத் திருத்தங்கள் 1–7–1984-லிருந்து செயலுக்கு வந்தன.)

1923-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச்சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந் நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப்போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணி புரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். இவ்வாண்டில் இந் நிதியிலிருந்து 9 இனங்களில் ரூ. 14,500 தொகை வழங்க சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அனுமதித்துள்ளார்.

**1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்.**

இச் சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ்முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச் சட்டத்தின் கீழ் 1984-ஆம் ஆண்டில் பெற்று, தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8-ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**திருத்தங்கள்.**

இவ்வாண்டில் இச் சட்டத்தை மத்திய அரசு 1984-ஆம் ஆண்டு XXV, XXVI-ஆம் திருத்தச் சட்டங்களின் மூலம் இரு முறை திருத்தியுள்ளது. 1984-ஆம் ஆண்டு 25-ஆம் சட்டத்தின்மூலம் கொண்டுவரப்பட்ட திருத்தங்களுள் முக்கியமான திருத்தங்கள் வருமாறு :

(1) முன்னர் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000 ஊதியம் பெறுவோர் இச்சட்டத்தின் மூலம் பயனடைந்து வந்தனர். இப்போது ரூ. 1,600 வரை ஊதியம் பெறுவோரும் இதன் மூலம் பயனடைகின்றனர்.



(2) திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,600-க்கு மேற்படாமல் ஊதியம் பெறும் நிருவாக அல்லது மேலாண்மை பதவியில் உள்ளவர்கள் இச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

(3) எல்லாக் காலங்களிலும் பணிபுரிவோருக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஊதியம் என்ற வீதத்தில் பணிக்கொடை கிடைப்பது போன்றே குறிப்பிட்ட காலத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் கிடைக்கச் செய்வதற்கு 4-ஆம் பிரிவின் விதித்துறை தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(4) உரிமை கோரிக்கையையும், ஏனைய சட்டப்படிக்கான விவகாரங்களையும் அனுமதிப்பது குறித்து எழும் தகராறை முடிவு செய்யும் அதிகாரம் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(5) இச் சட்டத்தைத் திறம்பட நிருவகிப்பதற்கு ஆய்வாளர்களை நியமனம் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

1984-ஆம் ஆண்டு 26-ஆவது சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட முக்கியமான திருத்தமாகும். இதன்படி லாலப்பா லிங்கப்பாவுக்கும் லட்சுமி விஷ்ணு டெக்ஸ்டைல் லிமிடெட் நிறுவனத்துக்கும் இடையே நடந்த வழக்கில் (1981 I LLJ பக்கம் 308) உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்போது சட்டத்திலுள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டியது. இதன் முரண்பாட்டை நீக்க சட்டத்தின் 2 (c) பிரிவின் கீழ் '' தொடர்ச்சியான பணி '' என்ற தொடருக்கான பொருள் விளக்கம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தம் 11–2–1981-லிருந்து செயலுக்கு வர வகை செய்கிறது.

1984-ஆம் ஆண்டு 25-ஆம் சட்டத்தின்கீழ் வரும் திருத்தங்கள் 1–7–1984 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

**உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கான விபத்து இடருதவி திட்டம்.**

உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர் கிராமக் கைவினைஞர்கள் பெரும்பாலோரின் வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளது. அவர்கள் விபத்தில் இறந்தால் அல்லது ஏலாமையுற்றால் அவர்களுடைய குடும்பங்களுக்குக் கிடைத்து வந்த சொற்ப வருமானமும் கிடைக்காமல் போவதுடன், சொல்லொணாத் துயரத்தில் ஆழ்கின்றனர். எனவே, அவர்களுடைய துயரைப் போக்குவதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசு உழவுத் தொழிலாளர்கள்

2.5 ஏக்கருக்குக் குறைவான நன்செய் அல்லது புன்செய் நிலம்
வைத்துள்ள உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத்
தொழிலாளர்கள், ஆகியோருக்கான விபத்து இடருதவித் திட்
டத்தை வகுத்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 3,500-க்குக் குறை
வான ஆண்டு வருமானமுடையவர். தொழிலை மேற்கொள்கை
யில் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடின் அரசு அவருடைய குடும்
பத்துக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000
வழங்கும். வேலையிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டு காய
முற்றால், அவருக்கு ஏற்பட்ட காயத்தைப் பொறுத்து அரசு
ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை தொகை வழங்கும்.

2. விபத்து இடருதவித் திட்டம் இம்மாநிலத்தில் 15-9-1984-
லிருந்து செயற்படுத்தப்படுகிறது. இதுவரையில் அரசு, முத
லமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 13 குடும்பங்களுக்கு
இடருதவி அளித்துள்ளது.

3. உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம்
வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள் கட்டிடத் தொழி
லாளர்கள் ஆகியோர் வேலை செய்கிறபோது அவர்கள் இறக்க
நேரிடின் அவர்களுக்கு விபத்து இடருதவித் திட்டத்தின்கீழ்
(1984 செப்டம்பரில் கொண்டுவரப்பட்டது) வழங்கப்படும். இழப்
பீட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்
படும் என்று 8-3-1985 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்ட
மன்ற கூட்டுத் தொடரில் தமிழ்நாடு ஆளுநர் அறிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு ஆளுநர் அவ்வாறு அறிவித்ததற்கிணங்க இத்
திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி அரசு தற்
போது ஆணை பிறப்பித்துள்ளது. இதன் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | வேலை செய்யும்போது விபத்து ஏற்பட்டு மரணமடைதல். | 10,000 |
| 2. | வேலை செய்யும்போது விபத்து ஏற்பட்டு இரு கைகள் அல்லது இரு கண்கள் அல்லது ஒரு கை, ஒரு காலை, ஒரு கண்ணை இழந்தால் | 10,000 |
| 3. | வேலை செய்யும்போது விபத்து ஏற்பட்டு ஒரு கை அல்லது ஒரு கண்ணை இழத்தல் | 5,000 |

ஈட்டுறுதி- ஓய்வுக்காலப் பயன் தனித்திட்டம்.

மாண்புமிகு முதலமைச்சர் 15-8-1984-ஆம் நாளன்று அறி
வித்த திட்டங்களுள் இதுவும் ஒன்று. உழவுத் தொழிலாளர்கள்,
சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கை
வினைஞர்கள், சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள்,
வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர்,
வார்



முதலானோர் தங்களுடைய வறுமையின் காரணமாக ஈட்டுறுதித்
திட்டத்தின்கீழ் தங்களுடைய குடும்பங்களுக்குப் பாதுகாப்பு
அளிக்க முடிவதில்லை. இதனால் அவர்கள் எதிர்பாராமல்
இறக்க நேரிடும்போது அவர்களுடைய குடும்பங்கள் பெரும்
இன்னலுக்குள்ளாகின்றன அல்லது அவர்கள் முதுமையடைந்து
தொழிலைத் தொடர இயலாதபோது அவர்களுக்கு வாழ வேறு
வழி ஏற்படுவதில்லை. அவர்களுக்கு இடருதவி அளிக்கும் நோக்
குடன் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அவர்களைக் கொண்டு வரு
வதற்கும் அவர்கள் 58 வயதடையும் போது ஒரு மொத்தத்
தொகை பெறுவதற்கு வகை செய்யும் தனித் திட்டம் ஒன்றைத்
தமிழ்நாடு அரசு இப்போது வகுத்துள்ளது.

2. மேற் கூறிய தொழிலாளர்கள் சிறு தொகையைச் சேமிக்கத்
தூண்டும் வகையில் அவர்களிடமிருந்து சொற்ப பங்கு தொகை
பெறுவதன்மூலம் அவர்களை இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச்
சேர்க்க அரசு கருதியுள்ளது. இதனைக் கொண்டு அவர்களுக்கு
ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் காப்புறுதியும் ஓய்வுக்காலப்
பயனாக ஒரு மொத்தத் தொகையும் வழங்கப்படும். இத்திட்டத்
தின்கீழ் தமிழ்நாட்டில் 18-58 வயது தொகுதியிலுள்ள உழவுத்
தொழிலாளர்கள், சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்திருப்போர்,
கிராமக் கைவினைஞர்கள் சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழி
லாளர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடி
திருத்துவோர் முதலானோர் பயனடைவர். இத் திட்டத்தின்
கீழ்ப் பயன்பெற விரும்புவோர் திங்கள் ஒன்றுக்கு அரசுக்கு
ரூ. 1 செலுத்தி உறுப்பினராக வேண்டும்.

3. உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தால், அவருடைய நிய
மனதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ரூ. 5,000 வழங்கும்.
இத்துடன் அவர் பங்குத் தொகை செலுத்திய கால அளவைப்
பொறுத்து அரசும் தொகை வழங்கும்.

4. ஏனைய இனங்களில் 58 வயது முடிவடைந்ததும் உறுப்
பினருக்கு அவர் பங்குத் தொகை செலுத்திய கால அளவைப்
பொறுத்து ஓய்வுக்கால பயன்தொகை .ஒரு மொத்தமாக வழங்
கப்படும். இவ்வாறாக, 10 ஆண்டுகள் பங்குத்தொகை செலுத்திய
உறுப்பினர் ரூ. 1,200 பெறுவார். 20 ஆண்டுகள் பங்குத் தொகை
செலுத்தியிருந்தால் ரூ. 4;300-ம் 25 ஆண்டுகள் தொகை செலுத்
தியிருந்தால் ரூ. 7,400-ம் 30 ஆண்டுகள் தொகை செலுத்தி
யிருந்தால் ரூ. 12,400-ம் 35 ஆண்டுகள் தொகை செலுத்தி
யிருந்தால் ரூ. 20,400-ம், 40 ஆண்டுகள் தொகை செலுத்தி
யிருந்தால் ரூ. 33,500-ம் பெறுவர்.

5. இதுவரை பெற்ற அனுபவத்திலிருந்து, இத்திட்டத்தின்
கீழ், பயனடைவோர் விரைவில் உதவி பெற இயலும் வகையில்
இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குச் சில
நடைமுறை மாற்றங்களைச் செய்ய வேண்டுமெனக் கருதப்படு

கின்றது. இதனைத் தொடர்ந்து 1985 மார்ச் திங்கள் 8 ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவை யில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர், ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினை ஞர்கள் ஆகியோருக்கான ஈட்டுறுதி—ஓய்வுக்காலப் பயன் தனித் திட்டம் விரிவாகச் செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

6. அவ்வாறே இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெறுவோரிட மிருந்து பங்குத்தொகையை வங்கிகளுக்குப் பதிலாக கிராம நிரு வாக அதிகாரிகள் வசூலிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. நடைமுறை மாற்றங்களின் காரணமாக, இத்திட்டத்தின்கீழ் உறுப் பினராகச் சேருவதற்கான கால வரையறை 1985, மார்ச் 31 ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கான தொகுப்புப் பணிக்கொடை நிதித் திட்டம்.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, தொழிற்சாலைகளுக் கும் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரி கின்ற ஏனைய நிறுவனங்களுக்கும் மட்டுமே பொருந்தும். 20 பேருக்குக் குறைவாக பணிபுரிகின்ற நிறுவனங்களின் தொழி லாளர்கள் தற்போது ஓய்வுக்காலப் பயன் எதனையும் பெறு வதில்லை. பணிக்கொடை வழங்கல் சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங் களுக்குத்தான் பொருந்தும். எனவே பணிபுரியும் தொழிலாளர் களில் கணிசமான பகுதியினர் ஓய்வு பெறும்போது வருங்கால வைப்புநிதியோ பணிக்கொடையோ பெறுவதில்லை. வறுமை யில் வாடும் மக்களைக் காத்து அவர்கள் வாழ்வு வளம்பெற உதவுவதே ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாக இருப் பதால் இது குறித்து விரிவாக பரிசீலித்த பின்னர் அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களின் நலனுக்காக தொகுப்புப் பணிக்கொடை நிதியை ஏற்படுத்துவது உகந்தது என்று கருதப் படுகிறது. இதற்காக, 1985–86 'ஆம் ஆண்டில் தொழிலாளர் நல உதவி ஆணையாளரின் தலைமையில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படும். இவருக்கு தொழிலாளர் நல ஆய்வாளர் ஒருவரும் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் ஐவரும் உதவி புரிவர்.



## அத்தியாயம் 8.

## தொழிலாளர் நலப்பணிகள்.

### தொழிற்சாலைத் தொழிலாள சகாய வாடகை வீட்டுவசதித் தனியார் துறை தொழிலதிபர் திட்டம்.

தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின்கீழ் வரும் தொழி லாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதி பர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

சிறிய இரு அறைகளைக் கொண்ட (இரு மாடிகள்) வீடுகள் கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 5,350-ம், சிறிய இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 6,050-ம், முறையான இரு அறை களைக் கொண்டு வீடுகள் (இரு மாடிகள்) கட்டுவதற்கு உச்ச வரம்புத் தொகையாக ரூ. 7,600-ம் முறையான இரு அறை களைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்ச வரம்புத் தொகையாக ரூ. 8,500-ம் இத் திட்டத்தின் கீழ் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,346 வீடுகள் தனியார் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை செலவிட்ட தொகை ரூ. 54.32 இலட்சமாகும்.

### மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட, மலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. இத் தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங் கப்படுகிறது.

அறிக்கையாண்டில் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

| (1) | வீடுகளின் எண்ணிக்கை. (2) | கடன். (3) (ரூபாய்). | உதவித் தொகை. (4) |
|---|---|---|---|
| 1 ராக்வுட் எஸ்டேட், நீலகிரி .. .. | 12 | 24,000 | 18,000 |
| 2 மோனிக் எஸ்டேட், வால்பாறை .. | 6 | 12,000 | 9,000 |
| 3 ஸ்டான்மோர் எஸ்டேட், வால்பாறை .. | 12 | 24,000 | 18,000 |

| (1) | வீடுகளின் எண்ணிக்கை. (2) | கடன். (3) (ரூபாய்). | உதவித்தொகை. (4) |
|---|---|---|---|
| 4 க்ளெவ்ரடேல் எஸ்டேட் (டெர்ராய் டிவிஷன்) குன்னூர் .. | 4 | 8,000 | 6,000 |
| 5 வைந்தன் காடு எஸ்டேட், ஏற்காடு .. | 38 | 76,000 | 57,000 |
| 6 ஸ்டான்மோர் எஸ்டேட், ஏற்காடு .. | 50 | 1,00,000 | 75,000 |
| 7 பர்ன்சைட் எஸ்டேட், கோத்தகிரி .. | 24 | 48,000 | 36,000 |

இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 27.53 இலட்சம் செலவில் 1,073 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் சென்னை-600 006.**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலைப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலான பல பணிகளை மேற்கொண்டுள்ளது. பல திட்டங்களை அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது. தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மேலும் நலம் பயக்கும் பல திட்டங்களையும் அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது.

1984 ஆம் ஆண்டில் பின்வரும் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன :—

I. தொழிலாளர் நல நிலையங்கள் :

(1) கிண்டி.
(2) வேலூர்.
(3) உடுமலைப்பேட்டை.

II. குழந்தைகள் காப்பு இல்லம் :

(1) ஆலங்குளம்.



III. தையல் பயிற்சி நிலையங்கள் :

(1) முடிஸ்.
(2) குலசேகரம்.

IV. படிப்பகம் :

(1) விழுப்புரம்.
(2) நாகர்கோயில்.
(3) மேட்டூர் அணை.

இவ்வாரியம் செயல்படுத்திய ஏனைய நலத் திட்டங்கள் அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

| தொழிலாளர் நல நிலையங்கள். | 1983–84. | 1984–85. |
|---|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள் : | | |
| (i) நிலையத்தின் மொத்த எண்ணிக்கை .. | 39 | 44 |
| (ii) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 1,344 | 1,572 |
| (2) பாலர் பள்ளிகள் : | | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை .. | 34 | 37 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை | 2,000 | 1,927 |
| (3) குழந்தை காப்பு நிலையங்கள் : | | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை .. | 5 | 6 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 214 | 287 |
| (4) படிப்பகங்கள் : | | |
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. | 7 | 10 |
| (ஆ) பயன் பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை. | 61,832 | 61,167 |

(5) ஏனைய திட்டங்கள்.

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | | தொகை ரூபாய். | |
|---|---|---|---|---|
| | 1983–84 | 1984–85 | 1983–84 | 1984–85 |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல். | 558 | 1,030 | 28,198.00 | 60,187.00 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்துப்படிப்பு கட்டணங்கள் .. .. | 736 | 917 | 74,824.00 | 1,06,710.00 |
| (இ) புத்தக வங்கி .. .. .. | 23,472 | 51,361 | 3,95,804.00 | 17,28,583.70 |
| ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் | 641 | 638 | 1,28,200.00 | 1,27,600.00 |



(6) படிப்புதவித் தொகை.

பின்வரும் படிப்புகளுக்காக வாரியம் நிதியுதவியும் அனுமதித்துள்ளது :—

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | | தொகை ரூபாய். | |
|---|---|---|---|---|
| | 1983–84 | 1984–85 | 1983–84. | 1984–85. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) சட்டத்தில் பட்டப்படிப்பு | .. | 2 | .. | 2,000.00 |
| (ஆ) பொறியியல் பட்டப் படிப்பு .. | 18 | 23 | 18,000 | 22,561.80 |
| (இ) பொறியியல் பட்டயப் படிப்பு | 24 | 59 | 14,400 | 32,012.15 |
| (ஈ) மருத்துவப் பட்ட படிப்பு .. | 5 | 9 | 5,000 | 9,000.00 |
| (உ) தொழிற் பயிற்சி நிலையங்கள் | 18 | 31 | 5.400 | 9,596.00 |
| (ஊ) மேல்நிலைப் பள்ளி கல்வி .. | 13 | 24 | 6,500 | 12,000.00 |

[1985 ஜூன் 19

**விடுமுறை இல்லம்.**

தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகைக்கு விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று ரூ. 15 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ளது. இது 1983-இல் திறந்து வைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம். இதுவரை 2,275 பேர் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். மாமல்லபுரத்தில் மற்றொரு விடுமுறை இல்லம் ரூ. 14.44 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வார்டு.**

சென்னை தாம்பரம், காசநோய் நலம் பேண் மருத்துவமனையில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென்று 1978 ஆம் ஆண்டில் ரூ. 3.64 இலட்சம் செலவில் 26 படுக்கை வசதிகளுடன் கூடிய காசநோய் தனி வார்டு ஒன்று கட்டப்பட்டது.

**ஓய்வு இல்லம்.**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. ஒரு சமயத்தில் 15 பேர் வரை இதில் தங்கலாம். பெயரளவு வாடகையே வசூலிக்கப்படுகிறது.

**தொழிற் சங்க தலைவர்களுக்கான ஓய்வு இல்லம்.**

தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக சென்னை—6 தேனாம்பேட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் (ஜீவா இல்லம்) ஒன்றை வாரியம் கட்டியுள்ளது. மிகச் சொற்ப வாடகையைச் செலுத்துவதன் பேரில் ஒரு சமயத்தில் இவ்வில்லத்தில் 45 பேர் தங்கலாம்.

**போட்டி விளையாட்டுக்கள் :**

தொழிலாளர்களையும் அவர்களைச் சார்ந்துள்ளோரையும் ஊக்கப்படுத்துவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஒவ்வோராண்டும் 3 முதல் 4 இலட்சம் ரூபாய் வரை செலவிட்டு மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஆண்டுப் போட்டி விளையாட்டுக்களை நடத்தி வருகிறது.



1985 ஜூன் 19]

**ஏலாமையுற்ற தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோர்க்கும் செயற்கை உறுப்புகள் வழங்குதல்.**

ஏலாமையுற்ற தொழிலாளர்கள், அவர்களைச் சார்ந்திருக்கும் ஏலாமை அடைந்தோர் ஆகியோருக்கு செயற்கை உறுப்புகள் வழங்குவதற்காகவும் செலவு முழுவதையும் வாரியம் ஏற்கிறது.

**செவிக் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள் :**

தேவைப்படும் தொழிலாளர்களுக்குச் செவிக் கருவிகளையும் மூன்று சக்கர வண்டிகளையும் வாரியம் வழங்கி வருகிறது.

**வாரியம் செயல் படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் :**

(1) பின்வரும் இடங்களில் தொழிலாளர் நல நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது :—

தண்டையார் பேட்டை (சென்னை), ஈரோடு, அரியமங்கலம் (திருச்சி மாவட்டம்), நாகர்கோவில், அருப்புக்கோட்டை (காமராசர் மாவட்டம்).

(2) தூத்துக்குடியில் மேலும் ஒரு குழந்தை நல நிலையத்தை ஏற்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது.

(3) பின்வரும் இடங்களில் தையல் பயிற்சி நிலையங்களைத் தொடங்க வாரியம் முடிவு செய்துள்ளது :—

மாஞ்சோலை (திருநெல்வேலி மாவட்டம்), கீழ்கோதையாறு (கன்னியாகுமரி மாவட்டம்), வால்பாறை (அருவி), சோலையாறு (கோயம்புத்தூர் மாவட்டம்) பந்தலூர் (நீலகிரி மாவட்டம்).

(4) தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக சிவகாசியில் (காமராசர் மாவட்டம்) 20 படுக்கைகள் கொண்ட குழந்தை சிகிச்சை தனி மருத்துவ நிலையத்தைக் கட்டுவதற்கு வாரியம் முடிவு செய்துள்ளது.

(5) எழும்பூர், குழந்தை நல நிலையம் மருத்துவமனையில் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு ஒன்றையும் 300 புற நோயாளிகளுக்கான புற நோயாளித் தொகுதி ஒன்றை தொழிலாளர்களின் குழந்தைகள் சிகிச்சைப் பகுதியாக கட்டவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

(6) தொழிலாளர்களுக்கான காசநோய் சிகிச்சை வார்டுகளை வேலூர் ஆச்சாரி பள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்), ஆண்டிப் பட்டி (மதுரை) ஆகிய இடங்களில் உள்ள காசநோய் நலம் பேண் மருத்துவ மனையிலும், திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), ஈரோடு (பெரியார் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திருவொற்றியூர் (செங்கற்பட்டு மாவட்டம்), மதுரை, கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு ஆகிய இடங்களில் தையல் பயிற்சி நிலையம், படிப்பகம், நூலகம், மனமகிழ் விளையாட்டுகள் (Indoor Games) ஆகியவற்றுடன் பல்நோக்கு தொழிலாளர் நல நிலையங்களைத் தொடங்கவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

சட்ட உதவி :

உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுக்காக, [illegible] களுக்கு [illegible] மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் நான்கு மனுதாரர்களுக்கு ரூ. 150 வீதம் மொத்தம் ரூ. 600 வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள காயமடைந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென இழப்பீட்டுத் தொகை கோருதல் ஆணையாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிறுவனத்தினர் உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யும்போது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பில் எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடையவ ராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கோருதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். 1984 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ்ச் சட்ட உதவி எதுவும் வழங்கப்படவில்லை.

தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, ஆகிய மூன்று இடங் களில் சேர்த்து மூன்று சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு சட்ட உதவி அளிப்பது குறித்து ஆராய் வதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு அளித்த பரிந்துரைக் கிணங்க, அரசு இச் சட்ட ஆலோசனைக்குழுக்களை அமைத்துள்ளது.



இக்குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்துவரும் மனுக்களைகருணை
உணர்வோடு பரிசிலனை செய்து, அவர்களுடையதுயரைநீக்குவதற்
காக அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில் பல்வேறு
தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் நலன் தொடர்பு
டைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அணுக
வேண்டியவர்களைப் பற்றியும் அவர்கள் பின்பற்ற வேண்டியநடை
முறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது.

இக்குழுக்கள் 1984 ஆம் ஆண்டில் 233 முறையீடுகளுக்குத் தீர்வு
கண்டுள்ளன.

பெண் தொழிலாளர்கள் நலத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்குத் தனிப் பணியாளரமைப்பு :

நம் நாட்டில் பொது வேலையில் அமர மகளிருக்கும்
உரிமை உண்டு. இதனை அரசியலமைப்புச் சட்டம் ஏற்பளிக்
கிறது. குடும்ப செலவை அக்குடும்பத்திலுள்ள ஆடவர்
வருமானம் ஓரளவு ஈடுசெய்கிறது. செலவு பெருகி அதனை
ஈடு செய்ய முடியாது. ஆடவர் அவதியுறும் நிலைகண்டு கலங்கி
தாங்களும் ஒரு வேலையைத் தேடிக்கொண்டு குடும்பத்திற்கு,
உதவ வேண்டிய இக்கட்டான நிலை இன்று உருவாகியுள்ளது.
செலவில் துணை வருவாயை ஈட்டுவதற்காகவாவது மகளிர்
வேலையிலிருப்பது இன்றியமையாததாகும். இந்தியாவி
லுள்ள தொழிலாளர் மக்கள் தொகையில் 180 மில்லியன்
ஆடவர், 66 மில்லியன் மகளிர், ஆடவரைவிட பெண் தொழி
லாளர்களுக்கு அதிகமான பாதுகாப்பு தேவைப்படுகிறது. மேலும்
மகளிர் குறிப்பாக அமைப்பு ரீதியில் அமையாத துறைகளில்
பணிபுரியும் மகளிரின் பணி நிலைமைகளைச் சீரமைக்க அரசு
தனிக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அவர்களுடைய சிறப்
புத் தேவைகளை நிறைவு செய்வதற்கு தற்போதுள்ள பணி
யாளரமைப்பு போதுமானதாயில்லை. இத்தொழிலாளர்
களுக்கு வலுவான தொழிற் சங்கங்கள் இல்லை. சட்டப்படிக்
கான, சமூக உரிமைகள், சிறப்புரிமைகளைப் பெறுவதற்கான
வழிவகைகள் பற்றி பெண் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்க
தனிப் பணியாளரமைப்பு இருக்க வேண்டும். பெண் தொழி
லாளர்களின் நிலைமையைக் கருதி அவர்களுக்கு நலம்பயக்கும் வசதி
களை செய்து கொடுக்க பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்
களின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெண்
தொழிலாளர்களுக்குப் பயனுள்ள சட்டங்களைச் செயற்படுத்
தும் பணியைக் கவனிப்பதற்காகவென்றே பெண் அதிகாரிகளைக்
கொண்ட பணியாளரமைப்பு ஏற்படுத்துவது அவசியமெனக்
கருதப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல
ஆய்வாளர்கள் பதவிகளில் மகளிர் இருவரை நியமிக்கக் கருதப்
படுகிறது.

[1985 ஜூன் 19

**இராமத் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கப்பதற்கான திட்டப் பணிகள் :**

கிராமத் தொழிலாளர்களுக்கு ஒரு குடிமகன் என்ற முறையில் அவர்களது உரிமைகள், கடமைகள் பற்றி அறிவுறுத்துதல், தொழிற்சங்கங்கள். கூட்டுறவுகள் என்ற வடிவில் ஒன்றாக சேருவதற்கு தூண்டுதல் அவர்களுக்கு தொழிலாளர், குந்தைகை சமூக நலன் குறித்த சட்டங்கள் பற்றி நன்கு விளக்கவும் இந்திய அரசு ஆறாவது திட்டத்தின் ஒரு பகுதியாக வளர்ச்சி வட்டார அளவில் (வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு ஒருவர் வீதம்) கௌரவ ஊரக அமைப்பாளர்களை நியமிக்கும் திட்டத்தை கொண்டுவந்துள்ளது. கல்வி போதிக்கும் முறையுடன் மட்டுமின்றி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், டிறைசெம், இருபது அம்சத் திட்டம், ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் போன்ற பல்வேறு அரசு திட்டங்கள், பணிகள் குறித்து கௌரவ கிராம அமைப்பாளர்கள் ஒன்று சேராத கிராமத் தொழிலாளர்களுக்கும் எடுத்துக் கூறுகின்றனர். இந் நோக்கத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 75 வளர்ச்சி வட்டாரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 1985 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தெரிவு செய்யப்பட்ட கௌரவ ஊரக அமைப்பாளர்களுக்கு சென்னையிலுள்ள எஸ்.பி.ஓ.ஏ. தொழிற் சங்க கல்வி நிலையத்திலுள்ள தொழிலாளர் கல்வி மத்திய நிலைய வட்டார இயக்குநர் அலுவலகத்தில் இரு திங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. கௌரவ ஊரக அமைப்பாளர் ஒவ்வொருவருக்கும் மாநில அரசு ஒவ்வொரு திங்களும் மதிப்பூதியமாக 200 ரூபாயும் வரையறுத்த போக்குவரத்துபடியாக 50 ரூபாயும் வழங்குகிறது. பின்னர் இத்தொகையை மத்திய அரசு அரையாண்டுக்கு ஒரு முறை திருப்பிக் கொடுக்கும்.

1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மேலும் 100 வளர்ச்சி வட்டாரங்களை ஒதுக்கீடு செய்யுமாறும், அதற்கேற்ற எண்ணிக்கையில் கிராம அமைப்பாளர்களை நியமிக்குமாறும் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 9.

## பயிற்சி.

**தமிழ் நாடு கல்வி நிலையத்தின் நடவடிக்கைகள் :**

பின்வரும் அவசியங்களைக் கருதி தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை ஏற்படுத்தியது. அவை யாவன :—

(1) நல்ல தொழிற் சங்கங்களை ஏற்படுத்துதல், (2) தொழிலாளர்கள் மீது நிர்வாகத்தினருக்கு சுமூகமான போக்கினை ஏற்படுத்துதல், (3) தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளிடையே திறமையினை வளர்த்தல், (4) வெளியீடுகள் மூலம் கல்வி அறிவைப் பரப்புதல்.



1985 ஜூன் 19]

தமிழ்நாடு அரசால் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையந் தான் தென்னிந்தியாவில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நிலையமாகும். இந்நிலையம் ஏற்படுத்தப் பட்டதிலிருந்து தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வரு கின்றது. இந் நிலையத்தின் பயன்மிக்க பணிகளைப் பாராட்டும் வகையில் மாநில அரசு இந் நிலையத்தை 30-3-1978 ஆம் நாளிலிருந்து முதல்நிலை நிலையமாக தரம் உயர்த்தியது.

### 1. பயிற்சித் திட்டங்கள் :

**தொழிற் சங்க தலைமைத் திட்டம் :**

தொழிலாளர்களுக்குப் பெரும்பாலும் இரண்டாம் நிலைத் தலைவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. (1) தொழில5 ளரை குடிமகனாக, குடும்ப உறுப்பினராக தொழில் நிறுவனத்தின் உறுப்பினராக, தொழிற்சங்க உறுப்பினராக, (2) தேசியப் பொருளாதாரம்; (3) பொருளாதார வளர்ச்சியில் தொழிற் சங்கத்தின் பங்கு ; (4) சமூக நலப் பணியாளரின் பணி ; (5) பேச்சு வார்த்தை ஏனைய தகராறு தீர்வு முறைகள்; (6) வேலை தடைப்படுத்துவதன் விளைவுகள்; (7) தலைமையின் தனித் தன்மை; (8) செய்தி தொடர்பு, இந்நிலையம் இதுவரையிலும் 15 பயிற்சி வகுப்புக்களை நடத்தி 369 பேருக்குப் பயிற்சி அளித் துள்ளது.

**கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து வரும் அதிகாரிகளுக்குத் தொழிலாளர் சட்டங்களில் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் :**

கூட்டுறவுத்துறை, உள்ளாட்சி மன்றங்கள், ஏனைய பொதுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகளின் பயனுக்காக மேற்சொன்ன வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பயிற்சிப் பெருவோருக்கு அவர் களது நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய தொழிலாளர் சட்டங் களை விளக்குவதுடன் பணியாளர் நிர்வாகம் தொழில் உறவுகள் உற்பத்தித் திறன் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி கலந்துரையாடலும், விரிவுரை வழங்கலுமே இதில் பின்பற்றப்படும் முறையாகும். இவ்வாண்டில் 4 பயிற்சி வகுப்பு கள் நடத்தி 73 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை யிலும் 36 புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தி 587 அதிகாரி களுக்குப் புத்தறிவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**8. பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குப் பயிற்சித் திட்டங்கள் :**

பீடி, சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் மிக பெரும்பாலானவர்கள் வீட்டுப் பணியாளர்களே. அவர்கள் எந்தவித அமைப்பின் கீழும் வரவில்லை. தங்களுக்குப் பொருந்தக்கூடிய தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி அவர்களுக்குத் தெரியாது. எனவே, அவர்களுக்காக இருநாள் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் போது தொழிலாளர் சட்டத்தின்கீழ் அதில் பங்கு கொள்வோர் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், ஏனைய பயன்கள், அவர்கள் பணியில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெரிவிக்குமாறு சொல்லப்படுகின்றது. சட்டப்படிக்கான விதிந்துறைகள் அவர்களுக்கு விளக்கப்படுகிறது. தங்களது குறைகளைக் களைய அணுக வேண்டிய அதிகாரிகள் பற்றியும் இவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. உடல் நலம், குடும்ப நலம் குறித்து அவர்களுக்கு விளக்கப்படுகிறது. ஒலி, ஒளி கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிற்கும் 40 பேருக்கு மிகாமல் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு இலவசமாக சிற்றுண்டி உணவு வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தினப்படியும், பயணப்படியும் வரையறுத்து வழங்கப்படுகிறது. சென்னை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், ஈரோடு, வேலூர், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் இவ்வகுப்புகள் நடத்தப்பட்டன. 1984 ஆம் ஆண்டில் 7 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 256 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**9. தொழிலாளர் நல உதவி ஆய்வாளர், கண்காணிப்பாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி :**

தொழிலாளர் நலத்துறையிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆய்வாளர், கண்காணிப்பாளரின் பயனுக்காக இப்பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. உதவி ஆய்வாளர்களை தொழிலாளர் சட்டங்களைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கச் செய்வதும், ஆய்வு சட்ட நடவடிக்கை எடுத்தல், தொழிலாளர் சட்டங்களை ஊடுருவிப் பார்த்தல், அலுவலக நடைமுறைகள், வரைவுகள் தயாரித்தல், குறிப்பெழுதுதல், தொழிலாளர் கேட்புகளை பரிசீலித்தல் ஆகியவற்றின்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறனை வளர்ப்பதும் இதன் நோக்கமாகும். இப்பயிற்சி ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இந்நிலையம் 19 பயிற்சி வகுப்புகள் நடத்தி 417 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.



**முக்கிய தொழிலாளர் பிரச்சினைகள் குறித்த கருத்தரங்கு :**

நிர்வாகப் பணியாளர்கள், தொழிலாளர் தலைவர்களுக்காக இந்த நிறுவனத்தின் பல்வேறு தலைப்புகள் மீது கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற சில திட்டங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

**அ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் நடத்துவது குறித்த கருத்தரங்கு :**

(அ) விதிகளின்படி நடக்கத் தொழிலாளர்களுக்கு ஊக்கமளித்தல், (ஆ) தொழிற்சாலைக்கு வராமல் இருப்பதும் தாமதமாக வருவதும் குறித்த பிரச்சினை, (இ) தொழிற்சாலைக்குள்ளே விசாரணை நடத்துதல், (ஈ) ஒழுங்கு நடவடிக்கை குறித்த சட்டம், (உ) தொழிலாளர் தகராறுகள் சட்டத்தின் 11ஏ, 33, 33ஏ ஆகிய பிரிவுகளில் உள்ள சிக்கல்கள் ஆகியவை இதில் அடங்குகின்றன. 316 பேர்கள் அடங்கிய கருத்தரங்குகள் இதுவரை நடத்தப்பட்டன.

**ஆ. பல தொழிற் சங்கங்கள் பற்றிய பிரச்சினைகள் :**

பல தொழிற் சங்கங்களின் விளைவுகள் குறித்து உள்ள சமூக அரசியல் பகுப்பாய்வுப் பணி, இந்தக் கருத்தரங்கில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. பல தொழிற்சாலைகள் குறித்து கூட்டாகப் பேசுவதால் ஏற்படக் கூடிய நன்மைகள், தீமைகள், தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு பின்பற்றப்படும் பிற முறைகளினால் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகள், தொழிற்சங்கத்திற்குள்ளேயும் தொழிற்சங்கங்களிடையேயும் உள்ள தகராறில் நிலவும் சட்ட நிலைமை, தொழிற் சங்கங்களை அங்கீகரித்தல் முதலியன இதில் அடங்கும். 1984-ல் கோயம்புத்தூரில் கருத்தரங்கு ஒன்று அமைக்கப்பட்டு அதில் 87 பேர் கலந்து கொண்டனர்.

**வேலை நிறுத்தமும் கதவடைப்பும் :**

இதில் இடம் பெறும் பிரச்சினைகள் பற்றிய விவரம் வருமாறு :—

(அ) தொழில் நடவடிக்கை வரலாறு.

(ஆ) வேலை நிறுத்தியதின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள்.

(இ) தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைக்க அணுகு முறைகள்.

(ஈ) வேலை நிறுத்த நிலைமையைச் சமாளித்தல்.

(உ) வேலை நிறுத்தம் கதவடைப்பு ஆகியவற்றை ஒத்திப் போடுவதற்கான சாத்தியக் கூறு பற்றி தொகுதி வாரியாக விவாதித்தல்.

இதுவரை 57 நபர்கள் கொண்ட கருத்தரங்கு ஒன்று நடத்தப் பட்டது.

3. உழைப்பவர் உலகம் :

1978 ஆம் ஆண்டு முதல் நீதித் துறையின் முடிவுகள் தொழிலாளர் நலச் சட்டங்கள், திருத்தங்கள், அறிவிக்கைகள், முதலியன குறித்து தொழில் உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு, ''உழைப்பவர் உலகம்'' என்ற மாதாந்திர தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்படுகிறது. இந்த பத்திரிகையில் உள்ள வினா-விடை பகுதியை மக்கள் விரும்பிப் படிக்கின்றனர். வாழ்க்கை செலவுப் புள்ளி பற்றிய புள்ளி விவரங்கள், அரசு அறிவிக்கைகள் ஆகியன இந்தப் பத்திரிகையில் இடம் பெறுகின்றன.

4. தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்ட மேற்படிப்பு பட்டயக் கல்வி:

1979 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் நல நிருவாகம் பற்றி ஓராண்டு பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்பை இக் கல்வி நிறுவனம் நடத்தி வருகிறது. இக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், தொழிலாளர் நிருவாகம், தொழிலாளர் உறவுகள், தொழிலாளர் நல நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். இதுவரை 127 பேர்களுக்கு தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

5. ஆராய்ச்சிப் பிரிவு :

1981-82 ஆம் திட்டப் பணியில் தொழில் உறவுகள், தொழிலாளர் நிருவாகம், தொழிலாளர் நலன் ஆகிய துறைகளில் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டி இந்நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியது. [illegible] மன்றம் திட்டமிடுதலில் ஏற்படும் [illegible] ஆய்வு முடியும் நிலையில் உள்ளது. [illegible] எண்ணிக்கை பற்றி தொழிலாளர் மனநிலை [illegible] ஆய்வு நடந்தேறி வருகிறது. [illegible] இன்றும் முதுநிலை ஆராய்ச்சி அதிகாரியின் [illegible] வாக்கப்படும்.

6. தொழில் கல்வி பட்டப் பாட முறைகள் :

1984-85 ஆம் ஆண்டுத் திட்டப்பணிகளில் ''பேச்லர் ஆப் லேபர் மானேஜ்மெண்ட்'' (B.L.M.) என்றழைக்கப்படுகிற தொழிலாளர் நல நிர்வாகத்தில் பட்டப் பாட முறையை நடத்துவதற்கு அரசு, அனுமதி வழங்கியுள்ளது. தொழிலாளர் நல



நிர்வாகத்தில் பட்டப் பாட முறைக்கு பிறகு, இரு ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்கப்படும். பல்கலைக் கழக இணைப்பு பெற்றவுடன் இந்தப் பட்டப் பாடமுறை தொடங்கப்படும். பிளஸ் 2 கல்வி நிலைக்குப் பிறகு தொழிலாளர் நல நிர்வாகப் பணியில் உரிய ஆர்வமுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஐந்தாண்டு தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும் தொழில் கல்வி முறையில் நன்கு பயிற்சி பெற்றவர்களைத் தொழிலாளர் நல நிர்வாகத் துறையில் கொண்டு வர இது வகை செய்யும். தொழிலமைதிக்கும், தொழில் வளத்திற்கும் நலப் பணிக்கும், இது வழிகோலும். துணைப் பணியாளர்களுடன், பேராசிரியர் பதவி ஒன்றுக்கும் உதவிப் பேராசிரியர்கள் பதவி இரண்டுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

7. நூலகம் :

இந் நிறுவன நூலகத்தில் 3,007 புத்தகங்களும், 28 பருவ வெளியீடுகளும் உள்ளன.

இக் கல்வி நிறுவனம் நடத்தும் பாட முறைகளின் எண்ணிக்கை கடந்த மூவாண்டுகளில் அப்பாட முறைகளில் சேர்ந்து படித்தோர் எண்ணிக்கை பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

விவர அட்டவணை.

| ஆண்டு. | பாடமுறைகளின் எண்ணிக்கை. | பாடமுறையில் சேர்ந்து படித்தோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982 .. .. | 24 | 786 |
| 1983 .. .. | 32 | 2,757 |
| 1984 .. .. | 48 | 3,011 |

## அத்தியாயம் 10.

### எடைகள்—அளவைகள் :

**எடைகள், அளவைகள் (செயற்படுத்துதல்)**

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டம் :**

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டம், குறைவாக எடை போடுதல், அளவை நிறுவுதல் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள், எடைகள், அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் தொழிலாளர் ந

இணை ஆணையாளரும் (ஆய்வு) ஆவார். இவருக்கு உதவியாக இம் மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர்கள் சென்னை மாநகர், செங்கல்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை-அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் (Stamping Inspectors) சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் (பிரிவு) ஆகியோர் இவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர். 1984 ஆம் ஆண்டில் 7 எடை அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகள் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒரு தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (பிரிவு) பதவிக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே எடை அளவைகளில் முத்திரையிடும் பணிக்கென்று எடை-அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டமையால் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வணிகர்களது எடைகள்-அளவைகள் விரைவில் முத்திரையிடுவதில் அவர்களுக்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படுவதில்லை.

எடை-அளவைகள் குறைவாக போடப்படுதல், தவறான எடைகள்-அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனைகள் நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல், உட்பட கூட்டாக அடிக்கடி சோதனை இடுதல் தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1984 ஆம் ஆண்டில் எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 18,647 வழக்குகள் போடப்பட்டன. கடந்த ஆண்டில் போடப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமலிருந்த 19,234 வழக்குகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 11,76,810 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை-அளவைகளில் முத்திரை இடுவதற்குரிய கட்டணமாக 1984 ஆம் ஆண்டில் ரூ. 57,91,139.14 வசூலிக்கப்பட்டது.

1983, 1984 ஆகிய ஆண்டுகளில் இச் சட்டத்தின்கீழ் எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடை-அளவைகள் உதவிக் கட்டுப்பாடு அதிகாரி ஆகியோர் பழுது பார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங்கள் (புதிய, புதுப்பித்தல்) அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் பற்றிய விவரம் வருமாறு:—



| ஆண்டு. | பழுது பார்ப்பவர்கள். | விற்பனையாளர்கள். | தயாரிப்பாளர்கள். | வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1983 .. | 267 | 587 | 113 | 1,56,262.50 |
| 1984 .. | 293 | 606 | 136 | 1,75,087.00 |

எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார். அந்தந்த வட்டாரங்களிலுள்ள சார்பு அதிகாரிகளுடன் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எடைகள், அளவைகள் சட்டத்தின்கீழ் திடீர் சோதனைகள் நடத்துமாறு தொழிலாளர் நல வட்டார துணை ஆணையாளர் அனைவருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி வணிகர் வியாபாரிகளுக்கிடையே உண்டாகும்.

1984 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களைச் சோதனையிடும் பொருட்டு இத்துறை 2,91,085 ஆய்வுகள் மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள், கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்ளுகின்றனர். 1984 ஆம் ஆண்டில் 12,190 கிராமங்களில் 65,819 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

மண்ணெண்ணெய் சில்லரை விற்பனையாளர்கள், மண்ணெண்ணெய் வணிகர்கள் ஆகியோர் குறைவாக எடைபோடுவதைக் கண்டுபிடிப்பதற்கான சிறப்பு நடவடிக்கையினை ஒரு பகுதியாக இத்துறையில் ஆய்வாளர்கள் தமிழ்நாடு முழுவதிலும் 6–6–1984, 7–6–1984 ஆகிய நாட்களன்று தெருக்களில் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனையாளர்களையும் பரிசோதித்ததோடு மண்ணெண்ணெய் கடைகளையும் சோதனையிட்டனர். இவ்வாறு சோதனையிடும்போது 260 மண்ணெண்ணெய்க் கடைகளையும் 306 சில்லரை விற்பனையாளர்களையும் ஆய்வாளர்கள்

சோதனையிட்டு, குறைவாக எடை போடுவதாக 156 பேர்களைக் கண்டுபிடித்தனர். இச்சட்ட விதித்துறைகளை மீறி நடந்ததற்காக சம்பந்தப்பட்டவர்கள்மீது அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெட்ரோல் பம்புகளில் பெட்ரோல் குறைவாக வருவதைக் கண்டுபிடிப்பதற்கான சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இத்துறை ஆய்வாளர்கள் 8—8—1984, 9—8—1984 ஆகிய நாட்களன்று மாநில முழுவதிலுமுள்ள பெட்ரோல் பங்குகளை ஆய்வு செய்தனர். மேற்சொன்ன தேதிகளில் 420 பெட்ரோல், டீசல் பம்புகளை இவ்வதிகாரிகள் ஆய்வு செய்து 47 பம்புகளில் குறைபாடு இருப்பதாகக் கண்டுபிடித்தனர். பெட்ரோல், டீசல், ஆகியவை சரியாக எடைபோட்டு கொடுக்கும் பொருட்டு, இந்த பம்புகளில் உள்ள அளவுகள் சரிசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

1984 ஆம் ஆண்டில் [illegible] நடத்தப்பட்ட தீவிர சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட தவறான முறையாக உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப்படாத பல்வேறு எடைகள் அளவைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| எடைகள் | 18,689 |
| கொள்ளளவுக் கருவிகள் | 14,818 |
| நீளுவைக் கருவிகள் | 636 |
| அளவைக் கருவிகள் | 411 |
| தராசுகள் (பீம் ஸ்கேல்ஸ்) | 3,160 |

கைப்பற்றப்பட்ட கருவிகள், நீதிமன்ற நடைமுறைக்கு உட்பட்டு நீதிமன்ற ஆணைகளின்படி முடிவு செய்யப்படும். கைப்பற்றப்பட்ட ஏனையவற்றைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் விதித்துறைகள், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க அவற்றை பறிமுதல் செய்து அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல் :**

நுகர்வோர் நலன் பாதுகாப்பின் அவசியத்தையும் கோட்பாட்டையும் கருத்தில் கொண்டு (இது 20 அம்ச திட்டத்தின் ஒரு இனமாகும்), ஆய்வாளர்கள், குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை வாலாயமாகச் செய்யும் ஆய்வுகளுடன், நுகர்வோர், ரேஷன் கடைகளிலிருந்து உணவுப் பொருள்களையும், பிற பொருள்களையும் சரியாக எடைபோட்டு வாங்குவதற்காக அந்த ரேஷன் கடைகளுக்கு திடீரென்று சென்று சோதனை இடுகின்றனர்.



**1985—86 ஆம் ஆண்டு புதிய திட்டங்கள்**

**சிப்பம் செய்த பொருட்களின் விதிகளைச் செயல் படுத்துவதற்கான சிறப்புப் பணியாளர் :**

சிப்பம் செய்த பொருட்கள் குறித்த விதிகளின்படி, ஒவ்வொரு சிப்பத்தின் மீது அதனுள் அடங்கியுள்ள பொருளின் பெயர், அது தயாரிக்கப்பட்ட ஆண்டு, அதன் நிகர எடை, சில்லறை விற்பனை விலை முதலியவற்றை தயாரிப்பாளர்/சிப்பம் கட்டுபவர் ஒவ்வொருவரும் குறிப்பிட வேண்டும். சில்லறை விற்பனையாளர்கள் மேற்சொன்னவை அடங்கியுள்ள சிப்பம் செய்த பொருட்களை மட்டுமே அதன்மீது குறிப்பிடப்பட்ட விலைக்கு மேற்படாத விலைக்குள் விற்க வேண்டும். எடை, விலை ஆகியவற்றைப் பொறுத்தவரையில், நுகர்வோர் நலனை இது பெருமளவுக்குப் பாதுகாக்கிறது.

பதிவு செய்த தயாரிப்பாளர்கள், சிப்பம் செய்பவர்கள் 349 பேர் உள்ளனர். சுமார் 3 இலட்ச வணிக நிறுவனங்கள், பொருட்களைச் சிப்பம் செய்வதில் சில்லறை வணிகம் புரிந்து வருகின்றன. தற்போதுள்ள செயல்பாட்டுப் பணியாளர்கள் எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதோடு, கிட்டத்தட்ட தொழிலாளர் நலச் சட்டங்கள் பதிநான்கினையும் செயல்படுத்துகின்றனர். அவர்களுக்கு பணிச்சுமை ஏற்கனவே அதிகமாக இருப்பதால், சிப்பம் செய்த பொருட்கள் குறித்த விதிகளைச் செயல்படுத்தும் பணிப் பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்க இயலாது. இந்த விதிகளை செயல்படுத்துவதால் கிடைக்கப்பெறும் பெருமளவு பயன்களைக் கருத்தில் கொண்டு, 1985-86 ஆம் ஆண்டில் தலைமையிடத்தில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் ஒருவரையும் (எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு துணை அதிகாரி) 6 துணை ஆய்வாளர்கள் அடங்கிய களப் பணியாளர் தொகுதி ஒன்றையும் நியமிக்க கருதப்பட்டுள்ளது.

**எடைகள் அளவைகளில் முத்திரையிடுவதற்கான சிறப்புப் பணியாளர் :**

எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் எடைகளையும் அளவைகளையும் சரிபார்க்கவும் மீண்டும் ஒரு முறை சரிபார்க்கவும் வேண்டிப் பணியாளர்களைத் தனியாக நியமிக்க அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. சென்னை, செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், இராமநாதபுரம் மாவட்டங்களுக்காக முத்திரையிடும் ஆய்வாளர்கள் (பிரிவு) 4 பதவிகளுக்கும் தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் 44 பதவிகளுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1985-86-ல் தென்னாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் 14 முத்திரையிடும் ஆய்வாளர்களையும் இரண்டு தொழிலாளர் நல துணை ஆய்வாளர்களையும் நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

## பாகம் 2.

### இணைப்பு 1.

### தொழில் தகராறுகள்.

| விவரம். (1) | 1983 (1983 ஜனவரி முதல் 1983 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (2) | 1984 (1984 ஜனவரி முதல் 1984 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (3) |
|---|---|---|
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1730 | 1,934 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 7,580 | 7,371 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 7,356 | 7,935 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 6,324 | 6,277 |
| (உ) தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,032 | 1,646 |
| (ஊ) நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | .. | |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 1,954 | 1,902 |



### இணைப்பு 2.

1984 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். (1) | 1983 (1983 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று முடிய). (2) | 1984 (1984 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று முடிய) (3) |
|---|---|---|
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 212 | 211 |
| 2. வீணான உழைப்பு நாட்கள் | 21,16,218 | 37,08,409 |

### இணைப்பு 3.

1984 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்

| | |
|---|---|
| (1) நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை. | 45 |
| (2) தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை | 14 |
| (3) தொழிலாளர் துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை. | 135 |
| (4) மூடப்பட்டவை | 3 |
| (5) தீர்ப்பு வழங்குதல் | 1 |
| (6) ஆண்டு இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை. | 13 |

இணை ஆணையாளரும் (ஆய்வு) ஆவார். இவருக்கு உதவியாக இம் மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர்கள் சென்னை மாநகர், செங்கல்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை-அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் (Stamping Inspectors) சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் (பிரிவு) ஆகியோர் இவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர். 1984 ஆம் ஆண்டில் 7 எடை அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகள் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒரு தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (பிரிவு) பதவிக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே எடை அளவைகளில் முத்திரையிடும் பணிக்கென்று எடை-அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டமையால் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வணிகர்களது எடைகள்-அளவைகள் விரைவில் முத்திரையிடுவதில் அவர்களுக்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படுவதில்லை.

எடை-அளவைகள் குறைவாக போடப்படுதல், தவறான எடைகள்-அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனைகள் நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல், உட்பட கூட்டாக அடிக்கடி சோதனை இடுதல் தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1984 ஆம் ஆண்டில் எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 18,647 வழக்குகள் போடப்பட்டன. கடந்த ஆண்டில் போடப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமலிருந்த 19,234 வழக்குகளுக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 11,76,810 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை-அளவைகளில் முத்திரை இடுவதற்குரிய கட்டணமாக 1984 ஆம் ஆண்டில் ரூ. 57,91,139.14 வசூலிக்கப்பட்டது.

1983, 1984 ஆகிய ஆண்டுகளில் இச் சட்டத்தின்கீழ் எடை அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடை-அளவைகள் உதவிக் கட்டுப்பாடு அதிகாரி ஆகியோர் பழுது பார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங்கள் (புதிய, புதுப்பித்தல்) அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் பற்றிய விவரம் வருமாறு :—



| ஆண்டு. | பழுது பார்ப்பவர்கள். | விற்பனையாளர்கள். | தயாரிப்பாளர்கள். | வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1983 .. | 267 | 587 | 113 | 1,56,262.50 |
| 1984 .. | 293 | 606 | 136 | 1,75,087.00 |

எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார். அந்தந்த வட்டாரங்களிலுள்ள சார்பு அதிகாரிகளுடன் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எடைகள், அளவைகள் சட்டத்தின்கீழ் திடீர் சோதனைகள் நடத்துமாறு தொழிலாளர் நல வட்டார துணை ஆணையாளர் அனைவருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி வணிகர் வியாபாரிகளுக்கிடையே உண்டாகும்.

1984 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களைச் சோதனையிடும் பொருட்டு இத்துறை 2,91,085 ஆய்வுகள் மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள், கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்ளுகின்றனர். 1984 ஆம் ஆண்டில் 12,190 கிராமங்களில் 65,819 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

மண்ணெண்ணெய் சில்லரை விற்பனையாளர்கள், மண்ணெண்ணெய் வணிகர்கள் ஆகியோர் குறைவாக எடைபோடுவதைக் கண்டுபிடிப்பதற்கான சிறப்பு நடவடிக்கையினை ஒரு பகுதியாக இத்துறையில் ஆய்வாளர்கள் தமிழ்நாடு முழுவதிலும் 6–6–1984, 7–6–1984 ஆகிய நாட்களன்று தெருக்களில் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனையாளர்களையும் பரிசோதித்ததோடு மண்ணெண்ணெய் கடைகளையும் சோதனையிட்டனர். இவ்வாறு மண்ணெண்ணெய்க் கடைகளையும் சோதனையிடும்போது 260 மண்ணெண்ணெய்க் கடைகளையும் 306 சில்லரை விற்பனையாளர்களையும் ஆய்வாளர்கள்

சோதனையிட்டு, குறைவாக எடை போடுவதாக 156 பேர்களைக்
கண்டுபிடித்தனர். இச்சட்ட விதித்துறைகளை மீறி நடந்ததற்
காக சம்பந்தப்பட்டவர்கள்மீது அவசியமான நடவடிக்கை எடுக்
கப்பட்டுள்ளது.

பெட்ரோல் பம்புகளில் பெட்ரோல் குறைவாக வருவதைக்
கண்டுபிடிப்பதற்கான சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக
இத்துறை ஆய்வாளர்கள் 8—8—1984, 9—8—1984 ஆகிய
நாட்களன்று மாநில முழுவதிலுமுள்ள பெட்ரோல் பங்குகளை
ஆய்வு செய்தனர். மேற்சொன்ன தேதிகளில் 420 பெட்ரோல்,
டீசல் பம்புகளை இவ்வதிகாரிகள் ஆய்வு செய்து 47 பம்புகளில்
குறைபாடு இருப்பதாகக் கண்டுபிடித்தனர். பெட்ரோல், டீசல்,
ஆகியவை சரியாக எடைபோட்டு கொடுக்கும் பொருட்டு, இந்த
பம்புகளில் உள்ள அளவுகள் சரிசெய்யும் பணி மேற்கொள்ளப்
பட்டது.

1984 ஆம் ஆண்டில் கூட்டாக நடத்தப்பட்ட திடீர், தீவிர
சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட தவறான முறைபாடாக
உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப்படாத பல்வேறு எடைகள்
அளவைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| எடைகள் | | | |
| கொள்ளளவுக் கருவிகள் | .. | .. | 18,689 |
| நிறுவைக் கருவிகள் | .. | .. | 14,818 |
| அளவைக் கருவிகள் | .. | .. | 636 |
| தராசுகள் (பீம் ஸ்கேல்ஸ்) | .. | .. | 411 |
| | .. | .. | 3,160 |

கைப்பற்றப்பட்ட கருவிகள், நீதிமன்ற நடைமுறைக்கு உட்
பட்டு நீதிமன்ற ஆணைகளின்படி முடிவு செய்யப்படும். கைப்
பற்றப்பட்ட ஏனையவற்றைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு
எடைகள்-அளவைகள் சட்டத்தின் விதித்துறைகள்,
இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க அதன்கீழ்
முதல் செய்து அரசிடம் ஒப்படைக்க அவற்றை பறி
பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்கப்

## நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல் :

நுகர்வோர் நலன் பாதுகாப்பின் அவசியத்தையும் கோட்
பாட்டையும் கருத்தில் கொண்டு (இது 20 அம்ச திட்டத்தின் ஒரு
இனமாகும்), ஆய்வாளர்கள், குறிப்பிட்ட காலத்திற்கொரு
முறை வாலாயமாகச் செய்யும் ஆய்வுகளுடன், நுகர்வோர்,
ரேஷன் கடைகளிலிருந்து உணவுப் பொருள்களையும், பிற
பொருள்களையும் சரியாக எடைபோட்டு வாங்குவதற்காக
அந்த ரேஷன் கடைகளுக்கு திடீரென்று சென்று சோதனை
இடுகின்றனர்.



## 1985—86 ஆம் ஆண்டு புதிய திட்டங்கள் சிப்பம் செய்த பொருட்களின் விதிகளைச் செயல் படுத்துவதற்கான சிறப்புப் பணியாளர் :

சிப்பம் செய்த பொருட்கள் குறித்த விதிகளின்படி, ஒவ்
வொரு சிப்பத்தின் மீது அதனுள் அடங்கியுள்ள பொருளின் பெயர்,
அது தயாரிக்கப்பட்ட ஆண்டு, அதன் நிகர எடை, சில்லறை
விற்பனை விலை முதலியவற்றை தயாரிப்பாளர்/சிப்பம் கட்டு
பவர் ஒவ்வொருவரும் குறிப்பிட வேண்டும். சில்லறை விற்
பனையாளர்கள் மேற்சொன்னவை அடங்கியுள்ள சிப்பம் செய்த
பொருட்களை மட்டுமே அதன்மீது குறிப்பிடப்பட்ட விலைக்கு
மேற்படாத விலைக்குள் விற்க வேண்டும். எடை, விலை ஆகிய
வற்றைப் பொறுத்தவரையில், நுகர்வோர் நலனை இது
பெருமளவுக்குப் பாதுகாக்கிறது.

பதிவு செய்த தயாரிப்பாளர்கள், சிப்பம் செய்பவர்கள் 349
பேர் உள்ளனர். சுமார் 3 இலட்ச வணிக நிறுவனங்கள்,
பொருட்களைச் சிப்பம் செய்வதில் சில்லறை வணிகம் புரிந்து
வருகின்றன. தற்போதுள்ள செயல்பாட்டுப் பணியாளர்கள்
எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதோடு, கிட்
டத்தட்ட தொழிலாளர் நலச் சட்டங்கள் பதினான்கினையும்
செயல்படுத்துகின்றனர். அவர்களுக்கு பணிச்சுமை ஏற்கனவே
அதிகமாக இருப்பதால், சிப்பம் செய்த பொருட்கள் குறித்த
விதிகளைச் செயல்படுத்தும் பணிப் பொறுப்பும் அவர்களிடம்
ஒப்படைக்க இயலாது. இந்த விதிகளை செயல்படுத்துவ
தால் கிடைக்கப்பெறும் பெருமளவு பயன்களைக் கருத்தில்
கொண்டு, 1985–86 ஆம் ஆண்டில் தலைமையிடத்தில் தொழி
லாளர் நல உதவி ஆணையாளர் ஒருவரையும் (எடைகள்- அள
வைகள் கட்டுப்பாட்டு துணை அதிகாரி) 6 துணை ஆய்வாளர்கள்
அடங்கிய களப் பணியாளர் தொகுதி ஒன்றையும் நியமிக்க
கருதப்பட்டுள்ளது.

## எடைகள் அளவைகளில் முத்திரையிடுவதற்கான சிறப்புப் பணியாளர் :

எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் எடைகளையும்
அளவைகளையும் சரிபார்க்கவும் மீண்டும் ஒரு முறை சரிபார்க்
கவும் வேண்டிப் பணியாளர்களைத் தனியாக நியமிக்க அரசு
கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. சென்னை, செங்
கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், இராமநாதபுரம் மாவட்டங்
களுக்காக முத்திரையிடும் ஆய்வாளர்கள் 44 பதவிகளுக்கும்
தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் (பிரிவு) 4 பதவி
களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1985–86-ல் தென்
னாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் 14 முத்திரையிடும்
ஆய்வாளர்களையும் இரண்டு தொழிலாளர் நல துணை ஆய்
வாளர்களையும் நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

பாகம் 2.

## இணைப்பு 1.

### தொழில் தகராறுகள்.

| விவரம். (1) | 1983 (1983 ஜனவரி முதல் நாளிலிருந்து 1983 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (2) | 1984 (1984 ஜனவரி முதல் நாளிலிருந்து 1984 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (3) |
|---|---|---|
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1730 | 1,954 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 7,580 | 7,871 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 7,356 | 7,935 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 6,324 | 6,277 |
| (உ) தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,032 | 1,646 |
| (ஊ) நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | .. | |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 1,954 | 1,902 |



## இணைப்பு 2.

### 1984 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். (1) | 1983 (1983 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று முடிய). (2) | 1984 (1984 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று முடிய) (3) |
|---|---|---|
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 212 | 211 |
| 2. வீணான உழைப்பு நாட்கள் | 21,16,218 | 37,08,409 |

## இணைப்பு 3.

1984 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்

| | |
|---|---|
| (1) நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை. | 45 |
| (2) தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை | 14 |
| (3) தொழிலாளர் துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை. | 135 |
| (4) மூடப்பட்டவை | 3 |
| (5) தீர்ப்பு வழங்குதல் | 1 |
| (6) ஆண்டு இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை. | 13 |

## இணைப்பு 4.

**(1) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்—**

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1983 | 1984 | 1983 | 1984 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு .. | 117 | 109 | 35,440 | 62,093 | 7,20,309 | 24,81,381 |
| 2. பொறியியல் .. | 49 | 50 | 19,530 | 19,496 | 7,75,712 | 6,18,585 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 5 | 3 | 1,342 | 245 | 49,810 | 15,829 |
| 4. புகையிலை, பீடித் தொழில். | .. | 2 | .. | 295 | .. | 3,536 |
| 5. மலைத் தோட்டங்கள். | 10 | 9 | 6,808 | 12,090 | 3,46,146 | 1,93,430 |
| 6. ஏனையவை .. | 31 | 38 | 10,815 | 18,093 | 2,24,241 | 3,95,648 |
| மொத்தம் .. | 212 | 211 | 73,935 | 1,12,312 | 21,16,218 | 37,08,409 |



**(2) தீர்ப்பு வழங்குதல்—**

| | தீர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1983 | 1984 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 87 | 104 | 57 | 58 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 783 | 1,542 | 980 | 1,194 |
| (இ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | .. | 2 | .. | 1 |
| (ஈ) தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33 சி(2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப் பட்டவை. | 1,906 | 1,823 | 1,560 | 1,942 |

(3) தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி(1)-ஆம் பிரிவின் கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்—

| ஆண்டு. | நேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. காசு. |
| 1983 .. .. .. .. .. | 74 | 5,97,307.92 |
| 1984 .. .. .. .. .. .. .. | 28 | 1,03,376.74 |

# இணைப்பு 5.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள் :

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் | 2,457 | 3,160 | 3,309 | 3,018 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 4,685 | 22,204 | 20,984 | 20,780 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம். | 1,310 | 2,936 | 2,765 | 2,721 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம். | 144 | 289 | 269 | 254 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 36 | 137 | 129 | 129 |
| (6) 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 1,965 | 6,166 | 5,974 | 5,883 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 47 | 90 | 81 | 71 |





## இணைப்பு—5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | விடுதலை பெறப் பட்டவை. | தண்டிக்கப் பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | முடிவுறாமல் உள்ளவை | பெறப் பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | ரூ. |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 187 | 12 | 92 | 2,308 | 7,61,380 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 50 | 91 | 63 | 5,905 | 8,50,577 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம். | 5 | 20 | 19 | 1,481 | 1,72,625 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம். | 3 | 6 | 6 | 164 | 41,875 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | .. | .. | .. | 44 | 12,720 |
| (6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 26 | 39 | 26 | 2,157 | 1,95,381 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | [illegible] | .. | 2 | 56 | 14,220 |

இணைப்பு—5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 705 | 1,169 | 1,265 | 1,222 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,175 | 2,330 | 2,509 | 2,447 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 21 | 106 | 84 | 82 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 1 | 1 | .. | .. |
| (12) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 160 | 190 | 253 | 246 |



இணைப்பு—5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | விடுதலை பெறப் பட்டவை. | தண்டிக்கப் பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | முடிவுறாமல் உள்ளவை. | பெறப் பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | ரூ. (10) |
| (8) 1936-ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 13 | 14 | 16 | 609 | 69,915 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 35 | 9 | 18 | 996 | 1,75,930 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | .. | .. | 2 | 43 | 2,690 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | .. | .. | .. | 2 | .. |
| (12) 1966-ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 7 | .. | .. | 97 | 37,405 |

## இணைப்பு—6.

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ்வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள்—வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றியவிபரம் :

| ஆண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | அமர்த்திக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிமப்பதிவுத் தொகை. (4) |
|---|---|---|---|
| **அ. அமைப்பு ரீதியான தொழிற்சாலைகள்—** | | | |
| **1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்—** | | | |
| 1983 .. .. .. | 11,920 | 7,85,864 | 58,30,396 |
| 1984 .. .. .. | 12,562 | 7,93,769 | 64,51,578 |
| **2. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்—** | | | |
| 1983 | 454 | 92,361 | இதற்கு அவசியமில்லை. |
| 1984 .. .. .. | 460 | 92,301 | |
| **1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்—** | | | |
| 1983 .. .. .. | 1,614 | 62,874 | 91,624.93 |
| 1984 .. .. .. | 1,592 | 58,843 | 80,981.88 |
| **ஆ. அமைப்பு ரீதியல்லாத தொழில்கள்.** | | | |
| 1. 1966 ஆம் ஆண்டு பீடி. சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம். | | | |
| 1983 .. .. .. | 1,195 | 12,004 (வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2 இலட்சம்). | 37,133.00 |
| 1984 .. .. .. | 1,218 | 11,993 (வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2 இலட்சம்). | 23,656.00 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | | |
| 1983 .. .. .. | 2,70,505 | 2,65,963 | இதற்கு அவசியமில்லை. |
| 1984 .. .. .. | 2,80,769 | 2,65,292 | |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம். | | | |
| 1983 .. .. .. | 25,676 | 70,874 | 2,96,142.00 |
| 1984 .. .. .. | 25,900 | 74,238 | 2,92,771.00 |

128-176—32

## இணைப்பு -7

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விபரம்.

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் .. .. | 21,779 | 1,265 | 2,854 | 1,024 | 1,667 | 3,270 |
| 2. 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் | 3,58,187 | 46,096 | 7,589 | 12,562 | 13,516 | .. |
| 3. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்.. | 45,337 | 632 | 679 | 626 | 187 | .. |
| 4. 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் .. .. .. | 3,090 | 5 | 130 | 38 | .. | 183 |
| 5. 1955ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள் பல்வகை விதித் துறைகள் சட்டம்) .. .. .. | 201 | .. | .. | .. | .. | .. |
| 6. 1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் நீக்குதல்) சட்டம் .. | 1,164 | .. | .. | .. | .. | .. |



| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 7 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் .. .. .. .. | 1,71,892 | 1,794 | 2,391 | 972 | .. | .. |
| 8. 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் .. .. .. | 949 | 84 | 14 | 18 | .. | .. |
| 9. 1936ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் .. .. .. | 52,765 | 119 | 36 | 228 | .. | .. |
| 10. 1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டம் .. .. | 77,521 | 187 | 177 | 566 | .. | |
| 11. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டம் .. .. .. | 2,223 | 31 | 107 | 207 | .. | .. |
| 12. 1938ஆம் ஆண்டு சிறுவர்களை அமர்த்துதல் சட்டம் | 142 | 25 | 41 | 2 | .. | .. |
| 13. 1961ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் | 12,271 | .. | .. | .. | .. | |
| 14. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல்) சட்டம் .. .. | 309 | .. | .. | .. | .. | ... |

## இணைப்பு—8

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் :

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1983 | 1984 | 1983 | 1984 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தொடக்கத்தில் முடிவுராமல் இருந்த வழக்குகள் .. .. | 34 | 46 | 160 | 175 | 315 | 340 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. | 85 | 82 | 214 | 187 | 1,736 | 1,393 |
| 3. மொத்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. | 119 | 128 | 374 | 362 | 2,051 | 1,733 |
| 4. நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண் ணிக்கை .. .. .. | 73 | 119 | 199 | 191 | 1,711 | 1,385 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. | 46 | 9 | 175 | 171 | 340 | 348 |



ஆ) தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் :

| விவரம். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக் கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1983 | 1984 | 1983 | 1984 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. | 299 | 360 | 168 | 317 | 87 | 75 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. | 1,031 | 980 | 579 | 706 | 108 | 373 |
| 3. மொத்தம் .. .. .. | 1,330 | 1,340 | 747 | 1,023 | 295 | 448 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 970 | 927 | 430 | 526 | 220 | 328 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 360 | 413 | 317 | 497 | 75 | 120 |

## இணைப்பு—9

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் பற்றிய விவரங்கள் :

| | நோக்கம். (1) | இனங்களின் எண்ணிக்கை (2) |
|---|---|---|
| (அ) | ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (P 62) | 10,251 |
| (ஆ) | குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக் குடியிருப்பு வாங்க அல்லது வீட்டுமனை வாங்கவும், அரசு, முன்வரையமைப்புகளின் கடனைத் தீர்க்க (P 68B and 68 BB) | 8,873 |
| (இ) | 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் (P 68 H) | 9,433 |
| (ஈ) | உறுப்பினர்களுக்கு/அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக (P68 J) | 482 |
| (உ) | உறுப்பினர்களின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகன், மகள் ஆகியோரின் உயர் கல்விக்கு (P-68-K) | 30,868 |
| (ஊ) | பத்தி 68-ன்படி வழங்கப்பட்ட முன் பணம் | |
| (எ) | மின்வெட்டு காரணமாக தொழிற்சாலையில் லே-ஆப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68M). | 349 |
| (ஏ) | உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்ப்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி68 N). | ஏதுமில்லை. |



## இணைப்பு—10

1958 ஆம் ஆண்டு எடைகள் அளவைகள் குறித்த சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட திடீர் சோதனைகள் பற்றிய விவரம் :

| தொழில். (1) | திடீர் சோதனை நடத்தப்பட்ட நாள். (2) | செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை. (3) | கண்டுபிடிக்கப்பட்ட முறை கேடுகளின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1 மண்ணெண்ணெய் விற்பவர்கள் | 6—6—1984 | 306 ம. எண்ணெய் விற்பவர்கள். | 156 |
| மண்ணெண்ணெய் வழங்கும் கடைகள் | 7—6—1984 | 260 ” | |
| 2 பெட்ரோல், டீசல், | 8—8—1984 | 185 பெட்ரோல் பம்ப் | |
| மண்ணெண்ணெய் குழாய்கள் வழியாக வெளியேற்றும் இடங்களில் | 9—8—1984 | 15 மண்ணெண்ணெய் கடைகள் 235 டீசல் பம்ப் | 47 |
| 3 நியாய விலைக் கடைகள் | 4—7—1984<br>5—7—1984 | .. | 264 அரிசி, கோதுமை மூட்டைகளிலும், 57 சர்க்கரை கொத்தமல்லி, வேர்க்கடலை மூட்டைகளிலும் எடை மாறுபாடு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. |

136384